உ

கணபதி துணை.

எட்டுத்தொகையுள் நானகாவதாகிய

# பதிற்றுப்பத்துமூலமும்,

## பழையவுரையும்.

இவை,

உத்தமதானபுரம்

மஹாமஹோபாத்தியாய

**வே. சாமிநாதையரால்**

பலபிரதிபேதங்களைக்கொண்டு பரிசோதித்து,

அரும்பதவகராதி முதலியவற்றுடன்

திருக்கைலாயபரம்பரைத்

திருவாவடுதுறை ஆதீனகர்த்தராயிருந்த

**ஸ்ரீலஸ்ரீ. சுப்பிரமணிய தேசிகரவர்களுடைய**

பொருளுதவியைக்கொண்டு

சென்னபட்டணம்

**கமர்ஷியல் அச்சுக்கூடத்திற்**

பதிப்பிக்கப்பெற்றன.

**இரண்டாம் பதிப்பு.**

---

சௌத்திரிகு ஐப்பசி [illegible]

1920.

விலை ரு. க-கசு-பை.

*Copyright Registered.*

# இப்புத்தகத்தில் அடங்கியவை.


க. முகவுரை. பக்கம் 1.

உ. நூலாசிரியர்கள் வரலாறு :—

உ. குமட்டூர்க் கண்ணனூர். 7.

ஊ. பாலைக் கௌதமனூர். ,,

ஃ. காப்பியாற்றுக் காப்பியனூர் ,,

டு. பாணர். ,,

சு. காக்கைபாடினியார் நச்செள்ளையார். 9.

எ. கபிலர், 10.

அ. அரிசில் கிழார். 13.

கூ. பெருங்குன்றூர் கிழார். 14.

ஊ. பதிற்றுப்பத்து மூலமும் பழையவுரையும். } க.

ச. பதிற்றுப்பத்துச் செய்யுளகராதி. கடுஉ.

டு. பதிற்றுப்பத்தின் பிரயோகவிளக்கம். கடுகூ.

சு. அரும்பத முதலியவற்றின் அகராதி. ககூக.

கணபதி துணை

# முகவுரை.

"சந்தனப் பொதியத் தடவரைச் செந்தமிழ்ப்
பரமா சாரியன் பதங்கள்
சிரமேற் கொள்ளுதுந் திகழ்தரற் பொருட்டே."

பதிற்றுப்பத்தென்பது, தமிழ்ப்பாஷையிலுள்ள பழைய இலக்கிய நூல்களுள்ளே நல்லிசைப்புலவர்களருளிச்செய்த சங்கச்செய்யுட்களாகிய*எட்டுத்தொகைகளில் நான்காவது; புராதன இலக்கண இலக்கியவுரைகளில் மேற்கோளாக எடுத்துக்காட்டப்பெற்ற பெருமை வாய்ந்தது; முடியுடை வேந்தர்களாகிய சேரர்பதின்மர்கள் மீது சங்கப்புலவர் பதின்மர்கள் இயற்றியது; ஐந்திலக்கணங்களுள்ளே பொருளின் பகுதியாகிய புறத்திணைத்துறைகளுக்கு இலக்கியமாக அமைந்துள்ளது.

பப்பத்து அகவற்பாக்களுள்ள பத்துப்பகுதிகளால் தொகுக்கப்பட்டமையின், இந்நூல் † பதிற்றுப்பத்தென்று பெயர்பெற்றது.

இந்நூலிலே தமிழ்நாட்டின் பண்டைக்கால நிலைமையும், சில சேரர்கள், சில குறுநில மன்னர்கள் முதலியோருடைய வரலாறுகளும், அவர்களுடைய அரசாட்சி, வீரம், கொடை, புலவர்களை அவர்கள் ஆதரித்துவந்த அருமை முதலியனவும், சேரநாட்டின் பழைய வழக்கங்கள் சிலவும், இக்காலத்து வழங்காத சில அரும்பதங்களும், வேறு சில அரிய விஷயங்களும் காணலாகும்.

கிடைத்த இந்நூற்கையெழுத்துப்பிரதிகளுள் ஒன்றிலேனும் கடவுள்வாழ்த்தும் மூதற்பத்தும் பத்தாம்பத்தும் அவற்றின் உரையும் காணப்படவில்லை; உள்ள எட்டுப்பத்திலுங்கூடச் சிலசில விடத்து மூலங்கள் குறைந்தும் உரைகள் சிதைந்தும் பிறழ்ந்தும் இருக்கின்றன. அந்தவிஷயத்தில் நான் செய்யக்கூடியது யாதொன்றுமில்லாமையால், அவை இருந்தவாறே பதிப்பிக்கப் பெற்றன.

---

* இவற்றின் வரலாற்றைப் புறநானூற்றின் முகவுரையிற் காண்க.

† "பதிற்றுப்பத்தென்பது இற்றுச்சாரியை வந்தது" (நேமிநாதம், எழுத்து. உஉ - உரை).

முதற்பத்தையோ பத்தாம்பத்தையோ சார்ந்த இந்நூற்பாடல்கள் சில, தொல்காப்பிய உரைகளாலும் புறத்திரட்டாலும் தெரியவந்தன ; அவை வருமாறு:—

"இருங்கண் யானையொ டருங்கலந் துறுத்துப்
பணிந்து வழிமொழிந்த லல்லது பகைவர்
வணங்கா ராதல் யாவதோ மற்றே
யுருமுடன்று சிலைத்தலின் விசும்பதிர்ந் தாங்குக்
கண்ணதிர்பு முழங்குங் கடுங்குரன் மூரசமொடு
கால்கிளர்ந் தன்ன வூர்திக் கான்முளை
யெரிதிகழ்ந் தன்ன நிறையருஞ் சீற்றத்து
ஈளியிரும் பரப்பின் மாக்கடன் முன்னி
நீர்துனைந் தன்ன செலவி
னிலந்திரைப் பன்ன தானையோய் நினக்கே."

[புறத்திரட்டு, பகைவயிற்சேறல், அ ; தொல்காப்பியம், புறத்திணையியல், சூ. சு - இளம் ; அ - ந. மேற்கோள்.]

'இலங்குதொடி மருப்பிற் கடாஅம் வார்ந்து
நிலம்புடையூ வெழுதரும் வலம்படு குஞ்சர
மெரியவிழ்ந் தன்ன விரியுளை சூட்டிக்
கால்கிளர்ந் தன்ன கடுஞ்செல விவுளி
கோன்முனைக் கொடியினம் விரவா வல்லோ
னேன்வினை கடிக்குந் தோன்றல பெரிதெழுந்
தருவியி ஞெலிக்கும் வரிபுனை நெடுந்தேர்
கண்வேட் டனவே மூரசங் கண்ணுற்றுக்
கதித்தெழு மாதிரங் கல்லென வொலிப்பக்
கறங்கிசை வயிரொடு வலம்புரி யார்ப்ப
நெடுமதி னிரைஞாயிற்
கடிமனைக் குண்டுகிடங்கின்
மீப்புடை யாரரண் காப்புடைத் தேள
நெஞ்சுபுக லழிந்து நிலைதளர் பொரீஇ
யொல்லா மன்னர் நடுங்க
நல்ல மன்றவிவண் வீங்கிய செலவே."

(தொல். புறத்திணை. சூ. கஉ; மே சூ. உடு - ந. மேற்.)

"பேணுதகு சிறப்பிற் பெண்ணியல் பாயினு
மென்னெஞ் புரையுங ளல்ல
டன்னெஞ் புரையுகர்த் தானறி குகளே."
(தோல்-கற்பு. சூ. கூ - க. மேற்.)

" வந்தனென் பெரும கண்டனென் செலற்கே
களிறு கலிமான் றேரொடு சுரந்து
ணன்கல னீயு ணகைசா லிருக்கை
மாரி யென்னுய் பணியென மடியாய்
ரு பகைவெம் மையி னசையா வுக்கலே
வேறுபுலத் திறுத்த விறல்வெங் தானையொடு
மாரு மைந்தர் மாறுகிலே தேய
மைந்துமலி யூக்கத்த கந்துகால் கீழ்ந்து
கடாஅ யானை மூழங்கு
கo மிடாஅ வேணிகின் பாசறை யானே."
[புறத்திரட்டு, பாசறை. அ.]

'''விசயந்தப்பிய" என்னும் பதிற்றுப்பத்து ஈகை கூறிற்று.'
(தோல். புறத்திணை. சூ. உo - க.)

இவை, இத்தனையாவது இத்தனையாவது பாடலென்று விளங்கவில்லை.

கிடைத்த எட்டுப்பத்தினுள்,—

இரண்டாம்பத்து, இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனைக் குமட்டூர்க் கண்ணனாரும், மூன்றும்பத்து, இமயவரம்பன் தம்பி பல்யானைச்*செல்கெழுகுட்டுவனைப் பாலைக்கௌதமனாரும், நாலாம்பத்து, களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரலைக் காப்பியாற்றுக் காப்பியனாரும், ஐந்தாம்பத்து, கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவனைப் பரணரும், ஆறும்பத்து, ஆடுகோட்பாட்டுச்சேரலாதனைக் காக்கைபாடினியார் நச்செள்ளையாரும், ஏழாம்பத்து, செல்வக்கடுங்கோ வாழியாதனைக் கபிலரும், எட்டாம்பத்து, தகடூரெறிந்த பெருஞ்சேரலிரும்பொறையை அரிசில்கிழாரும், ஒன்பதாம்பத்து, குடக்கோ இளஞ்சேரலிரும்பொறையைப் பெருங்குன்றூர்கிழாரும் பாடியவை.

இவ்வாலாறு ஒவ்வொருபத்திற்கும் இறுதியிலுள்ள பதிகங்களாலும் விளங்கும். நாலாம்பத்துச் செய்யுட்கள் அந்தாதியாக உள்ளன.

* இப்பெயர் செல்புகழ்க்குட்டுவனென ஒரு பிரதியிற் காணப்பட்டது.

இந்நூலின் உரை, இன்றியமையாத இடங்களிற் பதப்பொருளை இனிது காட்டிச் சொன்னயம்பொருணயங்களையும் சொன்முடிபு பொருண்முடிபுகளையும் உரிய இடங்களில் இலக்கணக்குறிப்புக்களையும் நன்குபுலப்படுத்திப் பழைய செய்திகள் சிலவற்றைத் தெரிவித்து ஒவ்வொருசெய்யுளின் பின்னும் எழுதப்பெற்றுள்ள துறை, வண்ணம், தூக்கு இவற்றை விளக்கவேண்டிய இடங்களில் விளக்கிச் செய்யுட்களுடைய * பெயர்களின்காரணங்களை அங்கங்கே உணர்த்தி மிகச் செவ்விதாக விளங்குகின்றது. இவ்வுரை இல்லையாயின், இந்நூற்பொருளை இக்காலத்தில் அறிந்துகொள்ளுதல் மிக அரிது. [வண்ணம் - செய்யுட்களின்சந்தம். தூக்கு – பாக்களைத் துணித்து நிறுத்தல்.]

இவ்வுரையாசிரியர் இன்னாரென்றும் இன்னகாலத்தவரென்றும் தெரியவில்லை; ஆனாலும் இந்நூல் எசு - ஆம் பாட்டினுரையில் 'சின்மையைச் சின்னூலென்றதுபோல ஈண்டுச் சிறுமையாகக் கொள்க' என்று எழுதியிருத்தலால், இவருடையகாலம் நேமிநாத நூலாசிரியராகிய குணவீரபண்டிதருடைய காலத்திற்குப் பிற்கால மென்று தெரிகின்றது. [சின்னூல் - நேமிநாதம்.] இவருடைய உரைநடையை உற்றுநோக்கின், இவர் பேராசிரியர் முதலியோர்களுள் ஒருவராகவோ அல்லது பண்டைக்காலத்தில் அவர்களைப் போலவிளங்கிய வேறு ஒருவராகவோ இருக்கவேண்டுமென்று தோற்றுகிறது.

ஒவ்வொரு செய்யுளின் பின்னும் அமைந்துள்ள துறை, வண்ணம், தூக்கு, பெயரென்பவைகள் உரையில்லாத மூலப்பிரதிகளிலெல்லாமிருத்தலின், அவை உரையாசிரியரால் எழுதப்பட்டனவல்லவென்றும் நூலாசிரியர்களாலோ தொகுத்தோராலோ எழுதப்பட்டனவென்றும் பதிகங்கள் உரைப்பிரதிகளில் மட்டுமே காணப்

* பத்துப்பாட்டினுள் கo-ஆவது பாட்டு, தன்பாலுள்ள பொருட்சிறப்பெய்திய [அடி, நசஅ.] மலைபடுகடாமென்னும் தொடர்மொழியையே தன் பெயராகக்கொண்டு வழங்கிவருகின்றதுபோலப் பதிற்றுப்பத்துப்பாடல்களெல்லாம், தம்மிடத்துள்ள தொடர்மொழிகளுள் அடைமொழிச்சிறப்பாதல் பொருட்பொலிவாதல் பெற்றனவற்றையே தம்பெயர்களாகக்கொண்டு தொன்றுதொட்டு வழங்கிவருகின்றன; அப்பெயர்கள், இந்நூல் அகராதியில் 'பா' என்னும் குறிப்புடன் பதிப்பிக்கப் பெற்றுள்ளன.

படுகின்றமையால் அவற்றை இயற்றினோர் நூலாசிரியரும் தொகுத்தோரும் அல்லரென்றும் தெரிகின்றன.

ஆசிரியர் நச்சினார்க்கினியராலும் அடியார்க்கு நல்லாராலும் தத்தம் உரைகளில் எடுத்தாளப்பெற்றிருத்தலின், இப்பதிகங்கள் அவர்கள் காலத்திற்கு முந்தியவையென்று தோற்றுகின்றது.

இந்நூலில் வந்துள்ள துறைகள் முதலியன வருமாறு:—

[சிலவற்றின் பின்னுள்ள எண்கள் உரையாசிரியரால் அவற்றிற் குரிய இலக்கண மெழுதப்பெற்ற செய்யுட்களைப் புலப்படுத்துவன.]

துறைகள் :—இயன்மொழிவாழ்த்து ; உழிஞையரவம், எள ; ஒள்வாளமலை; களவழி, ஙசு; காட்சிவாழ்த்து, சக; காவன்முல்லை, அசு; குரவைநிலை - நுஉ, செந்துறைப்பாடாண்பாட்டு - நுஅ, சுசு, தும்பையரவம், ஙச; நாடுவாழ்த்து; பரிசிற்றுறைப்பாடாண்பாட்டு, கசு; பாணாற்றுப்படை; பெருஞ்சோற்றுநிலை; முல்லை, அக; வஞ்சித்துறைப்பாடாண்பாட்டு, உஉ, உங, உடு, உசு, உகூ, ஙஙு, நுo, நுக, அo; வாகை, கசு; வாகைத்துறைப்பாடாண்பாட்டு, ஙநு; விறலியாற்றுப்படை.

வண்ணங்கள் :—ஒழுகுவண்ணம், ஒழுகுவண்ணமும் சொற்சீர் வண்ணமும் - கச, கசு.

தூக்குக்கள் :—செந்தூக்கு, செந்தூக்கும் வஞ்சித்தூக்கும் - கஙு, உo, உஉ, உடு, ஙஙு, நுக, சுகூ, அo, சுo.

உரையில் மேற்கோளாக வந்துள்ள நூல்கள் : க. இந்நூல், உ. திருக்குறள், ங. புறநானூறு, ச. மதுரைக்காஞ்சி.

இந்நூலில் வந்துள்ள கடவுட்பெயர்கள் முதலியவற்றையும் அவைகள் உள்ள இடங்களையும் இப்புத்தகத்தின் அகராதியிற் காண்க.

இதன் முதற்பதிப்பு 1904-ஆம் வருஷம் வெளிவந்தது. அதன் பின் செய்த ஆராய்ச்சியினால் இப்பதிப்பு அடைந்த திருத்தங்கள் சில. நூலாராய்ச்சிக்கு உபயோகமான சில குறிப்புக்கள் அகராதியில் இம்முறை சேர்க்கப்பெற்றுள்ளன.

இந்நூலை ஒப்பு நோக்குங்காலத்தில் சென்னை இராசதானிக் கலாசாலைத் தமிழ்ப்பண்டிதர் ம-ா-ா-ஸ்ரீ இ. வை. அனந்தராமைய ரவர்களும், மயிலாப்பூர் பி. எஸ். ஸைவஸ்கூல் தமிழ்ப் பண்டிதர் சிரஞ்சீவி, ம. வே. துரைசாமி ஐயரும், இராசாங்கத்துக் கையெழுத்

துப் புத்தகசாலைத் தமிழ்ப்பண்டிதர், சிரஞ்சீவி, ஜி. சேஷாத்திரி ஐயரும் உள்ளன்புடன் செய்த உதவிகள் மிகவும் பாராட்டற்பாலன.

உடனிருந்து உதவி செய்பவர் முதலியோர் விஷயத்தில் எனக்குச் சிறிதும் கவலையில்லாதபடி ஸ்ரீ ஸேது ஸம்ஸ்தானாதிபதிகளும், மதுரைத் தமிழ்ச் சங்கத்தலைவர்களும், சட்டநிருபணசபை அங்கத்தினர்களுமான கௌரவம்பொருந்திய ம-ரா-ரா-ஸ்ரீ பா. இராஜ ராஜேசுவர ஸேதுபதி மஹாராஜா அவர்கள் பொருளுதவிசெய்து ஆதரித்து வருகிறார்கள். இவர்களுக்கு எல்லாப் பயன்களையும் அளித்தருளும் வண்ணம் தமிழ்த் தெய்வத்தைத் துதித்தலன்றி என்னுற் செய்யக்கூடியது வேறு யாதுளது ?

## இந்நூற் பரிசோதனைக்குக் கிடைத்த கையெழுத்துப் பிரதிகள்.

| | | |
|---|---|---|
| திருவாவடுதுறை ஆதீனத்துப் ... ... | பிரதி | க |
| இராசாங்கத்துக் கையெழுத்துப் புத்தக சாலைப் | ,, | க |
| ஆழ்வார் திருநகரி, | | |
| ஸ்ரீ. தே. லக்ஷ்மண கவிராயரவர்கள் வீட்டுப் | ,, | க |
| ம-ரா-ரா-ஸ்ரீ ஜே. எம் வேலுப்பிள்ளையவர்கள் | ,, | க |
| ,, தி. த. கனகசுந்தரம் பிள்ளையவர்கள், B.A. | ,, | க |
| திருமயிலை வித்துவான், | | |
| ஸ்ரீ சண்முகம் பிள்ளையவர்கள் ... | ,, | க |
| | | சு |

இன்னும் அப்பொழுது அப்பொழுது ஒப்பிடுதற்குக் கிடைத்த பிரதிகள் சில.

இப்பதிப்பிற் காணப்படும் பிழைகள் என் ஞாபகக் குறைவு முதலியவற்றுல் நேர்ந்தனவென்றெண்ணி அவற்றைப் பொறுத்துக் கொள்ளுமாறு அன்பர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

"தியாகராஜ விலாஸம்"
திருவேட்டீசுவரம் பேட்டை,
25—10—20.

இங்ஙனம்,
வே. சாமிநாதையன்.

# நூலாசிரியர்களின் வரலாறு.

உ.—குமட்டூர்க்கண்ணனார்:—இவர் இமயவரம்பன்நெடுஞ்சேரலாதன்மீது இந்நூல் 2-ஆம் பத்தைப்பாடி, உம்பற்காட்டு நூ00 - ஊர் பிரமதாயமும் ஈஅ - வருடம் தென்னாட்டுள் வருவதனிற் பாகமும் பரிசிலாகப்பெற்றவர்; அந்தனவருணத்தினர்; இது, பிரமதாயம் பெற்றனரென்பதனால் தெரிகின்றது. கண்ணனாரென்று ஒருபுலவருளர்; அவரின்வேறுபடுத்தற்கு இவர் இங்ஙனம் வழங்கப்பெற்றார்.

ங.—பாலைக்கௌதமனார்:—பல்யானைச்செல்கெழுகுட்டுவன்மீது இந்நூல் ஈ - ஆம்பத்தைப் பாடியவராகிய இவர், அவனை இரந்து அவனுதவியால், ஒன்பது பெருவேள்விவேட்டுப் பத்தாம்பெருவேள்விவேட்கையில் மனைவியுடன் சுவர்க்கம்பெற்றவர்; அந்தணவருணத்தினர். இவை, இப்பத்தின்பதிகத்தாலும், "தொடித்தபெரும்புலவன்" (ஈகசு) என்னும் பழமொழிவெண்பாவாலும் அதனுரையாலும், "நான்மறையாளன் செய்யுட் கொண்டு, மேனிலையுலகம் விடுத்தோ ஞயினும்" (உஅ-ஆம் காதை, கஈஎ-அ) என்னும் சிலப்பதிகாரத்தாலும், "இதில் இமயவரம்பன்தம்பி பல்யானைச்செல்கெழுகுட்டுவனைப் பாலைக்கௌதமனார் துறக்கம்வேண்டினரென்பது குறிப்புவகையாற் கொள்ளவைத்தலின், இது வஞ்சிப்பொருளில் வந்த பாடாணுயிற்று" (தொல். புறத். உநி-ஆம் சூ. உரை) என்னும் நச்சினார்க்கினியத்தாலும் விளங்குகின்றன. கோதமனாரென்று ஒருபுலவருளர்; அவரின்வேறுபடுத்தற்கு இவர் இங்ஙனம் வழங்கப்பெற்றார். இவர் சுவர்க்கம்பெற்ற சரிதை மலைநாட்டிற் கர்ணபரம்பரையில் இக்காலத்தும் வழங்குகின்றது.

ச.—காப்பியாற்றுக்காப்பியனார்:—இவர் களங்காய்க்கண்ணிநார்முடிச்சேரலென்னும் அரசன்மீது இந்நூல் ச-ஆம்பத்தைப்பாடி நாற்பது நூறுயிரம் பொன்னும் அவன் ஆண்டதிற் பாகமும் பரிசிலாகப் பெற்றவர்.

ஙி.—பரணர்:—இவர் கடல்பிறக்கோட்டியசெங்குட்டுவன்மீது இந்நூல் ஙி - ஆம் பத்தைப்பாடி, அவனால் உம்பற்காட்டுவருவாயை

யும் அவன்மகன் குட்டுவன்சேரலென்பவனையும் பரிசிலாகப்பெற்றவர். [உம்பற்காடென்பது மலைநாட்டைச்சார்ந்ததொருநாடு] திருவள்ளுவமாலையிலுள்ள, " மாலுங்குறளாய் " என்னும்வெண்பா இவர் செய்ததாகத் தெரிதலின், அம்மாலையை இயற்றிய உக்கிரப்பெருவழுதியாரும் மற்றப்புலவர்களும் இருந்தகாலத்தவரென்று இவர் எண்ணப்படுகிறார்; கபிலருடைய அருமைத்துணைவர்; இது பழைய இலக்கணநூல்களினுரைகளில், ' கபிலபரணர்' என்று வழங்கும் தொகைநிலைத்தொடரால் விளங்குகின்றது. அதிகமானெடுமானஞ்சி கோவலூர்த்தலைவனையென்று அவ்வூரைக் கைக்கொண்டமை இவராற்புனைந்துகூறப்பெற்றுள்ளது. இது புறநானூற்றில், "அமர்ப்பேணியும்" என்னும்பாட்டில், "பரணன்பாடினன் மற்கொன்மற்று நீ முரண்மிகு கோவலூர் நூறிநி, னரணடு திகிரி யேந்திய தோளே" எனஔவையார் பாராட்டியிருத்தலால் நன்குபுலப்படுகின்றது. இரண்டு திருவிளையாட்டுபுராணங்களிலும் இவர் புகழப்பட்டிருக்கிறார். எட்டுத்தொகையில் இவர்செய்தனவாக அஉ - செய்யுட்கள் இப்பொழுது தெரிகின்றன : (இந்நூல் - கo ; நற்றிணை - கஉ ; குறுந்தொகை - கடு; அகநானூறு - நஉ; புறநானூறு - கநு.) அச்செய்யுட்களில்வந்துள்ள தெய்வங்களின் பெயர்களும் பிறபெயர்களும் வருமாறு :—

தெய்வங்கள்:—சிவபெருமான், முருகக்கடவுள்.

பாவை :—கொல்லிப்பாவை.

ஸ்தலங்கள்:—அலைவாய்=திருச்செந்தூர், ஆலமுற்றம், கூடல்.

தேயத்தார்: —ஆரியர், கொங்கர், பூழியர்.

வேளிர்கள்:—பதினொன்குவேளிர், பதினெருவேளிர்.

தலைவர்:—அகுதை, அஞ்சி, அதகன், அதிகன், அழிசி, அன்னி, ஆட்டனத்தி, ஆய், உதியன், உருவப்பஃறேரிளஞ் சேட்சென்னி முதலிய அறுவர், எவ்வி, ஓரி=வல்விலோரி, கட்டி, கரிகால்வளவன், கழுவுள், குட்டுவன், குறும்பியன், சேந்தன், தழும்பன், தித்தன், திதியன், நள்ளி, நன்னன், நீடூர்கிழவன், பசும்பூட் பாண்டியன் பழையன், பாணன், பேகன், பொறையன், மத்தி, மிஞிலி = ஞிமிலி விச்சியர்பெருமகன்.

தலைவியர்:—ஆதிமந்தி, ஐயை, மருதி.

நாடுகள்:—ஆரியநாடு, கொங்குநாடு, புகார்நாடு, பூழிநாடு,

ஊர்கள்:—அழுந்தூர், ஆர்க்காடு, இருப்பையூர், உறத்தூர், உறந்தை, ஊணூர், கழார், காழூர், குறும்பூர், குன்றூர், தகடூர், தழும்பனூர், தொண்டி, நீடூர், புகார், பொருந்தில், மணற்குன்று, மரந்தை, மூசிறி, வஞ்சி, வாகை, வெண்ணிவாயில்.

அவை=ஸபை :—உறந்தைநாளவை.

விழவு :—கழார்ப்பெருந்துறைவிழவு, கூடல்விழவு.

மலைகள் :—குடவரை, கொல்லி, பொதியில்.

ஆறு :—காவிரி.

துறைகள்:—கழார்மூன்றுறை=கழார்ப்பெருந்துறை, தொண்டி மூன்றுறை.

காடுகள் :—உறந்தைப்புறங்காடு, ஓரிகானம்.

பழந்தலைகள்=போர்க்களங்கள் :—கூடற்பறந்தலை, பாழிப்பறந்தலை, வாகைப்பறந்தலை, வெண்ணிவாயிற்பறந்தலை.

கக - ஆம் திருமுறையிலுள்ள சிவபெருமான்திருவந்தாதியியற்றிய பரணதேவநாயஞரென்பவர் இவரேயென்று விவேகிகள் கூறுகின்றனர்.

சு.—காக்கைபாடினியார் நச்செள்ளையார்:—ஆடுகோட்பாட்டுச் சேரலாதனென்னும் அரசன்மீது இந்நூல் சு - ஆம்பத்தை இயற்றியோராகிய இவர் அணிகலனுக்கென்று கூ-துலாம் பொன்னும் நூறாயிரம் பொற்காசும் அவனுற் பரிசுபெற்றவர் ; பெண்பாலார் ; நச்செள்ளையாரென்பது இவரது இயற்பெயரென்றும், குறுந்தொகையில்,

> " திண்டேர் நள்ளி கானத் தண்டார்
> பல்லா பயந்த நெய்யிற் ரெண்டி
> முழுதுடன் விளைந்த வெண்ணெல் வெஞ்சோ
> ரெருகலத் தேந்தினுஞ் சிறிதென் ரேழி
> ரு பெருந்தோ ணெகிழ்த்த செல்லற்கு
> விருந்துவரக் கரைந்த காக்கையது பலியே"

என்னும் உக0-ஆம்பாட்டில், காக்கை கரைந்தமையை பாராட்டிக் கூறிய அருமைபற்றிக் காக்கைபாடினியாரென்ற சிறப்புப்பெயரைப் பிற்காலத்தில் ஆன்ரோரால் இவர் பெற்றனரென்றும் தெரிகின்றன;

[பாடினி-பாடுபவள்.] செள்ளையென்பது பெண்பாலார்க்கு இயற்பெயராகப் பண்டைக்காலத்து வழங்கிவந்ததுபோலும்; இந்நூல் கூ-ஆம் பத்தின்பதிகத்தில் மையூர்கிழானுடையமனைவியின்பெயர் அந்துவஞ் செள்ளையென்று வந்திருத்தல்காண்க. மறக்குடிமங்கையின்சிறப்பை விளக்கிப் புறநானூற்றில் இவர்பாடிய உஎஅ-ஆம் பாட்டு, பெண்பாலாருடைய பாக்களின் வரிசையிற் சேர்க்கப்பெற்றிருத்தலும் இவர் பெண்பாலாராதலே வலியுறுத்தும். 'கலனணிக' என்று அரசன் பொற்காசுமுதலியன கொடுத்தானென்றது ஈண்டு அறியற்பாலது. எட்டுத்தொகையில் இவர் செய்தனவாக, கஉ - செய்யுட்கள் காணப்படுகின்றன. (இந்நூல் கo; குறுங். க; புறநா. க.)

எ.—கபிலர்:—இவர் செல்வக் கடுங்கோ வாழியாதனென்னும் சேரவரசன்மீது இந்நூல் எ - ஆம் பத்தைப்பாடி நூறாயிரம் பொற்காசும் அவன் ஒருமலைமீதேறிக் கண்டு கொடுத்தநாடும் பரிசிலாகப் பெற்றவர். இஃது இப்பத்தின் பதிகத்தாலும் அரு-ஆம் பாடலிலுள்ள "கபிலன் பெற்ற வூரினும் பலவே" என்பதனாலும் விளங்குகின்றது. இப்பெயருடைய புலவர் சிலருளர்.

இவர் பிறந்தவூர் பாண்டிநாட்டிலுள்ள திருவாதவூர்; இது திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணத்தில் உஎ - ஆவதாகிய ஞானவுபதேசஞ்செய்த திருவிளையாடலிலுள்ள, "நீதியார் மதுரை நீழ *னெட்டிலை யிருப்பை யென்றேரூர், காதல்கூர் பனுவல் பாடுங் கபிலனூர் பிறந்த மூதூர், சோதிசேர் வகுள நீழற் சிலம்பொலி துலங்கக் காட்டும், வேதநா யகனூர் வாழும் வியன்றிரு வாத வூரால்" என்னும் ச - ஆம் திருவிருத்தத்தால் வெளியாகின்றது.

இவர் அந்தணவருணத்தினர்; புறநானூற்றில், (உoo)"யானே, பரிசிலன் மன்னு மந்தணன்", (உoக) "யானே, தந்தை தோழனிவரென் மகளி, ரந்தணன் புலவன் கொண்டுவந் தனனே" எனத் தம்மைப்புலப்படுத்தற்காக இவர்கூறிய செய்யுட்களும், (கஉசு) "புலனழுக் கற்ற வந்த ணாளன்" என மாரோகத்து நப்பசலையார் இவரைப் பாராட்டிக்கூறியசெய்யுளும் இதனை வலியுறுத்தும்.

* "நெட்டிலை யிருப்பை வட்ட வொண்பூ, வாடா தாயிற் பீடைப் பிடியின், கோடேய்க் கும்மே வாடிலோ பைந்தலைப் பர்தர் மனைதொறு முணங்குஞ், செந்தலை யிறவின் சீரேய்க் கும்மே"—இச்செய்யுள் தமிழ்நாவலர்சரிதையிற் கண்டது.

வேள்பாரியினுடைய உயிர்நண்பரும் அவனுடைய அவைக்களத்துப்புலவருமாக இவர் விளங்கினர் ; தாம் விரும்பியவண்ணம் அவன்தன் மகளிரைக் கொடாதது பற்றித் தமிழ்நாட்டு மூவேந்தரும் அழுக்காறுற்று அவனைக் கொல்லநினைந்து நால்வகைச்சேனைகளோடும் அவன்மலையைச்சூழ்ந்தகாலையில் அவர்களைச் சிறிதும் மதியாமல் அவனுடைய அருமைக்குணங்களைப் புலப்படுத்திப் பாடினர்; அவ்வருமைச்செய்யுட்கள் புறநானூற்றிற் காணப்படும்; அவனிறந்த பின்பு, இவர், பிரிவாற்றாது மனமுருகிப் பலசெய்யுட்களாற்புலம்பி, அவன்புதல்வியரையழைத்துச்சென்றுமணஞ்செய்துகொள்ளும்படி இருங்கோவேள், விச்சிக்கோனென்பவர்களைவேண்டி மறுத்தமை கண்டு அவர்களைவெறுத்துப் பின்பு அம்மகளிர்க்கு மணஞ்செய்வித்துத் தம்முடைய நட்புக்கடனைக்கழித்தனர்.

பத்துப்பாட்டினுள் ஒன்றாகிய குறிஞ்சிப்பாட்டும் பதினெண்கீழ்க்கணக்கினுளொன்றாகிய இன்னாநாற்பதும் இவரியற்றியநூல்கள்.

கக-ஆம் திருமுறையில்வந்துள்ள மூத்தநாயனார் திருவிரட்டைமணிமாலை, சிவபெருமான் திருவிரட்டைமணிமாலை, சிவபெருமான் திருவந்தாதியென்னும் பிரபந்தங்கள் மூன்றையும் அருளிச்செய்த கபிலதேவநாயனரென்பவர் இவரேயென்று பெரியோர் கூறுவர்.

மேற்கூறிய திருவிளையாடற்புராணத்தில், இடைக்காடன் பிணக்குத்தீர்த்த திருவிளையாடல், கக-ஆம் திருவிருத்தத்தில், "எனையந்தாதி சொன்னவன் கபிலன்" எனச் சிவபெருமான் கட்டளையிட்டருளியதாக வந்திருத்தலுங் காண்க.

மேற்கூறியவற்றையன்றி இவரருளிச்செய்தனவாக உஉசு - பாடல்கள் இப்பொழுது கிடைக்கின்றன. அவற்றுள், அகவற்பாக்கள் கசசு: [நற். உ0 ; குறுந். உசு ; ஐங்குறு - க00. அகநா. கசு ; புறநா. சு0. "கெட்டிலையிருப்பை" என்பது-க] வெண்பா க: [திருவள்ளுவ மாலையிலுள்ள, "இனையளவு" என்பது] கலித்தொகையிலுள்ள கலிப்பாக்கள் - உசு.

இவருடையசெய்யுட்கள் மிக்க இனிமையையுடையன; பழைய வுரைகளில் உதாரணமாகக்காட்டப்படும் 'கபிலரதுபாட்டு' என்னும் தொடர்மொழியே இதனை வலியுறுத்தும்.

இவரியற்றிய பாடல்களை உற்றுநோக்குகையில், இவர் குறிஞ்சித்திணையில் மிகப்பயின்றவரென்றும் அதன்வளங்களை விளங்கப் பாடுதலில் மிக்க ஆற்றலுடையவரென்றும் தெரிகின்றன.

மேற்கூறிய பாடல்களில் குறிஞ்சித்திணையைச் சார்ந்தவை : அகவல்கள் - கடு; கலிப்பாக்கள் - உசு.

இவருடைய வாக்கில் விநாயகக் கடவுள், முருகக்கடவுள், சிவபெருமான், பலதேவர், திருமால் இவர்களுடைய துதிகள் வந்திருக்கின்றன. இதனால், இவர் சமயக் கோட்பாட்டிற் பாரதம் பாடிய பெருந்தேவனாரைப் போன்றவராக எண்ணப்படுகிறார்.

எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண் கீழ்க்கணக்கு என்னும் மூத்தொகுதி நூல்களிலும் இவருடைய பாடல்களும் நூல்களும் கலந்திருத்தல் இவரது பெருமையை விளக்குகின்றது.

"அரசவை பணிய வறம்புரிந்து வயங்கிய, மறம்புரி கொள்கை வயங்குசெந் நாவி, னுவலை கூராக் கவலையினெஞ்சி, னனவிற்பாடிய நல்லிசைக், கபிலன்" (பதிற்றுப்பத்து, அநு) எனப் பெருங்குன்றூர் கிழாரும், "வெறுத்த கேள்வி விளங்குபுகழ்க் கபிலன்" (புறநானூறு, நுஉ) எனப் பொருந்திலிளங்கீரனும், "புலனழுக் கற்றவந்தணாள, னிரந்துசென் மாக்கட் இனியிட னின்றிப், பரந்திசை நிற்கப் பாடினன்," (ஷை கூசு) "பொய்யா நாவிற் கபிலன்" (ஷை கஎச) என மாறோக்கத்து நப்பசலையாரும் பாடியவற்றைப்பார்க்கையில் இவருடைய மனம் வாக்குக் காயங்களின் தூய்மையும் அறம்புரி கொள்கையும் பெரும்புலமையும் அன்புடைமையும் நட்பின் பெருமையும் நன்கு விளங்குகின்றன.

இவராற் பாடப்பட்டோர் :—அகுதை, இருங்கோவேள், ஓரி, சேரமான் செல்வக்கடுங்கோவாழியாதன், நன்னி, மலையமான் திருமுடிக்காரி, விச்சிக்கோன், வேள்பாரி, வையாவிக்கோப் பெரும்பேகன் என்பவர்கள்.

கொல்லிமலை, பறம்புநாடு, பறம்புமலை, மூள்ளூர்மலை, மூள்ளூர்க் கானமென்பவைகள் இவராற் பாராட்டப் பெற்றிருத்தலின் அவைகள் இவர் காலத்தில் விளக்கமுற்றிருந்தனவென்றும் இவர் பழகிய இடங்களென்றும் தெரிகின்றன.

நட்பு, வண்மை, நன்மிமறவாமையென்பவைகளை இவருடைய செய்யுட்களிற் பரக்கக் காணலாகும்.

பழைய இலக்கணவுரைகளில், 'கபிலபரணர்' என்று வழங்குகிற தொகைவிலேத்தொடரால், பரணரென்பவருக்கும், திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணத்தில் வந்துள்ள, "பின்னமில் கபிலன் மூழன் பெயரிடைக் காட்டினென்போன்" (உ: க) என்னும் திருவிருத்தத்தால் இடைக்காடருக்கும் சிறந்த நட்பினராக இவர் எண்ணப்படுகிறார். வீரசோழியம், தொகைப்படலம், சு - ஆம் கட்டளைக்கலித்துறையுரையால், பரணருடன் இவர் வாது செய்தனரென்பது வெளியாகின்றது. இவர் வேறு; தோல்கபிலரென்பவர் வேறு.

"முதலிற் கூறுஞ் சினையறி கிளவி" என்னும் தொல்காப்பியச் சூத்திரத்திற்கு இளம்பூரணரும் சேனாவரையரும் எழுதிய வுரையால், கபிலராற் செய்யப் பெற்றதான கபிலமென்ற ஒரு நூலிருப்பதாகத் தெரிகின்றது.

அ.—அரிசில்கிழார்:—இவர், தகடூரெறிந்த பெருஞ்சோலிரும் பொறையென்னும் அரசன்மீது இந்நூல் அ-ஆம் பத்தைப்பாடி ஒன்பதுநூறுபிர்ம் பொற்காசு பரிசில் பெற்றதன்றி அவன் கொடுத்த அரசாட்சிக்குரிய சிங்காதனத்தை அவனுக்கே மீட்டும் இரந்து கொடுத்து அவன்பால் அமைச்சுரிமை பூண்டு விளங்கினார்; 'கிழார்' என்பது வேளாளர்க்கேயுரிய சிறப்புப்பெயராக இருந்ததென்று தெரிதலின், இவரை வேளாண் மாபினரென்று சொல்லவேண்டும்; இதனை, தொல்காப்பியம், மாபியல், எச-ஆம் சூத்திரத்தின் விசேடவுரையிற் காட்டிய பெயர்களாலும் திருத்தொண்டர்புராணவரலாற்றின் உ-ஆம் செய்யுளிலெடுத்துக்காட்டிய பெயர்களாலுமுணர்க. அரிசிலென்பது ஈண்டு ஒரு நதியின் பெயரோ ஒரூரின் பெயரோ யாதும் விளங்கவில்லை. சோழநாட்டிலுள்ள நதிகளுள் அரிசிலென்று ஒரு நதியும் மைஸூரைச்சார்ந்த ஊர்களுள் அரிசிற்கரையென்று ஒருரும் உள்ளன. [கிழார் - உரியவர்.]

வையாவிக்கோப் பெரும்பேகனால் துறக்கப்பட்ட கண்ணகியை அவனுடன்சேர்த்தல்வேண்டி இவர் அவனைப்பாடினர்; அதிகமான் தகடூரெறிந்து வீழ்ந்த எழினியென்பவனுடைய பிரிவாற்றாது வருந்திப் புலம்பினர்; தகடூர்யாத்திரை யென்னுநூலில் அவ்வச்சமயங்களில் இவர் செய்தனவாகச் சிலபாடல்களுண்டென்று தெரிகிறது. [தொல். புறத்திணை. அ, கஉ - ஆம் சூ. ங - உரை.]

மேற்கூறிய சேரவரசனும் உக்கிரப்பெருவழுதியாரும் பேக னென்னும் வள்ளலும் அதிகமானும் இவர் காலத்துத் தலைவர்கள்.

திருவள்ளுவமாலையில், "பரந்தபொருள்" என்னும் கூ - ஆம் செய்யுள் இவர்செய்ததாகத் தெரிதலின், இறையனார் முதலிய புல வர்களும், திருவள்ளுவரும், ஔவையாரும், உக்கிரப்பெருவழுதியா ரைப் பாடிய ஐயூர் மூலங்கிழாரும் வையாவிக்கோப்பெரும் பேக னைப்பாடிய பரணர், பெருங்குன்றூர்கிழார் முதலியோரும், தகடூர்யாத் திரையிற் சில செய்யுளியற்றிய பொன்முடியாரும் இவர் காலத்துப் புலவர்களென்று எண்ணுதற்கிடமுண்டு.

மேற்கூறிய செய்யுட்களால் இவர் மதுரையிலும் மலைநாட்டி லும் பெரும்பாலுமிருந்தாரென்று தெரிகிறது.

இவர்செய்தனவாக இப்பொழுது 20 - செய்யுட்கள் கிடைக்கி ன்றன [இந்நூல்-கo; குறுந் - க; புறநா-ச; தகடூர் - க ; திருவள்-க.]

கூ.—பெருங்குன்றூர்கிழார்:—இவர் குடக்கோ இளஞ்சேரல் இரும்பொறையென்னும் சேரவரசன்மீது இந்நூல் கூ-ஆம்பத்தைப் பாடி, ரூ2 000 - பொற்காசுமுதலிய பலவகைப்பரிசில்கள் பெற்ற வர்; வேளாளர்; கடைச்சங்கமிருந்துதமிழாராய்ந்தோராகிய நாற்பத் தொன்பதின்மருள் ஒருவர் (இறை. க - சூ. உரை) ; வையாவிக் கோப்பெரும் பேகனால் துறக்கப்பட்ட கண்ணகியென்பவளை அவனு டன் சேர்த்தற்கு அவனைப்பாடியவர்; இவராற்பாடப்பட்டோர்கள் மேற்கூறிய தலைவர்களிருவரும் உருவப்பஃறேரிளஞ்சேட் சென்னி யும் ஆவர். இவர் காலத்துப்புலவர்கள் இறையனாரகப்பொருளுரை யாற்றெரிகின்ற சிறுமேதாவியார், சேந்தம்பூதனார், அறிவுடையரனார், இளந் திருமாறனார், மதுரையாசிரியனல்லந்துவனார், மருதனிளநாக னார் கணக்காயனார்மகனார்நக்கீரனார் முதலியோர்களும் வையாவிக் கோப்பெரும்பேகனைப்பாடிய பரணர் முதலியோர்களும் ஆவர். இவ ரியற்றியனவாக எட்டுத்தொகையில் உக - செய்யுட்கள் இப்பொழுது கிடைக்கின்றன. (இந்நூல்-கo; நற்-ச; குறுந்-க; அகநா-க; புறநா-கூ.) இவற்றுள் அகத்திணைக்குரியன-சு ; புறத்திணைக்குரியன-கூ.

கணபதி துணை.

# பதிற்றுப்பத்து

## மூலமும் உரையும்.

### இரண்டாம் பத்து.

(கக) வரைமருள் புணரி வான்பிசி ருடைய
வளிபாய்ந் தட்ட தூளங்கிருங் கமஞ்சூ
னளியிரும் பரப்பின் மாக்கடன் மூன்னி
யணங்குடை யவுண ரேமம் புணர்க்குஞ்
(ங) சூருடை முழுமுத றடிந்த பேரிசைக்
கடுஞ்சின விறல்வேள் களிறூர்ந் தாங்குச்
செவ்வா யெஃகம் விலங்குக ரறுப்ப
வருநிறந் திறந்த புண்ணுமிழ் குருதியின்
மணிநிற விருங்கழி நீர்நிறம் பெயர்ந்து
(கo) மஞலக் கலவை போல வரண்கொன்று
மூரண்மிகு சிறப்பி னுயர்ந்த வூக்கலை
பலர்மொசிந் தோம்பிய திரள்பூங் கடம்பின்
கழுயுடை முழுமுத நுமிய வேஎய்
வென்றெறி முழங்குபடை செய்த வெல்போர்
(கங) ஈரரி நறவி னூர மார்பிற்
போரடு தானைச் சேர லாத
மார்புமலி பைந்தா ரோடையொடு விளங்கும்
வலனுயர் மருப்பிற் பழிதீர் யானைப்
பொலனணி யெருத்த மேல்கொண்டு பொலிந்தனின்
(உo) பலர்புகழ் செல்வ மினிதுகண் டிகுமே

கவிர்தலை சிலம்பிற் றுஞ்சுங் கவரி
பரந்திலங் கருவியொடு நரந்தங் கனவு
மாரியர் துவன்றிய பேரிசை யிமயக்
தென்னங் குமரியொ டாயிடை
உரு மன்மீக் கூறுநர் மறந்தபக் கடந்தே.

துறை - செந்துறைப்பாட்டாண்பாட்டு.
வண்ணம் - ஒழுகுவண்ணம்.
தூக்கு - செந்தூக்கு.
பெயர் - (அ) புண்ணுமிழ்குருதி.

க. பிசிருடையவென்றது பிசிராக உடையவென்றவாறு.

உ. கமஞ்சூல் - நிறைந்தநீர் ; சூல்போறலாற் சூலெனப்பட்டது.

ங. சூருடைமுழுமுதலென்றது சூரவன்மாத்தனக்கு அரணுகவுடைய மாவின்முதலென்றவாறு.

இனிச் சூரவன்மாத்தான் ஒருமாவாய் நின்றுனென்று புராணமுண்டா யிற் சூரனுதற்றன்மையையுடைய மாவின்முதலென்றவாறும்.

ச - கo. நீர்நிறம்பெயர்ந்து, மஞ்ஞைக் கலவைபோலவென முடிக்க.

'போல்'என்றது ஈண்டுப் போலும்படியென விணையெச்சப் பொருள் பட்டு நின்றது. மஞ்ஞைமென்றது குங்குமம்; சாதிங்குலிகமென்பாருமுளர்.

அ - கo 'அருநிறத்திறந்த' என முன்வந்த அடைச்சிறப்பானும், 'மணிநிறவிருங்கழி நீர்நிறம்பெயர்ந்து, மஞ்ஞைக்கலவைபோல' எனப் பின்வந்த அடைச்சிறப்பானும் இதற்குப் 'புண்ணுமிழ்குருதி' என்று பெயராயிற்று.

சஉ - உo. மேல்கொண்டுபொலிந்த நின் செல்வமென முடிக்க.

உக. கவிர்தலை சிலம்பிற் றுஞ்சுமென்றது ஆண்டு உறையும் ஆரிய ராணையானே முருக்கென்னும் முள்ளுடைமரமும், "மயிர்நீப்பின் வாழாக் கவரிமா" (திருக்குறள், கூசுசு) என்று சிறப்பிக்கப்பட்ட தன் மயிர்க்கும் வருத்தஞ்செய்யாமையால், அக்கவிர்செறிந்த சிலம்பின்கண்ணே இனிதாக உறங்குமென்றவாறு.

உஉ. அருவியொடு நரந்தம் கனவுமென்றது - அவ்வாரியராணை யானே பிறவிலங்கானும் மக்களானும் வருத்தமின்றிப் பகற்காலத்துத் தான் நுகர்ந்த அருவியையும் நரந்தத்தையுமே கனவினும் காணுமென்றவாறு.

உச. குமரியொடுவென்னும் ஒடு : எண்ணொடு. ஆயிடையென்றது இமயம் குமரியாகிய அவ்விற்றுக்கு இடையென்றவாறு; அவ்வென்னும் வகரவீற்றுப்பெயர் ஆயிடையென முடிந்தது.

உடு. 'மன்'என்றதனை அரசென்றதுபோல அஃறிணைப்பெயராக்கி, அம் மன்களில் மீக்கூறுமெனக்கொள்க.

(உடு) மறந்தபக்கஞ்சென்று (கச) முழங்குபணைசெய்தவென மாறிமுடிக்க; இங்ஙனம் மாறுது (ககூ) எருத்தமேல்கொண்டென்னும் வினையொடு மாறி முடிப்பாருமுளர்.

(ககூ) சேரலாத, (சு)கடுஞ்சினவிறல்வேள் களிறூர்ந்தாங்கு (கஅ) யானை (ஙக) யெருத்தமேல்கொண்டு பொலிந்தின் (உ0) பலர்புகழ்செல்வம் கண் டிகுமெனமாறிக் கூட்டி வினைமுடிவு செய்க.

இதனைச் சொல்லியது, அவன் வெற்றிச்செல்வச்சிறப்புக் கூறியவாறு மிற்று.

(பிரதிபேதம்) சு. ஏமம்புணர்காக்கும். கஙூ. துமியவோஓய்.
கூ. நீனிறம். ககூ. போர்வேண்டுதானை.
க0. போலரண். உடு. மதந்தப. (க)

(கஉ) வயவர் வீழ் வாளரின் மயக்கி
யிடங்கவர் கடும்பி னரசுதலை பனிப்பக்
கடம்புமுத றடிந்த கடுஞ்சின வேந்தே
தாரணி யெருத்தின் வாரல் வள்ளுகி
ரு ரிமான் வழங்குஞ் சாரற் பிறமான்
ரோடுகொ ளினநிரை நெஞ்சதிர்ந் தாங்கு
மூரசுமுழங்கு நெடுநக ரரசுதுயி லீயாது
மாதிரம் பனிக்கு மழம்வீங்கு பல்புகழ்
கேட்டற் கினிதுகின் செல்வங் கேட்டொறுங்
க0 காண்டல் விருப்பொடு கமழுங் குளவி
வாடாப் பைம்மயி ரிளைய வாடிடை
யண்ணல் மழகளி றரிஞிமி ரோப்புங்
கன்றுபுனர் பிடிய குன்றுபல நீந்தி
வந்தவ ணிறுத்த விரும்பே ரொக்கற்
கரு ரெல்பசி யுழந்த பழங்கண் வீழ
வெஃகுபோழ்ந் தறுத்த வாணிணக் கொழுங்குறை
மையூன் பெய்த வெண்ணல் வெண்சோறு
நனையமை கள்ளின் றேறலொடு மாந்தி
நீர்ப்படு பருந்தி னிருஞ்சிற கன்னி
உ0 நிலந்தின் சிதாஅர் களைந்த பின்றை

# பதிற்றுப் பத்து.

நூலாக் கலிங்கம் வாலரைக் கொளீஇ
வணரிருங் கதுப்பின் வாங்கமை மென்சிரள்
வசையின் மகளிர் வயங்கிழை யணிய .
வமர்புமெய் யார்த்த சுற்றமொடு
உரு நுகர்த்தற் கினிதுநின் பெருங்கலி மகிழ்வே.

இதுவுமது.

பெயர் - (அ) மறம்வீங்கு பல்புகழ்.

எ. துயிலீயாதென்பது துயிலாதென்னும் விணைத்திரிசொல்; துயி லாமலெனத்திரிக்க; இனித் திரியாது, 'யாதுமீரொழுகாதுகிடந்தது' என் னும் வழக்குப்போல இடத்துநிகழ்பொருளின் தொழிலை இடத்திற்கேற்றி மாதிரமானது அரசுதுயிலீயாது பனிக்குமென அம்மாதிரத்தின் விணையொடு முடிப்பினும் அமையும்.

அ. மறம்வீங்குபல்புகழென்றது அரசர்க்குச்சிறந்த மறப்புகழ் மற் றைப்புகழினும் மிக்க பல்புகழென்றவாறு.

இச்சிறப்பானே இதற்கு **'மறம்வீங்குபல்புகழ்'** என்று பெயரா யிற்று.

அ - கூ. நின்செல்வம் இனிது; யாது இனிதெனிற் பல்புகழ் கேட்டற்கு இனிதென முடிவுகொள்க.

கூ. கேட்டோறுமென்பதற்கு அச்செல்வத்தையென வருவிக்க.

உக. நூலாக்கலிங்கமென்றது ஒருவர் நூலாநூலாகிய பட்டுநூல் முதலாயவற்றுச்செய்த கலிங்கமென்றவாறு.

நூலாமையென்னுந்தொழில் கலிங்கத்துக்குச் சினையாகிய நூல்மேல தாலெனின், அச்சினையோடுமுதற்குள்ள ஒற்றுமைபற்றிச் சினைவினையை முதல்மேலேற்றி வழுவமைதியாற் கூறினனென்க. இனி நூலாநூற்கலிங்க மென்பான் நூலென்பதனைத் தொகுத்துக் கூறினனென்பாருமுளர்.

உரு. நுகர்தற்கு இனிது நின் பெருங்கலிமகிழ்வேயென்றது நின் பெரிய ஆவாரத்தையுடைய ஓலக்கத்துச்செல்கின்ற விணைதமகிழ்ச்சி அறு பவித்தற்கு இனிதென்றவாறு.

(கூ) வேந்தே, (கூ) நின்செல்வம் (அ) புகழ் (கூ) கேட்டற்கினிது; (உரு) நின்பெருங்கலிமகிழ்வு நுகர்தற்கினிதென விணைமுடிவுசெய்க.

இதனுற்சொல்லியது, அவன்வென்றிச்சிறப்பும் அவனது ஓலக்க விணைதச்சிறப்பும் உடன்கூறியவாறுயிற்று.

(பி - ம்.) உரு. சோலைப்பிறமான். கக. இழையவாடுகடை. (உ)

# இரண்டாம் பத்து

(கஙூ) தோறுத்தவய லாரல்பிறழ்ஙவு
மேறுபொருதசெறு வுழாதுவித்துஙவுங்
கரும்பின் பூத்திப் பூத்த நேய்த
லிருங்கு ணெருமையி னிசைததிக் குஙவுங்
ஙு கலிகெழு துணங்கை யாடிய மருங்கின்
வளைதலை மூதா வாம்ப லார்ஙவு
மொலிதெங்கி னிமிழ்மருதிற்
புனல்வாயிற் பூம்பொய்கைப்
பாடல் சான்ற பயங்கெழு வைப்பி
கo ஞுகெவி னழிய நாமந் தோற்றிக்
கூற்றமே ஙின்ற யாக்கை போல
நீவிவந் திறுத்த நீரழி பாக்கம்
விரிபூங் கரும்பின் கழனி புல்லெனத்
திரிகாய் விடத்தொடு காருடை போகிக்
கஙு கலைத்தலைப் பேய்மகள் கழுதூர்ந் தியங்க
வூரிய நெருஞ்சி நீரூடு பறந்தலைத்
தாதெரு மறுத்த கலியழி மன்றத்
துள்ள மழிய வூக்குநர் மிடறபுத்
துள்ளுநர் பனிக்கும் பாழா யினவே
உo காடே கடவுண் மேன புறவே
யொள்ளிழை மகளிரொடு மள்ளர் மேன
வாறே யவ்வனைத் தன்றியு ஞாலத்துக்
கூலம் பகர்நர் குடிபுறந் தராஅக்
குடிபுறந் தருநர் பார மோம்பி
உங யழல்சென்ற மருங்கின் வெள்ளி யோடாது
மழைவேண்டு புலத்து மாரி நிற்ப
நோயொடு பசியிகந் தொரீஇப்
பூத்தன்று பெருமநீ காத்த நாடே.

துறை - செந்துறைப் பாடாண்பாட்டு.
வண்ணம் - ஒழுகுவண்ணம்.
தூக்கு - செந்தூக்கும் வஞ்சித்தூக்கும்.
பெயர் - (ங) பூத்தநெய்தல்.

(க) பிறழ்நவெனவும் (உ) வித்துநவெனவும் (ச) தடுக்குநவெனவும் (சு) ஆர்நவெனவும்வந்தன வினைப்பெயர்த் திரிசொல்.

நே - சு. நெய்தல் எருமையின் நிரை தடுக்குநவுமென்றது நெய்தலானது அக்கரும்புமுதலாய மற்றேரிரையின்பாங்கரிற் செல்லாது தன்னேயேநின்று தின்னும்படி தான் போதவுண்ட எருமைநிரையைத் தடுக்குமிடங்களுமென்றவாறு.

இச்சிறப்பானே இதற்குப் 'பூத்தநெய்தல்' என்று பெயராயிற்று.

கூ. மூதா ஆம்பலார்நவுமென்றது புறத்துப்போய் இரைதெவிட்டாதி முதிய ஆக்கள் (நு) துணங்கையாடிய இடத்துநின்று ஆம்பலேயே தின்னுமிடங்களுமென்றவாறு.

என்றது, பெருக ஆம்பல்சூடித் துணங்கையர்டுவாரையுடையனவென அவ்விடங்களின் செல்வச்சிறப்புக் கூறியவாறுயிற்று.

எ. இமிழ்மருதென்றதற்குப் புள்ளிமிழ்மருதென்று ஒரு பெயர்வருவிக்க.

அ. புனல்வாயில் - வாய்த்தலை.

க - கo. ஒலிதெங்கென்னும்பெயர்க்கு முன்னின்ற பெயர்கள் எண்ணும்மையோடு நின்றமையால் அவற்றையுடைய - நாடென இரண்டாவதன் தொகையாய் அச்சொல் அவற்றையெல்லாம் எழுவாயாக்கி நாட்டிற்கு அவ்விடங்கள் சினையாகலின், நாடு கவினழியவென்னும் முதற்பயனிலையோடு வழுவமைதியாக முடிக்க.

கo - கக. கூற்றடூஉ நின்றயாக்கைபோல நாடுகவினழியவென மாறிக்கூட்டிக் கூற்றுவனுலே கொல்லப்படாநின்ற யாக்கை ஒருகாலைக் கொருகால் அழகழியுமாறுபோல நாடு அழகழியும்படியெனவுரைக்க.

இனி மாறுதே போலும்படியெனப் போலவென்பதனை வினையெச்சநீர்மையாக்கிப் போல்கின்றது மேல்வருகின்ற பாக்கமாகவுரைப்பினுமமையும். இனிக் கூற்றுவனை அட்டுநின்ற யாக்கையையுடையானெருவன் உளனுயினும் அவனைப்போல நீ சிவந்தென்றுரைப்பாருமுளர்.

கஉ. நீர்ழிபாக்கமென்றது வெள்ளத்தான் அழிவுபடனல்லது பகைவரான் அழியாத பாக்கமென்றவாறு.

பாக்கமென்றது, நெய்தனிலத்து ஊர்க்கேயன்றி, "கட்கொண்டிக் குடிப்பாக்கத்து, நற்கொற்கை" (மதுரைக்காஞ்சி, காஉ-காஅ ஆம் அடிகள்) என்று வந்தமையான் ஒரோவழி அரசனிருப்புக்குப் பெயராமாகலின் ஈண்டுப் பாக்கமுடைய பேரூர்களெனப்பட்டது.

கச. உடைபோகவெனத் திரிக்க.

கள - கூ. மன்றத்து உள்ளம் அழிய ஊக்குஉர் மிடல் தபுத்து

உள்ளுநர் பனிக்கும் பாழென்றது, அம்மன்றிலே போதற்கு உள்ளம் அழியச்செய்தே பின்னும் தம் கருமவேட்கையாற் போக மேற்கொண்டவருடைய வலியைக் கெடுத்தலானே பின்பு போக நினைப்பார் நடுங்குதற்குக்காரணமாகிய பாழென்றவாறு.

கஅ. தபுத்து, தபுக்கவெனத்திரிக்க.

உ0. காடேகடவுள்மேனவென்றது நின்னாட்டுப் பெருங்காடான இடங்களெல்லாம் முதற்காலத்துக் கோயில்களான வென்றவாறு.

மேயினவென்பது மேனவென்று இடைக்குறைந்தது.

உ0 - உக. புறவு மகளிரொடு மள்ளர்மேனவென்றது சிறுகர்டான இடங்களெல்லாம் நின்படையாளர்கள் மகளிரோடு உறையும் படைநிலைகளாயினவென்றவாறு.

உஉ. ஆறே அவ்வனைத்தென்றது காடும் புறவும் அல்லாதபெருவழிகளும் ஆறலைகள்வரும் பிற இடையூறுமின்றி முன்சொன்னகடவுளும் மள்ளரும் உறையுமிடமாயினவென்றவாறு.

அனைத்தென்னாது அவ்வனைத்தென்று சுட்டுஇரட்டித்தது, அந்த அந்தத் தன்மையதென முன் நின்றவற்றின் பன்மைதோற்றற்கென்பது.

உங. தாராவென்பது தராவெனக்குறுகிற்று.

உச. குடிபுறந்தருநரென்றது தம் கீழ்க்குடிகளாகிய வரிசையாளரைப் புறந்தரும் மேற்குடிகளாகிய காணியாளரை.

(உச) பாரமோம்பி (உஅ) நீகாத்தவென மாறிக்கூட்டுக.

(உடு) வெள்ளியோடாமலெனவும் (உஎ) ப்சியிகந்தொருவவெனவும் திரிக்க.

உஉ - சு. இனி ஆறு முன்சொன்ன அவ்வனைத்தாவதுமன்றி ஆறலைகள்வரின்றிக் கூலம்பகர்வார் இயங்கும்படியான வழக்காலே அந்தக் கூலம்பகர்வார் குடிகளைப் புறந்தந்தென்றும், குடிபுறந்தருநர் பாரத்தை ஓம்பி மழைவேண்டியபுலத்து மாரி நிற்பவென்றும், கூலம்பகர்நர்குடிபுறந்தருதலே ஆற்றின்தொழிலாகவும், குடிபுறந்தருநர் பாரமோம்புதலே மழையின் தொழிலாகவும் கூட்டி உரைப்பாருமுளர்.

(கக) சூற்றஉநின்றயாக்கைபோல (கo) நாடுகவினழிய நாமம் தோற்றி (கஉ) நீசிவந்திறுத்த நீரழிபாக்கங்கள் (கங) கழுனிபுல்லெனக் (கச) காருடைபோகக் (கடு) கழுது ஊர்ந்து இயங்கப் (கசு) பாழாயின; (உஅ) நீ காத்தநாட்டிற் (உo) காடு கடவுளான் மேவப்பட்டன; அங்ஙட்டுப்புறவுகள் (உக) மள்ளரான் மேவப்பட்டன; அங்ஙட்டு (உஉ) ஆறு அவ்வனைத்தாயிற்று; அன்றியும் (உங) கூலம்பகர்நர் குடிபுறந்தராக் (உச) குடிபுறந்தருநர்பாரமோம்பி (உஅ) நீகாத்தநாடு (உசு) மழை வேண்டிய

புலத்து மாரிகிற்ப நோயொடு பசியிகக்தொருவப் பூத்ததெனக் கூட்டி விளை முடிவுசெய்க.

இதனுற்சொல்லியது, அவன்வென்றிச்சிறப்பும் தன் நாடுகாத்தற் சிறப்பும் உடன்கூறியவாறுயிற்று.

(க) 'தொறுத்த' என்றும் (உ) 'ஏறுபொருத' என்றும் (எ) 'ஒலி தெங்கின்' என்றும் (அ) 'புனல்வாயில்' என்றுமிருந்த நான்கடியும் வஞ்சியடி யான்வந்தமையான், வஞ்சித்தூக்குமாயிற்று.

(பி - ம்.) க. தொறுத்தகுளீள்வயல். கசு. ஊறியகெருஞ்சி.
எ. ஒலித்தெங்கின். உரு. குடிபுறந்தாரா. (ரு)

(கசு.) நிலநீர் வளிவிசும் பென்ற நான்கி
னளப்பரி யையே
நாள்கோ டிங்கண் ஞாயிறு கனையழ
லுலந்தொருங்கு புணர்ந்த விளக்கத் தனையை
(ரு) போர்தலை மிகுத்த வீரம் பதின்மரொடு
துப்புத்துறை போகிய துணிவுடை யாண்மை
யக்குர னனைய கைவண் மையையே
யமர்கடந்து மலைந்த தும்பைப் பகைவர்
போர்பீ டழித்த செருப்புகன் மூன்ப
(கo) கூற்றுவெகுண்டு வரினு மாற்றுமாற் றலையே
யெழுமுடி கெழீஇய திருவெம ரகலத்து
நோன்புரித் தடக்கைச் சான்றோர் மெய்ம்மறை
வானுறை மகளிர் கலனிகல் கொள்ளும்
வயங்கிழை கரந்த வண்டுபடு கதுப்பி
(கரு) னெடுங்கே ரோதிக் கொடுங்குழை கணவ
பல்களிற்றுத் தொழுதியொடு வெல்கொடி நுடங்கும்
படையே நுழவ பாடினி வேந்தே
யிலங்குமணி மிடைந்த பொலங்கலத் திகிரிக்
கடலக வரைப்பினிப் பொழின்முழு தாண்டனின்
(உo) முன்றிணை முதல்வர் போல நின்றுகீ
கெடாஅ நல்லிசை நிலைஇத்
தவாஅ வியரோவிவ் வுலகமோ டுடனே.

துறை - செந்துறைப்பாடாண்பாட்டு.
வண்ணம் - ஒழுகுவண்ணமும் சொற்சீர்வண்ணமும்.

தூக்கு - செந்தூக்கு.

பெயர் - (கஉ) சான்றோர்மெய்ம்மறை.

க. பூதங்கள், ஐந்தையுமெண்ணுது நீயை ஒழித்தது, மேல் (ச) விளக்கத்துக்கு உவமமாக எண்ணுகின்றவற்றோடு கூட்டவேண்டியென்பது.

ங. ஈண்டுக் கோளென்றது, விளக்கமில்லா இராகுகேதுவென்னும் இரண்டும் நீக்கி நின்ற ஏழினும் சிறப்புப்பற்றி வேறெண்ணப்பட்டதிங்கள் ஞாயிறென்னுமிரண்டும் நீக்கி நின்ற ஐந்தையுமென்பது.

ச. ஐந்தென்று தொகைகூறியது, ஈள் கோளென்னுமவற்றைத் தொகைக்கூற்றின் ஒரோவொன்றாக்க வென்பது.

கக. எழுமுடியென்பது ஏழுஅரசரைவென்று அவர்கள் ஏழுமுடியானுஞ் செய்ததோராரமாம்.

கஉ. கோன்புரித்தடக்கையென்றது வலிபொருந்துதலையுடைய தடக்கையென்றவாறு.

ஈண்டுச்சான்றோரென்பது போரில் அமைதியுடைய வீரரை. மெய்ம்மறை-மெய்புகுகருவி; மெய்ம்மறையென்றது, அச்சான்றோர்க்கு மெய்புகுகருவிபோலப் போரிற்புக்கால் வலியாய் முன்னிற்றலின்.

இச்சிறப்புநோக்கி இதற்கு, **'சான்றோர் மெய்ம்மறை'** என்றுபெயராயிற்று.

கங. வானுறைமகளிர் நலன் இகல் கொள்ளுமென்றது வான்அரமகளிர் அழகிற்கு அவளொப்பேன்யானே யானேயென்று தங்களில் மாறுகொள்ளுமென்றவாறு.

கரு. ஒடுங்கீரோதி - சுருள்.

(க) நிலமுதற் பூதமான்கும்போலப் பெருமை (உ) அளத்தலரியை; (ங) ஈண்மீன்முதல் (ச) ஐந்தையும் விளக்கத்தால் ஒப்பை ; (எ) கைவண்மையால் அக்குரனென்பவனையொப்பை; அன்றி (க) மூன்ப, நின்வலியிருக்கும்படி சொல்லிற் (ஈ) கூற்றுவெகுண்டுவரினும் அதனையும் மாற்றும்வலியையுடையை; ஆதலாற்(கஉ) சான்றோர்மெய்ம்மறை, (கரு) கொடுங்குழைகணவ, (கள)படையேருழவ, பாடினிவேந்தே, (உ ஏ) நின்குடி முன்முதல் வர்போலநின்று (உக) நல்லிசையைநிலைப்பித்து (உஉ) இவ்வுலகத்தோடு கூடக்கெடாதாழிவாயாகவென வினைமுடிவுசெய்க.

இதனுட்சொல்லியது, அவன்பலகுணங்களையும் ஆற்றலையும் ஒருங்கு கூறி வாழ்த்தியவாறுயிற்று.

(உ) 'அளப்பரியையே' எனச்சொற்சிறுமைவந்தமையாற் **சொற்சீர்வண்ணமாயிற்று**; ஈண்டுச் சொற்சீரென்றது, அளவடியிற்குறைந்தும் வஞ்சியோசையன்றி அகவலோசையாயும்வரும் அடியினை.

(பி - ம்.) கo. வரினும்பாற்றும். கச. வண்டெடுத்துப்பின்.
கஉ. சான்றோர்மேமறை.

(கரு.) யாண்டு தலைப்பெயர வேண்டு புலத்திறுத்து
மூனையெரி பரப்பிய துன்னருஞ் சிற்றமொடு
மழைதவழ்பு தலைஇய மதின்மர மூருக்கி
நிரைகளி ரெழுகிய நிரைய வேள்ளம்
நு பரந்தாடி கழங்கழி மன்மருங் கறுப்பக்
கொடிவிடு குருஉப்புகை பிசிரக் கால்பொர
வழல்கவர் மருங்கி னுருவறக் கெடித்துத்
தொல்கவி னழிந்த கண்ணகன் வைப்பின்
வெண்பூ வேளையொடு பைஞ்சுனை கலித்துப்
கo பீரிவர்பு பரந்த சேறு நிறைமுதற்
சிவந்த காந்தண் முதல்சிதை மூதிற்
புலவுவில் லுழவிற் புல்லாள் வழங்கும்
புல்லிலை வைப்பிற் புலஞ்சிதை யரம்பி
னறியா மையான் மறந்துதுப் பெதிர்ந்தகின்
கடு பகைவர் நாடுங் கண்டுவந் திசினே
கடலவுங் கல்லவும் யாற்றவும் பிறவும்
வளம்பல நிகழ்தரு நனந்தலை நன்னாட்டு
விழவறு பறியா முழவிமிழ் மூதூர்க்
கொடிநிழற் பட்ட பொன்னுடை நியமத்துச்
உo சீர்பெறு கலிமகி ழியம்பு மூரசின்
வயவர் வேந்தே பரிசிலர் வெறுக்கை
தாரணிந் தெழிலிய தொடிசிதை மருப்பிற்
போர்வல் யானைச் சேர லாத
நீவா ழியரிவ் வுலகத் தோர்க்கென
உடு வுண்டுரை மாறிய மழலை நாவின்
மென்சொற் கல்பயர் திருந்துதொடை வாழ்த்த
வெய்துற வறியாது நந்திய வாழ்க்கைச்
செய்தன் மேவ லமர்ந்த சுற்றமோ
டொன்றுமொழிந் தடங்கிய கொள்கை யென்றும்
கூo பதிபிழைப் பறியாது துய்த்த லெய்தி

நிரைய மொரீஇய வேட்கைப் புரையோர்
மேயின ருறையும் பலர்புகழ் பண்பி
னீபுறந் தருதலி னேயிகங் தொரீஇய
யாணர்ஈன் ஞமிங் கண்டமெதி மருண்டனென்
நடு மண்ணுடை ஞாலத்து மன்னுயிர்க் கெஞ்சா
தீத்துக்கை தண்டாக் கைகடிந் துப்பிற்
புரைவயிற் புரைவயிற் பெரிய நல்கி
யேம மாகிய சீர்கெழு விழவி
னெடியோ னன்ன நல்லிசை
சுo யொடியா மைந்தகின் பண்புபல நயந்தே.

துறை - செந்துறைப்பாடாண்பாட்டு.
வண்ணம் - ஒழுகுவண்ணம்.
தூக்கு - செந்தூக்கு.
பெயர் - (சு) நிரையவேள்ளம்.

(உ) கீழ்த்தமொடு (எ) அழல்கவர்மருங்கின் உருவறக்கெடுத்தலை முடிக்க.

ஐ. நிரையவெள்ளமென்றது பகைவர்க்கு நிரயபாலரைப்போலும் படைவெள்ள மென்றவாறு; நிரையமென்றது நிரையத்துவாழ்வாரை.

இச்சிறப்பானே இதற்கு 'நிரையவேள்ளம்' என்றுபெயராயிற்று.

நு. மன்மருங்கறுப்பவென்றது மன்மருங்கறுப்பவேண்டியென்ற வாறு.

எ. கெடுத்தென்பதனைக் கெடுக்கவெனத்திரிக்க.

(அ) தொல்கவினழிந்த கண்ணகன்வைப்பினையும் (கஉ) புல்லாள் வழங்கும் (கங) புல்லிலைவைப்பினையுமுடைய புலஞ்சிதை (கரு) நாடென முடிக்க.

அ. தொல்கவினழிந்தவைப்பென்றது சூடுண்டு அழிந்த ஊர்களை.

கங. புல்லிலைவைப்பென்றது குடிபோய்ப் பாழ்த்தவூர்களை.

கூ. சுரைகலிக்கவெனத் திரிக்க.

கo - கக. நிறைமுத்தற்காத்தலெனக்கூட்டுக.

கக - ங. மூதில்லையுடைய புல்லிலைவைப்பெனக்கூட்டுக.

கங. புல்லிலைவைப்பென்றது புல்லிய இலைகளாலே வேயப் பட்ட ஊரென்றவாறு; இதனை, 'நூலாக்கலிங்கம்' (பதிற்றுப்பத்து, கஉ) என்றதுபோலக்கொள்க.

கஉ. புல்லாளென்றது புல்லியதொழிலையுடைய ஆவிலைகள்வரை.

(கங) அரம்பிற் (கரு) பகைவரெனமுடிக்க.

கங. அரம்பென்பது குறும்பு,

உ0 - உக. சீர்பெறு கலிமகிழியம்பும் முரசின்வியவரென்றது வெற்றிப்புகழ்பெற்ற மிக்க மகிழ்ச்சியானே ஒலிக்கின்ற முரசினையுடையவீரரென்றவாறு.

ககூ - உ0. நியமத்தியம்புமென முடிக்க.

உச - சு. நீ வாழியரிவ்வுலகத்தோர்க்கெனத் திருந்துதொடை வாழ்த்தவெனமுடித்து, இவ்வுலகத்தோராக்கத்தின் பொருட்டு நீ வாழ்வாயாகவெனச்சொல்லித் திருந்திய நரப்புத்தொடையினையுடைய யாழொடு வாழ்த்தவெனவுரைக்க.

தொடையொடெனவிரியும் ஓடு வேறுவினையொடு.

உரு - சு. மழலைஈர்வினையும் மென்சொல்லினையுமுடைய கலப்பையரெனக்கொள்க.

(உஎ) வெய்துறவறியாது நந்தியவாழ்க்கையினையும் (உஙு) ஒன்றுமொழிந்து அடங்கியகொள்கையினையும் (ஙக) நிரையமொரீஇய வேட்கையினையுமுடைய புரையோர் (உஅ) செய்தன மேவலமர்ந்த சுற்றத்தொடு (ஙo) பதிபிழைப்பறியாது துய்த்தலெய்தி (ஙஉ) மேயினருறையும் (ஙச) நாடென மாறிக்கூட்டியுரைக்க.

உஅ. செய்தனமேவலமர்ந்த. சுற்றமென்றது சுற்றத்தலைவர்செய்தகாரியங்களைப் பின்சிதையாது தாம் அவற்றை மேவுதலையுடைய அத்தலைவரொடு மனம்பொருந்தின சுற்றமென்றவாறு.

செய்தனவென்பது கடைக்குறைந்தது.

(ஙசு) ஈத்துக்கைதண்டா (சo) மைந்தவென முடிக்க.

ஙஎ. புரைவயிற் புரைவயிற் பெரியகல்லியென்றது உயர்ந்ததேவாலயமுள்ளவிடங்களிலே உயர்ந்த ஆபரணமுள்ளிட்டவற்றைக் கொடுத்தென்றவாறு.

(கரு) நின்பகைவர்நாடும் கண்டுவந்தேன்; அதுவேயன்றி (உக) வேந்தே, வெறுக்கை, (உங) சேரலாத, (ஙங) நீ புறந்தருதலின், கோயிகந்தொரீஇய நின் (ஙச) நாடும் கண்டு மதிமருண்டேன்; இவை இரண்டும் காணவேண்டினகாரணம் யாதெனின், (சo) மைந்த, நின்பண்புபலவற்றையும் காணநயந்தென வினைமுடிவுசெய்க.

இதனைச்சொல்லியது, அவன்வென்றிச்சிறப்பும்தன் நாடுகாத்தற்சிறப்பும் உடன்கூறியவாறுயிற்று.

(பி - ம்.) ரு. கழங்குவழி. அ. கலினிழந்த. கo. பீர்வாய் பரந்த. (ரு)

(கசு) கோடுறழ்ந் தெடுத்த கொடுங்க ணிஞ்சி
நாடுகண் டன்ன கணைதுஞ்சு விலங்கற்
றுஞ்சுமரக் குழாஅந் துவன்றிப் புனிற்றுமகள்
பூணு வையவி தூக்கிய மதில
ருஉ நல்லெழி னெடும்புதவு முருக்கிக் கொல்லு
பேன மாகிய தூணேமரி மருப்பிற்
கடாஅம் வார்ந்து கடுஞ்சினம் பொதித்தி
மரங்கொன் மழகளிறு முழங்கும் பாசறை
நீடினை யாகலிற் காண்குவந் திசினே
கஉ யாறிய கற்பி னடங்கிய சாய
லூடினு மினிய கூறு மின்னகை
யமிர்துபொதி துவர்வா யமர்த்த நோக்கிற்
சுடர்நுத லசைநடை யுள்ளலு முரியள்
பாய லுய்யுமோ தோன்ற முலின்று
கருஉ திருமணி பொருத திகழ்விடி பசும்பொன
வயங்குகதிர் வயிரமோ டுறழ்ந்துபூண் சுடர்வர
வெழுமுடி கெழீஇய திருவெம ராகலத்துப்
புரையோ ருண்கட் டெயிலின் பாயல்
பாலுங் கொளாலும் வல்லோய்நின்
உஉ சாயன் மார்பு நனியலைத் தன்றே.

இதுவுமது.

பெயர். (கஅ) துயிலின்பாயல்.

க. கோடுறழ்ந்து எடுத்த கொடுங்கணிஞ்சியென்றது மலையுள்ள விடங்களிலே அம்மலைதானே மதிலாகவும் மலையில்லாத இட்ங்களில் மதிலே அரணுகவும் இவ்வாறு மலையொடுமாறுடவெடுத்த வளைந்த இடத்தையுடைய புறமதிலென்றவாறு.

உறழவெனத்திரிக்க. 'கோடுபுரந்தெடுத்த' என்பது பாடமாயின் மதிலில்லாத இடங்களே மலை காவலாய்ப்புரக்கவெடுத்தவென்க.

உ. நாடுகண்டன்ன கணைதுஞ்சு விலங்கலென்றது நெடுநாட்பட அடைமதிற்பட்டகாலத்தே வினைத்துக்கோடற்குவயலும்குளமும் உளவாகச் சமைத்துவைத்தமையாற் கண்டார்க்கு நாடுகண்டாற்போன்ற அப்புக்கட்டுக்கள் தங்கும் மலைபோன்ற இடைமதிலென்றவாறு.

விலங்கல் போலின், விலங்கலெனப்பட்டது. நாடிகண்டாலொப்பது அம்மதிலையடைந்த விடமென்னின், அவ்விடவணுமைபற்றி அதன் உவமையை அம்மதில்மேலதாகக் கூறிற்றெனக்கொள்க.

கூ. துஞ்சுமரமென்றது மதில்வாயிலிற்றூங்கும் கணையமரங்களை; இனிக் கழுக்கோலாக நாட்டிய மரமென்பாருமுளர்.

சு. ஐயவியென்றது கதவிற்குக் காவலாகப் புறவாயிலே தூக்கப்படும் தூலாமரத்தை; அப்புக்கட்டென்பாருமுளர். ஈண்டு மதிலென்றது உண்மதிலை.

(க) கொடிங்கணிஞ்சியையும் (உ) விலங்கலையுமுடைய (சு) மதிலெனக் கூட்டுக.

இனி இடையில் விலங்கலென்றதனை மாற்றார் படையை விலங்குதலையுடையவென்றுக்கி, முன்னின்ற கொடிங்கணிஞ்சியென்றதோன்றுமே மதிலாக ஐயவிதாக்கிய மதிலென்றதனை ஆகுபெயரான் ஊர்க்குப் பெயராக்கி நாடிகண்டன்ன ஊரென மாறியுரைப்பாருமுளர்.

கஃ. உள்ளலுமுரியனென்றது யான் குறித்த நாளளவும் ஆற்றியிருக்கவென்ற நின்னேவல்பூண்டு நின்னை உள்ளாதிருத்தலேயன்றி நீ குறித்த நாளுக்குமேலே நீட்டித்தாயாகலின், நின்னை நினைத்து வருந்துதலுமுரியனென்றவாறு.

கசு - ரு. தாவின்று திருமணிபொருத திகழ்விடபசும்பொனென்றது வலியில்லையானபடியாலே அழகிய மணிகளொடு பொருத ஒளிவிடுகின்ற பசும்பொனென்றவாறு.

ஈண்டுத் தாவென்றதுவலி; பொன்னுக்கு வலியாவது உரனுடைமை. இன்றென்பதனை இன்றுகாலெனத்திரித்து இன்றுகையாலெனக்கொள்க. என்றது, ஒளியையுடைய மணிகளொடு பொரவற்றும்படி ஒட்டற்ற ஒளியையுடைய பசும்பொனென்றவாறு.

கரு - சு. பூண் பசும்பொன் வயிரமொடு உறழ்ந்து சுடர்வரவெனக் கூட்டி, பூணபசும்பொன் தன்னிடையழுத்தினவயிரங்களொடு மாறுபட்டு விளங்குவனவுரைக்க.

கஎ. பூரையோரென்றபன்மையாற் காதன்மகளிர் பலரெனக் கொள்க.

கள - அ. அகலப் பாயலென இருபெயரொட்டாக்கி, அத்தை அல்வழிச்சாரியையென்க. துயிலினியபாயலெனவுரைக்க.

அகலத்தை மகளிர்க்குப் பாயலெனச் சிறப்பித்தமையான், இதற்கு 'துயிலின்பாயல்' என்று பெயராயிற்று.

கக. பாலுங்கொளாலும் வல்லோயென்றது அவ்வகலப்பாயலை வேற்றுப்புலத்து விளையில்வழி நின்மகளிர்க்கு நுகரக்கொடுத்தற்கு நின்னி

டத்தினின்றும் பகுத்தலையும் வினையுள்வழி அம்மகளிர்பால்நின்றும் வாங்கிக் கோடலையும் வல்லோயென்றவாறு.

(அ) பாசறைக்கண் நீ (கூ) நீடினையாகலின் நின்னைக் காணவந்தேன்; நின்தேவியாகிய (கஈ) அசைநடை நின்னை நினைத்தலுமுரியள்; ஆனபின்பு அவள் (கச) பாயல்வருத்தத்திற்கு உய்யுமோ, உய்யாளன்றே; தோன்றல், (கள - அ) அகலப்பாயல் (கக) பாலும் கொளாலும் வல்லோய்; நின் (உ0) மார்பு மிக அவளை வருத்திற்றுக்காண்; நீ அவள்பாற் கடிதெழுக வென வினைமுடிவு செய்க.

இதனைத் சொல்லியது, அவன் வென்றிச்சிறப்பும் குலமகளோடு நிகழ்ந்த இன்பச்சிறப்பும் உடன்கூறியவாறுயிற்று. (சு)

(பி - ம்) நு-சு. கொல்லுமேனம்.

(கள) புரைவது நினைப்பிற் புரைவதோ வின்றே
பெரிய தப்புந ராயினும் பகைவர்
பணிந்துதிறை பகரக் கொள்ளுநை யாதலிற்
றுளங்குபிசி ருடைய மாக்கட னீக்கிக்
நு கடம்பறுத் தியற்றிய வலம்படு வியன்பணை
யாடுநர் பெயர்ந்துவந் தரும்பலி தூஉய்க்
கடிப்புக் கண்ணுறூஉத் தொடித்தோ ளியவ
ரரணங் காணுது மாதிரந் துழைஇய
நனந்தலைப் பைஞ்ஞிலம் வருகவிந் நிழலென
கo ஞாயிறு புகன்ற தீதுதீர் சிறப்பி
னமிழ்துதிகழ் கருவிய கணமழை தலைஇக்
கடுங்கால் கொட்கு நன்பெரும் பரப்பின்
விசும்புதோய் வெண்குடை நுவலும்
பசும்பூண் மார்ப பாடினி வேந்தே.

இதுவுமது.

பெயர் - (நு) வலம்படு வியன்பணை.

நு. வலம்படுவியன்பணையென்றது போர்செய்து வருந்தாமற் பகைவர் வெருவியோடமுழங்கி அரசனுக்கு வென்றி தன்பாலேபடுகின்றமுரசமென்றவாறு.

இச்சிறப்பான் இதற்கு 'வலம்படுவியன்பணை' என்று பெயராயிற்று.

சு. ஆடுநரென்றது வினையெச்சமுற்றுவினைத்திரிசொல்.

கக. அமிழ்துதிகழ்மழையெனமுடிக்க.

அமிழ்தென்றது நீர். தலைஇயென்பதனைத் தலையவெனத் திரிக்க.

கஈ. வெண்குடைதுவலுமென்றது வெண்குடையின் அருட்சிறப்பைச் சொல்லுமென்றவாறு.

கஈ - சி. துவலுமார்பவென முடிக்க.

இஃது ஏதுப்பெயர்.

(நி) வியன்பணையைக் (எ) கடிப்பைக்கண்ணுறுமியவர், (அ) 'அரணங் காணது மாதிரந்துழைஇய (கூ) பைஞ்நிலம் இச்சிழற்கண்ணே வருக' எனச்சொல்லி (கஈ) வெண்குடையின் அருட்சிறப்பைச் சொல்லுதற்குக் காரணமாய்நின்ற (கச) பசும்பூண்மார்ப, பாடினிவேந்தே, நினக்குப்(க) புரைவது நினைப்பிற் (உ) பகைவர் பெரிய தப்புரராயினும் (ஈ) பணிந்து திறைபகரக் கொள்ளுகையாகலின், (க) புரைவதோவின்றென மாறிக்கூட்டி வினைமுடிவு செய்க.

இதனுற்சொல்லியது, பொறையுடைமையொடுபடுத்து அவன்வென்றிச் சிறப்புக் கூறியவாறுயிற்று.

(பி - ம்.) க. புரைவதோவன்றே. கூ. பஞ்நிலம். (எ)

(கஉ.) உண்மின் கள்ளே யடுமின் சோறே
யெறிக திற்றி யேற்றுமின் புழுக்கே
வருநர்க்கு வரையா தொலங்கலக் தெளிர்ப்ப
விருள்வண ரொலிவரும் புரியவி ழைம்பா
(நி) லேக்துகோட் டல்குன் முகிழ்நகை மடவரற்
கூந்தல் விறலியர் வழங்குக வடுப்பே
பெற்ற துதவுமின் றப்பின்று பின்னு
மன்னுயி ரழிய யாண்டுபல தூளக்கி
மண்ணுடை ஞாலம் புரவெதிர் கொண்ட
கo தண்ணீர்ப் லெழிலி தலையாது மாறி
மாரி பொய்க்குவ தாயினுஞ்
சேரலாதன் பொய்யல னசையே.

துறை - இயன்மொழிவாழ்த்து.

வண்ணம் - ஒழுகுவண்ணம்.

தூக்கு - செந்தூக்கு.

பெயர் - (சு) கூந்தல்விறலியர்.

உ. திற்றி - இறைச்சி.

(ஈ) வருநர்க்கு வரையாது (சு) வழங்குக அடுப்பென முடிக்க; வரையாதிலெனத்திரித்து வரையாதொழியும்படியெனக்கொள்க.

(ஈ) பொலங்கலந்தெளிர்ப்ப வென்பதனையும் (சு) வழங்குகவென் பதனோடு முடிக்க.

சு. கூந்தல்விறலியர் வழங்குகவடிப்பென்றது வந்தார்க்குச் சோறு கடிதின்உதவுதற்பொருட்டு அடிப்புத்தொழிற்குரியரல்லாத வரிசைமகளி ரும் அடிப்புத்தொழிலிலே வழங்குகவென்றவாறு.

இச்சிறப்பானே இதற்கு, 'கூந்தல்விறலியர்' என்பதுபெயராயிற்று.

(ச) ஐம்பாற் (சு) கூந்தலென மாறிக்கூட்டுக; இனிமார்பது கூந் தல்விறலியரென்றதை ஒருபெயராகவுரைப்பினு மமையும்.

நீயிர் (க) கள்ளினையுண்மின்; அதுவேயன்றி உண்டற்குச் சோற் றையடுமின்; அதுவேயன்றித் (உ) தின்றற்குத் திற்றியையறுமின்; அதுவே யன்றித் தின்றற்குப் புழுக்கப்படுமவற்றை அடுப்பிலேயேற்றுமின்; (ஈ) வரு நர்க்குவரையாதே கடிதின் உதவுதற்பொருட்டுக் (சு) கூந்தல்விறலியர் அடுப் பிலேவழங்குக; இன்னும் வருநர்க்குச் சோறிடுதலேயன்றி அவன்பால் நாம் பொருளாகப் (எ) பெற்றதுகொடுமின்; இவ்வாறு எல்லாங் கொடுத்தாலும் பின்னுக்குக் காரியத்திற்றப்பில்லை; அதற்குயாது காரணமெனின், (அ) மன் னுயிராழிய (கக) மாரிபொய்த்தாலும் (கஉ) சேரலாதன் நசை பொய் யலன்; அதுகாரணமென வினைமுடிவுசெய்க.

இதனுற்சொல்லியது, அவன்கொடைச்சிறப்புக் கூறியவாறுயிற்று.

(பி - ம்.) எ. பெற்றவுதவுமின். கஉ. பொய்யிலனைசையே.

அ. மன்னுயிரொழிய. (அ)

(ககூ.) கோள்வா வல்சிக் கவர்காற் கூளியர்
கல்லுடை நெடுநெறி போழ்ந்துசுர னறுப்ப
வொண்பொறிக் கழற்கான் மாரு வயவர்
திண்பிணி யெஃகம் புலியுறை கழிப்பச்
ஈ செங்கள விருப்பொடி கூல முற்றிய
வுருவச் செந்தினை குருதியொடு தூஉய்
மீண்ணுறு முரசங் கண்பெயர்த் தியவர்
கடிப்புடை வலத்தர் தொடித்தோ ளோச்ச
வம்புகூ வறியாச் சுற்றமோ டம்புதெரிந்
கஅ தவ்வினை மேவலை யாகலி
னெல்லு நனியிருந் தெல்லிப் பெற்ற
வரிதுபெறு பாயற் சிறுமகி ழானுங்
கன்னிலை நறையும் பெருஞ்சால் பொடுங்கிய
நாணுமலி யாக்கை வாணுத லரிவைக்

கடு கியார்கொ லளியை
யினந்தோ டகல வூருட னெழுந்து
நிலங்கண் வாட நாஞ்சில் கடிந்துநீ
வாழ்த லீயா வுளனறு பைதிர
மன்ன வாயின பழனந் தோறு
உ0 மழன்மலி தாமரை யாம்பலொடு மலர்ந்து
நெல்லின் செறுவி னெய்தல் பூப்ப
வரிநர் கொய்வாண் மடங்க வறைநர்
தீம்பிழி யெந்திரம் பத்தல் வருந்த
வின்றே வன்றே தொன்றோர் காலை
உடு கல்லம னவிய தாமெனச் சொல்லிக்
காணுநர் கைபுடைத் திரங்க
மாணு மாட்சிய மாண்டன பலவே.

துறை - பரிசிற்றுறைப்பாடாண்பாட்டு.
வண்ணம் - ஒழுகுவண்ணமும் சொற்சீர்வண்ணமும்.
தூக்கு - செந்தூக்கு.
பெயர் - (கஅ) வளனறுபைதிரம்.

க. கவர்கால் - செலவைவிரும்பின கால்.

உ. சுரன் - வழியிலருமை.

ச. எஃகம்புலியுறைகழிப்பவென்றது எஃகினைப் புலியுறைகழித்துக் கடைவனகடைந்தும் அல்லன வாய்தீறியும் போர்க்குரியவாம்படி பண்ண வென்றவாறு.

ஞ. கூலமுற்றியவென்றது பண்டமார்கமுற்றியவென்றவாறு; இனிப் பலிக்குரிய மற்றைப்பண்டங்கள் குறைவதக்கூடினவென்பாருமுளர்.

கூ. வம்பு - கைச்சரடு.

(உ) சுரன்முப்பப் (ச) புலியுறைகழிப்பத் (அ) தோன்றோச்ச (கo) அவ்வினைமேவலையெனமுடிக்க.

கக. எல்லுஞனியிருந்தென்றது பகற்பொழுதின்கண்ணே ஒரு விளைதமுமின்றி நெடுக வருந்தியிருந்தென்றவாறு.

(கக) பெற்ற (கஉ) மகிழெனமுடிக்க.

அரிதுபெறுதலைப் பாயன்மேலேற்றுக. ஈண்டுப், பாயல் - உறக்கம்.

(கசு) ஊருடனெழுந்து இனந்தோடகலவெனவும் (கள) நாஞ்சில் கடிந்து நீலங்கண்வாடவெனவுங்கூட்டுக.

ஊரெழுந்தென்னுமுதல்வினையை வழுவமைதியால் இனங்தோடகலை வென்னும் அதன்சினைவினையொடுமுடிக்க.

(கசூ) தோடகலக் (கள) கண்வாட (கக) அன்னவாயினவென முடிக்க.

ஈண்டுஆயினவென்பது தொழிற்பெயர்.

கள - அ. நீ வாழ்தலீயாவென்றது நீ பண்டுபோலே குடியேறுக வென்று வாழ்வுகொடார்தவென்றவாறு.

'வாழ்தலீயர்' என்றஅடைச்சிறப்பான், இதற்கு 'வளனறுபைதிரம்' என்று பெயராயிற்று.

உ0. தாமரைமலரவெனத் திரிக்க.

உஉ. கொய்வாள் மடங்கவென்றது நெற்றுவின் பருமையாலே கொய்யும் அரிவாட்கள் தங்கள் வாய்மடியவென்றவாறு.

உங. எந்திரமென்றது ஆலையை.

எந்திரமென்னு முதலெழுவாயை வழுவமைதியாற் பத்தல்வருந்த வென்னும் அதன் சினைவினையோடு முடிக்க. பத்தல் வருந்தலாவது, பல காலும் சாறேறி நனைந்துசாதல்.

(உ0) தாமரைமலர (உக) நெய்தல்பூப்ப (உஉ) வாள்மடங்கப் (உங) பத்தல்வருந்த (உரு) நல்லவென முடிக்க.

உள. மாணுமாட்சிய மாண்டனவென்றது மாட்சிமைப்படத் திருத்தினும் மாட்சிமைப்படாத அழகையுடையவாய்ப் பின்னைத் திருத்தாதவளவே யன்றி உரு மாய்ந்தனவென்றவாறு.

மாணுதவத்தைமாட்சியவென்றது, பண்டு அழகியவூரும் வயலு மாய்த் தோன்றிக்கிடந்த பண்புபற்றி யெனக்கொள்க.

மாட்சியவென்பது வினையெச்சமுற்று.

இனி மாணுமாட்சிய வென்பதற்கு, மாணுமைக்குக் காரணமாகிய பெருக்கு முதலாயவற்றின் மாட்சியவென்பாருமுளர்.

(உள) பலவாகிய (கள) நீ (கஅ) வாழ்தலீயாவளனறுபைதிரம் (கக) ஊருடனெழுந்து இனம் தோடு அகல (கள) நாஞ்சில்கடிந்து நிலங்கண் வாட (கக) அன்னவாயினவை பழனந்தோறும் தாமரை ஆம்பலொடு மல்ல நெல்லின்செறுவில் நெய்தல்பூப்ப அரிநர் கொய்வாள் மடங்க அறைர தெந்திரம் பத்தல்வருந்தத் தொன்றோர்காலை நல்லமன் அளியதாமெனச் சொல்லிக் காணுநர் கைபுடைத்திரங்க மாணுமாட்சிய மாண்டனவெனக் கூட்டுக.

(கஅ) பைதிரமென்னும் எழுவாய்க்கு (உள) மாண்டனவென்பது பயனிலை; அன்னவாயின வென்னும் பெயரும் இடையே ஒரு பயனெனப் படும்.

(ககூ) அன்னவாயின (உள) மாணமாட்சிய மாண்டனவென்றது (கஅ) பைதிரங்கள் ஊருடனெழுதன் முதலாய வழுமையையுடையனவாய் நின்றன; பின் அவ்வளவினவன்றித் திருத்தவும் திருந்தாநிலைமையவாய் நின்றன; பின் அவ்வளவுமன்றி ஊரும்வயலும் தெரியாதபடி உருவமாய்த்தனவென்றவாறு.

(க0) நீ அவ்வினைமேவலையாயிருந்தாய்; நீ வினையை மேவுகின்றபடியால், (கஈ) கனவினுளுறையும் (கச) கின்னரிவைக்கு(கடு) நீ யார் கொல்; நீ அவள்பால் வாராமைக்குக் காரணம் யாது? நீ 'அழிக்க என்றுஎழுந்த நாடுகள் அழிந்து அற்றுல் வருவல்'எனின், ஆம்;அழிக்க அழிந்து நீ பின் (கஅ) வாழ்தலியாத பைதிரம் (உசு) காணுநர் கைபுடைத்திரங்க (உள) மாணமாட்சியவாய் மாண்டன; அதனுல், அதுகுறையன்று; நின் அன்பின்மையேகுறை; இனி நீ அவள்பாற் கடிது எழுகென வினைமுடிவுசெய்க.

இதனுற்சொல்லியது, அவன்வென்றிச்சிறப்பும் குலமகளோடு நிகழ்ந்த இன்பச்சிறப்பும் உடன்கூறியவாறுயிற்று.

பாணன் பாசறைக்கண்வந்து தேவி ஆற்றுமைகூறி இவி அவள்பாற் போகவேண்டுமென்று இரந்தமையாற் பரிசிற்றுறையாயிற்று.

(க0) 'அவ்வினைமேவலை யாகலின்' எனவும், (கடு) 'யார்கொல ளியை' எனவும் சொற்சீர் வந்தமையாற் சொற்சீர் வண்ணமு மாயிற்று.

(பி - ம்.) ச. கழிப்பி. கஉ. சிற்மதிமானும். உகூ. பத்தர்வருந்த. (கூ)

(உ0.) நுங்கோ யாரென வினவி னெங்கோ
விருமுந்நீர்த் துருத்தியுண்
மூரணியோர்த் தலைச்சென்று
கடம்புமூத றடிந்த கடுஞ்சின முன்பி
ரு னெடுஞ்சேர லாதன் வாழ்கவவன் கண்ணி
வாய்ப்பறி யலனே வெயிற்றுக ளனைத்து
மாறறியோர் தேஎத்து மாறிய வினையே
கண்ணி னுவர்த்து நெஞ்சவிழ் பறியா
நண்ணுர் தேஎத்தும் பொய்ப்பறி யலனே
க0 கனவினு, மொன்னுர் தேய வோங்கி நடந்து
படியோர்த் தேய்த்து வடிமணி யிரட்டுங்
கடாஅ யானைக் கணிரை யலற
வியலிரும் பரப்பின் மாநிலங் கடந்து
புலவ ரேத்த வோங்குபுகழ் நிறீஇ

கரு விரியுளை மாவுங் கவிறுந் தேரும்
வயிரியர் கண்ணுளர்க் கோம்பாது வீசிக்
கடிமிளைக் குண்டுகிடங்கி
னெமெதி னிலைஞாயி
லம்புடை யாரெயி லுள்ளழித் துண்ட
உ0 வடாஅ வடிபுகை யட்டமலர் மார்ப
னெமர்க்கும் பிறர்க்கும் யாவ ராயினும்
பரிசின் மாக்கள் வல்லா ராயினும்
கொடைக்கட னமர்ந்த கோடா நெஞ்சினன்
மன்னுயி ரழிய யாண்டுபல மாற்றித்
உரு தண்ணிய லெழிலி தலையா தாயினும்
வயிறுபசி கூர வீயலன்
வயிறுமா சிலீயர வனீன்ற தாயே.

துறை - இயன்மொழி வாழ்த்து.
வண்ணம் - ஒழுகுவண்ணமும் சொற்சீர்வண்ணமும்.
தூக்கு - செந்தூக்கும் வஞ்சித்தூக்கும்.
பெயர் - (உ0) அட்டமலர்மார்பன்.

உ. முரணியோரையெனவிரியும் இரண்டாவதனைத் தலைச்சென் றென்பதற்கு இடத்திலேசென்றென்பது பொருளாக்காது முடிவிலே சென்றென்பது பொருளாக்கி அதற்குப் போந்தபொருள் முடிவுசெயலாக்கி அதனைமுடிக்க.

மேலே (உங) கொடைக்கடனமர்ந்த கோடா நெஞ்சினனென்று கொடைகூறின்றான்; ஈண்டு (க சு) ம்பாது வீசி யென்று கொடை கூறியதற்குக் காத்தற்குச் சென்றவிடைக் கொண்டவற்றைக் களம்பாடச் சென்றார்க்குக் கொடுக்குங்கொடையென வுரைக்க.

உ0. அடா அடிபுகை - ஊர்சுடுபுகை. அட்டமலர்மார்பனென் றது பகைவரைக்கொன்று அச்செருக்காலே அகன்றமார்பனென்றவாறு. இச்சிறப்பாலே இதற்கு 'அட்டமலர்மார்பன்'என்பு பெயராயிற்று.

உக. எமர்க்கும் பிறர்க்குமென நின்றவற்றைக் கொடைக்கடன மர்ந்த வென்பதனைமே முடித்து, எமர்க்கென்றது தன் பாணராகிய வெமர்க் கென்றும் பிறர்க்கென்றது தன் பாணரல்லாத பிறர்க்கென்றுமுரைக்க.

உக - உ. பரிசின்மாக்கள் யாவராயினும் வல்லாராயினுமெனக் கூட்டிப் பரிசின்மாக்களென்றதற்கு முன்சொன்ன எமர்க்கும் பிறர்க்கு மெனப்பட்டாரையே யாக்கி யாவராயினுமென்றதற்குக் கண்டார் மதிக்கப்

படும் தோற்றமிலராயினுமெனவும் வல்லாராயினுமென்றதற்கு ஒருகல்வி மாட்டாராயினுமெனவு முரைக்க.

யாவராயினு மென்றவும்மை இழிவுசிறப்பு; •வல்லாராயினுமென்ற வும்மை எதிர்மறை.

(கo) நடந்து (கஙு) கடந்து (கச) நிறீஇ (கசு) வீசியென நின்ற வற்றை (உங) நெஞ்சினனென்னு முற்றுவினைக்குறிப்பொடு முடிக்க.

உசு. வயிறுபசிசூரவீயலனென மூன்றுவதும் கொடைசூறியதற்கு மழைபெய்யா விசோவில்காலத் தன் பரிகரமாயுள்ளார்க்கு அவர்கள் பசித்து வருந்தாமல் வேண்டும்பொழுதுகளிலே வேண்டுவன கொடுக்குமென்று ஒருகொடைநிலையாக வுரைக்க.

(க) நுங்கோ யாரெனவினவின் எங்கோ, (ரு) சேரலாதன், அவன் கண்ணிவாழ்க; அவனியல்பிருக்குமாறுசொல்லின், (எ) மாற்றேர்தேஎத்து மாறியவினையே (சு) வெயிற்றுகளனைத்தும் வாய்த்தலறியான்;(கூ) பொய்த்த லறியான்; (உo) அட்டுமலர்மார்பன், (உங) கொடைக்கடனமர்ந்த கோடாநெஞ்சினன்; கோடையிடத்து (உரு) எழிலிதலையாதாயினும் (உசு) வயிறுபசிசூரவீயலன்; ஆதலான், (உள) அவனையீன்றதாய் வயிறுவிளங்கு வாளாகவென வினைமுடிவுசெய்க.

இதனுற்சொல்லியது, அவன்றன் செல்வப் பொலிவுகண்டு நீ யாருடையபாணனென்று வினவியாற்கு யான் இன்னருடையேனென்று சொல்லிமுடிக்க, அவன்குணங்களின்னகூறிப் பின்னவனைவாழ்த்தி முடித்த வாறுயிற்று.

(உ) 'இருமுந்நீர்' எனவும், (ஙு) 'மூரணியோர்' எனவும், (கள) 'கடி மிஞை' எனவும், (கஅ) 'நெடுமதில்' எனவுமெழுந்த நான்கடியும் வஞ்சி யடியாகலான், வஞ்சித்தூக்குமாயிற்று.

கo.—கனவினுமென்பது கூன்.

(பி - ம்.) கo. ஓங்குருடந்து. ஒருங்குருடந்து. உக. எமக்கும். (கo)

இதன்பதிகத்து, யவனர்ப்பிணித்தென்றது யவனரைப் போருள் அகப்படுத்தியென்றவாறு.

நெய் தலைப்பெய்து கை பிற்கொளீஇ யென்பதற்கு, அக்காலத்துத் தோற்றுரை நெய்யைத் தலையிற்பெய்து கையைப் பிறகு பிணித்தென்றுரைக்க.

அருவிலைநன்கலம் வயிரமொடுகொண்டென்றது அந்த யவனரைப் பின்தண்டமாக அருவிலைநன்கலமும் வயிரமுங்கொண்டென்றவாறு.

## (பதிகம்.)

மன்னிய பெரும்புகழ் மறுவில் வாய்மொழி
யின்னிசை* மூசி னுதியஞ் சேரற்கு
வெளியன் வேண்மா ணல்லினி யீன்றமக
னனைமவர லருவி யிமையம் விற்பொறித்
திமிழ்கடல் வேலித் தமிழகம் விளங்கத்
தன்கோ னிறீஇத் தகைசால் சிறப்பொடு
பேரிசை மரபி னரியர் வணக்கி
நயனில் வன்சொல் யவனர்ப் பிணித்து
நெய்தலைப் பெய்து கைபிற் கொளீஇ
யருவிலை நன்கலம் வயிரமொடு கொண்டு
பெருவிறன் மூதூர்த் தந்துபிறர்க் குதவி
யமையார்த் தேய்த்த வணங்குடை நோன்றா

ளிமையவரம்ப னெடுஞ்சேரலாதனைக் குமட்டூர்க்கண்ணனார் பாடினார்பத்துப்பாட்டு. அவைதாம்: புண்ணுமிழ்குருதி, மறம்வீங்கு பல்புகழ், பூத்தநெய்தல், சான்றோர்மெய்ம்மறை, நிரையவெள்ளம், துயிலின்பாயல், வலம்படுவியன்பாணை, கூந்தல்விறலியர், வளனறு பைதிரம், அட்டிமலர்மார்பன். இவை பாட்டின்பதிகம்.

பாடிப்பெற்றபரிசில்: உம்பற்காட்டு ஐஞ்ஞூற்றூர் பிரமதாயங்கொடுத்து மூப்பத்தெட்டியாண்டு தென்னாட்டின் வருவதனிற் பாகங் கொடுத்தான் அக்கோ.

இமயவரம்பனெடுஞ்சேரலாதன் ஐம்பத்தெட்டியாண்டு வீற்றிருந்தான்.

**இரண்டாம்பத்து முற்றிற்று.**

## மூன்றாம் பத்து.

(உக.) சோற்பெயர் காட்டங் கேள்வி நெஞ்சமென்
றைந்துடன் போற்றி யவைதுணை யாக
வெவ்வஞ் சூழாது விளங்கிய கொள்கைக்
காலை யன்ன சீர்சால் வாய்மொழி
உ யுருகெழு மரபிற் கடவுட் பேணியர்
கொண்ட தீயின் சுடரெழு தோறும்
விரும்புமெய் பரந்த பெரும்பெய ராவுதி
வருநர் வரையார் வார வேண்டி
விருந்துகண் மாறு துணீஇய பாசவ
க0 நுனத் தழித்த வாணிணக் கொழுங்குறை
குய்யிடு தோறு மாறு தார்ப்பக்
கடலொலி கொண்டு செழுநகர் நடுவ
ணடுமை யெழுந்த வடுநெய் யாவுதி
யிரண்டுடன் கமழு நாற்றமொடு வானத்து
கஉ நிலைபெறு கடவுளும் விழைதகப் பேணி
யார்வளம் பழுனிய வையத்தீர் சிறப்பின்
மாரியங் கள்ளின் போர்வல் யானைப்
போர்ப்புறு மூரசங் கறங்க வார்ப்புச்சிறந்து
நன்கலந் தருஉ மண்படு மார்ப
உ0 முல்லைக் கண்ணிப் பல்லான் கோவலர்
புல்லுடை வியன்புலம் பல்லா பரப்பிக்
கல்லுயர் கடத்திடைக் கதிர்மணி பெறூஉ
மிதியற் செருப்பிற் பூழியர் கோவே
குவியற் கண்ணி மழவர் மெய்ம்மறை
உஉ பல்பயந் தழீஇய பயங்கெழு நெடுங்கோட்டு
நீரறன் மருங்கு வழிப்படாப் பாகுடிப்
பார்வற் கொக்கின் பரிவேட் பஞ்சாய்
சீருடைத் தேனத்த மூனெகெட விலங்கிய
நேருயர் நெடுவரை யயிரைப் பொருந

கo யாண்டுபிழைப் பறியாது பயமழை சுரந்து
நோயின் மாந்தர்க் கூழி யாக
மண்ணு வாவின் மணங்கமழ் கொண்டு
கார்மலர் கமழுந் தாழிருங் கூந்த
லொரீஇயின போல விரவுமலர் நின்று
கடு திருமுகத் தலமரும் பெருமதர் மழைக்க
ணலங்கிய காந்த ளிலங்குநீ ரழுவத்து
வேயுறழ் பணைத்தோ ளிவளோ
டாயிர வெள்ளம் வாழிய பலவே.

துறை - செந்துறைப்பாட்டாண்பாட்டு.
வண்ணம் - ஒழுகுவண்ணம்.
தூக்கு - செந்தூக்கு.
பெயர் - (கஉ) அடுநெய்யாவுதி.

க. சொல் - சொல்லிலக்கணஞ் சொல்லுதல். பெயர் - பொருளிலக்கணஞ்சொல்லுதல்; "பெற்ற பெரும்பெயர் பலர்கை யிரீஇய" (பதிற்றுப் பத்து, கo) என இத்தொகையுள் மேலே வந்தமையால், பெயரென்பது பொருளாம். நாட்டம் - சோதிடநூல். கேள்வி - வேதம். நெஞ்சமென்றது இந்திரியங்களின் வழியோடாது உடங்கிய தூயநெஞ்சினை.

உ. எவ்வஞ்சூழாமை - உயிர்வருத்தஞ்சூழாமை; சூழாமலெனத் திரிக்க.

ச. காலை அன்ன வாய்மொழி - ஆதித்தனைப்போல எஞ்ஞான்றும் தப்பாதாகிய மெய்ம்மொழி; மொழியானென ஆனுருபுவிரிக்க; ஒடுவிரிப்பினுமமையும்.

(உ) துணையாகக் (சு) கொண்டெனமுடிக்க.

எ. விருப்புமெய்யென்னும் ஒற்று மெலிந்தது; 'மைபரந்த' என்பதுபாடமாயின் மைபோலப்பரந்தவென்க.

கி. பாசவர் - ஆட்டுவாணிகர்.

கo. ஊனம் - இறைச்சிகொத்தும் அடைகுறடு.

(கஉ) கடலொலிகொண்டு (கக) ஆர்ப்பவெனக்கூட்டி, ஆர்ப்ப (கங) எழுந்தவெனமுடிக்க; இனி, 'கடலொலிகொண்ட' என்பது பாடமாயின், கடலொலிகொண்ட ஈகரென்க.

கங. அடுநெய்யாவுதியென்றது அடுசில்நெய்யாகிய ஆவுதியென்றவாறு; அடுநெய்யை ஆவுதியென்றது, விருந்து புறந்தருதலையும் ஒருவேள்வியாக்கி ஆள்வினைவேள்வியென்று ஒரு துறையாக நூலுட்கூறலானென்பது.

ச

இச்சிறப்பானே இதற்கு 'அடுநெய்யாவுதி' என்று பெயராயிற்று.

எ - கசு. ஆவுதியென்ற இரண்டனையும் அவற்றுரைய புகைமேற் கொள்க.

கச. நாற்றமொடென்பதனை நாற்றத்தர்னைக்கொள்க.

கடு. கடவுளும் விழைதகவென்றது கடவுளரும் இவ்வாறு காம் அறஞ்செய்யப்பெறின் அழகிதென்று அதுவிரும்பவென்றவாறு. பேணியென்றது, முன்சொன்ன வேள்வியால் தேவர்களையும் பின்பு அதனோடு ஒப்பித்துச்சொன்ன ஆள்வினைவேள்வியால் விருந்தாய்வருமக்களையும் பேணியென்றவாறு ; அதனைத்திரித்துப் பேணப் (கசு) பழுனியவென முடிக்க. பழுனியவென்பது பெயரெச்ச வினைத்திரிசொல்.

கசு. ஆர்வளம்பழுனிய சிறப்பென்றது கொடுக்கக் கொடுக்கக் குறைபடாத நிறைந்த செல்வத்திலேயின்று பழுத்த சிறப்பென்றவாறு.

கள. கள்ளித்போர்வல்யானையென்னும் ஒற்று மெலிந்தது.

(கஅ) ஆர்ப்புச்சிறந்து (கக) கலந்தருஉம் மார்பவெனக் கூட்டுக.

கக. மண்படுமார்பவென்றது பகைவர்மண்ணெல்லாம் படுகின்ற மார்பவென்றவாறு.

(உக) பல்லாபரப்பிக் (உஉ) கதிர்மணிபெறுஉஞ் (உங) செருப்பெனமுடிக்க.

உங. செருப்பென்பது ஒருமலை. மிதியலென்பது அடை; மிதியென்று செருப்பிற்குப் போராக்கிச் செருப்பல்லாத செருப்பென்று வெளிப்படுத்தாருகவுரைக்க. (உச) குவியற்கண்ணியென்னும் தொடைநோக்கி மிதியற்செருப்பெனவலிந்தது. மிதியற்செருப்பென்பற்குப் பிறவாறு சொல்லுவாருமுளர்.

உச. குவியற்கண்ணியென்றதற்கு வெட்சிமுதல், வாகையீறாய போர்க்கண்ணியெல்லாம் குவிதலையுடைய கண்ணியென்க.

உசு - கூ. பரிவேட்பு அஞ்சா அயிரையென்று வெளிப்படை கூறுகின்றாராகலின், அதற்கேற்ப, நீரதன்மருங்கு வழிப்படாவென்று பெயரெச்சமறையே பாடமாகல் வேண்டும். இனிப்படாதென்று வினையெச்சமறையாகிய பாடத்திற்கு நீரற்றவிடத்தில் தான் படாதபடியாலே: கொக்கின் பரிவேட்புக்கு அஞ்சா அயிரையெனவுரைக்க. அயிரையென்பது ஒருமலை.

(உடு) நெடுங்கோட்டு (உக) அயிரையென முடிக்க.

உக. மாந்தர்க்கு நோயிலாழியாகவென மாறிக்கூட்டுக; கிடந்தவாறும் பொருள்படும்.

நச. ஓரீஇயினபோலவென்பதற்குப் பொய்கையென வருவித்துப் பொய்கையை ஒருவினபோலவென உரைக்க. இனி, மேற்சொன்ன கூந்தலை ஓரீஇயினபோல வென்பாருமுளர். இரவுமலர்ந்தென்பது பொய்கைப்பூப் போலன்றி இரவுக்காலத்தும் மலர்ச்சி நிலைபெற்றென்றவாறு.

(நச) ஓரீஇயினபோல (நரு) அமைருமெனக் கூட்டுக.

நசு. காந்தளுள்ளவிடத்து எழுந்த மூங்கிலைத் தோளுக்கு உவமை கூறி, அக்காந்தளையும் கைக்கு உவமையாக்குக. நீரழுவம் - நதியென்க.

நசு - எ. நீரழுவத்து வேயென்றது ஒருநாளும் உடல்வெம்மை யாற் கொதியாது குளிர்ந்தேயிருக்குந் தோளென்றற்கென்க.

(ககூ) மண்படுமார்பு, (உங) பூழியர்கோவே, (உச) மழவர்மெய்ம் மறை, (உகூ) அயிரைப்பொருந, (நஅ) பயமலைசுரந்து (நக) மாந்தர்க்கு நோயிலாழி உண்டாக (நஎ) இவளோடே (நஅ) பலவாயிரம் வெள்ளம் வாழியவெனக்கூட்டி வினைமுடிவு செய்க.

இதனாற்சொல்லியது, அவன்நாடுகாத்தற் சிறப்புக்கூறி வாழ்த்திய வாறுயிற்று.

(பி - மீ.) க - உ. நெஞ்ச, மைந்து. கஉ-கங. செழுநகர்வரைப்பி, கo. ஊனைத்தழித்த. [னடுவணெழுந்த. (க)

(உஉ.) சினனே காமங் கழிகண் ணேட்ட
மச்சம் பொய்ச்சொ லன்புமிக வுடைமை
தெறல்கடி மையொடு பிறவுமிவ் வுலகத்
தறந்தெரி திகிரிக்கு வழியடை யாகுங்
ருு தீதுசே ணிகந்து நன்றுமிகப் புரிந்து
கடவுங் கானமும் பலபய முதவப்
பிறர்பிறர் நலியாது வேற்றுப்பொருள் வெஃகாது
மையி றறிவினர் செவ்விதி னடந்ததம்
மமர்துணைப் பிரியாது பாத்துண்டு மாக்கண்
கo மூத்த யாக்கையொடு பிணியின்று கழிய
வூழி யுய்த்த வுரவோ ரும்பல்
பொன்செய் கணிச்சித் திண்பிணியுடைத்துச
சிரறுசில வூறிய நீர்வாய்ப் பத்தற்
கயிறுகுறு முகவை மூயின மொய்க்கு
கரு மாகெழு கொங்கர் நாடகப் படுத்த
வேல்கெழு தானை வெருவரு தோன்ற

லுலைப்பொலிந்த மா
விழைப்பொலிந்த களிறு
வம்புபரந்த தே
உ0 ரமர்க்கெதிர்ந்த புகன் மறவ ரொடு
துஞ்சுமரந் துவன்றிய மலரகன் பறந்தலை
யோங்குநிலை வாயிற் றூங்குபு தகைத்த
வில்விசை மாட்டிய விழுச்சீ ரையவிக்
கடிமிளைக் குண்டுகிடங்கி
உரு னெடுமதி னிரைப்பதணத்
தண்ணலம் பெருங்கோட் டகப்பா வெறிந்த
பொன்புனை யுழிஞை வெல்போர்க் குட்டுவ
போர்த்தெறிந்த பறையாற் புனல்செறுக் குரரு
நீர்த்தரு பூச லினம்பழிக் குரரு
ஈ0 மொலித்தலை விழவின் மலியும் யாணர்
நாடுகெழு தண்பணை சீறினை யாதலிற்
குடதிசை மாய்ந்து குணமுதற் ரேன்றிப்
பாயிரு ளகற்றும் பயங்கெழு பண்பின்
ஞாயிறு கோடா நன்பக லமயத்துக்
ஈரு கவலை வெண்ணரி கூஉமுறை பயிற்றிக்
கழல்கட் கூகை குழறுகுரற் பாணிக்
கருங்கட் பேய்மகள் வழங்கும்
பெருப்பா ழாகும னளிய தாமே.

துறை - வஞ்சித்துறைப்பாடாண்பாட்டு.
வண்ணம் - ஒழுகுவண்ணமும் சொற்சீர்வண்ணமும்.
தூக்கு - செந்தூக்கும் வஞ்சித்தூக்கும்.
பெயர் - (கசு) கயிறுதுறுழகவை.

உ. அச்சம் - பகைவர்க்களஞ்சுதல். அன்பு - பொருண்மேலன்பு.

ஈ. சிறு சில ஊறியவென்றது பல்லூற்றொழியச் சில்லூற்றுக ளூறியவென்றவாறு; சிறுதல் - சிதறுதல்.

கசு. கயிறு குறு முகவையென்றது தன்னுள் நீர்வாங்குவது பெரி தன்மித் தன்கயிற்றையே நின்று வாங்கப்படு முகவையென்றவாறு.

இச்சிறப்பானே இதற்கு,'கயிறுதுறுழகவை' என்று பெயராயிற்று.

# மூன்றும் பத்து.

உஉ. தூங்குபு என்பதனைத் தூங்கவெனத் திரித்துக் காலவழுவமைதியெனக்கொள்க. தகைத்தல் - கட்டுதல்.

உங. வில்விழை மாட்டிய விழுச்சீர் ஐயவியென்றது விசையையுடைய் வில்லானும் துளையுருவ எய்யமுடியாது மிக்க கனத்தையுடைய ஐயவித்துலாமென்றவாறு.

ஙள. கருங்கண் - கொடியகண். வழங்குதல் - ஆடுதல்.

(கக) உரவோரும்பல், (கஎ) தோன்றல், (உஎ) குட்டுவ, நீ (ஙக) சிறினையாதலின், நாடுகெழுதண்பணை (ஙஎ) அளியதாம் பெரும் பாழாகுமெனக்கூட்டி வினைமுடிவுசெய்க.

இதனுற்சொல்லியது, அவன்வென்றிச்சிறப்புக் கூறியவாறுயிற்று.

சிறினையாதலின், நாடுகெழு தண்பணை பாழாகுமென எடுத்துச்செல்வினை மேலிட்டுக்கூறினமையால், வஞ்சித்துறைப் பாடாணுயிற்று.

(கஎ) 'உளப்பொலிந்தமர்' என்பது முதலாய நாலடியும் (உச) 'கடிமிளை' என்பதுமுதலாய இரண்டடியும் வஞ்சியடியால்வந்தமையால், வஞ்சித்தூக்குமாயிற்று.

உ0. 'புகல்' ஏன அடியிடையும், 'ஒடு' என அடியினிறுதியும் வந்தன கூன்.

(பி - ம்.) கங. சிறுசெல. ஙச. ஞாயிறுகொண்ட: (உ)

(உங.) அலந்தலை யுன்னத் தங்கவடி பொருந்திச்
சிதடி கணையப் பெருவறங் கூர்ந்து
நிலம்பை தற்ற புலங்கெடு காலையும்
வாங்குபு தகைத்த கலப்பைய ராங்கண்
ஙு மன்றம் போந்து மறுகுசிறை பாடும்
வயிரிய மாக்கள் கடும்பசி நீங்கப்
பொன்செய் பூணெயிழை யொலிப்பப் பெரிதுவந்து
நெஞ்சுமலி யுவகைய ருண்டுமெலிந் தாடச்
சிறுமகி ழாணும் பெருங்கலம் வீசும்
கo போரடு தானைப் பொலந்தார்க் குட்டுவ
நின்னயந்து வருவேங் கண்டனம் புன்மிக்கு
வழங்குந ரற்றென மருங்குகெடத் தூர்ந்து
பெருங்கவி னழிந்த வாற்ற வேறுபுணர்ந்
தண்ணன் மையா வமர்ந்தினி துறையும்
கங விண்ணுயர் வைப்பின காடா யினகின்
மைந்துமலி பெரும்புக ழறியார் மலைந்த

போரெதிர் வேந்தர் தாரழிந் தொராலின்
மருதிமிழ்ந் தோங்கிய ஈளியிரும் பாப்பின்
மணன்மலி பெருந்துறைத் ததைந்த காஞ்சியொடு
உ முருக்குத்தாழ் பெழிலிய நெருப்புற ழுடைகளை
நந்து ளாரையொடு செவ்வரி யுகளுங்
கழனி வாயிற் பழனப் படப்பை
யழன்மருள் பூவின் முமரை வஃமகள்
குரு அது மலர்ந்த வாம்ப
உடு லரு அ யாணாவ ரகன்றலை நாடே.

துறை - வஞ்சித்துறைப்பாடாண்பாட்டு.
வண்ணம் - ஒதுகுவண்ணம்.
நூக்கு - செந்தூக்கு.
பெயர் - (ககூ) ததைந்தகாஞ்சி.

க. அலந்தலையெனல் விகாரம்,

கடு. விண்ணுயர் கைப்பின காடென்றது மரங்கள் விண்ணிலே செல்லவோங்கி.....; மாறியுரைப்பாரு மூளர்.

ககூ. ததைந்த காஞ்சியென்றது விளையாட்டு மகளிர் பலரும் தளிரும் முறியும் தாதும் பூவும் கோடலாற் சிதைவுபட்டுக் கிடக்கின்ற காஞ்சியென்றவாறு.

இச்சிறப்பானே இதற்கு, 'ததைந்தகாஞ்சி' என்று பெயராயிற்று.

உங - ச. வஃமகள் குரு அது மலர்ந்த ஆம்பலென்றது விளையாட்டுமகளிர் குறுதற்கு எட்டாமையாலே மலர்ந்த ஆம்ப லென்றவாறு.

குரும்பலெனத்திரிக்க.

(கo) குட்டுவ, (கள) போரெதிர் வேந்தர் தாரழிந்து ஓராலின், (உடு) அவர் அகன்றலைநாடு (கடு)காடாயின; அதனே (ககூ) கின்னயந்து வருவேம் கண்டனமெனக்கூட்டி வினைமுடிவுசெய்க.

இதனுற் சொல்லியது, அவன் வென்றிச்சிறப்புக் கூறியவாறுயிற்று.

(கள) போரெதிர்வேந்தர் தாரழிந்து ஓராலின், (உடு) நாடு (கடு) காடாயினவென எடுத்துச்செலவினே மேலிட்டுக் கூறினமையால், வஞ்சித்துறைப்பாடாணுயிற்று.

(பி - ம்.) கடு. காடாயினவே. (ஈ)

(உச.) நெடுவெயி லெறிறு மின்னுப்பரந் தாங்குப்
புலியுறை கழித்த புலவுவா யெஃக
மேவ லாடவர் வலனுயர்த் தேந்தி

யாரரண் கடந்த தாரருந் தகைப்பிற்
(ரு) பீடுகொண் மாலைப் பெரும்படைத் தலைவ
வோதல் வேட்ட லவைபிறர்ச் செய்த
லீத லேற்றலென் றாறுபுரிந் தொழுகு
மறம்புரி யந்தணர் வழிமொழிந் தொழுகி
ஞால நின்வழி யொழுகப் பாடல்சான் று
கo நாடுடன் விளங்கு நாடா நல்லிசைத்
திருந்திய வியன்மொழித் திருந்திழை கணவ
குலையிழி பறியாச் சாபத்து வயவ
ரம்புகளை வறியாத் தூங்குதுளங் கிருக்கை
யிடாஅ வேணி யியலறைக் குருசி
கரு னீர்நிலக் தீவளி விசும்போ டைந்து
மளந்துகடை யறியினு மளப்பருங் குரையைநின்
வளம்வீங்கு பெருக்க மினிதுகண் டிகுமே
யுண்மருந் தின்மரும் வரைகோ ளறியாது
குரைத்தொடி மழுகிய வுலக்கை வயின்றே
உo றடைச்சேம் பெழுந்த வாடுறு மடாவி
னெஃகுறச் சிவந்த வூனத் தியாவருங்
கண்திமிதி மருளும் வாடாச் சொன்றி
வயங்குகதிர் விரிந்து வானகஞ் சுடர்வர
வறிதுவடக் கிறைஞ்சிய சீர்சால் வேள்ளி
உரு பயங்கெழு பொழுதோ டாங்கிய நிற்பக்
கலிழுங் கருவியொடு கையுற வணங்கி
மன்னுயிர் புரைஇய வலனேர் பிரங்குங்
கொண்டற் முண்டலிக் கமஞ்சூன் மாமழை
காலொதிர் பருவ மறப்பினும்
ஈo பேரா யாணர்த்தால் வாழ்கநின் வளனே.

துறை -இயன்மொழிவாழ்த்து.
வண்ணம் -ஒழுகுவண்ணம்.
தூக்கு - செந்தூக்கு.
பெயர் - (உசு) சீர்சால்வேள்ளி.

சு -ரு. தாரரும் தகைப்பிற் பீடுகொண் மாலைப் பெரும்படை யென்
றது தார்ப்படைக்கு அழித்தற்கரியமாற்றார்படைவகுப்பிலே வென்றி செய்து

பெருமைகொள்ளும் இயல்பையுடைய அணியாய்நிற்கும் பெரும்படை யென்றவாறு.

சு. அவைபிறர்ச்செய்தலென்புழிப் பிறரையெனா விரியும்இரண்டாவ தனை அவை செய்தலென நின்ற செய்தலென்னுந்தொழிலைப் போந்த பொருளாற் செய்வித்தலென்னுந் தொழிலாக்கி அதனைமுடிக்க.

கூ. குலையிழிபு அறியாச் சாபமென்றது போர்வேட்கையான் இன்ன பொழுது போருண்டாமென்று அறியாதே எப்பொழுதும் நாணியேற்றியே யிடக்கும் வில்லென்றவாறு.

கஉ. அம்புகளைவறியாவென்றது போர்வேட்கையான் எப்பொழுதும் கையினின்றும் அம்பைக் கீழ்தலறியாவென்றவாறு. தூங்கு துளங்கு இருக்கையென்றது படை இடம்படாது செறிந்து துளங்குகின்ற இருப்பென்றவாறு.

கச. இடா ஏணி - அளவிடப்படாத எல்லை. இயலென்றது பாசறைக்குள்ளவியல்பை; பாசறை — அறையெனத் தலைக்குறைந்தது.

கஎ. உண்மாரும் தின்மாருமென்பன குறுகின்றன; உண்மாரையும் தின்பாரையுமென்னும் இரண்டாவது விகாரத்தாற்றொக்கது. அறியாதென்பதனை அறியாமலெனத்திரிக்க.

உச - ருு. வறிது வடக்கு இறைஞ்சிய சீர் சால் வெள்ளி பயம் கெழுபொழுதோடு ஆகியம் நிற்பவென்றது சிறிது வடக்கிறைஞ்சின புகழான மைந்த வெள்ளி மழைக்குப்பயன்படும் மற்றைக் கோட்களுடனே தான் நிற்குமாறிலே நிற்கவென்றவாறு.

பொழுதென்றது, அதற்கு அடியாகிய கோளை.

வறிது வடக்கிறைஞ்சியவென்னும் அடைச்சிறப்பான், இதற்கு, 'சீர்சால்வெள்ளி' என்று பெயராயிற்று;

(ருு) பெரும்படைத்தலைவ, (ருக) திருந்திழைகணவ; (ருச) குருசில், (ருடு) நீர் நிலமுதலிந் தினையும்(ருசு) அளந்து முடிவறியினும் பெருமை அளந்தறிதற்கரிய ; (ருள) நின் செல்வமிக்கபெருமை இனிதுகண்டேம் ; அஃதெவ்வாறிருந்ததென்னின், (உஉ) வாடாச்சொன்றி, (உஅ) மழை (உஊ) காரெதிர்பருவமறவினும் (ஊ0) பேராயாணர்த்து; அப்பெற்றிப்பட்ட நின்வளம் வாழ்கவென வினைமுடிவுசெய்க.

இதனாற்சொல்லியது, அவன் பெருமையும் கொடைச்சிறப்புங்கூறி வாழ்த்திய வாழ்த்தியவாறு. (ச)

(உரு.) மாவாடியபுல னுஞ்சிலாடா
கடாஅஞ்சென்னிய கடுங்கண்யானை
யினம்பரந்தபுலம் வளம்பரப்பறியா

நின்படைஞர், சேர்ந்த மன்றங் கழுதை போகி
நீ, யுடன்றோர் மன்னெயி றோட்டி வையா
கடுங்கா லொற்றலிற் சுடர்சிறந் துருத்துப்
பசும்பிசி ரொள்ளழ லாடிய மருங்கி
ஞண்டலை வழங்குங் கானுணங்கு கடுநெறி
மூனையகன் பெரும்பா ழாக மன்னிய
வருமுறழ் பிரங்கு மூரசிற் பெருமலை
வரையிழி யருவியி ஞெளிறுகொடி நுடங்கக்
கடும்பரிக் கதழ்சிற கைப்பநீ
நெடுந்தே ரோட்டியபிற ரகன்றலை நாடே.

துறை - வஞ்சித்துறைப்பாடாண்பாட்டு.
வண்ணம் - ஒழுகுவண்ணமும் சொற்சீர்வண்ணமும்.
தூக்கு - செந்தூக்கும் வஞ்சித்தூக்கும்.
பெயர் - (அ) கானுணங்குகடுநெறி.

உ. கடாச்சென்னியென்னும் ஒற்று மெலித்தது.

ச. கழுதை போகியென்பதனைப் போகவெனத்திரிக்க.

ஞ. தோட்டி - காவல்.

எ. அழல் - காட்டுத்தீ.

அ. கானுணங்கு கடுநெறி யென்றது மழையின்மையாற் கானம் நீங்த கடியவழியென்றவாறு.

இச்சிறப்பானே, இதற்கு, 'கானுணங்குகடுநெறி' என்பதுபெயராயிற்று

கூ. மூனை - ஆறலைகள்வர்செய்யும் போர்.

கஉ. செலவின்கடுமை ஆற்றல்தோன்றப்பறவையாகக்கூறுவான் உபசாரவழக்குப்பற்றிச் சிறகு அகைப்பவென்றுனென்க.

(கஅ) முரசிஞெடுவென ஓடி விரித்து அதனைத் (கஙூ) தேரோட்டிய வென்பதனெடு முடிக்க.

(கஉ) நீ (கஙூ) தேரோட்டிய பிறர்நாடு அழிந்தவாறு சொல்லின், நாடு (க) நின்மாவழங்கினவயல் பின்பு கலப்பைவழங்கா; (உ) நின்யானை (ரு) யினம் பரந்தவயல் பின் செல்வம் பரத்தலையறியா; (ச) நின்படை யாளர்சேர்ந்த மன்றம் கழுதையாலுழப்பட, (ஞ) நீ உடன்ற அரசர்தங்கரி கள் பின்புதமக்கு ஆணைக்காவலாளரை வைக்கப்படா; இவ்வாறு அழிந்த படியேயன்றிச் சில்லிடங்கள் (சு) கடுங்கால் ஒற்றலின், (எ) அழலாடிய மருங்கினை யுடைய கானுணங்குகடுநெறியினையும் மூனைகளையுமுடைய அக ன்ற பெரும்பாழாக நின்றனவெனக்கூட்டி வினைமுடிவுசெய்க.

இதனைச் சொல்லியது, அவன்வென்றிச்சிறப்புக் கூறியவாறுயிற்று.

தேரோட்டிய பிதர்காடு இவ்வாறு அழிந்ததெனஎடுத்துச்செலவினை மேலிட்டுக்கூறினமையால் வஞ்சித்துறைப் பாடாணுயிற்று.

க. 'மாவாடிய' என்பது முதலாக மூன்றும் வஞ்சியடியாக வந்தமையால், வஞ்சித்தூக்குமாயிற்று.

(சு)' நின்படைஞர்' எனவும் (ஙு) 'நீ' எனவும் அடிமுதற்கட் சீரும் அசையும் கூனுவந்தன.

(டி.ம்) கஉ. சிறைகைப்ப. (ஙு)

(உசு.) தேளர்பரந்தபுல மேளர்பரவா
களிருடியபுல நாஞ்சிலாடா
மத்துரறியமனை யின்னியமிமிழா
வாங்குப், பண்டுநற் கறியுநர் செழுவள நினைப்பி
ஙு ஞேகோ யானே நோதக வருமே
பெயன்மழை புரவின் ருகி வெய்துற்று
வலமின் றம்ம காலையது பண்பெனக்
கண்பனி மலிர்நிறை தாங்கிக் கைபுடையூ
மெலிவுடை நெஞ்சினர் சிறுமை கூரப்
கo பீரிவர் வேலிப் பாழ்மனை நெருஞ்சிக்
காறு கடுநெறி யாக மன்னிய
மூருகுடன்று கறுத்த கலியழி மூதூர்
ருரும்பில் கூற்றத் தன்னரின்
றிருந்துதொழில் வயவர் சீறிய நாடே.

இதுவுமது.

பெயர் - (கக) காறுறுகடுநெறி.

க. தேர்பரந்தபுலம் ஏர்பரவாவென்றது ஒருகால் தேர்பரந்த வயல் அத்தேர்பரந்தமாத்திரையாற் சேறுய்ப் பின்பு உழுதற்கு ஏர்பரவா வென்றவாறு.

உ. களிறு ஆடிய புலம் நாஞ்சில் ஆடாவென்றது பன்றிகளுழுத கொல்லேத்தறை அவை உழுதமாத்திரையானே புழுதியாகிப் பின்பு கலப்பை விழுங்காவென்றவாறு.

ங. மத்து உரறிய மனை இன்னியம் இமிழாவென்றது மத்து ஒலிக்கின்ற மனைகள் அம்மத்தொலியின்மிகுதியானே இனிய இயங்களினொலி கிளராவென்றவாறு.

அ. கட்பனியென்னும் ஒற்று மெலிந்தது.

கo - கக. தெருஞ்சியின் அடர்ச்சியை தெருஞ்சிக்காடெனக் கூறிய அடைச்சிறப்பான், இதற்கு, 'காடுறுகடுநெறி' என்று பெயராயிற்று.

(கஉ) மூதூர்போலவென உவமவுருபுவிரித்து, அதனை (கச) வய வர்சீறியவென்னும் வினையொடு முடிக்க. இனிப் போலுமென விரித்து வய வர்சீறியரோடெனலும் ஒன்று. இனி மூதூர்க்கூற்றமெனக்கூட்டிக் கூற்று வன்கொடுமைமிகுதி கூறலுமொன்று.

கஈ. உரும்பில்கூற்றென்பது பிறிதொன்றால் கலிவுபட்டு மனக் கொதிப்பில்லாத கூற்றமென்றவாறு; உருப்பென்னும் ஒற்று மெலிந்தது.

(கஈ) ஈன் (கச) வய வர்சீறியரோடு அவ்வயவர்சீறுதற்குமுன்பு இருக்கும்படிசொல்லின், (க) தேர்பரந்தபுலம் ஏர்பரவா; (உ) களிறுடிய புலம் நாஞ்சிலாடா; (ஈ) மத்து உரறியமனை இன்னியம்-இமிழா; அவ்வாறு வளவியது இப்பொழுது (கக) காடுறுகடுநெறியை உடைத்தாகாகின்றது; அதன் (ச) செழுவளத்தைப் பண்டுநற்கறியுநர்நினைப்பின், அவர்க்கு (ஙி) நோதகவரும்; நோவேன்யானென மாறிக்கூட்டி வினைமுடிவுசெய்க.

இதனைத்சொல்லியது, அவன்வென்றிச்சிறப்புக் கூறியவாறுயிற்று.

ஈன்வயவர்சீறியரோடு இவ்வாறு அழிந்ததென எடுத்துச்செலவினை மேலிட்டுக் கூறினமையால், வஞ்சித்துறைப் பாடாணையிற்று.

க. 'தேரர்பரந்த' என்பது முதலாக மூன்றடி வஞ்சியடியாக வந்தமையால், வஞ்சித்தூக்கு மாயிற்று.

ச. 'ஆங்கு' என்பது அடிமுதற்கூன். (சு)

(உஎ.) சிதைந்தது மன்றநீ சிவந்தனை நோக்கலிற்
ரோடார்ந்த குவளைத் தூகெறி யடைச்சி
யலர்ந்த வாம்ப லகமடி வையர்
சுரியலஞ் சென்னிப் பூஞ்செய் கண்ணி
ஙி யரிய லார்கைய ரினிதுகூ டியவர்
துறைமணி மருத மேறித் தெறுமா
றெல்வளை மகளிர் தெள்விளி யிசைப்பிற்
பழனக் காவிற் பசுமயி லாலும்
பொய்கை வாயிற் புனல்பொரு புதவி
கo னெய்தன் மரபி னிரைகட் செறுவின்
வல்வா யுருளி கதுமென மண்ட
வள்ளற் பட்டித் துள்ளுபு துரப்ப
நல்லெருது முயலு மளறுபோகு விழுமத்துச்
சாகாட் டாளர் கம்பலை யல்லது

கரு பூச லறியா கன்னட்
டியாண ரருஅக் காமரு கவினே.

துறை - செந்துறைப்பாடாண்பாட்டு
வண்ணம் - ஒழுகுவண்ணம்
தூக்கு - செந்தூக்கு
பெயர் - (உ) தொடர்ந்ததுவனே.

உ. தொடர்ந்ததுவனே - ஆண்டுகள்தோறுமிட்டு ஆக்கவேண்டாது தொண்டு இட்டதே ஈடாக எவ்வாண்டிற்கும் இடையறாது தொடர்ந்துவரு மென்றவாறு.

இச்சிறப்பானே, இதற்கு,'தொடர்ந்ததுவனே'என்று பெயராயிற்று.

(கூ) மடிவையரென்பதனை வினையெச்சமுற்றாக்கி, அதனைத் (எ) தெள்விளியிசைப்பினென்னும் வினையொடு முடிக்க.

(எ) மகளிர் (சு) தெறுமாறு (எ) இசைப்பின், (அ) காவிற் பசுமையில் ஆலுமென்றது வயலிற்புகுந்து உழக்காதிருத்தற்பொருட்டு அவ்வயற் புள்ளோப்பும் உழவர்மகளிர் அதனைக் கடியவேண்டித் தெள்விளியிசைப்பின், இயவர் இயங்களின் ஒலிகேட்ட பழக்கத்தானே தன்னைக் கடிகின்ற ஒலியையும் அவற்றின் ஒலியாகக்கருதி மயில் ஆலுமென்றவாறு.

கo. நெய்தல் மரபின் நிரைகள் செறுவென்றது நெய்தல் இடையறாதபூக்கும் மரபினையும் நிரைத்தவண்டினையுமுடைய செறுவென்றவாறு.

கள்ளொன்பது வண்டு.

(ககூ) வல்வாயுருளி (கஉ) அள்ளப்பட்டு (ககூ) மண்டவெனக் கூட்டுக.

கஉ. துள்ளுபுதுரப்பவென்றது சாகாட்டாளர் துள்ளித்துரக் கையாலேயென்றவாறு.

கங. அளறுபோகு விழுமமென்றது அளற்றைக் கழியப் போகின்ற காலத்து வருத்தமென்றவாறு.

(கரு) கன்னட்டுக் (கசு) கவின் (க) நீ சிவந்தனை நோக்கலின், சிதைந்ததென் வினைமுடிவு செய்க.

இதனாற் சொல்லியது, அவன் வென்றிச்சிறப்புக் கூறியவாறாயிற்று.

(பி - மீ) கக. கதமெனமண்டி. (எ)

(உஅ) திருவுடைத் தம்ம பெருவிறற் பகைவர்
பைங்கண் யானைப் புணர்நிரை துமிய
வரந்துரந் தெறிந்த கறையடிக் கழற்காற்
கடுமா மறவர் கதழ்தொடை மறப்ப
(ரு) வினையினிது தந்து வினைவுமுட் டுருது

புலம்பா வுறையு ணீதொழி லாற்றலீன்
விடுநிலக் கரம்பை விடரீளை நிறையக்
கோடை நீடுக் குன்றம் புல்லென
வருவி யற்ற பெருவறற் காலையு
கo நிவந்துகரை யிழிதரு ஈனந்தலைப் பேரியாற்றுச்
சீருடை வியன்புலம் வாய்பரந்து மிகீஇய
ருவலீல சூடி யுருத்துவரு மலிர்நிழைச்
செந்நீர்ப் பூச லல்லது
வெம்மை யரிதுநின் னகன்றலீ ஈாடே.

துறை - நாடுவாழ்த்து.
வண்ணமும் தூக்கும்அது.
பெயர் - (க்உ) உருத்துவருமலிர்நிறை.

ஈ. கறையடி யென்றது குருதிக்கறையினையுடையஅடியென்றவாறு.

ச - ரு. மறவர் கதழ் தொடை மறப்ப இனீ இனிது தந்தென்றது நின்வீரர் போரில்லாமையால் விரைந்து அம்புதொடுத்தலை மறக்கும் படி ஈாடுகாவலீல இனிதாகத் தந்தென்றவாறு.

இனீ - காவல். வினீவில் முட்டுறுமலெனத் திரிக்க.

சு. புலம்பா உறையுட்டொழிலென மாறிக்கூட்டுக.

எ. கரம்பை விடர் அனீ நி ை றய வென்றது முன்பு நீரேறுத கரம்பைவயல்களிற் கமர்வாய் நீர்நிறைய வென்றவாறு.

(எ) விடரனீநிறைய (கக) வாய்பரந்து மிகீஇயரென முடிக்க.

(அ) கோடைநீடுகையாலே குன்றம் புல்லெனும்படி (க) அருவி யற்ற காலையெனக் கூட்டியுரைக்க.

கக. வாய் பரந்து மிகீஇயரென்றது இடத்திலே பரந்து நீர்தான் தன்னை மிகுக்கவேண்டி யென்றவாறு.

க்உ. உவலீல சூடி உருத்துவரும் மலிர்நிறையென்றது தழைகளைச் சூடித் தோற்றிவரும் வெள்ள மென்றவாறு.

தன்னை வயல் பொறுக்குமாறு காணவென்று போர்வேட்டு வருவாரைப் போலுமென்று கூறிய இச்சிறப்பானே, இதற்கு 'உருத்துவருமலிர் நிறை' என்று பெயராயிற்று.

(கக) வாய்பரந்து மிகீஇயர் (கஉ) உருத்துக் (கo) கரையிழிதரும் ஈனந்தலைப் பேர்யாற்று (கஉ) மலிர்நிறைச் (கஈ) செந்நீரென மாறிக் கூட்டுக.

(க) பெருவறற்காலையும் (கச) நின் அகன்றலைநாடு, (சு) புலம்பா வுறையுட்டொழிலை நீ ஆற்றலின், (க) திருவுடைத்தெனக் கூட்டி வினை முடிவுசெய்க.

இதனுற் சொல்லியது, அவன் நாடுகாத்தற்சிறப்புக் கூறியவாறு யிற்று. (அ)

(உகூ.) அவலெறிந்த வுலக்கை வாழைச் சேர்த்தி
வளைக்கை மகளிர் வள்ளை கொய்யு
மூடந்தை நெல்லின் விளைவயற் பரந்த
தடந்தா ணுரை யிரிய வயிரைக்
கு கொழுமீ னுர்கைய மரந்தொறுங் குழாஅவின்
வெண்கை மகளிர் வெண்குரு கோப்பு
மழியா விழவி னிழியாத் திவவின்
வயிரிய மாக்கள் பண்ணமைத் தெழீஇ
மன்ற நண்ணி மறுகுசிறை பாடு
கஅ மகன்கண் வைப்பி னுடிம னளிய
விரவுவேறு கூலமொடு குருதி வட்ட
மயிர்புதை மாக்கண் கடிய கழற
வமர்கோ ணேரிகந் தாரெயில் கடக்கும்
பெரும்பல் யானைக் குட்டுவன்
கஅ வரம்பி னுனை பரவா வுங்கே.

துறை - வஞ்சித்துறைப்பாடாண்பாட்டு.
வண்ணமும் தூக்கும்அது.
பெயர் - (சு) வேண்கைமகளிர்.

உ. முட்டந்தை நெல்லென்றது கதிர்க்கனத்தாலே வளைந்து முட மான நெல்லென்றவாறு; முடந்தையென்பது பெயர்த்திரிசொல்; இனிப் பழவழக்கென்பதுமொன்று.

கு. கொழுமீனுர்கையவென்றது.....
இச்சிறப்பானே, இதற்கு 'வேண்கைமகளிர்' என்று பெயராயிற்று
இனி வெண்சங்கணிந்த கையென்பாருமுளர்; இனி அடுகைமுதலா கிய தொழில்செய்யாத கையென்பாருமுளர்.

எ. திவவையுடையயாழ் திவவெனப்பட்டது.

குட்டுவன் வரம்பில் தானே பரந்த இப்பொழுது அழிந்து கிடக் கின்ற இந்நாடுகள், (கச) குட்டுவன் (கரு) வரம்பில் தானே பரவாவுங்கு

(ஈ) மூடந்தை கெல்லின் விளைவயற் பரந்த (சு) காரையிரிய (சு) வெண்கை மகளிர் வெண்குருகோப்புதலையுடையவாய் (எ) அழியாத விழவினையும் இழியாத திவவினையு மூடையவாய் (அ) வயிரியமாக்கள் எழீஇ (கூ) மன்ற நண்ணி மறுகுசிறைபாடும் இப்பெற்றிப்பட்ட சிறப்பையுடைய (கo) அகன் கண்வைப்பினுடு இப்பெற்றியெல்லாமழித்து கண்டார்க்கு அளித்தலை யுடையவென வினை முடிவுசெய்க.

இதனுற் சொல்லியது, அவன் வென்றிச்சிறப்புக் கூறியவாறுயிற்று. வரம்பிறனே பரவாவுங்கென எடுத்துச்செலவினை மேலிட்டுக் கூறி னமையால், வஞ்சித்துறைப்பாடாணுயிற்று.

(பி - ம்.) க. அவலெறியுலக்கை. ஙி. குமுறலின்; குழறலின்.(கூ)

(ஈo.) இணர்தாழ் ஞாழற் கரைகெழு பெருந்துறை
மணிக்கலத் தன்ன மாயிதழ் நெய்தற்
பாசடைப் பணிக்கழி துழைஇப் புன்னை
வாலிணர்ப் படுசினைக் குருகிறை கொள்ளு
ஙி மல்குறு கான லோங்குமண லடைகரை
தாழடும்பு மலைந்த புணரிவளை ஞரல
விலங்குநீர் முத்தமொடு வார்துகி லெடுக்குந்
தண்கடற் படப்பை மென்பா லனவுங்
காந்தளங் கண்ணிக் கொலைவில் வேட்டுவர்
கo செங்கோட் டாமா னூரெரு காட்ட
மதனுடை வேழத்து வெண்கோடு கொண்டு
பொன்னுடை நியமத்துப் பிழிகொடை கொடுக்குங்
குன்றுதலை மணந்த புன்புல வைப்புங்
கால மன்றியுங் கரும்பறுத் தொழியா
கஙி தரிகா லவித்துப் பலபூ விழவிற்
றேம்பாய் மருத முதல்படக் கொன்று
வெண்டலைச் செம்புனல் பரந்துவாய் மிகுக்கும்
பலசூழ் பதப்பர் பரிய வெள்ளத்துச்
சிறைகொள் பூசலிற் புகன்ற வாய
உo முழவிமிழ் மூதூர் விழவுக்கா ணூஉப் பெயருஞ்
செழும்பல் வைப்பிற் பழனப் பாலு
மேன லுழவர் வரகுமீ திட்ட
கான்மிகு குளவிய வன்புசே ரிருக்கை

மென்றினை நுவணை முறைமுறை பகுக்கும்
உரு புன்புலந் தழீஇய புறவணி வைப்பும்
பல்பூஞ் செம்மற் காடுபய மாறி
யரக்கத் தன்ன நுண்மணற் கோடுகொண்ட
டொண்ணுதன் மகளிர் கழலொடி மறுகும்
விண்ணுயர்ந் தோங்கிய கடற்றவும் பிறவும்
கூo பணிகெழு வேந்தரும் வேளிரு மொன்றுமொழிந்து
கடலவுங் காட்டவு மரண்வலியார் கடுங்க
முரண்மிகு கடுங்குரல் விசும்படை பதிரக்
கடுஞ்சினங் கடாஅய் முழங்கு மந்திரத்
தருந்திறன் மரபிற் கடவுட் பேணிய
கூரு ருயர்ந்தோ னேந்திய வரும்பெறற் பிண்டங்
கருங்கட் பேய்மகள் கைபுடையூஉ நடுங்க
நெய்த்தோர் தூஉய நிறைமகி ழிரும்பலி
யெறும்பு மூசா விறும்பூது மரபிற்
கருங்கட் காக்கையொடு பருந்திருந் தார
சுo வோடாப் பூட்கை யொண்பொறிக் கழற்காற்
பெருஞ்சமந் ததைந்த செருப்புகன் மறவ
ருருமுகில னதிர்க்குங் குரலொடி கொளைபுணர்ந்து
பெருஞ்சோ றுகுத்தற் கெறியுங்
கடுஞ்சின வேந்தேகின் றழங்குகுரன் முரசே.

துறை - பெருஞ்சோற்றுநிலை.
வண்ணமும் தூக்கும்அது.
பெயர் - (கக) புகன்றவாயம்.

உ. மணிக்கலமென்றது நீலமணியாலே செய்த பாத்திரம்.

மணிக்கலத்தன்ன (ங) கழியெனக்கூட்டி நெய்தற்பூவின் கருமையா னும் அதன்பாசடைக்கருமையானும் மணிக்கலம்போன்றகழியெனவுரைக்க.

ரு. கானலென்றது தன்னிடத்துவந்து இரைகொள்ளுவதற்குக் குருகு தங்கிவாழும் கானலென்றவாறு.

சு. புணரி வளை ஞரலவென்றது கடல்கொண்டுவந்த சங்கு திரை யிலே துவண்ட வருத்தத்தாலே ஈனுகைக்கு மெய்வருந்திக் கதறலென்ற வாறு.

எ. முத்தமொடு வார்துகிரெடுக்குமென்றது கரைகின்றோரில் (சு) வினாரலக்கேட்டார்; அம்முத்தெடுக்கவென்றுவந்து முத்தையன்றி அதனோடு பவளத்தையுமெடுக்கு மென்றவாறு.

(கரு) பலபூவிழவினையுடைய (உக) வைப்பெனக்கூட்டுக.

கஎ. புனல் பரந்தென்றதனைப் பாக்கவெனத்திரிக்க.

கஅ. பலசூழ்ப்பதப்பரென்றது பலபுரியாலும் சூழப்பட்ட மணற் கோட்டையென்றவாறு.

ககூ. புகன்றஆயமென்றது மூன்று மணலினைக்கு நில்லாத பெரு வெள்ளத்தினை அணைசெய்துமுடித்த விருப்பத்தையுடைய ஆயமென்றவாறு.

இச்சிறப்புப்பற்றி இதற்கு, 'புகன்றவாயம்' என்று பெயராயிற்று.

உஎ. மணற்கோடுகொண்டென்றது மணற்கோட்டைக் கழலாடு தற்கிடமாகக் கொண்டென்றவாறு.

இனிக் (உஅ) கழலென்றதனைக் கழலையுடைய தலைமகன்காலாக்கி அக்காலொடு தலைமகளிர் புணர்ந்துடன் போமென்பாருமுளர்.

உகூ. பிறவுமென்றது அவ்வாறு ஒருநிலைமாகச்சொல்லப்படாத பல நிலப்பண்புமுடைய இடங்களுமென்றவாறு.

மூன்று எண்ணினின்ற நிலங்களெல்லாம் ஆகுபெயரான் அந்நிலத்து வாழ்வார்மேலனவாகக் கொள்க.

ஙஎ. ஒன்றுமொழிந்தென்றது ஒருவர் துணிந்ததே காரியமாக அனைவரும் துணிந்து சொல்லியென்றவாறு.

(ஙஙூ) கடுஞ்சினங்கடாஅய் (சஙூ) எறியும் (சஙூ) முரசெனமுடிக்க.

ஙஙூ. முழங்குமந்திரமென்றது முழங்க உச்சரிக்கப்படு மந்திர மென்றவாறு.

மந்திரத்தானனை உருபுவிரித்து அதனைப் (ஙஙூ) பேணியரென்பது னோடு முடிக்க.

ஙசூ. கடவுளென்றது முரசுறை கடவுளை.

(ஙசூ) கருங்கட்பேய்மகள் கைபுடையூஉதெங்க (ஙஞூ) உயர்ந்தோ னேந்திய அரும்பெறற்பிண்டம் (ஙஅ) எறும்பு மூசா இறும்பூது மரபின் (ஙஎ) நெய்த்தோர் தூஉய நிறைமழிழிரும்பலி (ஙஙூ) கருங்கட்காக்கை யொடு பருந்திருந்தாரவெனக் கூட்டுக.

(ஙஅ) இறும்பூது மரபிற் (ஙஎ) பலியென மாறிக்கூட்டுக.

(ஙசூ) பேய்மகளும் (ஙஅ) எறும்பும் அஞ்சிச்செல்லாத (ஙஎ) பலிகளைக் (ஙஙூ) காக்கையொடு பருந்திருந்தாரவென்றது அம்முரசுறை கடவுள்தானையால் தன்பலிகளை மேல் தன்னருளாலேபோர்வென்றி விளை வதறிவித்தற்கு நிமித்தமாகக் காக்கையும் பருந்துமிருந்து ஆரவென்றவாறு.

இவ்விடத்துக்குப் பிறவாறு கூட்டியுரைப்பாருமுளர்.

சக. பெருஞ்சமத்தைதந்த செருவென்றது பகைவர்செய்யும் போர்சிதையும்படி செய்யும் போரென்றவாறு.

சக - உ. மறவர்குரலெனக்கூட்டுக.

ஆகுபெயரான், உருமுநிலனதிர்க்குங்குரலோடு ஒத்த மறவர்குரலை உருமுநிலனதிர்க்குங் குரலென்றுரைக்கொள்க.

சஙூ - ச. எறியுமுரசென்க.

(அ) மென்பால் முதலாகக் (உக) கடீறாக எண்ணப்பட்ட ஐவகை நிலத்துமக்களும் பிறவும் (ஙூ) அந்நிலத்து வேந்தரும் வேளிரும் தங்களிலே ஒன்றுமொழிந்து (ஙக) அரண்வலியாதே நடுங்கா நிற்கும்படி (ஙூ) கடுங்குரல்விசும்படைந்து அதிரும்படி (ஙூ) கடுஞ்சினத்தைக்கடாவிப் (ஙசு) பேய்மகள் கைபுடையூஉநடுங்க (ஙஙு) உயர்ந்தோனேந்திய பிண்டத்தினையும் (ஙஅ) எறும்பு மூசாமரபின் (ஙஎ) நெய்த்தோர் தூஉய நிறை மறிழிரும்பலியினையும் (ஙஈ) கருங்கட்காக்கையொடு பருந்திருந்து ஆராநிற்கச் (சக) செருப்புகன்மறவரது (சஉ) குரலோடே கோட்பாடு பொருந்திப் (சஙு) பெருஞ்சோறு உருத்தற்கெறியப்படாநின்றது, (சசு) நின்மூரசென வினைமுடிவுசெய்க.

இதனைச் சொல்லியது, அவன்வென்றிச்சிறப்புக் கூறியவாறுயிற்று.

(பி - ம்.) க. இணர்த்ததை. ஙஅ. இறும்பூதுபிரப்பின். (கo)

இதன்பதிகத்துஅகப்பாவெதிரலைப் பகற்றீவேட்டற்கு அடையாக்கியுரைக்க.

முதியரை மதியுறழ்மரபிற்றழீஇ மண்வகுத்தீத்தெனக்கூட்டித் தன்குலத்தில் தனக்குமுதியாரை மதியோடொத்த தன்றண்ணளியால் தழீஇக்கொண்டு அவர்க்குத் தன்னுட்டைப் பகுத்துக்கொடுத்தென உரைக்க.

இருகடலுமென்றது தன்னதாயமேல்கடலும் பிறநாட்டதாய்ப்பின்பு தான் பொருதுகொண்டு தன்னுடாக்கிய நாட்டிற் கீழ்கடலுமென்றவாறு.

கருங்களிற்றியானைப்புணர்நிரைநீட்டி இருகடனீருமொருபகலாடியென்றது அவ்விருமுந்நீரும் ஒருபகலிலே வரும்படி யானைகளை நிரைத்து அழைப்பித்து ஆடியென்றவாறு.

அயிரை புரை இயென்றது தன்னுட்டு அயிரையென்னு மலையில் வாழும் கொற்றவைக்கடவுளைத் தன்குலத்துள்ளார் செய்துவரும் வழிபாடு கெடாமல் தானும் வழிபட்டென்றவாறு.

ஆற்றல்சான்மூன்றோடு காடுபோந்தவெனக்கூட்டுக.

நெடுமோரதாயனூர் முந்துறக் காடுபோந்தவென்றது தன்புரோகிதராகிய நெடுமோரதாயனூர் தனக்குமுன்னே துறந்து காடுபோக அதுகண்டு தானும் துறவுள்ளம்பிறந்து துறந்து காட்டிலே போனவென்றவாறு.

(பதிகம்.)

இமைய வரம்பன் நம்பி யமைவர
வும்பற் காட்டைத் தன்கோ னிறீஇ
யகப்பா வெறிந்து பகற்றீ வேட்டு
மதியுறழ் மரபின் மூதியரைத் தழீஇக்
கண்ணகன் வைப்பின் மண்வகுத் தீத்துக்
கருங்களிற் றியானைப் புணர்நிரை நீட்டி
யிருகட னீரு மொருபக லாடி
யயிரை பரைஇ யாற்றல்சான் மூன்போ
டொடுங்கா நல்லிசை யுயர்ந்த கேள்வி
நெடும்பா தாயனூர் மூன்றுறக் காடுபோந்த

பல்யானைச் செல்கெழு குட்டுவனைப் பாலைக்கௌதமனார்பாடினார் பத்துப்பாட்டு. அவைதாம்: அடுநெய்யாவுதி, கயிறுகுறு மூகவை, தகைந்தகாஞ்சி, சீர்சால்வெள்ளி, காலுண்ங்குகடுநெறி, காடுறுகடுநெறி, தொடர்ந்தகுவளை, உருத்துவருமலிர்நிறை, வெண்கைமகளிர், புகன்றவாயம். இவை பாட்டின்பதிகம்.

பாடிப்பெற்றபரிசில் : 'நீர் வேண்டியதுகொண்மின்' என, 'யாழும் என்பார்ப்பனியும் சுவர்க்கம்புகல்வேண்டும்'என, பார்ப்பாரிற் பெரியோனைக் கேட்டு ஒன்பது பெருவேள்வி வேட்பிக்கப் பத்தாம்பெருவேள்வியிற் பார்ப் பானையும் பார்ப்பனியையும் கார்ராயினர்.

இமயவரம்பன்நம்பி பல்யானைச்செல்கெழுகுட்டுவன் இருபத்தை யாண்டு வீற்றிருந்தான்.

மூன்றும்பத்து முற்றிறுது

(1ஈக.) குன்றுதலை மணந்து குழூஉக்கட வுதித்த
மண்கெழு ஞாலத்து மாந்த ரொராங்குக்
கைசுமந் தலறும் பூசன் மாதிரத்து
நால்வேறு நனந்தலை யொருங்கெழுந் தொலிப்பத்
ஙு தெள்ளுயர் வடிமணி யெறியுநர் கல்லென
வுண்ணுப் * பைஞ்ஞிலம் பனித்துறை மண்ணி
வண்டீது பொலிதார்த் திருஞெம ரகலத்துக்
கண்பொரு திகிரிக் கமழ்குரற் றுழாஅ
யலங்கற் செல்வன் சேவடி பரவி
கஐ கெஞ்சுமலி யுவகையர் துஞ்சுபதிப் பெயர
மணிநிற மையிரு ளகல நிலாவிரிபு
கோடுகூடு மதிய மியலுற் றுங்குத்
தூளங்குகுடி விழுத்திணை திருத்தி முரசுகொண்
டாண்கட னிறுத்தநின் பூண்கிளர் வியன்மார்பு
கஙு கருவி வானந் தண்டளி தலைஇய
வடதெற்கு விலங்கி விலகுதலைத் தெழிலிய
பனிவார் விண்டு விறல்வரை யற்றே
கடவு ளஞ்சி வானத் திழைத்த
தூங்கெயிற் கதவங் காவல் கொண்ட
உஐ வெழூஉநிவந் தன்ன பரோரெழில் முழுவுத்தோள்
வெண்டிரை முந்நீர் வளை இய வுலகத்து
வண்புகழ் நிறுத்த வகைசால் செல்வத்து
வண்ட னனையமம னீயே வண்டுபட
வொலிந்த கூந்த லறஞ்சால் கற்பிற்
உங குழைக்குவிளக் காகிய வொண்ணுதற் பொன்னி
னிழைக்குவிளக் காகிய வவ்வாங் குந்தி
விசும்புவழங்கு மகளி ருள்ளுஞ் சிறந்த
செம்மீ னனையணின் றென்னகர்ச் செல்வி
நிலவுதிர் பிரங்கல வாகி வலனேர்பு

* இப்பெயர் பஞ்ஞிலமெனவும் வழங்கும்.

கo வியன்பணை முழங்கும் வேன்மூ சமுவத்
தடங்கிய புடையற் பொலங்கழ லேன்ரு
லொடுங்காத் தெவ்வ ருக்கறக் கடைஇப்
புறக்கொடை யெறியார்நின் முறப்படை கொள்ளுங்
ரகைவர்க் கரண மாகிப் பகைவர்க்குச்
கடு சூர்நிகழ்த் தற்றுநின் ரூனை
போர்மிகு குருசினீ மாண்டனை பலவே.

துறை - செந்துறைப்பாடாண்பாட்டு.
வண்ணம் - ஒழுகுவண்ணம்.
தூக்கு - செந்தூக்கு.
பெயர் - (அ) கமழ்குரற்றுழாய்.

(சு) ஒலிப்பப் (கூ) பரவியெனமுடிக்க.

(நு - சு. மணியெறிதலை உண்ணப்பைஞ்ஞிலத்தின் தொழிலாக்கி, அவர்கள் மணியையெறிந்து தீர்த்தமாடுகின்றரர்களாகக்கொள்க.

சு. உண்ணப்பைஞ்ஞிலமென்றது அத் திருமால்கோயிலுள் வரம் வேண்டி உண்ணுதுகிடந்த மக்கட்டொகுதியென்றவாறு.

எறியுரென்றது வினையெச்சமுற்று.

இனி எறியுரென்பதனைத் தொழிற்பெயராக்கி, மணியையெறிவார், தீர்த்தமாடுவோர் ஆடுதற்கு இது முகுத்தமென்று அறிந்துவருதற்பொருட்டு அம்மணியையெறிந்து ஆரவாரிப்பவென்றுரைப்பாருமுளர்.

அ. கமழ்குரற்றுழாயென்றது நாறுகின்ற பூங்கோத்துக்களையுடைய துழாயென்றவாறு.

நாறுத பூவுடையதனை மிக நாறுவதொன்றுபோலச் சாதிபற்றிச் சொன்ன சொற்சிறப்பால், இதற்கு, 'கமழ்குரற்றுழாய்' என்று பெயராயிற்று.

கூ. செல்வனென்றது திருவனந்தபுரத்துத் திருமாலை.

கஉ. பதிப்பெயரவென்னும் எச்சத்தினை (கஉ) மதியம் இயலுற் றுங்கென்னும் வினையொடு முடிக்க.

(சு) உண்ணப்பைஞ்ஞிலம் (கo) நெஞ்சமலியுவகையராய்த் தாந் தாம் தஞ்சுபதிகளிலேபெயரும்படி (கக) மையிருளகல (கஉ) கோடு கூடு மதியம் இயலுற்றுங்குத் (கஉ) துளங்குகுடி விழுத்தினைதிருத்தி யெனக்கூட்டி, உண்ணுதுவரங்கிடந்த மக்கட்டொகுதி வரம்பெற்று நெஞ்சமலிந்த வுவகையராய்த் தாந்தாம் தஞ்சுபதிகளிலே பெயரும்படி இருள் அகல விரிந்து கோடுகூடுதலையுடைய உவாமதியம் .....

இனி, (கo) துஞ்சுபதிப் பெயரவென்னுமெச்சத்தினை (கச) ஆண்கடனிறுத்தவென்னும் வினையொடுமுடித்து, வழி ஆதலைகள்வர்முத லிய ஏதங்களின்றித் தாந்தாம் துஞ்சுபதிகளிலே பெயரும்படி தன் ஆண் மைக்கடனையிறுத்தவென்று உரைப்பாருமுளர்.

கஙூ. முரசுகொண்டென்றது சிலகாலத்துப் பயன்கொள்வாரின் மையிற் பண்ணழிந்து கிடந்த பழமுரசினைத் தான் தோன்றி அதன் அழிவு தீர்த்து அதன் பயன்கொண்டென்றவாறு.

கசு. ஆண்கடனிறுத்தவென்றது ஆண்மக்களாயுள்ளார் தங்கீழ் வாழ்வாரைக் காத்தற்பொருட்டு அவர்க்கு அவர்செய்யும் கடன்களெல்லாம் செய்து முடித்தவென்றவாறு.

கசு. விலங்கியென்றதனை விலங்கவெனத் திரிக்க.

கஎ. பனிவார் விண்டுவரையென இருபெயரொட்டு.

(உச) கூந்தலினையும் கற்பினையும் (உரு) துதலினையும் (உக) உள்ளி யினையுமுடைய (உஅ) தொன்னகர்ச் செல்வியெனமாறிக்கூட்டுக.

உஅ. செம்மீன் - அருந்ததி.

உக. நிலனிரவெனத் திரிக்க.

ஙக. புடையலென்றது பனந்தார்.

(ஙக) புடையலினையும் கழுஞ்சுருளினையுமுடைய (ஙஙூ) நின் படைகொள்ளுநரென மாறிக்கூட்டுக.

ஙஙூ. ஈண்டுப் படைகொள்ளுநரென்றது படைத்தலைவரை யென்ற வாறு.

(கச) நின்மார்பு (கஎ) பனிவார்விண்டு விறல்வரையற்று; (உo) நின்றேள்கள் எழுஉசிவந்தன்ன; (உங) நீதான் வண்டனென்பவனை அனையை; (உஅ) நின்செல்வி செம்மீனனையள்; (ஙக) நின் மறப்படை கொள்ளுநர் புறக்கொடையெறியார்; (ஙரு) நின்றேன் (ஙச) நகைவர்க்கு அரணமாகிப் பகைவர்க்குச் (ஙரு) சூர்நிகழ்ந்தற்று; அவ்வாற்றுக் (ஙக) குருசில், நீ பல்லும் மாட்சிமைப்பட்டனையென வினைமுடிவுசெய்க.

இதனுள் சொல்லியது, அவற்குள்ள மாட்சிமையெல்லாமெடுத்து உடன்புகழ்ந்தவாறாயிற்று.

(பி - ம்.) உ. மாந்தரோங்குக. ஙச. கையர்க்கரணம்.
உo. நிமிர்ந்தன்ன. (க)

(ஙஉ.) மாண்டனை பலவே போர்மிகு குருசினீ
மாதிரம் விளக்குஞ் சால்புஞ் செம்மையு
மூத்துடை மருப்பின் மழகளிறு பிளிற
மிக்கெழு கடுந்தார் துய்த்தலைச் சென்று

(நி) துப்புத்துவர் போகப் பெருங்கிளை யுவப்ப
வீத்தான் முளை விடனுடை வளனுக்
தளங்குகுடி திருத்திய வலம்படு வென்றியு
மெல்லா மெண்ணி னிடுகழங்கு தபுக
கொன்னொன்று மருண்டனெ னடுபோர்க் கொற்றவ
(கo) நெடுமிடல் சாயக் கொடுமிட றுமியப்
பெருமலை யானையொடு புலங்கெட விறுத்துத்
தடந்தா ணுளை படிந்திரை கவரு
மூடந்தை நெல்லின் கழையமல் கழனிப்
பிழையா விளையு ணுடகப் படுத்து
(கந) வையா மாலையர் வசையுநர்க் கறுத்த
பகைவர் தேஎத் தாயினுஞ்
சினைவா யாகுத விறும்பூதாம் பெரிதே.

இதுவுமது.

பெயர் - (கந) கழையமல்கழனி.

அ. இடுகழங்குதபுவென்றது இடுகழங்கும் அலகுதபுதற்குக்காரண மாக இருப்பனவென்றவாறு.

தபுவென்றது பெயர்த்திரிசொல்.

கo. நெடுமிடல் - அஞ்சி இயற்பெயராம். கொடுமிடல், மிடல் வலி ; என்றது வலியாற் செய்யப்படும் போரினை.

கக. மூடமாகிய கழையென இருபெயரொட்டு. நெல்லின் கழை நெல்லினது கழை.

நெற்றாளை அதன்பருமையாலே மூங்கிலோடு ஒப்புமைபற்றிக் கழை யென்று பெயர்கொடுத்தறிப்பான், இதற்கு, 'கழையமல்கழனி' என்று பெயராயிற்று.

கரு. வையா மாலையரென்றது ஒன்றில் வகைபடாத இயல்பை யுடையாரென்றவாறு.

கரு - சு. வகையுநர்க் கறுத்த பகைவரென்றது தங்கள், பகைவ ரொடு செற்றம்கொண்டாடாது ஒழிந்திருக்கவேண்டுமளவினும் ஒழியாது அவர்கனை அக்கடப்பாடன்றி வெகுண்டிருத்தலே தொழிலாகவுடைய பகை வரென்றவாறு.

வசையுநர் - பகைவர் ; வசையுநரென்றது பெயர்த்திரிசொல். இனிக் ககரவொற்றின்றி 'வசையுநர்கறுத்த' என்பது பாடமாயின், அதனை

வினையெச்சவினைக்குறிப்புமுற்றுத் திரிசொல்லாக்கி, வசைசொல்லுதலுடையவராய் வெகுண்ட பகைவரென்று உரைப்பாருமுளர்.

(க) குருசில், நீ பலகுணங்களுமாட்சிமைப்பட்டனை ; (அ) அப்பலகுணங்களும் எண்ணப்புகின், இடுகழங்கு தபும் எல்லையவாயிருக்கும்; (கூ) கொற்றவ, பலகுணத்திலும் ஒன்றைக் கொன்னே யான் வியந்தேன்; அப்பலவற்றுள்ளும் வியப்பானகுணம் யாதெனின், பகைவர்செய்த குற்றத்திற்குத் தண்டமாக அவர் (கச) நாட்டை அகப்படுத்திக்கொண்டு (கடு) வையாமாலையராகிய வசையுநர்க்கறுத்த (கசு) அப்பகைவரிடத்தாயினும் நீ (கள) சினவர்தொழிகின்ற பொறை எமக்குப் பெரிதும் வியப்பாகின்றதென வினைமுடிவுசெய்க.

இதனுள் சொல்லியது, அவற்குள்ள பலகுணங்களையும் உடனெண்ணிப் புகழ்ந்து அவற்றுட் பொறையுடைமையை மிகுத்துப் புகழ்ந்தவாறாயிற்று.

(பி - மீ.) கச. பிழைபாவினையினோடு, (உ)

(ஈஈ) இறும்பூதாற் பெரிதே கொடித்தே ரண்ணல்
வடிமணி யணைத்த பணைமரு ணேன்றாட்
கடிமரத்தாற் களிறணைத்து
நெடுநீர துறைகலங்க
(ரு) சூழ்த்திறுத்த வியன்ரூனையொடு
புலங்கெட நெரிதரும் வரம்பில் வெள்ளம்
வாண்மதி லாக வேன்மினை யுயர்த்து
வில்லிசை யுமிழ்ந்த வைம்முள் ளம்பிற்
செவ்வா யெஃகம் வளைஇய வகழிற்
(கo) காரிடி யுருமி னுரறு முரசிற்
கால்வழங் காரெயில் கருதிற்
போரெதிர் வேந்த ரொரூஉப நின்னே.

துறை - வஞ்சித்துறைப்பாடாண்பாட்டு.
வண்ணம் - ஒழுகுவண்ணம்.
தூக்கு - செந்தூக்கும் வஞ்சித்தூக்கும்.
பெயர் - (சு) வரம்பில்வெள்ளம்.

உ - ஈ. தோன்றாட்களிறென மாறிக் கூட்டுக.

(ரு). வியன்ரூனையென்றது பகைவர்நாட்டெல்லையின் முற்பாடு சென்றுவிட்ட தூசிப்பெரும்படையை.

சு. வரம்பில் வெள்ளமென்றது அதனேடுகூடி நாட்டுள்ளுச் சென்றுவிடும் பேரணிப் பெரும்படையை.

கரையையுடைய்கடலே வரம்புடைய வெள்ளமென்றுக்கி இதனை வரம்பில்வெள்ளமென்று கூறியசிறப்பான், இதற்கு 'வரம்பில்வெள்ளம்' ஏன்று பெயராயிற்று.

வெள்ளமென மகர்வொற்றுக் கெடாமையான் இருபெயரொட்டுப் பண்புத்தொகையன்றி ஒருபொருளாக இருபெயர் நின்றதாக்கிக்கொள்க.

சு - கக. படைவெள்ளத்தை ஆரெயிலென்றது - அரசன்றனக்கு ஆரெயில்போல அரணுய் நிற்றலினெனக்கொள்க.

இனிக் கால்வழங்காரெயிலெனக் காற்றல்லதுவழங்கா ஆரெயிலென்று பகைவர்மதிலாக்கி, அதனை வரம்பில்வெள்ளம் கொள்ளக்கருதினென்று உரைப்பாருமுளர்.

எ. உயர்த்தென்பதனை உயர்த்தவெனத்திரித்து, அதனை (கூ)எஃகம் வினேயவென்பதனேடு முடிக்க.

(கூ) செவ்வாயெஃகம்வினேயு மகழினேயும் (அ) வில்விசை யுமிழ்ந்த அம்பாகிய வைம்முள்ளினேயுமுடைய (கக) ஆரெயிலென மாறிக் கூட்டுக.

கூ. செவ்வாயெஃகமென்றது முனேமுகத்திற்செல்லாதொழிந்த கூர்வேற் கருவிகளேயெனக்கொள்க.

இனி, வள் மதிலாகவென்றுவைத்துப் பின்னே ஆர் எயிலென்றது, வாண்மதிலைச்சூழ்தலையுடைய ஆராகிய எயிலினேயெனக் கொள்க; ஈண்டு ஆராவது காலாள்வழங்கிச்செல்கின்றபடையின் திரட்சி. இனி வரம்பில் வெள்ளமானது வள் மதிலாக வேல்மினே உயர்த்துக் கால்வழங்கு ஆர் எயிலாதலைக் கருதினென்றலுமொன்று.

(க) அண்ணல், இது பெரிதும் இறும்பூதாயிருந்தது; யாதெனின், (சு) வரம்பில்வெள்ளம் (கக) கால் வழங்காரெயிலெனச் சொல்லப்பட்ட நின்படை போர்செய்யக்கருதின், (கஉ) நின்னேடு போரெதிர்ந்தவேந்தர் பொரமாட்டார்து நின்னே நீங்குவர்; இஃது அதுவென வினேமுடிவுசெய்க.

இதனுற்சொல்லியது, அவன்வென்றிச்சிறப்புக் கூறியவாருயிற்று.

வரம்பில்வெள்ளங்கருதினென எடுத்துச்செலவினே மேலிட்டுக் கூறினமையான், வஞ்சித்துறைப்பாடாணுயிற்று.

கூ. 'கடிமரத்தான்' என்றதுமுதலாக மூன்றடிவஞ்சியடியாக வந்த மையான், வஞ்சித்தூக்குமாயிற்று. (கூ)

(ஈசை.) ஒருஉப நின்னே யொருபெரு வேந்தே
யோடாப் பூட்கை யோண்பொறிக் கழற்கா
வீருநிலந் தோயும் விரிதூ லறுவையர்•
செல்வுளை யாவூர்ந்து

நு நெடுங்கொடிய தேர்மிசையு
மோடை விளங்கு முருகெழு புகர்நுதற்
பொன்னணி யானை மூரண்சே ரெருத்திலு
மன்னிலத் தமைந்த.....
மாரு மைந்தர் மாறுநிலை தேய

கo மூரைசுடைப் பெருஞ்சமந் ததைய வார்ப்பெழு
வரைசுபடக் கடக்கு மாற்றற்
புரைசான் மைந்தநீ யோம்பன் மாறே.

துறை - தும்பையரவம்.
வண்ணமும் தூக்கும் அது.
பெயர் - (உ) ஒண்பொறிக்கழற்கால்.

(க) ஒருஉப (ங) அறுவையரென முடிக்க.

உ. ஒண்பொறிக் கழற்காலென்றது தாங்கள்செய்த அரிய போர்த் தொழில்களைப் பொறித்தலையுடைய ஒள்ளிய கழற்காலென்றவாறு.

இச்சிறப்பான், இதற்கு 'ஒண்பொறிக்கழற்கால்' என்று பெயராயிற்று.

(க) வேந்தே, (ச) மாவூர்ந்து (கக) அரசுபடக்கடக்குமாற்றலையுடைய (கஉ) புரைசான்மைந்த, அவ்வாற்றலிடத்துவரும் குறைகளுக்குப் பிறரை ஏவாது அவற்றை நீயே பாதுகாத்துச்செய்தலால், (க) ஒருஉப (ங) அறுவையரெனக்கூட்டி வினைமுடிவுசெய்க.

இதனுட்சொல்லியது, அவன்வென்றிச்சிறப்புக் கூறியவாறாயிற்று.

மாற்றூர் கூடுகோடல் முதலாயினவன்றி வென்றிகோடலே கூறினமையால், தாறை தும்பையாய் ஒருஉபவெனப் படையெழுச்சிமாத்திரமே கூறினமையான், அதனுள் அரவமாயிற்று.

(ச) 'செல்வுளைய' என்பதுமுதலாக இரண்டும் வஞ்சியடியாய் வந்தமையான், வஞ்சித்தூக்குமாயிற்று.

(ச)

(ஈடு.) புரைசான் மைந்தநீ யோம்பன் மாறே
புரைசான் றனவாற் பெருமைநின் வென்றி
யிருங்களிற் றியானே யிலங்குவான் மருப்பொடு

நெடுந்தேர்த் திகிரி தாய வியன்களத்
(நி) தளகுடைச் சேவற் கிளைபுகா வாரத்
தலைதுமிக் தெஞ்சிய மெய்யாடு பறந்தலை
யந்தி மாலை விசும்புகண் டன்ன
செஞ்சுடர் கொண்ட குருதி மன்றத்துப்
பேஎ யாடும் வெல்போர்
(க0) வீயா யாணர் நின்வயி னூனே.

துறை - வாகைத்துறைப்பாடாண்பாட்டு.
வண்ணம் அது.
தூக்கு - செந்தூக்கு.
பெயர் - (சு) மெய்யாடுபறந்தலை.

(நி.) அளகுடைச்சேவலென்றது பெடையொடுகூடின பருந்தின் சேவலை.

(ச.) வியன்களமென்றது ஒன்றுன போர்க்களப்பரப்பை.

(சு.) பறந்தலையென்றது அப்பெரும்பரப்பின் உட்களத்தை.

(அ.) மன்றென்றது அவ்வுட்களத்தின் நடுவை; அது மன்றுபோறலின், மன்றெனப்பட்டது.

(சு.) குறையுடலெழுந்தாடுவது ஒருபெயருடையார் பலர்பட்ட வழியன்றே; அவ்வாற்றாற் பலர்பட்டமை தோன்றக் கூறியசிறப்பான், இதற்கு 'மெய்யாடுபறந்தலை' என்று பெயராயிற்று.

(சு - க0.) வெல்போர் வீயா யாணரென்றது வெல்போராகிய இடையறாது வருகின்ற செல்வமென்றவாறு.

ஆன், அசை.

(க) மைந்த, நின்படை அழிவுபடாமை நீயும்புவினைசெய்தமையானே, (உ) நின்வென்றிகளின்பெருமை பிறரிடத்தின்றி (க0) நின்னிடத்தே (உ) புகழ்ச்சியமைந்தனவென முடிவுசெய்க.

இதனுற்சொல்லியது, அவன்வென்றிச்சிறப்புக் கூறியவாறாயிற்று.

உரைசான்றனை நின்வென்றியெனக் கூறினமையான், வாகைத்துறைப பாடாணாயிற்று.

(டி - ம்.) உ. பெருமநின்வென்றி. நி. அருகுடைச்சேவல்.
நி. அருளுடைச்சேவல். (⑬)

(ஈசு.) வீயா யாணர் நின்வயி னூனே
தாவா தாகு மலிபெறு வயவே
மல்ல லுள்ளமொடு வம்பமர்க் கடந்து

செருமிகு முன்பின் மறவரொடு தலைச்சென்று
நு பணைதடி புனத்திற் கைதடிபு பலவுடன்
யானை பட்ட வாண்மங்யது கடுந்தார்
மாவு மாக்களும் படிபிண முணீஇயர்
பொறித்த போலும் புள்ளி யெருத்திற்
புன்புற வெருவைப் பெடைபுணர் சேவல்
கo குடுமி யெழாலொடு கொண்டுகிழக் கிழிய
நிலமிழி நிவப்பி னீணிரை பலசுமந்
தருவெழு கூளிய ருண்டுமகிழ்ந் தாடக்
குருதிச் செம்புன லொழுகச்
செருப்பல செய்குவை வாழ்கநின் வளனே.

துறை - களவழி.
வண்ணமும் தூக்கும் அது.
பெயர் - (சு) வாண்மயங்கு கடுந்தார்.

(ச) தலைச்சென்று (ஈ) வம்பமர்க்கடந்தென மாறிக்கூட்டுக.

வம்பமரென்றது முன்புசெய்துவருகின்ற போரன்றிப் பகைவர் புதிதாகப் பகைத்துச்செய்யும் போரினை.

சு. வாண்மயங்குதலாவது இரண்டுபடையின்வாளும் தம்மில் தெரியாமல் மயங்குதல்.

இச்சிறப்பான், இதற்கு 'வாண்மயங்குகடுந்தார்' எனபு பெயராயிற்று.

கo. கிழக்கென்றது கீழான பள்ளங்களை.

(ஈ) உள்ளமொடு வம்பமர்க்கடந்து (கச) செருப்பலசெய்குவை; அதனானே (உ) நினதுவலி (க) நின்னிடத்துக் (உ) கேடுபடாததாயிருக்கது; அதன்மேலும் இதற்கு அடியாகிய (கச) நின்போர்வளம் வாழ்கவெனக் கூட்டி விணமுடிவுசெய்க.

இதனாற்சொல்லியது, அவனவனறிச்சிறப்புக் கூறியவாறாயிற்று.

மிகுதிவகையால், தன்போர்க்களச்சிறப்புக் கூறினமையின், துறை களவழியாயிற்று. (சு)

(ஈஎ.) வாழ்கநின் வளனே நின்னுடை வாழ்க்கை
வாய்மொழி வாயர் நின்புக ழேத்தப்
பகைவ ராரப் பழங்க ணருளி
நகைவ ராக நன்கலஞ் சிதறி
நு யான்றவிர் தடங்கிய செயிர்தீர் செம்மால்

வான்றோய் நல்லிசை யுலகமொ டியிர்ப்பத்
துளங்குகுடி திருத்திய வலம்படு வேன்றியு
மாயிரும் புடையன் மாக்கழல் பூணைந்து
மன்னெயி லெறிந்து மறவர்த் தரீஇத்
தொன்னிலைச் சிறப்பி னின்னிழல் வாழ்நர்க்குக்
கோடற வைத்த கோடூர் கொள்கையு
நன்றுபெரி துடையையா னீயே
வெந்திறல் வேந்தேயிவ் வுலகத் தோர்க்கே.

துறை - செந்துறைப் பாடாண்பாட்டு.
வண்ணமும் தூக்கும் அது.
பெயர் - (எ) வலம்படுவேன்றி.

எ. வலம்படுவென்றியென்றது மேன்மேலும் பல போர் வென்றி படுதற்கு அடியாகிய வென்றியென்றவாறு.

இச்சிறப்பான், இதற்கு 'வலம்படுவேன்றி' என்று பெயராயிற்று.

(நு) செம்மால், (எ) குளங்குகுடி திருத்திய வலம்படுவென்றியும் (கூ)மன்னெயில்களெயெறிந்து அதிலுள்ளாரும் மறவர்களைப் பிடித்துக்கொண்டு (கo) பழைதான நிலைமைச்சிறப்பினையுடைய கின்னிழலில் வாழும் ஏரார்க்குக் (கக) கொடுமை அறம்படியமைத்த பிறநாக்கொள்கையும் (கஉ) நீ மிகப் பெரிதுடையையாயிராகின்றாய் ; ஆதலால், (க ரு) வேந்தே, இவ்வுலகத்தோர் ஆக்கத்தின்பொருட்டு (க) நின்செல்வமும் நின்வாழ்நாளும் வாழ்வனவாக்வெனக்கூட்டி விளைமுடிவுரைசய்க.

இதனுற்சொல்லியது, அவற்குள்ள குணங்களெல்லாம் எடுத்துப் புகழ்ந்து அவன் செல்வத்தையும் ஆயுளையும் வாழ்த்தியவாறுயிற்று.

(பி - ம்.) ரு. பகைவராயினும். நு. செம்மல். (எ)

(ரூஉ.) உலகத் தோரே பலர்மற் செல்வ
கிரல்லா ருள்ளுநின் னல்லிசை யிகுமே
வளந்தலை மயங்கிய பைதிரந் திருத்திய
களங்காய்க் கண்ணி நார்முடிச் சேர
ரு லெயின்முகஞ் சிதையத் தோட்டி யேவலிற்
றூட்டி தந்த தொடிமருப் பியானைச்
செவ்வுளைக் கலிமா வீகை வான்கழற்
செயலமை கண்ணிச் சேரலர் வேந்தே
புரிசிலர் வேறுக்கை பாணர் காளைவ

கo வாணுதல் கணவ மள்ள ரேறே
மையற விளங்கிய வடிவாழ் மார்பின்
வசையில் செல்வ வான வரம்ப
வினியவை பெறினே தணிதணி நுகர்கேக்
தருகென விழையாத் தாவி னெஞ்சத்துப்
கரு பகுத்தூண் டொகுத்த வாண்மைப்
பிறர்க்கென வாழ்திநீ யாகன் மாறே.

இதுவுமது.

பெயரீ - (கூ) பரிசிலரீ வேறுக்கை.

சு. களங்காய்க்கண்ணிநார்முடியென்றது களங்காயாற்செய்தகண்ணியும் நாராற்செய்தமுடியுமென்றவாறு.

தான் முடிசூடுகின்றகாலத்து ஒரு காரணத்தால் முடித்தற்குத்தக்க கண்ணியும் முடியும் உதவாமையிற் களங்காயாற் கண்ணியும் நாரால்முடியும் செய்துகொள்ளப்பட்டனவென்றவாறு.

கூ. பரிசிலர் வெறுக்கையென்றது பரிசிலர்வாழ்வென்றவாறு.

இச்சிறப்பின், இதற்கு, 'பரிசிலரீவேறுக்கை' என்றுபெயராயிற்று.

நாளவையுடைமையாற் பாணர்நாளவையென்றும் அவற்குப் பெயராயிற்று.

(சு) சேரல், (அ) சேரலர்வேந்தே, (கூ) பரிசிலர்வெறுக்கை, பாணர் நாளவை, (கo) வாணுதல்கணவ, மள்ளரேறே, (கஉ) வசையில்செல்வ, வானவரம்ப, (க) செல்வர் உலகத்தார் பலர்மன் ; (அச்செல்வத்தாரெல்லாம் பெற்றதூஉதனைத்) (கச) தாவில்நெஞ்சத்துப் (கரு) பகுத்தூண்தொகுத்த ஆண்மையானே (கசு) பிறர்க்கெனவாழ்திநீயாகலான், (உ) அவர்களெல்லாருள்ளும் நின்நல்லிசை மிகுமெனக்கூட்டி வினைமுடிவுசெய்க.

இதனுட்சொல்லியது, அவன்கொடைச்சிறப்புக் கூறியவாறுமாயிற்று.

(பி - மீ) கசு. வாழ்கநீ. (அ)

(ருகூ.) பிறர்க்கென வாழ்திநீ யாகன் மாறே
யெமக்கிலென் னூர்நின் மறங்கூறு குழாத்தர்
துப்புத்துறை போகிய வெப்புடைத் தும்பைக்
கறுத்த தெவ்வர் கடிமுனை யலற
ரு வெருத்தெறிந் திரங்கு மேவல் வியன்பரணை
யுருமென வதிர்பட்டு முழங்கிச் செருமிக்
கடங்கா ராரண் வாடச் செல்லுங்

காலை னனைய கடுஞ்சின மூன்ப
வாலிதி, னூலி னிழையா நுண்மயி ரிழைய
பொறித்த போலும் புள்ளி யெருத்திற்
புன்புறப் புறவின் கணநிரை யலற
வலந்தலை வேலத் துலவை யஞ்சினைச்
சிலம்பி கோலிய வலங்கற் போர்வையி
னிலங்குமணி மிடைந்த பசும்பொற் படலத்
தவிரிழை தைஇ மின்னுமிழ் பிலங்கச்
சீர்மிகு முத்தந் தைஇய
ஈர்முடிச் சேரனின் போர்நிழற் புகன்றே.

துறை - வாகை.
வண்ணமும் தூக்கும் அது.
பெயர் - (நு) ஏவல்வியன்பணை.

உ. எமக்கிலென்னூர் நின்மறங்கூறு குழாத்தரென்றது நின்படைக் குழாத்திற் படைத்தலைவர் நீ பிறர்க்கென வாழ்தியாகையால், அவரும் தம் பால் இரத்துசென்றார்க்கு எமக்கு இல்லையென்று மறுவென்றவாறு.

நு. எடுத்தெறியவெனத்திரிக்க. ஏவல்வியன்பணையென்றது எடுத்த வினை முடிந்ததெனது மேன்மேலும் படையைக் கடிமுனைக்கண் ஏவுதலை யுடைய முரசென்றவாறு.

இச்சிறப்பான்; இதற்கு 'ஏவல்வியன்பணை' என்று பெயராயிற்று.

கூ. இழைய (கஙு) போர்வையெனக்கூட்டுக.

கக. புறவின்கணநிரையலறுதல் - அப்போர்வையை வலையெனக் கருதி அலறுதல்.

கஉ. உலவையஞ்சினையென்றது உலந்த சிறுகொம்பினையுடைய பெருங்கொம்பினை.

கச. இலங்கு மணிமிடைந்த பசும்பொற் படலமென்றது விளிம்பு மணியழுத்திய பொற்றகட்டாற்செய்த கூட்டினை.

கடு. அவிரிழை தைஇயென்றது விளங்கின நூலாலே முத்தைக் கோத்தென்றவாறு.

கஙு. போர்வையின் (கசு) முத்தந்தைஇயவென்றது அப்போர் வையை முத்தாற்சூழுமாறுபோல அக்கூட்டினைச் செறிந்த ஈர்முடியின் பொல்லாங்கு குறைதற்கு முத்துவடங்களைச் சூழ்ந்தவென்றவாறு.

(கஙு) போர்வையின் (கசு) முத்தந்தைஇய (கச) பசும்பொற்படலத்து (கள) ஈர்முடியென்று மாறிக்கூட்டுக.

க எ. நின்போராகியநிழலே என்றும் உளவாகவேண்டுமென்று விரும்பியென்றவாறு. போரை நிழலென்றது, அப்போர் மறவரது ஆக்கத்திற்குக் காரணமாகலின்.

(அ) முன்ப, (கள) சோல், (க) நீ பிறர்க்கெனை வாழ்தியாகலான், (உ) நின் மறங்கூறுசூழாத்தர் (கள) நின்போர்நிழற்புகன்று (ட) எமக்கு இல்லையென்னுரைக்கூட்டிவினைமுடிவு செய்க.

இனி இதற்குப் பிறவாறு கூட்டி வேறுபொருளுரைப்பாருமுளர்.

இதனுற்சொல்லியது, அவன்கொடைச்சிறப்பும் அவன்வென்றிச்சிறப்பும் உடன்கூறியவாறுயிற்று.

அம்மறவரது கொடைக்குக்காரணம் அவன்வென்றியாகலின், துறை வாகையாயிற்று. (கூ)

(சo) போர்நிழற் புகன்ற சுற்றமொ டேர்முகத்
திருஅ லியரோ பெருமநின் முனை
யின்னிசை யிமிழ்முர சியம்பக் கடிப்பிகூஉப்
புண்டோ ளாடவர் போர்முகத் திறுப்பக்
ரு காய்த்த கரந்தை மாக்கொடி விளைவயல்
வந்திறை கொண்டன்று தானை யந்திற்
களைகர் யாரினிப் பிறரெனப் பேணி
மன்னெயின் மறவ ரொலியவிந் தடங்க
வொன்னுர் தேயப் பூமலைந் துரைஇ
கo வெண்டோடு நிரைஇய வேந்துடை யருஞ்சமங்
கொன்றுபுறம் பெற்று மன்பதை நிரப்பி
வென்றி யாடிய தொடித்தோண் மீகை
யெழுமுடி கெழீஇய திருஞெம ரகலத்துப்
பொன்னங் கண்ணிப் பொலந்தேர் நன்னன்
கரு சுடர்வீ வாகைக் கடிமுத றடிந்த
தார்மிகு மைந்தி னுர்முடிச் சேரல்
புன்கா லுன்னஞ் சாயத் தெண்கண்
வறிதுகூட் டரிய லிரவலர்த் தடுப்பத்
தான்றர வுண்ட நினதறவு மகிழ்ந்து
உo நீரிழிந் சிலம்பி னேரி யோனே
செல்லா யோதில் சில்வளை விறலி

மலர்ந்த வேங்கையின் வயங்கிழை யணிந்து
மெல்லியன் மகளி ரெழினலஞ் சிறப்பப்
பாணர் பைம்பூ மலைய வீஇய
உரு ரின்களி வழாஅ மென்சொ லமர்ந்து
நெஞ்சுமலி யுவகையர் வியன்களம் வாழ்த்தத்
தோட்டி நீவாது தொடிசேர்பு நின்று
பாக ரேவலி ஞெண்பொறி பிசிரக்
காடுதலைக் கொண்ட நாடுகா ணவிர்சுட
கூ0 ரழல்விடுபு மரீஇய மைந்திற்
றெழில்புகல் யானை நல்குவன் பல்லே.

துறை - விறலியாற்றுப்படை.
வண்ணமும் தூக்கும் அது.
டேயர் - (உகூ) நாடுகாணவிர்சுடர்.

க. போர்நிழற்புகன்ற சுற்றமென்றது படைத்தலைவரை. ஊர்முக மென்றது படைபொருமிடத்தை.

(ச) ஆடவர் போர்முகத்திறுப்ப (நு) வயலிலே (சு) வந்து இறை கொண்டன்று தானை; (எ) கலாகர்யார், இனிப்பிதர்; (உ) பெரும, நின்றானை (க) சுற்றமொடு ஊர்முகத்து (உ) இரு அலிய் (எ) ரெனச் சொல்லிப் பேணி யென மாறிக் கூட்டுக.

கூ. ஒன்னுரென்றது முன்சொன்ன (அ) மன்னெயின்மறவரல்லாத டகைவரை.

(கo) வெண்டோடுநிரை இய (கூ) பூமலைக்தென மாறிக் கூட்டுக.

கக. மன்பதைநிரப்பியென்றது தன்படையை அவ்வேந்தர்நாட்டுத் தன் ஆணையானே நிரப்பியென்றவாறு.

கஉ. வென்றியாடியவென்னும் பெயரெச்சத்திற்கு மீகையென்னும் பெயரினை அவன்றான் வென்றியாடுதற்குக் கருவியாகிய கையெனக் கருவிப் பெயராக்குக.

மீகை - மேலெடுத்தகை.

கச. பொன்னங்கண்ணியும் பொலந்தேரும் தன்னற்கு அடையாக்குக.

கள. உன்னம் சாயவென்றது தன்னெடு பொரக்கருதுவார் நிமித் தம்பார்த்தவழி அவர்க்கு வென்றியின்மையிற் கரிக்குகாட்டவென்றவாறு.

கஅ. வறிதுகூட்டு அரியலென்றது களிப்பு விறக்கவிடும் பண்டங்

கள் பெருகக்கூட்டிற் களிப்புமிகுமென்று அவை அளவேகூட்டினை அரிய லென்றவாறு.

ககூ. தானென்பதனைச் (ககூ) சேரல்தானைக்கூட்டித் தரவுண்ட வென்பதனை வரையாது கொடுத்தற்பொருட்டு உண்டவெனவுரைக்க.

இனி இதற்குப் பிறவாறு உரைப்பாருமுளர்.

உள. தோட்டி நீவாமலெனத்திரிக்க.

உகூ. காடுதலைக்கொண்ட சுடரெனக்கூட்டுக. காடுகாணவிர்சுட ரென்றது காடெல்லாம்கின்றுகாணும்படி நின்றெரிகின்ற விளங்கினசுடரெ ன்றவாறு

இச்சிறப்பானே, இதற்கு'நாடுகாணவிர்சுடர்'என்று பெயர்யிற்று.

உகூ - ஈ0. சுடரழலென்றதனைச் சுடர்போலும் அழலென உவமத் தொகையாக்கி அழலை அத்தயானையின் சீற்றத்தீயாக்குக. மரீஇயவென்றது அவ்வாறு அழல்விட்டும் பாகரேவலொடு மரீஇயவென்றவாறு.

(ககூ) சேரல் (ககூ) தான் (உ0) நேரியோன்; (உசு) இளையர் (உசு) களம்வாழ்த்த (உஈ) மகளிர் (உஉ) மலர்ந்தவேங்கையின் இழையணிந்து (உஈ) நலஞ்சிறப்பப் (உசு) பாணர் பூமலைய (ஈக) யானையைப் பல கல்கு வான்; ஆனபின்பு (உக) விறலி, நீ செல்லாயோவெனக்கூட்டி வினைமுடிவு செய்க.

இதனுட்சொல்லியது, அவன் கொடைச்சிறப்புக் கூறியவாறுயிற்று.

(பி - ம்) க0. வெண்டோடு நிரைத்த. உள. தோட்டி நிவந்து. உக. செல்லா மோதில். (க0)

இதன்பதிகத்துக் கடம்பின்பெருவாயிலென்றது, அங்ஙன்னனூரை. நிலச்செருவென்றது, அங்ஙன்னன் காடொறுஞ்செய்ததோரினை.

(பதிகம்.)

ஆராத் திருவிற் சேர லாதற்கு
வேளாவிக் கோமான்
பதுமன் றேவி யீன்ற மகன்முனை
பனிப்பப் பிறந்து பல்புகழ் வளர்த்
தூழி ஞகிய வுயர்பெருஞ் சிறப்பிற்
பூழி நாட்டைப் படையெடுத்துத் தழீஇ
யுருள்பூங் கடம்பின் பெருவாயி னன்னனை
நிலச்செருவி னூற்றலை யறுத்தவன்
பொன்படு வாகை முழுமுத றடிந்து
குருதிச் செம்புனல் குஞ்சர மீர்ப்பச்

## நான்காம் பத்து.

செருப்பல செய்து செங்களம் வேட்டுத்
துளங்குகுடி திருத்திய வளம்படு வென்றிக்

களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரலைக் காப்பியாற்றுக் காப்பியனார் பாடினார் பத்துப்பாட்டு. அவைதாம்: கமழ்குரற்றுழாய், கிழையமல்கழனி, வரம்பில்வெள்ளம், ஒண்பொறிக்கழற்கால், மெய்யாடுபறந்தலை, வாண்மயங்குகதிர்தார், வலம்படுவென்றி, பரிசிலர் வெறுக்கை, ஏவல்வியன்பணை, நாடுகாணவிர்சுடர். இவை பாட்டின் பதிகம்.

பாடிப்பெற்றபரிசில்: நாற்பதினாயிரம்பொன் ஒருங்குகொடுத்துத் தான் ஆள்வதிற் பாகங்கொடுத்தான் அக்கோ.

களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல் இருபத்தையாண்டு வீற்றிருந்தான்.

நான்காம்பத்து முற்றிற்று.

# 88ந்தாம் பத்து.

(சக) புணர்புரி நரம்பின் றீந்தொடை பழுனிய
வணரமை கல்யா ழிளையர் பொறுப்பப்
பண்ணமை முழவும் பதலையும் பிறவுங்
கண்ணறுத் தியற்றிய தூம்பொடு சுருக்கிக்
(நு) காவிற் றகைத்த துறைகூடி கலப்பையர்
கைவ லிளையர் கடவுட் பழிச்ச
மறப்புலிக் குழூஉக்குரல் செத்து வயக்களிறு
வரைசேர் பெழுந்த சுடர்வீ வேங்கைப்
பூவுடைப் பெருஞ்சினை வாங்கிப் பிளந்ததன்
(கo) மாயிருஞ் சென்னி யணிபெற மிலைச்சிச்
சேவ ருற்ற செல்படை மறவர்
தண்டுடை வலத்தர் போரெதிர்ந் தாங்கு
வழையமல் வியன்காடு சிலம்பப் பிளிறு
மழைபெயன் மாறிய கழைதிரங் கத்த
(கரு) மொன்றிரண் டலபல கழிந்து திண்டேர்
வசையி னெடுந்தகை காண்குவந் திசினே
தாவ லுய்யுமோ மற்றே தாவாது
வஞ்சின முடித்த வொன்றுமொழி மறவர்
மூசுடைப் பெருஞ்சமத் தாசுபடக் கடந்து
(உo) வெவ்வ ரோச்சம் பெருகத் தெவ்வர்
மிளகெறி யுலக்கையி னிருந்தலை யிடித்து
வைகார்ப் பெழுந்த மைபடு பரப்பி
னெடுத்தே றேய கடிப்புடை வியன்கண்
வலம்படு சீர்த்தி யொருங்குட னியைந்து
(உரு) காலுளைக் கடும்பிசி ருடைய வாலுளைக்
கடும்பரிப் புரவி பூர்ந்தநின்
படிந்திரைப் பணிக்கட லுழந்த தாளே.

துறை - காட்சிவாழ்த்து.
வண்ணம் - ஒழுகுவண்ணம்.

தூக்கு - சேந்தூக்கு.
பெயர் - (அ) சுடர்வீவேங்கை.

(ரு). துறைகூடி கலப்பை - ஆடற்றுறைக்கு வேண்டுவனவெல்லாம் கூடின மூட்டு.

(சு) கடவுட் பழிச்ச (கச) அத்தம் (கரு) பலகழிந்து காண்குவந்திசினை முடிக்க.

எ - அக. எறு தன்சினத்தாற்செய்த செயலுக்கெல்லாம் வேங்கை காரணமாய்நின்றமையான், இதற்கு, 'சுடர்வீவேங்கை' என்று பெயராயிற்று.

கள. தாவலுய்யுமோவென்றது வருத்தத்தில்நின்று நீங்குமோவென்றவாறு.

தாவென்னும் உரிச்சொல் தொழிற்பெயர்ப்பட்டுத் தாவலெனநின்றது.

கஅ. வஞ்சினமுடித்தல் - மாற்றார் மண்டலங்களைக் கொண்டு முடித்தல்.

உ0. வெம்மையென்னும்பண்பிற்கு வெவ்வரென்பதும் ஒரு வாய்பாடு.

(உ0) தெவ்வர் (உக) தலையென மாறிக்கூட்டுக.

(உக) இருந்தலையிடித்து (ஙக) அரசுபடக்கடந்தெனமுடித்து அதனைக் கடக்கவெனத்திரித்து அதனை (உங) எடுத்தேறென்னும் தொழிற்பெயரொடு முடிக்க.

உஉ. வகைதார்ப்பு - ஒருகாலும் இடையறாது தங்கின ஆரவாரம். மைபடு பரப்பு—கடற்பரப்பு.

(உசு) இயைந்தென்பதனை இயையவெனத்திரித்து (உள) உழந்தவென்பதனைமுடிக்க; இனி (உசு) ஊர்ந்தவென்பதனைமுடிப்பினும் அமையும்.

உரு காதலனையென்றது காற்றனை உனதலையுடையவென்றவாறு. உனைதல் - விடைபடுதல்.

(கசு) நெடுந்தகை, காண்குவந்தேன், (உசு) நின் (உள) கடனுழந்தாள் (கள) தாவலுய்யுமோவெனக்கூட்டி வினைமுடிவுசெய்க.

இதனைச் சொல்லியது, அவன் வென்றிச்சிறப்புக் கூறியவாறுமாயிற்று.

நின்கடனுழந்த தாள் தாவலுய்யுமோவென்றதனைக் காட்சிவர்ப்பாயிற்று.

(பி - மீ.) சு. 'கண்ணுமுத்து'. ரு. தசைத்த. கரு. கடந்து. உள. உழந்தாளே.

(சுஉ.) இரும்பனம் புடைய லீகை வான்கழன்
மீன்றேர் கொட்பிற் பனிக்கய மூழ்கிச்
சிரல்பெயர்த் தன்ன நெடுவெள் ளுகிர்
நெடுவெசி பாய்ந்த வடுவாழ் மார்பி
நுனம்புசே ருடம்பினர்ச் சேர்ந்தோ ரல்லது
தும்பை சூடாது மலைந்த மாட்சி
யன்னோர் பெரும நன்னுதல் கணவ
வண்ணல் யானை யடுபோர்க் குட்டுவ
மைந்துடை நல்லமர்க் கடந்து வலந்தரீஇ
கஎ யிஞ்சிவீ விராய பைந்தார் பூட்டிச்
சாந்துபுறத் தெறிந்த தசும்புதுளங் கிருக்கைத்
தீஞ்சேறு விளைந்த மணிகிற மட்ட
மோம்பா வீகையின் வண்மகிழ் சுரந்து
கோடியர் பெருங்கிளை வாழ வாடிய
கடு வுளையவிர் கலிமாப் பொழிந்தவை யெண்ணின்
மன்பதை மருள் வரசுபடக் கடந்து
மூந்துவீனை யெதிர்வரப் பெறுதல் காணிய
ரொளிறுவிலை யுயர்மருப் பேந்திய களிறூர்ந்து
மான மைந்தரொடு மன்ன ரேத்தின்
உஎ றேரொடு சுற்ற மூலகுடன் மூய
மாயிருந் தெண்கடன் மலிதிரைப் பௌவத்து
வெண்டலைக் குருஉப்பிசி ருடையத்
தண்பல வருஉம் புணரியிற் பலவே.

துறை - செந்துறைப்பாடாண்பாட்டு.
வண்ணமும் தூக்கும் அது.
பெயர் - (கக) தசும்புதுளங்கிருக்கை.

கயம் மூழ்கிச் சிரல்பெயர்த்தன்ன நெடுவெள்ளுகிரென்றது கயத்திலேமூழ்கிச் சிரல் எழுகின்றகாலத்து அத்தன்வாயலகை ஒக்கப் புண்கள் இழைகொள்கின்றகாலத்து அப்புண்ணின் உதிரத்திலே மறைந்தெழுகின்ற வுகிரென்றவாறு.

சு. நெடுவெசியென்றது அவ்வுகித்தழும்பினை. வடுவென்றது அப்புண்ணின் வடுவினை.

இனி நெடுவெள்ளுசியை நெட்டையென்பதோர் கருவியென்பாரு முளர்.

ஙு. அம்பென்றது அம்பர்லாகிய தழும்பினை.

ஙு-சூ. அம்பு சேர் உடம்பினர்ச் சேர்ந்தோரல்லது தும்பை சூடாது மலைந்த மாட்சியென்றது அரசன்வீரரில் அம்புசேருடம்பினராய்த் தம் மோடு வீரமொத்தாரோடல்லாது போர்குறித்தார்தம்மோடு தும்பை சூடாமல் மாறுபட்ட மாட்சிமையுடைய வென்றவர்று.

கo-கக. இஞ்சி வீவிராய பைந்தார் பூட்டிச் சாந்துபுறத்து எறிந்த வென்றது மதுநுகர்வுழி இடையிடைக்கறித்து இன்புறுதற்பொருட்டு இஞ்சியும் மோந்து இன்புறுதற்பொருட்டுப் பூவுமாக விரவித்தொடுத்த மாலையினைப்பூட்டி அவ்வாறு பயன்கோடற்குச் சாந்தும் புறத்தெறிந்த வென்றவாறு.

கக. தசும்புதுளங்கிருக்கையென்றது தன்களிப்புமிகுதியால் தன்னை புண்டாருடல்போல அத்தசும்பிருந்து ஆடும்படியான இருப்பென்றவாறு.

இச்சிறப்பான், இதற்கு, 'தசும்புதுளங்கிருக்கை' என்று பெய ராயிற்று.

கஉ. சேறு - சுவை.

கட-ஙூ. வண்மகிழ்மட்டத்தை ஓம்பாவீகையிற் சுரந்தெனமாறிக் கூட்டுக.

இனி மணிகிறமட்டத்தினையும் ஓம்பாவீகையினது வளவியமகிழ்ச்சி பினையும் சுரந்தென இரண்டாக உரைத்தலுமாம்.

(ஙூ) மன்னரேத்தக்(கஅ) களிறார்ந்தெனமுடித்து அதனைக் களி றாரவெனத்திரித்து (உo) மூயவென்னும் வினையொடுமுடிக்க.

(எ) பெரும, கணவ, (அ) குட்டுவ, (கச) கோடியர்இனிவாழ் நீ ஙூ) சுரந்து, (கரு) மாப்பொழிந்தவையெண்ணின், (உஙூ) புணரியிற்பல வென வினைமுடிவுசெய்க.

இதனைச்சொல்லியது, அவன் கொடைச்சிறப்பும் வென்றிச்சிறப்பும் உடன் கூறியவாறுயிற்று.

(பி - மீ.) உக. தெண்கழி. தெண்கமலினிரை. (உ)

(சஙூ.) கவரி மூச்சிக் கார்விரி கூந்த
லூசன் மேவற் சேயிழை மகளிர்
நுரல்போற் பெருங்கா லிலகுவாண் மருப்பிற்
பொருங்கை மதமாப் புகுதரி னவற்றுள்
ஙு விருந்தின் வீழ்பிடி யெண்ணுமுறை பெருஅக்
கடவு ணிலைய கல்லோங்கு நெடுவரை

வடதிசை யெல்லை யிமய மாகத்
தென்னங் குமரியொ டாயிடை யரசர்
முரசுடைப் பெருஞ்சமந் ததைய வார்ப்பெழச்
சொல்பல காட்டைத் தொல்கவி னழித்த
போரடு தானைப் பொலந்தார்க் குட்டுவ
விரும்பணை திரங்கப் பெரும்பெய லொளிப்பக்
குன்றுவறங் கூரச் சுடர்சினந் திகழ
வருவி யற்ற பெருவறற் காலையு
மருஞ்செலற் பேராற் றிருங்கரை யுடைத்துக்
கடியோர் பூட்டுநர் கடிக்கை மலைய
வரைவி லதிர்சிலை முழங்கிப் பெயல்சிறந்
தார்கலி வானந் தளிசொரிந் தாஅங்
குறுவ ரார வோம்பா துண்டு
நகைவ ராரு னன்கலஞ் சிதறி
யாடுசிறை யறுத்த ரம்புசே ரின்குரற
பாடு விறலியர் பல்பிடி பெறுக
துய்வீ வாகை நுண்கொடி யுழிஞை
வென்றி மேவ லுருகெழு சிறப்பிற்
கொண்டி மள்ளர் கொல்களிறு பெறுக
மன்றம் படர்ந்து மறுகுசிறைப் புக்குக்
கண்டி நுண்கோல் கொண்டுகளம் வாழ்த்து
மகவலன் பெறுக மாவே யென்று
மிகல்வினை மேவலை யாகலிற் பகைவருந்
தாங்காது புகழ்ந்த தூங்குகோ முழவிற்
றெரிலையாக் கற்பினின் னிலைகண் டிகுமே
நினைஞ்சி புகையொடு கனல்சினந் தவிராது
செம்பகல் பறியா வேரு வேணி
நிறைந்து நெடிதாத் தசும்பின் வயிரிய
ருண்டெனத் தவாஅக் கள்ளின்
வண்கை வேந்தேயின் கலிமகி ழானே.

துறை - இயன்மொழிவாழ்த்து.
வண்ணமுந் தூக்கும் அது.
பெயர் - (கூக) ஏரேவ ணி.

க. மூச்சி - கொண்டைமுடி. கவரிபோலுங் கூந்தலெனக்கூட்டுக.

ரு. விருந்தின் வீழ்பிடியென்றது எண்ணுகின்ற மகளிர்க்கு விருந்தாகி அம்மகளிர் விரும்பிய பிடியென்றவாறு.

இனிக் காட்டியானைக்கு விருந்தாகிய அவ்வியானைகள் விரும்பும் பார்வைப்பிடியென்பாருமுளர். பிடியினையே எண்ணியது, தங்கள் நடையொப்புமைபற்றியென்க.

(உ) மகளிரென்னுமெழுவாய் (ரு) டெறுவென்னும் பயனிலைகொண்டது.

ரு. பிடியது எண்ணென்க. எண்ணுமுறையாவது சங்கு பற்பமுள் ளிட்டதொகை.

(சு) கல்லோங்குதெடுவரையாகிய (எ) இமயம் (அ) தென்னங்குமரி யொடு (எ) வடதிசையெல்லையாகவென மாறிக்கூட்டுக.

எல்லையாகவென்னும்வினையெச்சத்திற்கு இவ்வாறு எல்லையான வென ஒருபெயரெச்சச்சொல்வருவித்து அப்பெயரெச்சத்திற்கு (அ) ஆயிடையென்புழி அவ்வென்னும் வகரவீற்றுப்பன்மைச்சுட்டுப்பெயரை முடிபாக்குக.

கo. சொல்பலநாடென்றது ஆயிடை அரசர்நாடெல்லாவற்றையும்.

கஉ - ச. பணை திரங்கும்வண்ணம் பெயல் ஒளித்தலானும் குன்று வறங்கூரும் வண்ணம் சுடர் சினம்திகழ்கையானும் அருவியற்றவெனக் கூட்டியுரைக்க.

கரு. அருஞ்செலற்பேராறு - புனல் நிறைந்த ஆறு.

யாறென்பது ஆறெனமருவிற்று.

கரு - அ. கரையையுடைத்துத் தளிசொரிந்தாங்கென உடைத்தற் றொழிலை வானத்தின்றொழிலாக்குக ; இங்ஙனென ஒருபெயர்வருவித்து உடைக்கவெனத் திரிக்கவுமாம்.

கஎ. சிலைமுழங்கியென்றது சிலைத்தலொடு முழங்கியென்றவாறு.

உக. ஆடு சிறையறுத்த நரம்பென்றது இன்னரமென்னும் புள்ளின் இசையெழுகின்ற சிறகினைத் தோற்பித்த யாழ்நரம்பென்றவாறு.

இனிச் சிறையென்றது அந்நரம்பின் ஒலியெழாமற் சிறைப்படுத்திநிற்கும் அதன் குற்றமென்பாருமுளர்.

உங. வாகையுழிஞையென்றது வாகையைமுடிவிலேயுடையவுழிஞையென்றவாறு.

இனி வாகையும் உழிஞையுமென இரண்டாக்கலுமாம்.

# பதிற்றுப் பத்து.

உரு. கொண்டி - கொள்ளை.

உள. நுண்கோல்-பிறப்புணர்த்துங்கோல்; மரம்பென்பதுமொன்று.

உஅ. அகவலன் - பாடும் பாணன்.

என்றுமென்பதனை உம்மையை இசைநிறையும்மையாக்கி, அவ்வென் றென்பதனை முன் எண்ணிநின்ற வியங்கோட்களுடன்கூட்டிப் பின்னதனை (உக) இகல்வினைமேவலெனும் வினையொடுமுடிக்க.

இனி, என்றுமென்பதனை முன்னின்ற வியங்கோட்களுடன் கூட்டலுமொன்று.

முன்னின்ற (ககு) உண்டு (உo) சிதறியென்னுமெச்சங்களோயும் (உக) மேவலெனபதனொடு முடிக்க.

ஙo. தூங்குகொளைமுழவென்றது மந்தகதியையுடைய ஆடற் கேற்றமுழவு.

ஙக. கற்பவென்றது கல்வியுடையாயென்றவாறு; பிறிதுமுரைப்ப. நின்னிலை கண்டிகுமென்றது நின்செல்வத்தின்பெருமைநிலையெல்லாம் கண்டேமென்றவாறு.

ஙஉ. தவிராதென்றது குறைதலறியாதென்றவாறு.

ஙஙு. ஏறு ஏணியென்றது கோக்காலி.

அதனை ஏறுவேணியென்று வெளிப்படுத்த சிறப்பான், இதற்கு 'ஏறுவேணி' என்று பெயராயிற்று.

ஙச. நிறைந்து நெடிதிராவென்றது உண்பார்க்கு வார்த்தலால் நிறைந்து நெடும்பொழுதிராதவென்றவாறு.

(ஙஙு) நிரம்பகல்பறியாத (ஙச) நிறைந்துநெடிதிராத தசும்பெனப் பெயரெச்சமதையடுக்காக்குக.

ஙரு. உண்டெனத் தவாவென்றது உண்ணவுண்ண அக்குடங்களே மேன்மேலும் நிறைத்தலிற் குறையாதவென்றவாறு.

(ஙக) குட்டுவ, (ஙக) தொலையாக்கற்ப, (ஙசு) வேந்தே, நின்கலிமகிழ்கண்ணே (ஙக) நின்னிலை கண்டேமென மாறிக்கூட்டியுரைக்க.

வேந்தேயென்னும்விளி முன்னின்றவிளிகளோடு கூடுதலின் மாறுயிற்று.

இதனைச் சொல்லியது, அவன்செல்வமகிழ்ச்சி கூறியவாறாயிற்று.

(பி - ம்.) ரு. எண்ணுமெய். கஉ. பணிதிரங்க.

கo. சொல்புனைஉட்டை. கஅ. தளிபொழிந்தாங்கு. (ஙு)

(சச.) நிலம்புடைப் பன்னவாற்ப் பொடிவிசும்பு துடையூ
வான்றேய் வெல்கொடி தேர்மிசை நுடங்கப்
பெரிய வாயினு மமர்கடந்து பெற்ற

வரிய வெஞ்ஞ தோம்பாது வீசிக்
(நு) கலஞ்செலச் சுரத்த லல்லது கவினுங்
களேகென வீறியாக் கசடி னெஞ்சத்
தாடுநடை யண்ணனிற் பாடுமகள் காணியர்
காணி லியரோநிற் புகழ்ந்த யாக்கை
முழுவலி துஞ்சு நோய்தபு நோன்றுடை
(கo) நுண்கொடி யுழிஞை வெல்போ ரறுகை
சேண ஞயினுங் கேளென மொழிந்து
புலம்பெயர்ந் தொளித்த களேயாப் பூசற்
காண்கடா வுறீஇ யணங்குகிழ்ந் தன்ன
மோகூர் மன்னன் முரசங் கொண்டு
(கநு) நெடுமொழி பணித்தவன் வேம்புமுத றடிந்து
முரசுசெய முரச்சிக் களிறுபல பூட்டி
யொழுகை யுய்த்த கொழுவில் பைந்துணி
வைத்தலை மறந்த துய்த்தலைக் கூகை
கவலை கவற்றுங் குராலம் பறந்தலை
(உo) முரசுடைத் தாயத் தரசுபல வோட்டித்
துளங்குநீர் வியலக மாண்டினி தகழ்ந்த
மன்னர் மறைத்த தாழி
வன்னி மன்றத்து விளங்கிய காடே.

துறை - செந்துறைப்பாடாண்பாட்டு.
வண்ணமும் தூக்கும் அது.
பெயர் - (கூ)நோய்தபுநோன்றுடை.

(க) ஆர்ப்பொடு (நூ) அமர்கடந்தெனக் கூட்டுக

நு. கலமென்றது, தான் அணிந்த ஆபரணங்களை.

அ. நிற்புகழ்ந்த யாக்கையென்றது நின்னை எல்லாவீரரும் சொல்லிப் புகழ்தற்குக்காரணமாகிய யாக்கையென்றவாறு.

(அ) யாக்கையாகிய (கூ) நோய்தபு நோன்றுடையென்க.

யாக்கையை இங்ஙனம் சிறப்பித்துக் கூறினமையான், இதற்கு, 'நோய்தபுநோன்றுடை' என்றுபெயராயிற்று.

கo. அறுகையென்பான் மோகூர்மன்னனுக்குப்பகையாய்ச் சேரனுக்கு நட்பாயிருப்பானோர் குறுநிலமன்னன்.

கந. சேணனுயினும் கேளெனமொழிந்தென்றது அக்கோ நீசெய்

கின்றவலிக்கு உதவிசெய்தற்குச் சேய்மையினும் எனக்கு அவன்தான் நட்பெனச்சொல்லி யென்றவாறு.

கஉ. கலாயாப்பூசல் - ஒருவரால் மாற்றவொண்ணாத வருத்தம்.

கஙு. அரண்கள் தா உறீஇயென்றது மாற்றார் அரண்களை அழித்தற்றொழிலைத் தன்பாலை உறுவித்தென்றவாறு.

கசு. முரசுசெய முரச்சியென்றது அவ்வேம்பினை முரசாகச்செய்யும்படி முற்றுவித்தென்றவாறு.

முற்றுவித்தலாவது ஒழுகையேற்றலாம்படி துண்டங்களாகத் தறிப்பித்தல். களிறென்றது மோகூர்மன்னன்களிற்றினை. களிறுபலபூட்டியென்றது அவனைனும் யானைகளை அவனை அவமதித்துச் சாட்டிற்குக் கடாவோ பாதியாகப் பூட்டியென்றவாறு.

பூட்டியென்றதற்கு 'வாலிழை கழித்த நறும்பல்பெண்டிர், பல்லிருங் கூந்தன் முரற்சியார், குஞ்சர வொழுகை பூட்டி' என இதன்பதிகத்து வந்தமையால், அம்மகளிர் கூந்தன்மயிர்க்கயிற்றாற் பூட்டியெனக்கொள்க.

(கள) ஒழுகையுய்த்த (எ) ஆடுகடையண்ணலென மாறிக்கூட்டுக.

கஅ. கூகையையென இரண்டாவதுவிரிக்க.

கள - கூ. பைந்துணிகள்வைத்த இடமறந்த கூகையை அதன்பெடையாகிய குரால் கவற்றுமென்க.

வைத்தலை - விகாரம். கவலென்னும்பெயரைத் தாவென்பதுபோல வருத்தமென்றுரைக்க. கவலைகவற்றல் - வருத்தல். பறந்தலையென்றது; இடுகாட்டிற் பிணஞ்சுடுமிடத்தை.

உங. வன்னிமன்றமென்றது அக்காட்டில் வன்னிமரத்தையுடைய இடத்தினை. அதுதான் பிணத்தொடுசென்றுரெல்லாருமிருந்து மன்று போறலின், மன்றெனப்பட்டது.

உங. ஞிளங்கியகாடென்றது தன்தொழிலில்விளங்கியகாடென்றவாறு.

(கஎ) ஒழுகையுய்த்த (எ) ஆடுகடையண்ணல், நின் (கூ)ந் நோய்தபு நோன்றெடையினை (எ) நிற்பாடுமகள் காண்பாளாக; (உங)காடு (அ) காணுதொழிவதாகவென மாறிக்கூட்டி விணைமுடிவுசெய்க.

இதனாற்சொல்லியது, அவனை நீ நெடுங்காலம் வாழ்கவென வாழ்த்தியவாறுயிற்று.

(பி - ம்.) கக. சேணுணையினும். கஅ. வைத்துத்தலைமறந்த. (சு) (சுரு.) பொலம்பூர் தும்பைப் பொறிகிளர் தூணிப்
புற்றடங் கரவி ஞெடுங்கிய வம்பி

ஞெசிவுடை வில்லி ஞெசியா நெஞ்சிற்
களிறெறிந்து மூரிந்த கதுவா யெஃகின்
விழுமியோர் துவன்றிய வகன்க ணூட்பி
னெழுமுடி மார்பி னெய்திய சேரல்
குண்டுக ணகழிய மதில்பல கடந்து
பண்டும் பண்டந்தா மூள்ளழித் துண்ட
நாடுகெழு தாயத்து ணந்தலை யருப்பத்துக்
கதவங் காக்குங் கணையெழு வன்ன
நிலம்பெறு திணிதோ ளுயர வோச்சிப்
பிணம்பிறங் கழுவத்துத் துணங்கை யாடிச்
சோறுவே றென்னு வூன்றுவை யடிசி
லோடாப் பீட ருள்வழி யிறுத்து
மூள்ளிடு பறியா வேணித் தெவ்வர்
சிலைவிசை யடக்கிய மூரி வெண்டோ
ளினைய பண்பிற் றூனை மன்ன
ரினியா ருளரோகின் முன்னு மில்லை
மழைகொளக் குறையாது புனல்புக நிறையாது
விலங்குவளி கடவுந் துளங்கிருங் கமஞ்சூல்
வயங்குமணி யிமைப்பின் வேலிடு
முழங்குதிரைப் பணிக்கடன் மறுத்திசி னோரே.

இதுவுமது.
பெயர் - (கஉ) வூன்றுவையடிசில்.

(எ) மதில்பலகடந்து (அ) உள்ளழித்துண்ட (கூ) அருப்பத்துப் (கஉ) பிணம்பிறங்கழுவத்துத் (கக) தோளோச்சிப் (அ) பண்டும்பண்டும் (கஉ) துணங்கையாடியென மாறிக்கூட்டுக.

கஉ. சோறுவேறென்னு அடிசிலென்றது அரசனுக்கு அடுசோற்றில் இச்சோறு வேறென்றுசொல்லப்படாத அடிசிலென்றவாறு.

இவ்வடைச்சிறப்பானே, இதற்கு 'வூன்றுவையடிசில்' என்று பெயராயிற்று.

கசு - எ. தோல் அனைய பண்பென்றது தான் அம்புபடில் தளராது பிறர்க்கு அரணமாகும் தோற்கடகுபோன்ற பண்பென்றவாறு.

(ககூ) குறையாது நிறையாதென்னுமெச்சங்களைக் (உ0) கடவுமென்னும் வினையொடுமுடித்து அதனைக் கடவப்படுமெனவுரைக்க.

உ. மணியிமைப்புப்போலுமின்னுக்கு மணியிமைப்பென்பது பெயராயிற்று. வேலிடுபென்றது வேலை ஏற்றி எடப்பித்தென்றவாறு.

உஉ. கடன்மறுத்தலென்றது, கடலிற்புக்கு ஒருவினைசெய்தற்கு அரிதென்பதனை மறுத்தலை.

(சு) சேரல், (உஉ) கடன்மறுத்திசிஞோராகிய (கள) தானைமன்னர் (கஅ) இனி யாருளரோ, நின்முன்னுமில்லையெனக் கூட்டி வினைமுடிவு செய்க.

இதனைச்சொல்லியது, அவன்வென்றிச்சிறப்புக்கூறியவாறுயிற்று.(ரு)

(சுசூ.) இழையர் குழையர் ஈறுந்தண் மாலையர்
சுடர்நிமி ரவிர்தொடி செறித்த முன்கைத்
திறல்விடு திருமணி யிலங்கு மார்பின்
வண்டுபடு கூந்தன் மூடபுனை மகளிர்
ரு தொடைபடு பேரியாழ் பாலை பண்ணிப்
பணியா மரபி னுழிஞை பாட
வினிதுபுறந் தந்தவர்க் கின்மகிழ் சுரத்தலிற்
சுரம்பல கடவுங் கனாவாய்ப் பருதி
யூர்பாட் டெண்ணில் பைந்தலை துமியப்
கo பல்செருக் கடந்த கொல்களிற் றியானைக்
கோடுநேர் பௌவங் கலங்க வேலிட்
டிடைதிரைப் பரப்பிற் படுகட லோட்டிய
வெல்புகழ்க் குட்டுவற் கண்டோர்
செல்குவ மென்னுர் பாடுபு பெயர்ந்தே.

இதுவுமது.

பெயர் - (அ) கனாவாய்ப்பருதி.

(க) இழையர் குழையர் மாலையராகிய (சு) மகளிரெனக் கூட்டுக.

ஈ. பிற ஒளியிற் றிறலுடைமையான், இவ்வொளிக்கு ஆகுபெயரால் திறலென்றுபெயராயிற்று.

எ. இன்மகிழ்சுரத்தல் - இனியமகிழ்ச்சியைச் சுரத்தல்.

இதனுற்பயன் முற்கூறிய புறந்தருதலாகிய கொடையோடே இவர் கனை மயக்கிய முகனமர்த்தலுமுடையனென்றவாறு.

அ. சுரம்பலவென்றது பகைவரொடு பொருங்களத்தில் தேர் செலுத்தற்கு அரிதாம்படி படையொடுவிலங்கும் அரியஇடங்கள் பலவற்றினுமென்றவாறு.

பருதியென்றது வட்டம் ; அதனையுடைமையால், தேருருளை பருதி யெனப்பட்டது.

கூ. ஊர்பாட்டி எண்ணில் பைந்தலை துமியவென்றது பைந்தலை யைத் துமித்தற்கென்று தேரை வலியச் செலுத்துவதன்றி அப்பருதி தான் ஊர்கின்றபாடுதன்னிலே யாரேனசெய்கின்றபோர்க்கு அஞ்சி ஓடிமடிந்தா ருடைய அளவிறந்த பைந்தலைதுமியவென்றவாறு.

இவ்வாறு பின்வந்த அடைச்சிறப்பான், இதற்கு, 'கோவாய்ப் பருதி' என்று பெயராயிற்று.

கஉ. கடலோட்டியவென்றது தன்னுள்வாழ்வார்க்கு அரணுகிய கடல்வலியை அழித்தவென்றவாறு.

கங-ச. குட்டுவற்பாடிக்கண்டோர் பெயர்ந்துசெல்குவமென்னு ரென மாறிக்கூட்டுக.

(ச) மகளிர் (சு) உழிஞைபாட (எ) மகிழ்சுரத்தலிற் (கஉ) குட்டுவற் (கச) பாடிக் (கஉ) கண்டோர் (கச) பெயர்ந்து செல்குவ மென்னுர் ; கித்க வெனக்கருதுவரென மாறிக்கூட்டி வினைமுடிவு செய்க.

இதனுற்சொல்லியது, அவன்கொடைச்சிறப்புக்கூறியவாறுயிற்று.(சு)

(சஎ.) அட்டா ஞனே குட்டுவ னடுதொறும்
பெற்ரு ஞரே பரிசிலர் களிறே
வரைமிசை யிழிதரு மருவியின் மாடத்து
வளிமூனை யவிர்வருங் கொடிநுடங்கு தெருவிற்
நு சொரிசுரை கவரு நெய்வழி புராவிற்
பாண்டில் விளக்குப் பரூஉச்சுட ரழல
நன்னுதல் விறலிய ராடுந்
தொன்னகர் வரைப்பினவ னுரையா ஞவே.

இதுவுமது.

பெயர் - (எ) நன்னுதல்விறலியர்.

(ச) தெருவின் (அ) தொன்னகரெனக் கூட்டுக.

நு. சொரி சுரை கவரும் நெய்யென்றது நெய்யைச் சொரியும் உள் ளுப்புடையுண்டாயிருக்கின்ற திரிக்குழாய்தான் ஏற்றுக்கொண்ட நெய் யென்றவாறு.

சுரையென்றது திரிக்குழாய்க்கு ஆகுபெயர்.

சு. பாண்டில்விளக்கு - கால்விளக்கு.

எ. நன்னுதல்விறலியரென்றது தமது ஆடல்பாடற்கேற்ப நூலுட் சொல்லப்பட்ட அழகையுமுடையாரென்றவாறு.

அவ்வழிஇனை நுதன்மேலிட்டுக் கூறியவாற்றான், இதற்கு 'நன்னன் றலைவிறலியர்' என்று பெயராயிற்று.

அ. தொன்னகர் = அரசுடைய பழையநகரிகள்.

(நி) நெய்வழிபு உராலிற் (சு) சுடாமுல (எ) ஆடுமென்றதனைச் சொல்லியது; அந்த நகரிகளது செல்வமுடைமை.

(க) குட்டுவன் அட்டு ஆனான்; அடுதொறும் (உ) பரிசிலர் களிறு பெற்று ஆனார்; (அ) தொன்னகர் வரைப்புக்களில் அவன் உரை ஆனு வெனக்கூட்டி வினைமுடிவுசெய்க.

இதனைச்சொல்லியது, அவன் கொடையினையும் அக்கொடைக்கு வருவாயாகிய பகைவரைக்கோறலையும் உடன்கூறியவாறுயிற்று. (எ)

(சுஉ.) பைம்பொற் சுமரை பாணர்ச் சூட்டி
யொண்ணுதல் விறலியர்க் காரம் பூட்டிக்
கெடலரும் பல்புகழ் நிலைஇ நீர்புக்குக்
கடலொ டுழந்த பணித்துறைப் பரதவு
நு வாண்டுநீர்ப் பெற்ற தார மீண்டிவர்
கொள்ளாப் பாட்டற் கெளிதினி னீயுங்
கல்லா வாய்மைய னிவனெனத் தத்தங்
கைவ லினையர் கோக்கை நிரைப்ப
வணங்கிய சாயல் வணங்கா வாண்மை
கஐ முனைசுடு கனையெரி யெரித்தலிற் பெரிது
மிதழ்கவி னழிந்த மாலையொடு சாந்துபுலர்
பல்பொறி மார்பின் பெயர்வா ழியரோ
நின்மலைப் பிறந்து நின்கடன் மண்டு
மலிபுன னிகழ்தருந் தீநீர் விழவிற்
நடு பொழில்வதி வேனிற் பேரேழில் வாழ்க்கை
மேவரு சுற்றமோ டுண்டினிது துகருங்
தீம்புன லாய மாடுங்
காஞ்சியம் பெருந்துறை மணலினும் பலவே.

துறை - இயன்மொழிவாழ்த்து.
வண்ணமும் தூக்கும் அது.
பெயர் - (கடு) பேரேழில்வாழ்க்கை.

நிலைஇயென்றது நிலைப்பித்தென்னும் பிறவினை.

ச. கடலொடுழந்தவென்னும் ஒடு வேறுவினையொடு. 'பரதவ' என்றதனுற்சொல்லியது, அக்கடலின் உழத்தற்றொழிலொப்புமைபற்றி அக்கடற்றுறைவாழும் நூலாயற்குப்பெயராகிய பரதவனென்னும்பெயரான் இழித்துக்கூறினன்போலக் குறிப்பான் உயர்த்து வென்றிகூறினனெனக் கொள்க.

ரு - கூ. தாரத்தையெனவிரித்து (சு) ஈயுமென்பதனொடுமுடித்து, ஈயுமென்னும்பெயரெச்சத்தினைக் (எ) கல்லாவாய்மையனென்னும் காரணப் பெயரொடுமுடித்து அப்பெயரை இக்கவிகூறுகின்றான் பிறர்கூற்றினைக் கொண்டுகூறுதற்கண்வந்த எனவொடுபுணர்த்துக் கடலுட்போர்செய்து அரிதிற்பெற்றபொருளை எளிதாக மனங்கொள்ளாப்பரதவரையுடைய தரம் போதாதார்க்குக் கொடுக்கும் பேதை இவனென இழித்துக்கூறற்கேற்பக் கைவலினையர் அடைவே தத்தம் கையைச் சுட்டிநிலைக்கும்படி இரவல ரிடத்து வணங்கியமென்மையெனவுரைக்க. ஆண்டு நீர்ப்போந்துபெற்ற தாரத்தையென்றான், இக்கவிகூறுகின்றான்; அவ்வருபிற்குமுடிபாகிய ஈயு மென்றது கூறுகின்றார் கைவலினையர். அக்கைவலினையர் கூறிற்றாக இக்கவி கூறுகின்றானுக்குக் கொண்டுகூட்டாகப் புகுந்தமையான், அவ்விரண்டாவ தற்கு அவ்வீயுமென்னும்வினை முடிபாமெனக்கொள்க. இதற்குப்பிறவாறுங் கூறுப.

எ. கல்லாவாய்மையனென்றது கல்லாததன்மையை உண்மையாக வுடையனென்றவாறு.

கக. மாலையொடென்னும் ஒடு வேறுவினையொடு.

கக - உ. சார்ந்துபுலர்மார்பவெனக் கூட்டுக.

கச. மலிபுனலியுடைமையின், யாறுமலிபுனலெனப்பட்டது. நிகழ் தருந்தீநீரென்றது அவ்வியாறுகளிலே புதிதாகவருகின்ற இனியபுதுநீ ரென்றவாறு.

கடு. பொழில்வதி வேனிற் பேரெழில் வாழ்க்கையென்றது வேனிற்காலத்து மனையில்லைகாது பொழில்களிலேவதியும் பெரிய செல்வ அழகையுடைய இல்வாழ்க்கையென்றவாறு.

வேனிற்பொழில்வதியென்க.

(கடு) வாழ்க்கையையுடைய (கஎ) ஆயமெனக்கூட்டுக.

இச்சிறப்பானே, இதற்கு, 'பேரெழில்வாழ்க்கை' என்று பெயரா யிற்று.

இனிப் பொழில்வயவேனிலென்பதுபாடமாயின், பொழில்வயப்படு வதான பொருளுண்டாகிய வேனிலெனவுரைக்க.

கசு. இனிதுறுகருமென்றது சுற்றத்தோடு உண்டலேயன்றிச் செல்வமுடையார் அச்செல்வத்தாற் கொள்ளும் பயன்களெல்லாம் கொள்ளு மென்றவாறு.

கள. புனலாயம் - புனலாடற்குவந்த திரள்.

(ச) பரதவ, (கூ) வணங்கிய சாயலையும் வணங்கா ஆண்மையினையு முடைய (கக) சாந்துபுலர் (கஉ) மார்ப, நின்பெயர் (கஅ) பெருந்துறை மணலினும் பல (கஉ) வாழியரெனக்கூட்டி வினைமுடிவுசெய்க.

இதனாற்சொல்லியது, அவனை நீடுவாழ்கவென வாழ்த்தியவாறு யிற்று. (அ)

(சகூ). யாமுஞ் சேறுக நீயிரும் வம்மின்
முயலுங் கோதைத் துளங்கியல் விறலியர்
கொளைவல் வாழ்க்கைதுங் கினையினி துணீஇயர்
களிறுபரந் தியலக் கடுமா தாங்க
ரு வொளிறுகொடி நுடங்கத் தேர்திரிந்து கொட்ப
வெஃகுகுரங் தெழுதருங் கைகவர் கடுந்தார்
வெல்போர் வேந்தரும் வேளிரு மொன்றுமொழிந்து
மொய்வளஞ் செருக்கி மொசிந்துவரு மோகூர்
வலம்படு குழுஉநிலை யதிர மண்டி
கo நெய்த்தோர் தொட்ட செங்கை மறவர்
நிறம்படு குருதி நிலம்படர்ந் தோடி
மழைநாட் புனலி னவற்பார்த் தொழுகப்
படுபிணம் பிறங்கப் பாழ்பல செய்து
படுகண் முரச முடிவட் சிலைப்ப
கரு வளனற நிகழ்ந்து வாழுநர் பலர்படக்
கருஞ்சினை விறல்வேம் பறுத்த
பெருஞ்சினக் குட்டுவற் கண்டனம் வரற்கே.

துறை - விறலியாற்றுப்படை.
வண்ணமும் தூக்கும் அது.
பெயர் - (கo) செங்கைமறவர்.

ச. கடுமா தாங்கவென்றது கால்கடியகுதிரைமேலாட்கள் வேண் டளவுகளிலே செலவை விலக்கிச்செலுத்தவென்றவாறு.

ரு. திரிந்துகொட்பவென்றது மறித்துதிரியவென்றவாறு.

சு. கைகவர்கடுந்தாரென்றது மாற்றார்படையில் வகுத்துநிறுத்தின கைகளைச் சென்றுகவரும் கடிய தூசிப்படையென்றவாறு.

(சு) கடுந்தாரையுடைய (எ) வேந்தரெனக்கூட்டுக.

அ. மொய்வளஞ்செருக்கியென்றது வலியாகியசெல்வத்தானே மயங்கியென்றவாறு.

மொய்யென்பது ஈண்டு வலி.

கo. நெய்த்தோர் தொட்ட செங்கை மறவரென்றது பகைவருடலில் தாங்கள் எறிந்த வேல்முதலியகருவிகளைப் பறிக்கின்றகாலத்து அவருடைய உடலுகுருதியை அளைந்துசிவந்த கையையுடைய மறவரென்றவாறு.

இச்சிறப்பானே, இதற்கு, 'செங்கைமறவர்' என்று பெயராயிற்று.

(கo) மறவரது (கக) குருதியெனக்கூட்டுக.

(க) குழூஉநிலை அதிரமண்டிக் (ககு) குருதி (கஉ) ஒழுகப் (கஊ) பிணம்பிறங்கப் பாழ்பலசெய்து (கச) முரசம்முடிவட்சிலைப்ப (கடு) வளனறு நிகழ வாழுஉர் பலர்ப (கசு) விறல்வேம்பறுத்தவெனமுடிக்க.

கடு. வளன்அற நிகழ்ந்தென்ற துசெல்வமானது அறும்படியாகக் கொள்ளைநிகழவென்றவாறு.

நிகழவெனத்திரிக்க.

இனிவளனறவெனவும் நிகழ்ந்துவாழுஉரெனவும் அறுத்து நிகழ்தலை வாழ்வார்மேலேற்றி நிகழ்ந்துவாழ்தலென்றலுமாம்.

ஆண்டு, நிகழ்தல் - விளக்கம்.

(கஎ) குட்டுவற்கண்டனம்வாற்கு (க) யாமும் சேறுகம்; (உ) நுமி னினை இனிது உணீஇயர்; (உ) விறலியர், (க) நீயிரும் வம்மினெனக்கூட்டி வினைமுடிவுசெய்க.

இதனுற்சொல்லியது, அவன் வாயாவீகை கூறியவாறுயிற்று. (கூ)

(டுo.) மாமலை முழக்கின் மான்கணம் பனிப்பக்
கான்மயங்கு கதழுறை யாலியொடு சிதறிக்
கருஞ்பமல் கழனிய நாடுவளம் பொழிய
வளங்கெழு சிறப்பி னுலகம் புரைஇச்
டு செங்குணக் கொழுகுங் கலுழி மலிர்நிறைக்
காவிரி யன்றியும் பூவிரி புனலொரு
மூன்றுடன் கூடிய கூட லனையை
கொல்களிற், றூவுத்திரை பிறழ வவ்வில் பிசிரப்
புனைதொல் வனப்பி னெஃகுமீ னவிர்வர
கo வீரவுப்பணை முழங்கொலி வெரீஇய வேந்தர்க்

காண மாகிய வெருவரு புனற்றார்
கன்மிசை யவ்வுங் கடலவும் பிறவு
மருப்ப மமைஇய வமர்கடந் தருத்த
வாண்மலி மருங்கி னுடகப் படுத்து
கரு நல்லிசை நனந்தலை யிரிய வொண்ணு
ருருப்பற நிரப்பினை யாதலிற் சாந்துபுலர்பு
வண்ண நீவி வகைவனப் புற்ற
வரிஞிமி றிமிரு மார்புபிணி மகளிர்
விரிமென் கூந்தன் மெல்லணை வதிந்து
உ0 கொல்பிணி திருகிய மார்புகவர் முயக்கத்துப்
பொழுதுகொண் மாபின் மென்பிணி யவிழ
வெவன்பல கழியுமோ பெரும பன்னாட்
பகைவெம் மையிற் பாசறை மரீஇப்
பாடரி துயைந்த சிறுதுயி லியலாது
உரு கோடுமுழங் கிமிழிசை யெடுப்பும்
பீடுகெழு செல்வ மரீஇய கண்ணே.

துறை - வஞ்சித்துறைப் பாடாண்பாட்டு.
வண்ணம் - ஒழுகுவண்ணமும் சொற்சீர்வண்ணமும்.
தூக்கு - செந்தூக்கு.
பெயர் - (ககை) வெருவருபுனற்றார்.

(க) மாமலைக்கண்ணே (உ) உறைசிதறியெனக்கூட்டி அதனைச்சிதற வெனத்திரிக்க.

ச. உலகம் புரைஇயென்றது உலகத்தைப் புரந்தென்றவாறு.

எ. மூன்றுடன் கூடிய கூடலென்றது அக்காவிரிதானும் ஆன்பொருகையும் * குடவஞ்சுறமென இம்மூன்றும்சேரக்கூடிய கூட்டமென்றவாறு.

(சு) காவிரி ஆனையாவதேயன்றி (எ) மூன்றுடன்கூடிய கூட்டந் தானையெனக்கொள்க.

அ. உரவுத்திரைபிறழவென்றது வலியதிரைகள் தம்மில் மாறுபட்டுப் புடைபெயரவென்றவாறு.

அவ்வில் பிசிரவென்றது அவ்விற்கள் அத்திரைக்குப்பிசிராக வென்றவாறு.

பிசிரவென்றது பெயரடியாகப் பிறந்தவினை.

---

* குடவனென்றுற் போல்வதோர் யாறுமெனவும் பிரதிபேதமுண்டு.

(அ) பிறழவென்றது முதலாகின்ற செயவெனெச்சங்களை (ககூ) நிரப்பினையென்னும் பிறவினையோடு முடிக்க.

க0. பணையாகிய முழங்கொலியென இருபெயரொட்டு.

(க0) ஒலியையுடைய (கக) புனலெனக் கூட்டுக.

க0. வெரீஇய வேந்தரென்றது தம்பகையை வெருவி இவன்றன்னுடன் நட்பாகிய வேந்தரென்க.

கக. வெருவருபுனற்றூரென்றது தன்னை அடைத்தார் வெருவரத் தக்க புனற்றூரென்றவாறு.

இச்சிறப்பானே, இதற்கு 'வேருவருபுனற்றூர்' என்று பெயராயிற்று.

புனற்றூரென்றதனைத் தார்ப்புனலென்றவாறுகக்கொள்க.

ககூ. உருப்பென்றதனைச் சினத்தியென்றவாறுகக் கொள்க.

ஆதலினென ஏதுப்பொருட்கணின்ற ஐந்தாவதற்கு யான் நின்னை ஒன்றுகேட்கின்றேனென்று ஒருசொல்வருவிக்க.

(ககூ) சாந்துபுலர (கஎ) வண்ணநீவெனத்திரிக்க.

கஅ. மார்புபிணி மகளிரென்றது மார்பாற்பிணிக்கப்பட்டமகளிரென்றவாறு.

கஉ. வதிந்தென்னுமெச்சத்தினைப் (உக) பொழுதுகொளென்னும் வினையொடு முடிக்க.

(உ0) முயக்கத்துப் (உக) பொழுதுகொண்மரபின் மென்பிணியென்றது முயக்கத்திலே இராப்பொழுதைப் பயன்கொண்ட முறைமையினையுடைய மெல்லிய உறக்கமென்றவாறு.

மென்பிணியென்றது புணர்ச்சியவதிக்கண் அப்புணர்ச்சியலையலான் வந்த சிறுதுயிலை; கண்ணீப் பூவென்னுமினவினுைப் பிணியவிழவெனப் பூத்தொழிலாற்கூறினனென்க.

உஉ. நாள்பல எவன்கழியுமோவென நாளென்பது வருவிக்க.

பின்னின்ற பல்லுளென்பதனைப் (உரு) பாசறைமரீஇயென்பதனோடுகூட்டுக. மரீஇயென்பதனை மருவவெனத்திரித்து மருவுகையாலென்க.

உச. பாடரிதியைந்த சிறுதுயிலென்றது இராப்பொழுதெல்லாம் பகைவரை வெல்கைக்கு உளத்திற்சென்ற சூழ்ச்சிமுடிவிலே அரிதாகப் படுதலியைந்த சிறுதுயிலென்றவாறு.

(உச) சிறுதுயிலையுடைய (உசு) கண்ணெனக்கூட்டுக.

(உச) இயலாது (உரு) இசையெடுப்புமெனக்கூட்டுக,

உரு. இமிழிசையென்றது இமிழிசையையுடைய இயமரங்களை.

கோடு-சங்கு. முழங்கென்றது அவ்வியமரங்களுக்கு இடையிடையே முழங்குகின்றவென்றவாறு.

உசு. பீடுகெழுசெல்வமென்றது படைச்செல்வம்; பீடு - வலி.

மீஇயகண்ணென்றது அப்படைமுகத்திலே காள்தோறும் அமர்க் தும் துயிலெழுந்தும் உலவிப் பழகின கண்ணென்றவாறு.

(எ) கீகூடலனையை; (உஉ) பெருமை, (ஙக) தார்ப்புனலை (கஙு) ஒன் னுர் (கசு) உருப்பதரிரப்பினையாகையாலே, யான் நின்னை ஒன்று கேட் இன்றேன்; (உசு) பீடுகெழுசெல்வம் மீஇயகண் (உ0) முயக்கத்துப் (உகீ) பொழுதுகொண்மரபின் மென்பிணியவிழ (உஉ) காள்பல நினக்கு எவன் கழியுமோவெனக்கூட்டி வினைமுடிவுசெய்க.

இதனற்சொல்லியது, அவன்காமவேட்கையிற் போர்வேட்கை மிகுத் துக்கூறியவாறுயிற்று.

(ஙக) தார்ப்புனலை (கஙு) ஒன்னுர் (கசு) உருப்பதரிரப்பினையென எடுத்துச்செலவினை மேலிட்டுக்கூறினமையால், துறை வஞ்சித்துறைப்பாடா ணுயிற்று.

அ. 'கொல்களிறு' என்பது கூன். (க0)

இதன்பதிகத்துக் கடவுட்பத்தினியென்றது, கண்ணகியை.

இடும்பிலென்றது இடும்பாதவனத்தை. புறம் - அவ்விடம்.

வாலிழைகழித்தபெண்டிரென்றது, அப்பழையன் பெண்டிரை.

கூந்தன்மூரற்சியென்றது, அவர்கூந்தலை அரிந்துதிரித்த கயிற்றினை.

குஞ்சரவொழுகையூட்டியது அப்பழையன் வேம்பினை ஏற்றிக்கொ ண்டுபோதற்கு.

குடிக்குரியோரென்றது அரசிற்குரியாரை.

(பதிகம்.)

வடவ ருட்கும் வான்மேய் வெல்கொடிக்
குடவர் கோமா னெடுஞ்சேர லாதற்குச்
சோழன் மணக்கிள்ளி யீன்ற மகன்
கடவுட் பத்தினிக் கற்கோள் வேண்டிக்
கானவில் கானங் கணையிற் போகி
யாரிய வண்ணலை வீட்டிப் பேரிசை
யின்ப லருவிக் கங்கை மண்ணி
யினந்தெரி பல்லான் கன்றொடு கொண்டு
மாரு வல்வி லிடும்பிற் புறத்திறுத்
தறுபுலி யன்ன வயவர் வீழச்
சிறுசுர னெய்தல் வியலூர் நூறி
யுக்கரை நண்ணிக் கொடுகூ ரெறிந்து

பழையன் காக்குங் கருஞ்சினை வேம்பின்
மூரை முழுமுத றுமியப் பண்ணி
வாலிழை கழித்த நறும்பல் பெண்டிர்
பல்லிருங் கூந்தன் மூரற்சியாற்
குஞ்சர வொழுகை பூட்டி வெந்திற
லாராச் செருவிற் சோழர்குடிக் குரியோ
ரொன்பதின்மர் வீழ வாயிற்புறத் திறுத்து
நீலச் செருவி னூற்றலை யறுத்துக்
கெடலருந் தானையொடு

கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவனைக் கரணமமைந்தகாசறு செய்யுட் பரணர் பாடினார் பத்துப்பாட்டு; அவைதாம்: சுடர்வீ வேங்கை, தசும்புதுளங்கிருக்கை, ஏரிவேணி, நோய்தபுநோன் நெடை, ஊன்றுவையடிசில், கரைவாய்ப்பருதி, நன்னுதல்விறலியர், பேரெழில்வாழ்க்கை, செங்கைமறவர், வெருவருபுனற்றூர். இவை பாட்டின்பதிகம்.

பாடிப்பெற்றபரிசில்: உம்பற்காட்டுவாரியையும் தன்மகன் குட்டுவன்சேரலையுங் கொடுத்தான் அக்கோ.

கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவன் ஐம்பத்தையாண்டு வீற்றிருந்தான்.

ஐந்தாம்பத்து முற்றிற்று.

## ஆறாம் பத்து.

(நக.) துளங்குநீர் வியலகங் கலங்கக் கால்பொர
விளங்கிரும் புணரி யுருமென முழங்குங்
கடல்சேர் கானற் குடபுல மூண்ணிக்
கூவற் றுழந்த தடந்தா ணுரை
(நு) குவியிணர் ஞாழன் மாச்சினைச் சேக்கும்
வண்டிறை கொண்ட தண்கடற் பரப்பி
னகிற்பம லடைகரை யலவ ணுடிய
வடுவடு நுண்ணயி ரூதை யுஞற்றுங்
தூவிரும் போந்தைப் பொழிலணிப் பொலிதக்
(க0) தியலின லொல்கின ளாடு மடமகள்
வெறியுறு நுடக்கம் போலத் தோன்றிப்
பெருமலே வயின்வயின் விலங்கு மருமணி
யரவழங்கும் பெருந்தெய்வத்து
வளைஞரலும் பனிப்பௌவத்துக்
(கநு) குணகுட கடலோ டாயிடை மணந்த
பந்த ரந்தரம் வேய்ந்து
வண்பிணி யவிழ்ந்த கண்போ னெய்த
னனையுறு நறவி னுடன் கமழச்
சுடர்நுதன் மடநோக்கின்
(உ0) வானகை யிலங்கெயிற்
றமிழ்துபொதி துவர்வா யசைநடை வறலியா
பாடல் சான்று நீடினே யுறைதலின்
வெள்வே லண்ணல் மெல்லியன் போன்மென
வுள்ளுவர் கொல்லோனின் னுணரா தோரே
(உநு) மழைதவழும் பெருங்குன்றத்துச்
செயிருடைய வரவெறிந்து
கடுஞ்சினத்த மிடறபுக்கும்
பெருஞ்சினப்புய லேறனையை
தாங்குநர், தடக்கை யானைத் தொடிக்கோடு தமிக்கு

கூ0 மெஃகுடை வலத்தர்கின் படைவழி வாழ்நர்
மறங்கெழு போந்தை வெண்டோடு புனைந்து
நிறம்பெயர் கண்ணிப் பருந்தூ ணளப்பத்
தூக்கணை நிழித்த மாக்கட் டண்ணுமை
கைகவி னோயர் கையலை யழுங்க
கூடு மாற்றருஞ் சீற்றத்து மாயிருங் கூற்றம்
வலைவிரித் தன்ன நோக்கலை
கடையையா னெடுத்தகை செருவகத் தானே.

துறை - வஞ்சித்துறைப்பாட்டாண்பாட்டு.
வண்ணம் - ஒழுகுவண்ணமும் சொற்சீர்வண்ணமும்
தூக்கு - செந்தூக்கும் வஞ்சித்தூக்கும்.
பெயர் - (அ) வடுவடுநுண்ணயிர்.

கூ. குடபுலமென்றது தன் நகரிக்கு மேல்பாலாம்.

(கு) மாச்சினைச்சேக்கும் (கூ) பொழில், (சு) வண்டினைகொண்ட (க) பொழில், (எ) அடைகரைப் (கூ) பொழிலெனைக்கூட்டுக.

அ: வடுவையடுதல் - வடுவைமாய்த்தல். ஊதை உளற்றுதல் - அவ் வடுமாயும்படி நுண்ணிய அயிரை முகந்து தூவுதலிலே முயல்கை. அயிர் - நுண்மணல்.

வடுவைமாய்க்கும் நுண்ணயிரெனற்பாலதனை வடுவடுநுண்ணயி ரென்று கூறியதிறப்பானே, இதற்கு 'வடுவடுநுண்ணயிர்' என்று பெயரா யிற்று.

கூ. பொழிற்கண் ஒப்பனையாற் பொலிவுபெற்றென்றவாறு.

க0. இயலுதல் - உலாவுதல். ஒல்குதல் - அசைதல்.

கக. வெறியுறுதுடக்கம்-இயல்பாக துடக்கலன்றித் தெய்வமேறிய விகாரத்தால் நடுங்குதல்.

கங. அரவழங்குதல் - அரவாடுதல்.

கக - ங. வெறியுறுதுடக்கம்போல அரவழங்குமெனக் கூட்டுக.

(கங) அரவழங்கும் (கஉ) பெருமலைப் (கங) பெருந்தெய்வமென மாறுகூட்டுக.

கஉ. பெருமலை - இமயம்.

(கடு) குண குட கடலெனக் கிழக்கும் மேற்கும் எல்லை பின்கூறு இன்றமையாது, (கச) வானாரலும் பனிப்பௌவமென்றது தென்னெல்லை யாம்.

(கஈ) தெய்வத்துப் (கச) பௌவத்து என்னும் அத்துக்கள் ஈண்டுச் சாரியைப்பொருண்மையைச் செய்யாமையின், அசைநிலையெனப்படும்.

கடு. ஓடு என்னெடு. ஆயிடையென்றதனீ அவற்றின்நடுவென்ற வாறு.

(கஈ) பெருந்தெய்வம் (கச) பனிப்பௌவம் (கடு) குணகடல் குட கடலாகிய அவ்வெனக் கூட்டுக.

கடு. அவ்வென்னும் சுட்டுமுதல் வகாரவீற்றுப் பெயர் ஆயிடை யென முடிந்தது.

கடு - சு. ஆயிடைமணந்த பந்தரென்றது ஆயிடையிலுள்ள அரச ரும் பிறரும் சேவித்தற்குவந்துபொருந்தின பந்தரென்றவாறு.

ஆயிடையென்றது ஆயிடையிலுள்ளாரை.

கசு. பந்தரந்தரமென்றது பந்தரின் உள்வெளியை. வேய்தல் - வேய்ந்தாற்போல(கஎ) நெய்தன்மாலைகளை நாற்றுதல். வேயவெனத் திரிக்க.

கஅ. நறவினெடுவென ஓடிவிரிக்க.

உஉ. பாடல்சான்றென்பதனைச் சாலவெனத் திரிக்க.

உங. மெல்லியனென்றது ஐம்புலன்களிடத்தும் மனநெகிழ்ச்சி யுடையனென்றவாறு.

(உஎ) கடிஞ்சினத்த (உசு) அரவென மாறிக்கூட்டுக.

ஙo. படைவழிவாழ்நரென்றது படையிடமாகவாழும் படையா ளரை.

(ஙக) மறங்கெழு (ஙஉ) கண்ணியெனக்கூட்டுக.

ஙஉ. நிறம்பெயர்தல் - உதிரத்தால் நிறம்பெயர்தல். ஊறளத்தல் - உறுதற்கு ஆராய்தல்.

(ஙசா) கையிலையழுங்கவென்னும் எழுவாயையும் பயனிலையையும் ஒருசொல்நீர்மைப்படுத்தித் (ஙஙு) தண்ணுமையென்னுமெழுவாய்க்குப் பய னிலையாக்குக.

ஙசு. நோக்கென்றது மாற்றார்படையைத் தப்பாமல் ஒன்றுகக் கொல்லக்கருதின நோக்கென்றவாறு.

(ஙஉ) பருந்தூளப்பக் (ஙச) கையிலையழுங்கவெனநின்றசெயவெ னெச்சங்களை (ஙசு) நோக்கலையென்னும் முற்றுவினைக்குறிப்பொடுமுடிக்க.

நீ (ஙஎ) குடபுலமுன்னிப் (ஙக) போந்தைப் பொழிலணிப்போலிதந்து (கஎ) நெய்தல் (கஅ) நறவினெடுகமழ (உக) விறலியாது (உஉ) பாடல் காலப் புறத்துவிளையின்மையின் விளைதத்திலே நீடியுறைதலாலே, நீ அவ்வாறுநீடியதறியாது (உங) அண்ணல் மெல்லியன்போன்மென (உச) நின்னைஉணராதோர் உள்ளுவர்கொல்; நீதான் (உசு) அரவொடொக்கு

நின்பகைவனைக் கடுக அழிக்கவேண்டுநிலைமையில் அவ்வரவினைக் கடுக வழிக்கும் (உஅ) உருமேற்றினையொப்பை ; அவ்வாறு விரையச்செய்யு நிலைமைக்கண் நினக்கேற்ப (உ0) நின்படைவழிவாழ்நரும் காலாண்மேற்செல் லாது (உக) தாங்குநர் யானைக்கோடுதுமிக்கும் (உ0) எஃகுடைவலத்தரா யிருப்பர்; அவ்வாறு நீ அழியாது மாறுபாடாற்றிப்பொருதழிக்கும்வழி (உஉ) நின்முடிக்கண்ணியை உதிரம்தெறித்தலால் நிறம்பெயர்தலிற் பருந்து உறு தற்களப்ப நின்முன்னர்வழங்கும் (உங) மாக்கட்டண்ணுமை நின்னெதிர் நின்று மாற்றுரைப்தலையுடைய்அம்பு கண்ணிழித்தலால் (உச) ஒலியொழியக் (உடு) கூற்றம் (உசு) வலிவிரித்தாற்போலக் களத்தில் எதிர்ந்த மாற்றார் படையெல்லாம் ஒன்றுகக்கொல்லக் கருதி நோக்கின நோக்கினை யுடையை; (உள) நெடுந்தகாய், இவ்வாறு செருவகத்துக் கடியையென வினைமுடிவுசெய்க.

இதனுற்சொல்லியது, அவன்விஞ்தத்துமென்மையும் செரு வகத்துக் கடுமையும் உடன்கூறியவாறுயிற்று.

உசு. தாங்குநர் தடக்கையானைத் தொடிக்கோடுதுமிக்குமென்று எதிருன்றினர்மேற்சேறல் கூறினமையான், இஃது எடுத்துச்செலவின்மேற் றாய் வஞ்சித்துறைப்பாடாணுயிற்று.

(கங) 'அரவழங்கும்' என்பதுமுதலாக இரண்டுகுறளடியும், (கசு) 'பந்தரந்தரம் வேய்ந்து' என ஒருசிந்தடியும் (கக) 'சுடர்தொடல்' என்பது முதலாக இரண்டு குறளடியும், (உடு) 'மழைதவழும்' என்பதுமுதலாக நாலு குறளடியும் வந்தமையான், வஞ்சித்தாக்குமாயிற்று.

உக 'தாங்குநர்' என்பது கூன்.

(பி - ம்.) கஉ. விலங்குமட்டுமணி. ஙடு. மாவருங்கூற்றம்.
கங. அரவுவழங்கும். ஙள. கடியைநெடுந்தகை
ஙங. தூகணைஇழித்த. செருவத்தானே.(க)

(ஙஉ). கோடியுடங்கு நிலைய கொல்களிறு மிடைந்து
வடிமணி நெடுந்தேர் வேறுபுலம் பரப்பி
யருங்கலந் தரீஇயர் நீர்மிசை நிவக்கும்
பெருங்கலி வங்கந் திசைதிரிந் தாங்கு
ஙு மையணிந் தெழுதரு மாயிரும் பஃறேன்
மெய்புதை யரண மெண்ணு தெஃகுசுமந்து
முன்சமத் தெழுதரும் வன்க ணுடவர்
தொலையாத் தும்பை தெவ்வழி விளங்க
வுயர்நிலை யுலக மெய்தினர் பலர்பட

கo கல்லமர்க் கடந்தநின் செல்லுறழ் தடக்கை
யிரப்போர்க்குக் கவித லல்லதை யிரைஇய
மலர்பறீ யாவெனக் கேட்டிகு மினியே
சுடரும் பாண்டிற் றிருநாறு விளக்கத்து
மூழாவிமிழ் துணங்கைக்குத் தழூஉப்புணை யாகச்
கரு சிலைப்புவல் லேற்றிற் றலைக்கை தந்துநீ
களிந்தனை வருத லுடன்றன ளாகி
யுயலுங் கோதை யூரலந் தித்தி
யீரிதழ் மழைக்கட் பேரிய லரிவை
யொள்ளித ழவிழகங் கடிக்குஞ் சீறடிப்
உo பல்சில கிண்கிணி சிறுபர டலைப்பக்
கொல்புனற் றளிரி னடுங்குவன னின்றுநின்
னெறிய ரோக்கிய சிறுசெங் குவளை
யீயென விரட்பவு மொல்லா ணீயெமக்
கியாஞ யோவெனப் பெயர்வோள் கையதை
உரு கதுமென வுருத்த நோக்கமொ டதுநீ
பாஅல் வல்லா யாயினை பாஅல்
யாங்குவல் லுகையோ வாழ்கநின் கண்ணி
யகலிரு விசும்பிற் பகலிடந் தீஇயர்
தெறுகதிர் திகழ்தரு மூருகெழு ஞாயிற்
கூo முருகுகிளர் வண்ணங் கொண்ட
வான்றேய் வெண்குடை வேந்தர்த்தம் மெயிலே.

துறை - தாவைநிலை.
வண்ணம் - ஒழுகுவண்ணம்.
தூக்கு - செந்தூக்கு.
பெயர் - (உஉ) சிறுசெங்குவளை.

(ச) வங்கம் திசைதிரிந்தாங்குக் (க) கொல்களிறுமிடைந்தென மாறிக் கூட்டுக.

கஉ. திருநாறுவிளக்கென்றது செல்வமுடைமையெல்லாம் தோன்றும் விளக்கு.

கசு. களிதல் - தன்னைச் சேவிக்குமகளிரொடு தாவையாடிச்செறிதல்.

கஎ. ஊரலர்த்தித்தி - ஊரிலேயுடைய தித்தி; அம்முச் சாரியை.

கஅ. ஈரிதழ் - குளிர்ந்த இமை.

கக. அவிழகமென்றது அவிழ்ந்தபூவினை.

உஉ. தான்அவனை எறிதற்குஓக்கியசிறியதொருசெங்குவளையைச் சிறுமையால் அவள்மென்மைகூறியசிறப்பான், இதற்கு, 'சிறுசெங்குவளை' என்று பெயராயிற்று.

(உங) இரப்பவென்னும் செயவெனச்சத்தினைக் (உச) கையதை யென்னும் முற்றுவினைக்குறிப்பொடுமுடிக்க.

(உஉ) சிறுசெங்குவளை (உச) பெயர்வோள்கையதையென முற்றுக அறுத்து (உரு) அதுவெனப் பின்சுட்டிற்றுக்குக.

உஅ. பகலிடம் - பகற்பொழுது.

ஙo. உருபுகிளர்வண்ணம் - நிறம்விளங்கினதன்மை.

(ஙo) வண்ணங்கொண்ட (ஙக) வேந்தரெனக்கூட்டி ஞாயிறு போலக் கோபித்து எதிர்நின்றவேந்தரென உரைக்க.

(கo) கல்லமர்க்கடந்த நின்றடக்கை (கக) இரப்போர்க்குக் கவிதலல்லதை இரைஇய (கஉ) மலர்பறியாவெனக்கேட்டிகும் ; இனி, (கச) துணங்கைக்குத் (கரு) தலைக்கைதந்தநீ (கசு) களிந்தனைவருதல் உடன்றனளாகி (கஅ) நின்னரிவை (உக) நின் (உஉ) எறியர்ஓக்கிய சிறுசெங்குவளையானது (உரு) நீ (உங) ஈயென்று இழிந்தோன்கூற்றுன் இரப்பவும்நினக்கு ஈந்து போகாது நின்இரப்பிற்கு ஒல்லாளாய் நீ எமக்கு (உச) யாரென்று பெயர்வோள் கையதாயிருந்தது; அவ்வாறு இரந்துநீபெறுது (உரு) அவனை உருத்த கோக்கமொடு அதை அவள்பானின்றும் (உசு) பகுத்துக்கொள்ள மாட்டாயாயினை ; அவ்வாறு அது பகுக்கமாட்டாதநீ (ஙக) வேந்தர்க ளெயிலைப் (உசு) பகுத்துக்கோடல் (உஎ) யாங்குவல்லையாயினும் ; நின் கண்ணிவாழ்க வெனமாறி வினைமுடிவுசெய்க.

(உசு) பாஅல் (உஎ) யாங்குவல்லுநையோவென்றதன்முன் (ஙக) எயிலென்பது கூட்டவேண்டுதலின், மாறுயிற்று.

இதனுற்சொல்லியது, அவன் கைவண்மையொடும் வென்றியொடும் படுத்து அவன் காமவின்பச்சிறப்புக் கூறியவாறுயிற்று.

இப்பாட்டு, துணங்கையாடுதல்காரணமாகப்பிறந்த ஊடற்பொருட்டாகையாற் குரவைவகையென்றவாறுயிற்று.

(பி - ம்.) சு. என்னுது. உஉ. எறியரோச்சிய.
கஅ. பேரிலரிவை. உஎ. வல்லினையோ.
உo. பல்செல்; 'பல்செங்'.

(நூ.) வேன்றுகலந் தரீஇயர் வேண்டுபுலத் திறுத்தவர்
வாடா யாணர் நாடுதிறை கொடுப்ப
நல்கினை யாகுமதி யெம்மென் றருளிக்
கல்பிறங்கு வைப்பிற் கடறரை யாத்தநின்
நு ருல்புகழ் மூதூர்ச் செல்குவை யாயிற்
செம்பொறிச் சிலம்பொ டணித்தழை தூங்கு
மெந்திரத் தகைப்பி னம்புடை வாயிற்
கோள்வன் முதலைய குண்டுகண் ணகழி
வானுற வோங்கிய வளைந்துசெய் புரிசை
கo யொன்னுத் தெவ்வர் மூணெகெட விலங்கி
நின்னிற் றந்த மன்னெயி லல்லது
முன்னும் பின்னுநின் முன்னே ரோம்பிய
வெயின்முகப் படுத்தல் யாவது வளையினும்
பிறிதாறு சென்மதி சினங்கெழு குருசி
கரு லெழுஉப்புறந் தரீஇப் பொன்பிணிப் பலகைச்
சூழுகிலைப் புதவிற் கதவுமெய் காணிற்
றேம்பாய் கடாத்தொடி காழ்கை நீவி
வேங்கை வென்ற பொறிகிளர் புகர்நுத
லேந்துகை சுருட்டித் தோட்டி நீவி
உo மேம்படி வெல்கொடி நுடங்கத்
தாங்க லாகா வாங்குநின் களிறே.

துறை - செந்துறைப்பாடாண்பாட்டு.
வண்ணமும் தூக்கும் அது.
பெயர் - (அ) குண்டுகண்ணகழி.

க. அவரென்றது அவ்வாறு இறுக்கும்படி நின்னெடு எதிர்ந்த அரசரென்றவாறு.

உ. நாடுதிறை கொடுப்பவென்றது நாட்டைத் திறைகொடுப்ப வென்றவாறு.

திறைதரவென்றதற்குத் திறைகொடுப்பவென்றது இடவழுவமைதி.
(ங) நல்கினையாகுமதி எம்மென்று (உ) திறைகொடுப்பவெனக் கூட்டுக.

ச. வைப்பு - இடம். கடற்றையென இரண்டாவதுவிரிக்க.

சு. சிலம்பும் தழையும்(கு)புரிசைக்கண் தங்கினவென்றது ஈண்டுப் பொருவீருளீரேல் தும்காலிற்கழலினையும் அரையிற் போர்க்குரிய உடையினையுமொழித்து இச்சிலம்பினையும் தழையினையும் அணிமினென அவரைப் பெண்பாலாக இகழ்ந்தவாறென்க.

இனி, அவற்றை அம்மதிலில்வாழும் வெற்றிமடந்தைக்கு அணியென்பாருமுளர்.

அ. கோள்வன்முதலையவென்றுமூன்வத்த அடைச்சிறப்பான், இதற்கு, 'தண்டுகண்ணைகழி' என்று பெயராயிற்று.

க. வலைந்துசெய்புரிசையென்பதனை வளையச்செய் புரிசையெனத் திரித்துக் காலவழுவமைதியாகக் கொள்க.

(கு) வலைந்துசெய்புரிசையாகிய (கக) நின்னிற்றந்தமன்னெயிலென இருபெயரொட்டு.

கக. நின்னிற்றந்த மன்னெயிலென்றது நின்னுற்கொண்டு பிறர்க்குக் கொடுக்கப்பட்ட மன்னெயிலென்றவாறு.

கொடுத்தவென்பதற்குத் தந்தவென்பது இடவழுவமைதி. கொடுத்தவெனவே கொண்டுகொடுத்தவெனக் கோடலென்பது போந்தபொருளாய் விளங்கிற்று. தரப்பட்டவென்பதனைத் தந்தவெனச் செயப்படுபொருளாச் செய்ததுபோலச் சொல்லிற்றாக்குக. மன்னெயிலல்லதென்புழி மன்னெயிற்கண்ணென ஏழாவது விரித்து அதனைப் பின்வருகின்ற (கஉ) எயின்முகப்படுத்தலென்பதிடமாகப் படுத்தலென்பதோர்சொல்வருவித்து அதனொடுமுடிக்க.

கஉ. முன்னும்பின்னுமென்றது முன்னோர் தாங்கள் இறப்பதற்கு முன்னும் இறந்ததற்குப்பின்னுமென்றவாறு.

பின்னேம்புதலாவது முன்னோர் தமக்குப்பின்னும் இவ்வரசாள்வாரும் எம்மைப்போல இவ்வாறு ஓம்புகவென நியமித்துவைத்தல்.

கஉ. யாவதென்றது அஃதி என்னகாரியம், நினக்குத்தகுவதொன்றென்றவாறு.

கசு. குழூஉநிலைப்புதவென்றது பலநிலமாகச்செய்த கோபுரவாயிலென்றவாறு.

கள. தேமென்றது தேனீ. கடாம் - மதில்கண்டுழிப் போர்வேட்கையாற்பிறக்கும் மதம்.

(க) நீ வேண்டுபுலத்திறுத்து அவர் (உ) திறைகொடுப்ப (ஈ) அருளி (ச) நின் (நு) மூதூர்ச்செல்குவையாயின், (கச) குருசில், (கஈ) வலையினும் (கச) பிறிதாறுசெல்; செல்லுதற்கு யாதுகாரணமெனின், (கசு) புதவிற்கதவுமெய்காணின், (உக) ஆங்கு நின்கணிறு தாங்கலாகா; தாங்கவேண்டுவதேல்,

(கக) நின்னிற்றந்த எயின்முகத்துப் படுத்துவதல்லது (கஉ) நின்முன்னே சோம்பிய (கங) எயின்முகத்துப்படுத்தல் யாவதென மாறிக்கூட்டி வினை முடிவுசெய்க.

(நு) 'செல்குவையாயின்' என்பதன்பின் (கச) 'பிறிதாறுசென்மதி' என்பதனையும், (உக) 'தாங்க லாகா வாங்குநின் களிறு' என்பதன்பின் (கங) 'எயின்முகப்படுத்தல்யாவது' என்பதனையும் கூட்டவேண்டுதலின், மாறு யிற்று.

இதனைச்சொல்லியது, அடைந்தவர்க்கு அருளலொடுபடுத்து அவன் வென்றிச்சிறப்புக் கூறியவாறுயிற்று.

(பி - ம்.) ச. கடறரையார்த்த. கஎ. காழகரீவி.
சு. செம்பொற்சிலம்பு. (ங)

(நுச.) வள்ளியை யென்றலிற் காண்குவந் திசினே
யுள்ளியது முடித்தி வாழ்கநின் கண்ணி
வீங்கிறைத் தடைஇய வமைமருள் பணைத்தோ
ளேந்தெழின் மழைக்கண் வனைந்துவர விளமுலைப்
நு பூந்துகி லல்குற் றேம்பாய் கூந்தன்
மின்னிழை விறலியர் நின்மறம் பாட
விரவலர் புன்கண் டீர நாடொறு
மூரைசா னன்கலம் வரைவில வீசி
யனையை யாகன் மாறே யெனையதூஉ
கo மூயர்நிலை யுலகத்துச் செல்லா திவணின்
றிருநில மருங்கி னெடிதுமன் னியரோ
நிலந்தப விடூஉ மேணிப் புலம்படர்ந்து
படுகண் முரச நடுவட் சிலைப்பத்
தோமர வலத்தர் நாமஞ் செய்ம்மா
கநு சேவல் வியங்கொண் டியலையரோ டெழுதரு
மொல்லார் யானை காணி
னில்லாத் தானை யிறைகிழ வோயே.

துறை - காட்சிவாழ்த்து.
வண்ணமும் தூக்கும் அது.
பெயர் - (கஎ) நிலாத்தானை.

க. வள்ளியனென்பதற்கு வள்ளியையென்றது இடவழுவமைதி.
உ. உள்ளியதுமுடித்தியென்றது யான் நினைத்துவந்த காரியத்தை முடியென்றவாறு.

மூடித்தியென்றது ஈண்டு முன்னிலையேவல்வினை.

கூ. தடையிய அமை - பெருத்தமூங்கில்.

(சு) நின்மதம்பாட (அ) வீசியெனக்கூட்டி, நின்மதம்பாடாகிற்க அதனைக் கேட்டிருந்து வீசியெனவுரைக்க.

(அ) வீசியென்னும்வினையெச்சத்தினை (கூ) ஆகலென்னுந்தொழிற்பெயரொடு முடிக்க.

கூ. அனையையாகன்மாறேயென்றது அவ்வீசுதற்கேற்றவத்தன்மையையுடையையாகையானென்றவாறு.

மாறென்பது ஆனென்னும் உருபின்பொருள்படுவதோரிடைச்சொல். அத்தன்மையாவது இன்முகமும் இன்சொல்லுமுதலாயின.

எனையதூஉமென்றது சிறிதுகாலமுமென்றவாறு; உம்மை கெடுங்காலமேயன்றிச் சிறிதுகாலமுமென எச்சவும்மை.

கஉ. நிலந்தப இடூஉம் ஏணிப்புலமென்றது நிலவகலம்குறைபட இட்ட எல்லையையுடைய பாசறையென்றவாறு.

என்றது, மாற்றார்பாசறையை.

(கங) முரசம் நடுவட் (கஉ) படர்ந்து (கஙு) சிலைப்பவெனக் கூட்டி முரசம் பாசறைநடுவே தான் நின்று தன்னொலி பாசறையெங்கும்படர்ந்து கொண்டு படையை ஏவியொலிப்பவெனவுரைக்க.

கச. தோமரம் - தண்டாயுதம். வலத்தரென்றது வினையெச்சவினைக்குறிப்புமுற்று.

(கச) ஈமஞ்செய்ம்மார் (கஞ) இளையரொடெழுதரும் (கசு) ஒல்லாரெனக்கூட்டுக.

கஞ. எவ்வியங்கொண்டென்றது இளையரை முன்பு போர்க்குக்கையும் அணியும்வகுப்புழி ஏவித் தாமும் ஏவல்களைச் செய்துகொண்டென்றவாறு.

ஏவலையுடைய வியமென இரண்டாவதுவிரிக்க. வியம் - ஏவல்.

(கசு) யானைகாணின் (கள) நில்லாத்தானையென்றது காலாள்முதலாயினவற்றைத் தரமல்லவென்று கழித்துநின்று யானைகாணின் நில்லாது செல்லும் தானையென்றவாறு.

இச்சிறப்பானே, இதற்கு 'நில்லாத்தானை' என்று பெயராயிற்று.

கள. இறைகிழவோயென்றது இறைவனுக்குற்றன்மையையுடையாயென்றவாறு.

(கள) இறைகிழவோய், நின்னை(க)வள்ளியனென்றுயாவரும் கூறுதலானே நின்னைக் காண்பேன்வந்தேன்; (உ) யான் உள்ளியதனை நீமுடிப்பாயாகவேண்டும்; நின்கண்ணிவாழ்வதற்கு; (சு) விறலியர் நின்மதம்பாட (எ)

இரவலர்புன்கண்டீரும்படி (அ) நன்கலங்களே வரைவிலவீசி (க) அத்தன் மையையாகையாலே, என்போலும் இரவலரது ஆக்கத்தின்பொருட்டுச் சிறிதுகாலமும் (கo) இவ்வுலகத்திலேநின்று உயர்நிலையுலகத்திற்செல்லாதே (கக) இவ்விருநிலமருங்கிலே நெடுங்காலம் நிலைபெறுவாயாகவெனக் கூட்டி விசேமுடிவுசெய்க.

இதனைச்சொல்லியது, அவன் கொடைச்சிறப்பும் தன்குறையுங்கூறி வாழ்த்தியவாறுயிற்று.

(பி-ம்.) ரு. வீங்கறை. அ. வரைவிலை. (ச)

(ருரு.) ஆன்ரோள் கணவ சான்ரோர் புரவல
நின்னயந்து வந்தனெ னடுபோர்க் கொற்றவ
வின்னிசைப் புணரி யிரங்கும் பௌவத்து
நன்கல வெறுக்கை துஞ்சும் பந்தர்க்
ரு கமழுந் தாழைக் கானலம் பெருந்துறைத்
தண்கடற் படப்பை நன்னாட்டுப் பொருந
செவ்வுன் ரோன்ரு வெண்டிவை முதிரை
வாலுன் வல்சி மழவர் மெய்ம்மறை
குடவர் கோவே கொடித்தே ரண்ணல்
கo வாரா ராயினு மிரவலர் வேண்டித்
தேரிற் றந்தவர்க் கார்பத னல்கு
நசைசால் வாய்மொழி யிசைசா ரோன்றல்
வேண்டுவ வளவையுள் யாண்டுபல கழியப்
பெய்துபுறந் தந்து பொங்க லாடி
கரு விண்டிச் சேர்ந்த வெண்மழை போலாச்
சென்ரு லியரோ பெரும வல்கலு
நனந்தலை வேந்தர் தாரழிந் தலற
நீடுவரை யடுக்கத்த நாடுகைக் கொண்டு
பொருது சினந்தணிந்த செருப்புக லாண்மைத்
உo தாங்குநர்த் தகைத்த வொள்வா
ளோங்க லுள்ளத்துக் குருசிலின் னுள்ள.

துறை - செந்துறைப்பாடாண்பாட்டு.
வண்ணமும் தூக்கும் அது.
பெயர் - (ச) துஞ்சும்பந்தர்.

(ங) பௌவத்து (ச) கன்கலவெறுக்கையென்றது பௌவத்திலே வந்த கன்கலமாகிய செல்வமென்றவாறு.

ஞ. பந்தர் - பண்டசாலைகள்.

கன்கலவெறுக்கை துஞ்சுமென்றபிறப்டானே, இதற்கு, 'துஞ்சும் பந்தர்' என்று பெயராயிற்று.

எ. செவ்வுன்றேன்று வெண்டகையென்றது அரைத்துக்கரைத்த மையால் தன்னிற்புக்க செவ்வுன்தோன்றுதி வெள்ளிய துவையென்றவாறு.

முதிரையென்றது அவரை துவரைமுதலாயினவற்றை.

அ. வாலூனென்றது வெண்ணிண ஊனென்றவாறு.

வல்சிமழவரென்றது தம்செல்வச்செருக்கானே சோறுண்பது பெரிதன்றி முன்பு எண்ணப்பட்டவற்றையே உணவாகவுடைய வீரரென்றவாறு.

கo. இரவலரையென்னும் இரண்டாவது விகாரத்தால் தொக்கது; இரவலரைவேண்டியென்றது தன்னாட்டு இரவலரின்மையின், அவரைப் பெறவிரும்பியென்றவாறு.

கக. தேரித்தந்தென்றது அவ்விரவலருக்கு அவருள்வழித் தேரைப் போகவிட்டு அதிலே அவர்கீன வரப்பண்ணியென்றவாறு.

தேரானென உருபுவிரிக்க ; தேரெனத் தேர்ச்சியாக்கி, அவ்விரவலரை அவருள்ள விடத்தில் தேடிஅழைத்தென்றுமாம்.

கச. பொங்கலாடியென்றது எஃகின பஞ்சுபோல வெளுத்துப் பொங்கியெழுதலைச் செய்தென்றவாறு.

(கடு) வெண்மழைபோலாச் (கசு) சென்ருலியரென்றது அம்மழை பெய்துபுறந்தருங் கூற்றையொத்து அது பெய்துவெண்மழையாகக் கழியுங் கூற்றை ஒவ்வாது தொழிலென்றவாறு.

கஅ. நீடுவரையடுக்கமென விரிக்க; அடுக்கம் - ஈண்டு அடுக்குதல்.

(கசு) அல்கலும் (கஅ) நாடுகைக்கொண்டு (கஎ) வேந்தர்தாரழிந்து அலறப் (கக) பொருது சினந்தணிந்த செருப்புகலாண்மையென மாறிக்கூட்டுக.

(கக) ஆண்மையினையும் (உo) வாளினையும் (உக) உள்ளத்தினையு முடைய குருசிலென்க.

(கடு) மழையை அவன்றன்னோடு உவமியாது அவன் (உக) நாளோடு உவமித்தது, அவனோடு அவன் நாளுக்குள்ள ஒற்றுமைபற்றியென்க.

(க) ஆன்றோர்கண்ண, சான்றோர்புரவல, (உ) நின்னயந்து வந்தனென்; கொற்றவ, (சு) பொருந, (அ) மழவர்மெய்ம்மறை, (கூ) கோவே, அண்ணல், (கஉ) தோன்றல், (கசு) பெரும, (உக) குருசில், நின்னுள் (கடு) வெண்மழைபோலாச் (கசு) சென்ருலியரோவென மாறிக்கூட்டி வினை முடிவுசெய்க.

பெரும, குருசிலென்னும் விளிகள் முன்னின்றவிளிகளோடு கூட்ட வேண்டுதலின், மாறுயிற்று.

இதனுற் சொல்லியது, அவன் உலகுபுரத்தலும் தன்குறையும்கூறி வாழ்த்தியவாறுயிற்று.

(பி - ம்.) கடு. மழைபோலக். ககூ. பொருதுமுரண்செருக்கிய. கஅ. நெடுவரை. (நீ)

(நுசு) விழவுவீற் றிருந்த வியலு ளாங்கட்
கோடியர் முழவின் முன்ன ராடல்
வல்லா னல்லன் வாழ்கவவன் கண்ணி
வலம்படு முரசந் துவைப்ப வாஞ்யர்த்
நு திலங்கும் பூணன் பொலங்கொடி யுழிஞையன்
மடம்பெரு மையி னுடன்றுமேல் வந்த
வேந்துமெய்ம் மறந்த வாழ்ச்சி
வீந்துகு போர்க்களத் தாடுங் கோவே.

துறை - ஒள்வாளமலை.
வண்ணமும் தூக்கும் அது.
பெயர் - (எ) வேந்துமெய்ம்மறந்தவாழ்ச்சி.

நு. பூணன் உழிஞையனென்பன வினைக்குறிப்புமுற்று.

எ. வேந்துமெய்ம்மறந்த வாழ்ச்சியென்றது மாற்றுவேந்தர் அஞ்சித் தங்கள் மெய்யைமறந்த வாழ்வென்றவாறு.

வாழ்ச்சி, மெய்ம்மறத்தல் காரணமாக அதன் காரியமாய் வந்ததாகலான், மெய்ம்மறந்தவென்னும் பெயரெச்சம் நிலப்பெயர்முதல் ஆறுமன்றிக் காரியப்பெயரென வேறொருபெயர்கொண்டதெனப்படும். வாழ்வு-வெற்றிச் செல்வம்.

இச்சிறப்பானே, இதற்கு 'வேந்துமெய்ம்மறந்த வாழ்ச்சி' என்று பெயராயிற்று.

(எ) வாழ்ச்சிக் (அ) களமெனக் கூட்டுக:

(ச) முரசம் துவைப்ப வாஞ்யர்த்து (நு) இலங்கும் பூணனுய்ப் பொலங்கொடி உழிஞையனுய்ப் (அ) போர்க்களத்து ஆடுங்கோ (க) வியலுளாங்கட் (உ) கோடியர்முழவின்முன்னர் ஆடல் (ஈ) வல்லானல்லன்; அவன்கண்ணி வாழ்கவென மாறிக்கூட்டி வினைமுடிவுசெய்க.

'வல்லானல்லன்' என்பதன்முன் கோவென்பது கூட்டவேண்டுதலின், மாறுயிற்று.

இதனுற் சொல்லியது, அவன் வென்றிச்சிறப்புக் கூறியவாறுயிற்று. (சு)

(நள.) ஓடாப் பூட்கை மறவர் மிடறப
விரும்பனம் புடையலொடு வான்கழல் சிவப்பக்
குருதி பனிற்றும் புலவுக்களத் தோனே
துணங்கை யாடிய வலம்படு கோமான்
நு மெல்லிய வகுந்திற் சீறடி யொதுங்கிச்
செல்லா மோதில் சில்வளை விறலி
பானர் கையது பணிதொடை நரம்பின்
விரல்கவர் பேரியாழ் பாலை பண்ணிக்
குரல்புண ரின்னிசைத் தழிஞ்சி பாடி
கo யிளந்துணைப் புதல்வர் நல்வளம் பயந்த
வளங்கெழு குடைச்சூ லடங்கிய கொள்கை
யான்ற வறிவிற் றோன்றிய நல்லிசை
யொண்ணுதன் மகளிர் துனித்த கண்ணினு
மிரவலர் புன்க ணஞ்சும்
கடு புரவெதிர் கொள்வனைக் கண்டனம் வரற்கே.

துறை - விறலியாற்றுப்படை.
வண்ணமும் தூக்கும் அது.
பெயர் - (சு) சில்வளைவிறலி.

(க) மறவர்மிடறபக் (ங) களத்தோனெனக் கூட்டுக.

ங. பனிற்றுதல் - தூவுதல்; பனித்தவது புண்பட்டவீரருடலெனக்கொள்க. களமென்றது ஈண்டுக் களத்தையுணர்த்த பாசறையினை.

நு. வகுந்து - வழி.

சு. சில்வளைவிறலியென்றது பல்வளையிடுவது பெதும்பைப் பருவத்தாகலின், அஃதன்றிச் சில்வளையிடும் பருவத்தாளென அவள் ஆடல் முதலிய துறைக்குரியளாதல் கூறியவாறு.

இச்சிறப்பானே, இதற்கு, 'சில்வளைவிறலி' என்று பெயராயிற்று.

அ. விரல்கவர்யாழென்றதனற்பயன் வாசித்துக் கைவந்தயாழென்றவாறு.

கூ. தழிஞ்சி - தழிஞ்சியென்னுந்துறைப்பொருண்மேல் தந்தபாடல். தழிஞ்சியைக் குரல்புணரின்னிசையிலே பாடியெனக்கொள்க.

கo. புதல்வராகிய நல்வளமென இருபெயரொட்டு.

கக. குடைச்சூல் - சிலம்பு.

(சு) சில்வளைவிறலி, (கடு) புரவெதிர்கொள்வனைத் (கூ) தழிஞ்சிபாடிக் (கடு) கண்டனம்வரற்குச் (சு) செல்லாமோ; (கடு) அப்புரவெதிர்கொள் வனுகிய (ச) வலம்படுகோமான் இதுபொழுது தான் அவ்வெதிர்கோடற்கேற்ப வருவாயினையுடைய (கூ) புலவுக்களத்தோன்காணென மாறிக்கூட்டிவினை முடிவுசெய்க.

(கடு) வரற்குச் (சு) செல்லாமோவெனக் கூட்டவேண்டுதலின், மாறுயிற்று.

இதனுற்சொல்லியது, அவன்வென்றிச்சிறப்போடு அவன்கொடைச் சிறப்பும் உடன்கூறியவாறுயிற்று.

(பி - ம்.) கூ. புலக்களத்தோனே. கஉ. துணித்தி.
கக. குடச்சூல். (எ)

(நிரை.) ஆடுக விறலியர் பாடுக பரிசிலர்
வெண்டோட் டசைத்த வொண்பூங் குவளையர்
வாண்முகம் பொறித்த மாண்வரி யாக்கையர்
செல்லுறழ் மறவர்தங் கொல்படைத் தீஇய
நின்றிணி தூகர்ந்தன மாயி னூளை
மண்புனை யிஞ்சி மதில்கடந் தல்ல
துண்குவ மல்லேம் புகாவெனக் கூறிக்
கண்ணி கண்ணிய வயவர் பெருமகன்
பொய்படு பறியா வயங்குசெந் நாவி
கo னெயிலெறி வல்வி லேவினங்கு தடக்கை
யேந்தெழி லாகத்துச் சான்றோர் மெய்ம்மறை
வான வரம்ப னென்ப கானத்துக்
கறங்கிசைச் சிதடி பொரியரைப் பொருந்திய
சிறியிலை வேலம் பெரிய தோன்றும்
கடு புன்புலம் வித்தும் வன்கை வினைஞர்
சீருடைப் பல்படை டொலிப்பப் பூட்டி
நாஞ்சி லாடிய கொழுவழி மருங்கி
லலங்குகதிர்த் திருமணி பெறூஉ
மகன்கண் வைப்பி னூடுகிழ வோனே.

துறை - செந்துறைப்பாடாண்பாட்டு.
வண்ணமும் தூக்கும் அது.
பெயர் - (கo) ஏவினங்குதடக்கை.

உ. வெண்டோடு - பனந்தோடு ; தோட்டின் கண்ணென விரிக்க. அசைத்தல் - தங்குவித்தல்.

ஈ. வாண்முகம் - வாள்வாய்.

(உ) குவளையரென்றது வினையெச்சவினைக்குறிப்புமுற்று ; அதனைக் (எ) கூறியென்பதனெடுமுடிக்க.

(ஈ) யாக்கையராகிய (ச) மறவரென இருபெயரொட்டு.

அ. கண்ணிகண்ணுதல் - தாங்கள்சூடிய போர்க்கண்ணிக்கு ஏற்ப வினைசெயக்கருதுதல்.

கo. எயிலெறிவல்லிலென்றது விற்படையினை. ஏவிளங்குதடக்கை யென்றது ஏத்தொழிலுக்குள்ள கூறுபாடெல்லாம்விளங்கிய தடக்கையென்றவாறு.

இச்சிறப்பானே, இதற்கு 'ஏவிளங்குதடக்கை' என்று பெயராயிற்று.

கச. பெரியதோன்றுமென்றது பெருகத்தோன்றுமென்றவாறு.

கசு. பல்பகட்டையெனவிரித்துப் பகட்டை அவை ஒலிப்பப்பூட்டி யெனக்கொள்க.

(கசு) பூட்டித் (கஅ) திருமணிபெறூஉமென முடிக்க.

(அ) வயவர்பெருமகன், (கக) சார்ன்றோர்மெய்ம்மறையாகிய (கஉ) வானவரம்பனைப் (கரு) புன்புலம்வித்தும்வன்கைவினைஞர் தம் (கள) கொழுவழி மருங்கில் (கஅ) திருமணிபெறும் (கக) நாடுகிழவோன் (கஉ) என்றுசொல் லுவார்கள் ; அவன் அவ்வாறு செல்வக்குறையிலனுதலான், அத்தரத்திற்கே ற்ப நமக்கு வேண்டுவனதருதலிற் குறையுடையனல்லன் ; வந்தமைக்கேற்ப (க) விறலியராயுள்ளீர், ஆடலைக் குறையறச் செலுத்துமின் ; பரிசிலராயுள் ளீர், கீயிரும் தும்கவிகளைப்பாடிக் கைவரப்பண்ணுமினென்று மாற்றிக்கூட்டி வினைமுடிவுசெய்க.

(கஉ) வானவரம்பன் (கக) நாடுகிழவோனெனைக் கூட்டவேண்டு தலின், மாறுயிற்று.

இதனுற்சொல்லியது, அவனுட்டுச்செல்வமும் அதற்கேற்ற அவன் கொடையும் கூறியவாறுயிற்று.

ஆடுக பாடுகவென்றதற்கு அவன்பாற்சென்று ஆடுக பாடுகவெனக் கூறுது இவ்வாறுகூறியதன் கருத்து, ஆற்றுப்படையென்னுது செந்துறைப் பாடாணென்று கிடந்தமையாலெனக்கொள்க.

(பி-ம்.) எ. புகவென. கக. மேமறை.
கூ. படுவறியர். கள. மருங்கின். (அ)

(நூகூ) பகனீ டாகா திரவுப்பொழுது பெருகி
மாசி னின்ற மாகூர் திங்கட்

பனிச்சுரம் படரும் பாண்மக னுவப்பப்
புல்லிருள் விடியப் புலம்புசே ணகலப்
பாயிரு ணீங்கப் பல்கதிர் பரப்பி
ஞாயிறு குணமுதற் றோன்றி யாஅங்
கிரவன் மாக்கள் சிறுகுடி பெருக
வுலகந் தாங்கிய மேம்படு கற்பின்
வில்லோர் மெய்ம்மறை வீற்றிருங் கொற்றத்துச்
செல்வர் செல்வ சேர்ந்தோர்க் காண
மறியா தெதிர்ந்து துப்பிற் குறையுற்றுப்
பணிந்துதிறை தருபவின் பகைவ ராயிற்
சினஞ்செலத் தணியுமோ வாழ்கவின் கண்ணி
பல்வேறு வகைய நனந்தலை யீண்டிய
மலையவுங் கடலவும் பண்ணியம் பகுக்கு
மாறுமூட் டிருஅ தறம்புரிந் தொழுகு
நாடல் சான்ற துப்பிற் பணைத்தோட்
பாடுசா னன்கலந் தருஉ
நாடுபுறந் தருத னினக்குமார் கடனே.

இதுவுமது.
பெயர் - (உ.) மாகூர்திங்கள்.

(க) நீடாகாது பெருகியெனகின்ற பகலிரவென்னும் சினமேல் வினையெச்சம் (உ) மாசின்றவென்னும் தம்முதலது வினையொடுமுடிந்தன.

உ. மாசியென்றது மாசித்தன்மையை. இனி, அவ்வெச்சங்களோத் திரிப்பினுமமையும். மா கூர்தல்-மாக்கள் குளிர்நாலே உடல்வலோதல்.

இச்சிறப்பானே, இதற்கு, 'மாகூர்திங்கள்' என்று பெயராயிற்று. திங்கள் - மாதம்.

ச. புலம்பு- உலகத்து உயிர்கள் புலம்பு.

கஎ. சினஞ்செலத்தணியுமோவென்றது நின்பாற்சினமானது நின் பால்நின்றும் கையறப்போம்படி சிறுகத் தணிவுபிறக்குமோவென்றவாறு.

இனி,உம்மும் ஓவும் அசையாக்கித் தணியென்பதனே முன்னிலவினை யாக்கி உரைப்பாருமுளர்.

கச. நனந்தலையென்றது பரமண்டலங்களே.

(கச) ஈண்டிய (கரு) பண்ணியமென்றது, அமமண்டலங்களில் தன் பகைவர்பாலீண்டிய பண்டங்களே.

கரு. மலையவும் கடலவுமாகியவென ஒருசொல் வருவிக்க.

கரு - சு. பகுக்கும் ஆறென்றது அப்புண்ணியங்களைப் பலராகவும் ஈத்துக்கொடுக்கும் நெறியென்றவாறு.

கசு. மூட்டிறுமலைனத்திரிக்க. அறம்புரிதல் - காடுகொவலாகிய அறத்திலே மேவுதல்.

கள - அ. தோட்கலனென்றது தோளிற்கேற்ற கலமென்றவாறு ; தோட்குத் திருமென்றுமாம்.

கக. மார், அசை.

(க) விற்லோர்மெய்ம்மறை, (கo) செல்வ, சேர்த்தோர்க்கரணம், (கள) நின்தோட்கேற்ற (கஅ) கன்கலங்களைத் திறைதரும் (கக) காடுகளைப் புறந்தருதல் நின்கடனுயிருக்கும்காலான், (கஉ) நின்பகைவர் (கக) அறியாது எதிர்த்து துப்பிற்குறையுற்றுப் (கஉ) பணிந்து திறைதருவாயின், (கஙு) சினஞ்செலத்தணியுமோ ; நின்கண்ணி வாழ்கவென மாறிக்கூட்டி வினை முடிவுசெய்க.

(கக) 'காடுபுறந்தருதல் நினக்குமார்கடன்' என்பதன்பின் (கஙு) 'சினஞ்செலத்தணியுமோ' என்பதைக்கூட்டவேண்டுதலின், மாறுயிற்று.

இதனுற்சொல்லியது, அவன்வென்றிச்சிறப்புக் கூறியவாறுமிற்று.

(பி - மீ.) க. பகனீடா திரவு. (க)

(சுo.) கோலவிளை மேவற்றுத் தானை தானே
யிகல்விளை மேவலன் றண்டாது வீசுஞ்
செல்லா மோதில் பாண்மகள் காணியர்
மிஞிறுபுற மூசவுந் தீஞ்சுவை திரியா
(ரு) தாம்போழ் கல்லா மரம்படு தீங்கனி
யஞ்சே றமைந்த மூண்டை விளைபழ
மாறுசென் மாக்கட் கோய்தகை தடுக்கு
மரு அ விளையு ளரு அ யாணர்த்
தொடைமடி கீளைந்த சிலையுடை மறவர்
கo பொங்குபிசிர்ப் புணரி மங்குலொடு மயங்கி
வருங்கட லூதையிற் பனிக்குந்
துவ்வா நறவின் சாயினத் தானே.

துறை - விறலியாற்றுப்படை.
வண்ணமும் தூக்கும் அது.
பெயர் - (ரு) மரம்படுதீங்கனி.

சு. மிஞிறு புறமூசவும் தீஞ்சுவைதிரியாமை, அப்பழந்தின்புறத்து வன்மையை.

நு. அரம்போழ்கல்லாவென்றது புறத்துவன்மையால் அரிவாளும் போழமாட்டாவென்றவாறு. 'அரம்போழ் கல்லா மரம்படு தீங்கனி' என்றது புறக்காழனவாகிய பனைமுதலியவற்றின் தீங்கனியைநீக்குதற்கு.

இச்சிறப்பாலும் முன்னும்பின்னும்வந்தஅடைச்சிறப்பாலும்இதற்கு 'மாம்படுதீங்கனி' என்று பெயராயிற்று.

சு. முண்டைவினைபழம் - மு ட் டை க ள் போலும் வினைபழம்; மூட்டையென்றது மெலிந்தது.

(நு) மரம்படுதீங்கனியாகிய (சு) முட்டைவினைபழமென இருபெய ரொட்டி.

(எ) ஓய்தகைதடுக்கும் (கஉ) துவ்வாகறவெனக் கூட்டுக.

அ. அறுஅயாணரென்றது, இடையறுத கடல்வருவாய்முதலாய செலவங்களை.

கூ. தொடைமடி - அம்புதொடுத்தெய்தலின் மடிதல்.

கo. புணரியொடு, மங்குலொடு என ஒடுவை இரண்டிடத்தும் கொள்க.

மயங்கவெனத்திரிக்க; மயங்குவது (கக) வருகின்ற ஊதையெனக் கொள்க.

(கூ) மறவர் (கக) கடலூதையிற்பனிக்கும் (கஉ) நறவெனக் கூட்டி, ஆண்டுவாழுமறவர் கடலூதையால்மட்டும் நடுங்கும் நறவென்க.

கஉ. நறவு - ஓரூர்; துவ்வாகறவு, வெளிப்படை.

அவன்றான், இப்பொழுது (கஉ) துவ்வாகறவின் சாயினத்தான்; இனித் (க) தானை கொலைவினை மேவற்று; ஆகலால் தான் (உ) இகல்வினை மேவலன்; இன்னபொழுது இன்னவிடத்து எழுமெனத்தெரியாது; (கூ) பாண்மகளே, நாம் அவனைக் காணியர் செல்லாமோ; செல்லின், (உ) தண் டாது வீசுமெனக்கூட்டி வினைமுடிவுசெய்க.

இதனைச்சொல்லியது, அவன்கொடைச்சிறப்பொடு வெற்றிச்சிறப் பும் கூறியவாறாயிற்று. (கo)

இதன் பதிகத்துத் தண்டாரணியமென்றது, ஆரியர்நாட்டிலே உள்ள தொரு நாடு. கபிலையென்றது குமாற்பசு.

(பதிகம்.)

குடக்கோ நெடுஞ்சேர லாதற்கு வேள
ளாவிக் கோமான் றேவி யீன்றமகன்
றண்டா ரணியத்துக் கோட்பட்ட வருடையைத்
தொண்டியுட் டந்து கொடுப்பித்துப் பார்ப்பார்க்குக்
கபிலையொடு குடநாட் டோரூ ரீத்து

வான வரம்பனெனப் பேரிளி தெளக்கி
யேனை மழவரைச் செருவிற் சுருக்கி
மன்னரை யோட்டிக்
குழவிகொள் வாரிற் குடிபுறந் தந்து
நாடல் சான்ற நயனுடை நெஞ்சி
னாடுகோட் பாட்டுச் சேரலாதனை
யாத்த செய்யு ளடங்கிய கொள்கைக்
காக்கைபாடினியார் நச்செள்ளையார் பாடினார் பத்துப்பாட்டு.

(பி - ம்:) கோட்பட்டவாடையை. நச்சனையார்.

அவைதாம்: வடிவுதுணையிர், சிறுசெங்குவளை, குண்டு கண்ணகழி, நில்லாத்தானை, துஞ்சும்பந்தர், வேந்துமெய்ம்மறந்த வாழ்ச்சி, சில்வளைவிறலி, ஏவிளங்குதடக்கை, மாகூர்திங்கள், மரம் படுதீங்கனி. இவைபாட்டின்பதிகம்.

பாடிப்பெற்றபரிசில் : கலனணிகவென்று அவர்க்கு ஒன்பதுகாப் பொன்னும் நூறுயிரங் காணமுங்கொடுத்துத் தன்பக்கத்துக் கொண்டான் அக்கோ.

ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் முப்பத்தெட்டியாண்டு வீற்றிருந் தான்.

(பி - ம்.) ஆடுகோட்பாடுசேரலாதன்.

ஆறும்பத்து முற்றிற்று

(கஉ.) பலாஅம் பழுத்த பசும்புண் ணரியல்
வாடை துரக்கு நாடுகெழு பெருவிற
லோவத் தன்ன வினைபுனை நல்லிற்
பாவை யன்ன நல்லோள் கணவன்
ரு பொன்னி னன்ன பூவிற் சிறியிலைப்
புன்கா லுன்னத்துப் பகைவ னெங்கோ
புலர்ந்த சாந்திற் புலரா வீகை
மலர்ந்த மார்பின் மாவண் பாரி
முழவுமண் புலர விரவல ரினைய
கo வாராச் சேட்புலம் படர்ந்தோ னளிக்கென
விரக்கு வாரே னெஞ்சிக் கூறே
னீத்த திரங்கா னீத்தொறு மகிழா
னீத்தொறு மாவள் ளியனென நுவலுங்
னல்லிசை தரவந் திசினே யொள்வா
கரு ஞரவுக் களிற்றுப் புலாஅம் பாசறை
நிலவி னன்ன வெள்வேல் பாடினி
முழவிற் போக்கிய வெண்கை
விழவி னன்னநின் கலிமகி ழானே.

துறை - காட்சிவாழ்த்து.
வண்ணம் - ஒழுகுவண்ணம்.
தூக்கு - செந்தூக்கு.
பெயர் - (கரு) புலாஅம்பாசறை.

க. பலாஅம் பழுத்த-பலாப்பழுத்தவென்னும் பகரவொற்றுமெலிந்தது. பசும்புண்ணென்றது, புண்பட்டவாய்போலப் பழுத்துவிழுந்த பழத்தினை. அரியலென்றது, அப்பழத்தில்லின்றும் பிரித்து அரித்துவிழுகின்றதேனை.

கo. படர்ந்தோனென்றது முற்று. அளிக்கெனவென்றது நீசம்மை அளிப்பாயாகவெனச் சொல்லியென்றவாறு.

கக. இரக்கென்றது, தன்மைவினை. எஞ்சிக் கூறேனென்றது உண்மையினை ஏல்லையைக்கடந்து பொய்யே புகழ்ந்து சொல்லேனென்றவாறு.

கட. ஈத்ததற்கென்காண்காவது விரிக்க. ஈத்தொறுமகிழானென்றது ஈயும்தோறெல்லாம் தான் அபலாயிருத்தலல்லது ஈயாதின்றேமென்று ஒரு மகிழ்ச்சியுடையனல்லனென்றவாறு.

கஉ. நுவலுமென்றதற்கு உலகம் நுவலுமென வருவிக்க.

கரு. புலாஅம்பாசறையென்றது வீரரெல்லாரும் போர்செயது புண்பட்டமிகுதியாற் புல்லாதுகின்ற பாசறையென்றவாறு.

இச்சிறப்பானே, இதற்கு, 'புலாஅம்பாசறை' என்று பெயராயிற்று.

கசு. வேலியென இரண்டாவதுவிரித்துப் பாடினியிற் பாடுதலொடு முடிக்க.

கள. வெண்கையென்றது பொருள்களை அவிகயிக்கும் தொழிற்கை யல்லாத, வெறுமனே தாளத்திற்கு இசைவிடும் எழிற்கையினை.

கஎ. கலிமகிழென்றது கலிமகிழையுடைய ஓலக்கத்தை.

யான் (அ) பாரி (கo) சேட்புலம்படர்ந்தோன் ; நீ அளிக்கவெனச் சொல்லி (கக) இரக்கென்றுவந்து சில புகழ்ந்து சொல்லுகின்றேனுமல் லேன் ; அஃதன்றி உண்மையொழியப் புகழ்ந்துசொல்லுகின்றேனுமல் லேன்; (கஉ) ஈத்ததற்கு இரங்காமை முதலாகிய அப்பாரிகுணங்கள் நின் பாலுமுளவாக (கரு) உலகஞ்சொல்லும் நின் (கச) புகழை நின்பாலே தரவந்தேன் ; (கஎ). நின்பாசறையின் கலிமகிழின்கண்ணேயென வினை முடிவுசெய்க.

இதனைச் சொல்லியது, அவன்வென்றிச் சிறப்பொடுபடுத்து அவன் கொடைச்சிறப்புக் கூறியவாறுமாயிற்று.

(பி - மி.) உ. தூக்கும். சு. எங்கோன். கட. ஈதொறு. (க)

(சூஉ.) இழையணிந் தெழுதரும் பல்களிற்றுத் தொழுதியொடு
மழையென மருளு மாயிரும் பஃறே
லெஃகுபடை யுறுத்த கொய்சுவற் புரவியொடு
மைந்துடை யாரெயில் புடைபட வளீஇ
நு வீங்குபுறத் திறுக்கும் பசும்பிசி ரொள்ளழன்
ஞாயிறு பல்கிய மாயமொடு சுடர்திகழ்
பொல்லா மயலொடு பாடிமிழ் புழிதரு
மடங்கல் வண்ணங் கொண்ட கடிந்திறற்
றுப்புத்துறை போகிய கொற்ற வேந்தே
கo புனல்பொரு கிடங்கின் வரைபோ லிஞ்சி
யணங்குடைத் தடக்கையர் தோட்டி செப்பிப்
பிணிக்குதிறை தருபகை வராயிற்

புல்லுடை வியன்புலம் பல்லா பரப்பி
வளனுடைச் செறுவின் விளைந்தவை யுதிர்ந்த
கரு களனறு குப்பை காஞ்சிச் சேர்த்தி
யரிய லார்கை வன்கை விளைந
ரருவி யாம்பன் மலைந்த சென்னியு
ராடுசிறை வரிவண் டோப்பும்
பாடல் சான்றவவ ரகன்றலை நாடே.

துறை - சேந்துறைப்பாடாண்பாட்டு.
வண்ணமும் நூக்கும் அது.
பெயர் - (கo) வளைபோலிஞ்சி.

உ. பஃறேலொடுவென்னும் ஓடு, விகாரத்தால் தொகுகதாக்கி விரிக்க.

(கு). புற்றத்திறுக்குமென்றதற்கு நின் தாணை புறத்திறுக்குமென வருவிக்க.

(சு) ஞாயிறுபல்கிய மாயமொடு (எ) உழிதரு (அ) மடங்கலெனக் கூட்டி, உலகம் கடல்கொண்டுகிடந்தகாலத்து அக்கடல்நீரெல்லாம்வற்ற எரித்தற்குத் தோன்றும் ஆதித்தர் பலவான மாயத்தோடேகூடி அந்நீர் வற்றும்படி திரிதரு வடவைத்தீயென்றுரைக்க.

மாயம்போறலான் மாயமெனப்பட்டது.

(சு) சுடர்திகழ்பு (எ) ஒல்லா மயலொடு பாடமிழ்பு உழிதரு (அ) மடங்கலென்றது சுடர்திகழ்ந்து உயிர்கட்குப் பொறுக்கமுடியாத மயக்கத்தைச் செய்தலோடே ஒலித்துத் திரிதரும் மடங்கலென்றவாறு.

(கு) ஒள்ளழல் (அ) மடங்கல்வண்ணம் கொண்டவெனக்கூட்டி, ஒள்ளழலானது மடங்கலாகிய அழலின்வண்ணத்தைக்கொள்கைக்குக் காரணமாய்நின்றவெனவுரைக்க.

இனி (சு) ஞாயிறுபலவாதலை அவன்பகைவர்நாட்டில் உற்பாதம்காத்தோன்றும் ஆதித்தர்பலராகி, (அ) மடங்கலென்றதனைக் கூற்றமாக்கி, சுடர்திகழ்பு என்றதனைத் திகழவெனத்திரித்து, ஒள்ளழலானது ஞாயிறு பல்கிய மாயமொடு சுடர்திகழ மடங்கல்வண்ணங்கொண்டவேந்தேயென உரைப்பாருமுளர்.

(கக) தட்கையராகிய (கஉ) நின் பகைவரென மாறிக்கூட்டுக.

(கo) வளைபோல் இஞ்சியை அரணுகவுடையராயிருந்தே (கஉ) இறைதருவெனச்சொன்ன சிறப்பானே, இதற்கு 'வளைபோலிஞ்சி' என்று பெயராயிற்று

(கஉ) திறைதருபவாயின், (ககூ) நாடுபாடல்சான்றவெனக் கூட்டுக; (ககூ) சான்றவென்றது முற்று.

கஅ. வினைத்தென்றதனை வினையவெனத் திரிக்க.

கரு. களைகாகுப்பையென்றது களத்திற் கடாவிடுதற்றொழிலற்ற தூற்றுப்பொலியை.

(கஈ)பரப்பியென்னும் வினையெச்சத்தினைச் (கரு)சேர்த்தியென்னும் வினையொடுமுடித்து, அதனை (கஅ) வரிவண்டோப்புமென்னும் வினையொடு முடிக்க.

கஅ - கூ. வண்டோப்புநாடென மாறிக்கூட்டுக.

(கூ) கொற்றவேல்தே, (கஉ) நின்பகைவர் (கக) தோட்டிசெப்பிப் (கஉ) பணிந்துதிறைதருபவாயின், (ககூ) அவரகன்றலைநாடு பாடல்சான்ற வெனமாறிக்கூட்டி வினைமுடிவுசெய்க.

இதனைச் சொல்லியது, அவன்வென்றிச்சிறப்புக் கூறியவாறாயிற்று.

(பி - மீ.) சு. மல்லிய. கக. கொட்டிசெப்பி.
எ. எழுதரு. கஉ. பகைஞர். (உ)

(கூஈ) பார்ப்பார்க் கல்லது பணிபறி யலையே
பணியா வுள்ளமொ டணிவரக் கெழீஇ
நட்டோர்க் கல்லது கண்ணஞ் சலையே
வணங்குசிலை பொருதகின் மணங்கமழ் புகல
ரு மகளிர்க் கல்லது மலர்ப்பறி யலையே
நிலந்திறம் பெயருங் காலை யாயினுங்
கிளந்த சொன்னீ பொய்ப்பறி யலையே
சிறியிலை யுழிஞைத் தெரியல் சூடிக்
கொண்டி மிகைபடத் தண்டமிழ் செறித்துக்
கo குன்று நிலைதளர்க்கு மூருமிற் சிறி
யிருமுற் றிருவ ரோட்டிய வொள்வாட்
செருமிகு தானை வெல்போ ரோயே
யாடுபெற் றழிந்த மள்ளர் மாறி
நீகண் டனையே மென்றனர் நீயு
கரு நுந்நுகந் கொண்டினும் வென்றேரு யதனைற்
செல்வக் கோவே சேரலர் மருக
காற்றிசை யெடுத்த முழங்குகுரல் வேலி
னைந்தலை யுலகஞ் செய்தநன் முண்டெனி

னடையடிப் பறியா வருவி யாம்ப
உo லாயிர வெள்ள வூழி
வாழி யாத வாழிய பலவே.

இதுவும் அது.
பெயர் - (ககூ) அருவியாம்பல்.

உ. பனியாவுள்ளமென்றது கட்பு நின் தானிலையின் ஒருகாலும் தாழ்வு படாத உள்ளமென்றவாறு.

(உ) கெழீஇயென்னுமெச்சத்தினை (ங) கட்டலென்னும் தொழி லொடுமுடிக்க.

(ச) அகலம் (ஞ) மகளிர்க்கல்லது மலர்ப்பறியலேயேன்றது நின் னெடு பொருவாரின்மையின் நின்அகலத்தை நின்மகளிர்போகத் துக்கிட மாகவல்லது மலர்வித்தலே அறியாயென, "மகளிர் மலைத்த லல்லது மன்னர், மலைத்தல் போகிய சிலைத்தார் மார்ப" (புறநானூறு, கo) என்றதுபோலக் கொள்க.

ட. சிறியவிலையென்றது கடைக்குறை.

ண. தமிழ்செறித்தென்றது மாற்றாரது தமிழ்ப்படையையெல்லாம் இடையறப்படுத்தியென்றவாறு.

தக. ஒருமூன்று - ஒருவர்ப்பு. இருவர் - சோழனும் பாண்டியனும்; இருவரென்னுமுருபு விகாரத்தால் தொக்கது.

நக. ஆடு பெற்று அழிந்த மள்ளரென்றது முன்பு பிறரொடு பொருது வென்றிபெற்றுப் பின் நினக்கு அழிந்தமள்ளரென்றவாறு.

மாறியென்றது நின்னெடுபகைமாறி யென்றவாறு.

பச. நீ கண்டனையேமென்றது இன்றுமுதல் நின்னுலே படைக்கப் பட்டாற் போல்வேமென்றவாறு.

பக. அருவியாம்பலென்றது வீ அரிய எண்ணும்பலென்றவாறு.

வீயென்பதுகுறுகிற்று; அருவி, பண்புத்தொகை.

அடையடிப்பறியாவருவியரம்பலெனக்கூறிய இச்சிறப்பானே, இதற்கு அருவியாம்பல் என்று பெயராயிற்று.

(உக) பல (ககூ) ஆம்பலெனமாறிக்கூட்டுக.

(எ) நீ (க)பார்ப்பார்க்கல்லது பணிபறியலே; (ங)கட்டோர்க்கல்லது கண்ணஞ்சலே; (ச) நின்அகலம் (ஞ) மகளிர்க்கல்லது மலர்ப்பறியலே; (ஏ) இளந்தகொற் பொய்ப்பு அறியலே; இவை நின்னியல்பு; இவையேயன்றி (கஉ) வெல்போரோய், முன் பிறர்பால் (ஙக) வெற்றிபெற்று நினக்கு அழிந்த மள்ளர் நின்னெடு பகைமாறி (பச) நீகண்டனையேமென்று தாங்களுறு,

அதற்கு ஏற்ப நீயும் நின்பெருமையும் கண்ணோட்டமுமர்கிய (கடு) நும் நுகங் கொண்டு இன்னும் வென்றிசூர்ந்தனை; நின்குணங்கள் இவ்வாறுகிய அதனானே (கசு) செல்வக்கோவே, சேரலர்மருகனே, (உக) வாழியாதனே, (கீஅ) உலகஞ்செய்த நன்றுண்டெனிற் (உக) பல (ககு) ஆம்பலாகிய (உo) ஆயிரவெள்ளவூழி (உக) வாழ்கவென மாறிக்கூட்டி வினைமுடிவுசெய்க.

(உசு) 'வாழியாத' என்னும்விளி (கசு) 'செல்வக்கோவே' என்பது முதலாய விளிகளின்பின்னிற்கவேண்டுதலின், மாறுயிற்று.

இதனுற்சொல்லியது, அவன் பலகுணங்களோயும் ஒருங்குகூறி வாழ்த்தியவாறுயிற்று.

(பி - ம்) கூ. மலைப்பு. கடு. நுந்நுங்கொண்டினும் வென்றேயே.
கூ. கொண்டமை.
கo. குன்றினிலை. ககு. கடையெடுப்பறியா. (கூ)

(சூசு.) வலம்படு மூசின் வாய்வாட் கொற்றத்துப்
பொலம்பூண் வேந்தர் பலர்நி லம்ம
வறங்கனைந்து வயங்கிய காவிற் பிறங்கிய
வுரைசால் வேள்வி மூடித்த கேள்வி
கூ யந்தண ரருங்கல மேற்ப நீர்பட்
டிருஞ்சே றுடிய மணன்மலி முற்றத்துக்
களிறுநிலை முணைஇய தாரருந் தகைப்பிற்
புறஞ்சிறை வயிரியர்க் காணின் வல்லே
யெஃகுபடை யறுத்த கொய்சுவற் புரவி
கo யலங்கும் பாண்டி விழையணிக் தீமென
வாளுக் கொள்கையை யாதலி னவ்வயின்
மாயிரு விசும்பிற் பன்மீ ஞெளிகெட
நூயிறு தோன்றி யாங்கு மாற்ரு
ருறுமுரண் சிதைத்தநின் ஞேன்முள் வாழ்த்திக்
கடு காண்கு வந்திசிற் கழறுடி யண்ணன்
மைபடு மலர்க்கழி மலர்ந்த நெய்த
லிதழ்வனப் புற்ற தோற்றமொ டியர்ந்த
மழையினும் பெரும்பயம் பொழிதி யதனுற்
பசியுடை யொக்கலை யொரீஇய
விசைமேந் தோன்றனின் பாசறை யானே.

துறை - காட்சிவாழ்த்து.
வண்ணமும் தூக்கும் அது.
பெயர் - (சு) உரைசால்வேள்வி.

உ. பலர்தில்லென் புழி, தில், ஒழியிசை.

சு. உரைசால்வேள்வியென்றது யாகங்கள்எல்லாவற்றினும் பெரிய வும் அரியவுமாக உளையமைந்த வேள்வியென்றவாறு.

இச்சிறப்பானே, இதற்கு 'உரைசால்வேள்வி' என்று பெயராயிற்று.

எ. களிறு நிலைமுணவுதற்குக்காரணம் (சு) இருஞ்சேறுடுதல்.

தார்ருந்தகைப்பென்றது ஒழுங்குபோட்டையுடைய ஆண்டுவாழ்வார்க் கல்லது பிறர்புகுதற்கரிய மாளிகைக்கட்டணமென்றவாறு.

தார் - ஒழுங்கு. தகைப்பு - கட்டணம்.

அ. புறஞ்சிறை - அதன்சிறைப்புறம்.

கூ. எஃகுபடை - கூரியபடை.

கo. பாண்டில் - தேர்பூணும் எருதுகள்.

அ-கo. புறஞ்சிறை வயிரியர்க்காணின்ஈமென்றது நம்மை அவர்கள் காணவேண்டுவதில்லை; நம் மாளிகைமதிற்புறத்து நீயிர்காணினும் கெடுமி னென்றவாறு.

ஈமென்றது அவ்வீகைத்துறைக்குக் கடவாரை.

கக. அவ்வயினென்றது பின்னூரிடத்தென்றவாறு.

(கo) ஈமென (கக) அவ்வயின் ஆனுக்கொள்கையையாதலினென மாறிக்கூட்டுக.

(கக) ஆதலினென்பதனை (கஅ) மழையினும் பெரும்பயம்பொழிதி யென்பதனோடுகூட்டி, பின்னூரிடத்து அவ்வயின் ஆனுக்கொள்கையை யாய்ப் போந்தபடியாலே ஈண்டு பின்பாசறையிடத்து மழையினும் பெரும் பயம்பொழியாநின்றுயெனவுரைக்க.

(கஉ) ஞாயிறுதோன்றியாங்கு மாற்றூர் (கச) உறுமுரண்சிதைத்த வென முடிக்க.

(கசு) நெய்தல் (கஎ) இதழ்வனப்புற்றதோற்றமொடு (கஅ) பயம் பொழிதியெனக்கூட்டி, இவன்றன் நிறம் கருமையாக்கி அந்நிறத்தோற்றத் தானும் மழையோடுஉவமமாக்கியுரைக்க.

கஙு. பசியுடையொக்கலை அப்பசியையொருவியவென்பப் பசிவருவிக்க.

உலகத்து (உ) வேந்தர்பலருளர்; அவராற் பெறுபயன் என்? (எ) தகைப்பிற் (அ) புறஞ்சிறைவயிரியர்க்காணின் (கo) ஈமென (கக) அவ்வயின் ஆனுக்கொள்கையையாதலின், (கஅ) மழையினும் பெரும்பயம்பொழிதி ; அதனால் (கடு) அண்ணல், (உo) தோன்றல், (கஙு)பசியுடையொக்கலை யீ

(உo) பாசறையார்னே (கச) கின் நோன்முள்வாழ்த்திக் (கரு)காண்கு வந்தி சினென மாற்றிக்கூட்டி வினைமுடிவுசெய்க.

(கஅ) 'அதனால்' என்பதன்பின் (கரு) 'அண்ணல்' (உo)'தோன்றல்' என்னும் விளிகள் நிற்கவேண்டுதலின், மாறுயிற்று.

இதனாற்சொல்லியது, அவன்கொடைச்சிறப்பினை வென்றிச்சிறப் பொடுபடுத்துக்கூறியவாறுயிற்று.

ச - ரு. ஈயவென்றதுபாடமாயின், உரைசாலென்றது கூறும். 'உரைசால், வேள்வி முடித்த கேள்வி யந்தண, ரருங்கல மேற்ப வீயநீர் பட்டு' என்று பாடமாகவேண்டும்.

(பி - மீ.) கஉ. தோன்றியன்ன. கள. நோக்கமொடு. (அ)

(சுரு.) எறிபிண மிடறிய செம்மறுக் குளம்பிற்
பரியுடை நன்மா விரியுளை சூட்டி
மலைத்த தெவ்வர் மறந்தபக் கடந்த
காஞ்சி சான்ற வயவர் பெருமக
ரு வில்லோர் மெய்ம்மறை சேர்ந்தோர் செல்வ
பூணணிந் தெழிலிய வணைந்துவர வினமுலை
மாண்வரி யல்குன் மல்ர்ந்த நோக்கின்
வேய்புரை பெழிலிய விளங்கிறைப் பணைத்தோட்
காமர் கடவுளு மாளுங் கற்பிற்
கo சேணுறு நறுநுதற் சேயிழை கணவ
பாணர் புரவல பரிசிலர் வெறுக்கை
பூணணிந்து விளங்கிய புகழ்சான் மார்பின்
ஞண்மகி ழிருக்கை யினிதுகண் டிகுமே
தீந்தொடை நரம்பின் பாலை வல்லோன்
கரு பையுள் ளுறுப்பிற் பண்ணுப் பெயர்த்தாங்குச்
சேறுசெய் மாரியி னளிக்குகின்
சாறுபடு திருவி னணைமகி ழானே.

துறை - பரிசிற்றுறைப்பாடாண்பாட்டு.
வண்ணமும் தூக்கும் அது.
பெயர் - (கஉ) நாண்மகிழ்நக்கை.

உ. விரியுளைசூட்டியென்றதனற்பயன் மாவிற்குப் போர்வேட்கை பிறத்தல்.

(உ) சூட்டிக் (ஈ) கடந்தவெனமுடிக்க.

சு. காஞ்சி சான்ற வயவரென்றது நிலையாமை எப்பொழுதும் உள்ளத்திற் கொண்டிருத்தலமைந்த வீரரென்றவாறு.

சுரு. வணங்குவரலென்பது ஒருவாய்பாட்டு விகற்பம்.

கஙு. அவன் ஓலக்க இருக்கையின்செல்வத்தை நாண்மகிழிருக்கை யெனக் கூறிய சொற்சிறப்பானே, இதற்கு 'நாண்மகிழிருக்கை' என்று பெயராயிற்று.

கசு. நீர்தொடை - பாலைக்கோவைகளாகிய வீக்குநிலை.

(கரு) பையுளுறுப்பிற் பண்ணுப்பெயர்த்தாங்கு (கசு) அளிக்கும் (கள) ஈனையெனக்கூட்டி எல்லாப்பண்களிலும் வருத்தத்தைச்செய்யும் உறுப்பினையுடைய பாலைப்பண்கள்பலவற்றையும் ஒரோவொன்றாகப் பெயர்த்துவாசிக்குமாறுபோலே ஒன்றையொன்றுஒவ்வாத இன்பத்தை உண்டவர்க்குக்கொடுக்கும் பலதிறத்து மதுவெனவுரைக்க.

கள. ஈனையென்றது ஈண்டு மதுவிற்கெல்லாம் பொதுப்பெயராய் நின்றது.

கசு. மாரியினென்னும் உவமம் மதுக்களில் ஒரோவொன்றைக் கொடுக்கும் மிகுதிக்கு உவமம்.

கள. சாறுபடுதிருவினென்ற உவமம் அம்மதுக்களைப்பானம்பண்ணுங்காலத்து அலங்காரமாகக் கூட்டும் பூவும் விரையுமுதலாய பொருள்களுக்கு உவமம். சாறென்றது விழாவின்றன்மையை; மகிழென்றது மகிழ்ச்சியையுடைய ஓலக்கவிருப்பினை.

(சு) வயவர்பெருமக, (ரு) வில்லோர்மெய்ம்மறை, சேர்ந்தோர் செல்வ, (கo) சேயிழை கணவ, (கக) பாணர்புரவல, பரிசிலர்வெறுக்கை, (கஉ) புகழ்சான்மார்ப, நின் (கஙு) நாண்மகிழிருக்கையின்சிறப்பெல்லாம் (கள) நின்னீனமகிழின் கண்ணே (கஙு) இனிதுகண்டேமெனக்கூட்டி வினைமுடிவு செய்க.

இதனாற்சொல்லியது, அவன் ஓலக்கவிருக்கைத்தொடுபடுத்து அவன் செல்வச்சிறப்புக் கூறியவாறுயிற்று. (ரு)

(சுசு) வாங்கிரு மருப்பிற் றீந்தொடை பழுனிய
விடனுடைப் பேரியாழ் பாலை பண்ணிப்
படர்ந்தனை செல்லு முதுவா யிரவல
விடியிசை மூசமொ டொன்றுமொழிந் தொன்னூர்
(ரு) வேலுடைக் குழூஉச்சமந் ததைய நூறிக்
கொன்றுபுறம் பெற்ற பிணம்பயி லழுவத்துத்
தொன்றுதிறை தந்த களிற்றொடு நெல்லி

னம்பண வளவை விரிந்துறை போகிய
வார்பத நல்கு மென்ப கறுத்தோ
கo ருறுமுரண் டாங்கிய தாரருந் தகைப்பி
ஞண்மழைக் குழுஉச்சிமை கடுக்குந் தோன்றற்
ரேன்மிசைத் தெழுதரும் விரிந்திலங் கெஃகிற்
ரூர்புரிந் தன்ன வாளுடை விழவிற்
போர்படு மள்ளர் போந்தொடு தொடித்த
கரு கடவுள் வாகைத் துய்வீ யேய்ப்பப்
பூத்த முல்லைப் புதல்சூழ் பழவை
கடத்திடைப் பிடவின் ரெடைக்குலைச் சேக்கும்
வான்பளிங்கு விரைஇய செம்பரன் மூரம்பி
னிலங்குகதிர்த் திருமணி பெறூஉ
உo மகன்கண் வைப்பி ஞடுகிழ வோனே.

துறை - செந்துறைப் பாடாண்பாட்டு.
வண்ணமும் தூக்கும் அது.
பெயரீ - (கசு) புதல்சூழ்பறவை.

ரு. படர்ந்தனெனென்றது வினையெச்சமுற்று; படர்தல் - நினைவு.

சு. ஒன்றுமொழிதல் - வஞ்சினங்கூறல்.

(ச) ஒன்றுமொழிந்து (சு) கொன்றுபுறம்பெற்றவெனக் கூட்டி, ஒன்றுமொழிதலும் கொன்றுபுறம்பெறுதலும் ஒன்னாரதன்றி இவன் தொழிலாக வுரைக்க.

(ச) ஒன்னாரது (டு)குழுவெனக்கூட்டி, கொன்றதும் புறம்பெற்றதும் அக்குழுவையேயாகவுரைக்க.

எ. திறைதந்தவென்றதற்கு அவன்ஒன்னார் திறையாகத்தந்தவென வருவித்துரைக்க.

அ. அம்பணம் - மரக்கால். உறைபோதல் - உறையிடமுடியாதொழிதல். அளவைவிரியவெனத் திரிக்க.

(எ) நெல்லின் (கூ) ஆர்பதமென இருபெயரொட்டு.

கo. தாரருந்தகைப்பு - ஒழுங்குடைய மாற்றாரால்குலைத்தற்கரிய படைவகுப்பு.

கக. ஞண்மழை - பருவமழை.

கஉ. தோலொடுவென ஒடு விரிக்க.

கஙூ. தார்புரிந்தன்ன வாள் - பூமாலைகள் அசைந்தாற்போல ஆடங்கு கின்ற வாள்.

(கo) தகைப்பினையும் (கஉ) எஃகினையுமுடைய (கச) போரெனக் கூடுக.

கடு. கடவுள்வாகை - வெற்றி மடந்தையாகிய கடவுள் வாழும் வாகை.

கச - சு. கிழித்துக் குறுகறுக்கி வாகையோடு இடைவைத்துத் தொடுத்த பனங்குருத்து முல்லைமுகைக்கொப்பாகவும் வாகைவீ அம்முல்லையைச்சூழ்ந்த வண்டிற்கொப்பாகவும் உவமங் கொள்ளவைத்த சிறப்பானே, இதற்கு, 'புதல்சூழ்பறவை' என்று பெயராயிற்று.

ககூ. திருமணிபெறுவார் அந்நாட்டாராகக்கொள்க.

அவனை (ங) கினைத்துச்செல்லுமுதுவாயிரவலனே, நின்னினைவிற் கேற்ப (உo) நாடுகிழவோன் தனக்குப்போரின்மையான் வென்றுகொடுப்பதின்றி (ச) ஒன்னார் (சு) பிணம்பயிலழுவத்துத் (எ) திறையாகத்தந்த களிற்றைநீ தன்னூட்டுவினைந்த நெல்லாகிய (கூ) உணவினைக் கொடாதின்றுனென்று எல்லாரும் சொல்லுவார்கள்; ஆதலால், அவன்பால் ஏகெனக் கூட்டி வினைமுடிவுசெய்க.

இதனைச்சொல்லியது, அவன்வென்றிச்சிறப்புடன் படுத்துக் கொடைச்சிறப்புக் கூறியவாறுயிற்று.

'படர்ந்தனைசெல்லும்' என்று பாணன் தன்னில் நினைவனகூறினமையால், துறை பாணாற்றுப்படையன்றிச் செந்துறைப்பாடாணுயிற்று.

(பி - மீ) உ. யாழ்ப்பாலை. ங. கடறுழந்துசெல்லும். (சு)

(சுஎ.) தொடிமணம் பட்ட நெடுமொழி யொக்கலொடு
பந்தர்ப் பெயரிய பேரிசை மூதூர்க்
கடனறி மரபிற் கைவல் பாண
தெண்கடன் முத்தமொடு நன்கலம் பெறுகுவை
ரு கொல்படை தெரிய வெல்கொடி நுடங்க
வயங்குகதிர் வயிரொடு வலம்புரி யார்ப்பப்
பலகளிற் றினநிரை புலம்பெயர்ந் தியல்வர
வமர்க்க ணமைந்த வவிர்நிணப் பரப்பிற்
குழூஉச்சிறை யெருவை குருதி யாரத்
கo தலைதுமிந் தெஞ்சிய வாண்மலி யூபமொ
டிருவில் பேய்மகள் கவலை கவற்ற
நாடிட னெடுங்கப் பலசெருக் கொன்று

நாறிணர்க் கொன்றை வெண்போழ்க் கண்ணியர்
வாண்முகம் பொறித்த மாண்வரி யாக்கையர்
கரு நெறிபடு மருப்பி னிருங்கண் மூரியொடு
வலைதலை மாத்த தாழ்கரும் பாசக
ரெஃகா னேங் கடிப்ப மெய்சிதைத்து
சாந்தெழின் மறைத்த சான்றூர் பெருமகன்
மலர்ந்த காந்தண் மாரு தூதிய
கடும்பறைத் தும்பி சூர்நசைத் தாஅய்ப்
பறைபண் ணழியும் பாடிசா னெடுவரைக்
கல்லுயர் கோிப் பொருநன்
செல்வக் கோமாற் பாடினே செலினே.

துறை - பாணாற்றுப்படை.
வண்ணமும் தூக்கும் அது.
பெயர் - (ககூ) வெண்போழ்க்கண்ணி.

க. கொடுமணமென்றது ஓரூர்.

உ. பத்தர்ப்பெயரிய - பத்தரென்னும் பெயரைப்பெற்ற.

ரு. சொட்டையாளர் படைதெரியவென ஒருசொல்வருவிக்க.

ரு. வெல்கொடி நுடங்கவென்றது மாற்றாரெதிரே அவர்கண்டு நடுங்கும்படி பண்டுவென்ற கொடி நுடங்கவென்றவாறு.

எ. களிறு இனநிரை புலம்பெயர்ந்து இயல்வரவென்றது களிற்றினநிரை களத்திலே போர்வேட்டுப் புடைபெயர்ந்து திரியவென்றவாறு.

(ரு) கொல்படைதெரியவென்பதுமுதல் (எ)இயல்வரவென்பதீறாகின்ற வினையெச்சம்நான்கினையும் நிகழ்காலப்பொருட்டாக்கிச் (கஉ) செருக்கொன்றென்னும் வினையொடுமுடிக்க.

(சு) குருதியாரப் (கக)பேய்மகள்கவலைகவற்ற(கஉ)நாடுநடுங்கவெனநின்ற வினையெச்சங்கள் மூன்றினையும் ஆரும்படி கவலைகவற்றும்படி நாடுநடுங்கும்படியென எதிர்காலப்பொருட்டாக்கிக் (கஉ) கொன்றென்னும் வினையொடு முடிக்க.

அ. அமர்க்கண் அமைந்த பரப்பென்றது அமர்செய்யுமிடத்திற்கு இடம்போந்த பரப்பென்றவாறு.

கo. ஆண்மலியூபமென்றது ஆண்மைமிக்க யூபமென்றவாறு.

கக. கவலைகவற்றவென்றது கண்டார்க்கு வருத்தத்தைச்செய்யும் பழியனறவாறு.

கஉ. கொன்றென்னும்வினையெச்சத்தினை (க) மெய்சிதைத்தென்னும் வினையொடு மாறிக்கூட்டுக.

கங. தொடுத்தற்குரிய பூவல்லாத பனங்குருத்தினைத் தொடுக்கப்படும் கொன்றையொடு தொடுத்ததுபற்றி, 'நாறிணர்க் கொன்றை வெண்போழ்க் கண்ணி' எனக்கூறிய அடைச்சிறப்பானே, இதற்கு, 'வெண்போழ்கீகண்ணி' என்று பெயராயிற்று.

கஎ, மெய்சிதைத்தென்று உடலுருவப்பட்டமைகீழேசொன்னமையால், (கச) வாள் முகம் பொறித்த மாண் வரி யாக்கையரென்பதற்குவாள் முகத்திலேபொறித்த மாண்வரியையுடைய யாக்கையரென முகத்தில் வடுவாக்கியுரைக்க.

கடு. இருங்கண்மூரியென்றது பெரிய உடலிடத்தையுடைய எருதென்றவாறு,

(கங) கண்ணியர் (கச) மாண்வரியாக்கையராகிய (கஅ)சான்றோர் பெருமகனென மாறிக்கூட்டுக.

(கஎ) மெய்சிதைத்து (கஅ) சான்று எழில்மறைத்தவென்றது மெய்யானது சிதைத்து அச்சிதைந்தவடுக்களாலே பூசினசாந்தின் அழகை மறைத்தவென்றவாறு.

(கஙு) மாறுது ஊதியவென்றது இதுசூரினுடையதென்றுஅறிந்தும் நீங்காது ஊதியவென்றவாறு.

உ0. சூர்நசைத்தாயென்றதனைச் சூர்நசைத்தாகவெனத் திரித்து, காந்தள் சூரானது நச்சுதலையுடைத்தாகலாலேயென வுரைக்க.

(ங) கைவல்பாண,(க)நெடுமொழியொக்கலொடு நீ(கஅ)சான்றோர் பெருமகன், (உஉ) நேரிப்பொருநஞ்சிய (உங) செல்வக்கோமானைப் பாடிச்செல்லின், (உ) பத்தர்ப்பெயரியமூனூர்த் (ச) தெண்கடன்முத்தமொடு (க) கொடுமணம்பட்ட (ச) நன்கலம் பெறுகுவையென மாறிக்கூட்டி வினைமுடிவுசெய்க.

இதனுற்சொல்லியது, அவன்கொடைச்சிறப்புக் கூறியவாறுயிற்று.

(பி - ம்) நு. தொல்படை. ககூ. தாழிரும்பாசகர்.
கஉ. பலசெருக்கடந்து. கஎ. எஃகாடுணம். (எ)

(கூஉ.) கால்கடிப் பாகக் கடலொலித் தாங்கு
வேறுபுலத் திறுத்த கட்டூர் நாப்பட்
கடுஞ்சிலே கடவுந் தழங்குகுரன் முரசம்
மகலிரு விசும்பி னகத் ததிர
வெவ்வரி நிலைஇய வெயிலெறிந் தல்ல

துண்ணு தடுக்கிய பொழுதுபல கழிய
நெஞ்சுபுக லூக்கத்தர் மெய்தயங் குயக்கத்
தின்னு நுறையுட் டாம்பெறி னல்லது
வேந்தூர் யானே வெண்கோடு கொண்டு
கo கட்கொடி துடங்கு மாவணம் புக்குட
னருங்க ணெடைமை தீர்ந்தபின் மகிழ்சிறந்து
நாம மறியா வேம வாழ்க்கை
வடபுல வாழ்நரிற் பெரிதமர்ந் தல்கலு
மின்னகை மேய பல்லுறை பெறுபகொல்
கரு பாய வின்மையிற் பாசிழை ளெகிழ
நெகிம ணிஞ்சி நீணகர் வரைப்பி
னேவுறழ் நெடுஞ்சுவர் நாள்பல வெழுதிச்
செவ்விரல் சிவந்த வவ்வரிக் குடைச்சூ
லணங்கெழி லரிவையர்ப் பிணிக்கு
உo மணங்கமழ் மார்பின் முணிழ லோரே.

துறை - நெந்துறைப்பாடாண்பாட்டு.
வண்ணமும் தூக்கும் அது.
பெயர் - (கஉ) ஏமவாழ்க்கை.

(க) கால்கடிப்பாகக் கடலொலித்தாங்கு (ரு) முரசம் (ச) அதிர வெனக்கூட்டுக.

(நு) எயிலெறிந்தென்ற எச்சத்திற்கு (சு)உண்ணுதென்றது இடமாக உண்டலென ஒருதொழிற்பெயர் வருவித்துமுடிக்க.

(சு) உண்ணுதென்றதனை உண்ணுமலெனத்திரித்து அதனை அடுக்கியவென்னும் வினையொடுமுடித்துக் கழியவென்றதனைக் கழியாநிற்கவென்னும்பொருளதாக்கி அதனைப் (அ) பெறினென்னும் வினையொடுமுடிக்க.

எ. ஊக்கத்தரென்றது வினையெச்சம்.

கக. கள் தொடையமை - கள்விலை.

கஉ. நாமம் அறியா ஏமவாழ்க்கையென்றது துன்பம் இடைவிர வின இன்பமன்றி இ டை யு ரு த இன்பமேயாய்ச் சேறலான வாழ்க்கை யென்றவாறு.

இச்சிறப்பானே, இதற்கு 'ஏமவாழ்க்கை' என்று பெயராயிற்று.

கங. வடபுலம் - போகபூமியாகிய உத்தரகுரு.
இன்னகை - இனிய இன்பம்.

(கச) இன்னகை (கங) அல்கலும் (கச) மேயவெனக்கூட்டுக.

கச. பல்லுறை - பலநாளுறைதல்.

(கரு) பாசிழைஞெகிழ (கள) நாள்பலவெழுதியென முடிக்க.

(ககக) அரிவையர்ப் பிணிக்கும் (உ0) மணங்கமழ்மார்ப, நின்தாணிழலோர் (சு) உண்ணுது அடுக்கிய பொழுதுபலகழிய (அ) இன்னுர் உறையுள் தாம் பெறினன்றி (கச) இன்னகை (கங) அல்கலும் (கச) மேய பல்லுறை பெறுபகொல்? பெறார்; அவர் அவ்வாறு அதுபெறினன்றி நின்மார்பாற் பிணிக்கப்பட்ட அரிவையரும் இன்னகை அல்கலு மேய பல்லுறைபெறுவதேதெனக்கூட்டி வினைமுடிவுசெய்க.

இதனுற் சொல்லியது, காமவேட்கையின் ஓடாத அவன்வென்றி வேட்கைச்சிறப்புக் கூறியவாறுமித்று.

(பி - ம்.) கஅ. குடச்சூல். (அ)

(சுகூ.) மலையுறழ் யானை வான்மருப் வெல்கொடி
வரைமிசை யருவியின் வயின்வயி னுடங்கக்
கடல்போ லானைக் கடுங்குரன் முரசங்
காலுறு கடலிற் கடிய வுரற
ரு வெறிந்துசிதைந்த வா
ளிலைதெரிந்த வேல்
பாய்ந்தாய்ந்த மா
வாய்ந்துதெரிந்த புகன்மறவரொடு
படுபிணம் பிறங்க நூறிப் பகைவர்
கo கெடுகுடி பயிற்றிய கொற்ற வேந்தே
நின்போ, லசைவில் கொள்கைய ராகல் னசையா
தாண்டோர் மன்றவிம் மண்கெழு ஞால
நிலம்பயம் பொழியச் சுடர்சினந் தணியப்
பயங்கெழு வெள்ளி யாங்கி னிற்ப
கரு விசும்புமெய் யகலப் பெயல்புர வெதிர
கால்வேறு கனந்தலை யோராங்கு நந்த
விலங்குகதிர்த் திகிரி மூன்றிசை ஞேர.

துறை - வஞ்சித்துறைப்பாடாண்பாட்டு.
வண்ணம் - ஒழுகுவண்ணமும் சொற்சீர்வண்ணமும்.
தூக்கு - செந்தூக்கும் வஞ்சித்தூக்கும்.
பெயர் - (கஉ) மண்கெழுஞாலம்.

(உ) துடங்கவெனவும் (ச) உரதவெனவுகின்ற வினையெச்சங்களை (கு) தூறியென்னும்வினையொடுமுடிக்க.

(அ) புகன்மறவரெடென்னும் ஓவை(ஞ)வாளொடு (சு) வேலொடு (எ) மாவொடுவென எங்கும்கூட்டுக.

வாள், வேல், மாவெனநின்றமூன்றும் ஆகுபெயர்.

கூ. தூறியென்பது ஈண்டுக்கொன்றென்னும் பொருண்மைத்து.

கூ - கo. பகைவர்கெடுகுடி பயித்தியவென்றது பகிரினம்பிறங்கப் பகைவரைதூறிய பின் அப்பகைவருடைய கெட்டுப்போனகுடிமக்களை அவர்காட்டிலே பயின்று வாழ்வாராகப்பண்ணியவென்றவாறு.

இனிப் பகைவருடைய கெட்டகுடிகளை வேற்றுகாட்டிலே பயிலப் பண்ணினவென்றுமாம்.

(கஉ) மன்றவென்பதனை (கக) அசைவில்கொள்கையராகலினென் பதனெடு கூட்டுக.

கஉ. பொன்ஞாலமன்றி இம்மண்ஞாலமுழுதும் ஆண்டாரென்பது தோன்ற மண்கெழுஞாலமென்றஇச்சிறப்பானே, இதற்கு 'மண்கெழுஞாலம்' என்று பெயராயிற்று.

கங. நிலம் பயம் பொழியவென்றது சிலர் அரசுசெய்யுங்காலங் களில் மழையும் நீரும் குறைவின்றிநிரந்தும் எவ்விளைவும் சுருங்கவினையுங் காலமும் உளவாம்; அவ்வாறன்றி நிலம் பயனைப்பொழிந்தாற்போல மிக விளையவென்றவாறு.

சுடர் சினம் தணியவென்றது திங்கள்மும்மாரியும்பெய்து மழை இடையறாது வருகின்றமையின் சுடர் சினந்தணிந்தாற்போன்று தோற்ற வென்றவாறு.

கச. வெள்ளியென்றது வறிதுவடக்கிறைஞ்சிய சீர்சால்வெள்ளி (பதிற்றுப்பத்து, உசு) என்றவாறு.

பயம்கெழு ஆஞயம் நிற்கவென்றது அவ்வெள்ளி மழைக்கு உடலான மற்றைநாள்கோள்களுக்குச்செல்கின்ற நல்லநாட்களிலேநிற்கவென்றவாறு.

கஞ. விசும்பு மெய் அகலவென்றது அம்மழையில்லாமைக்கு உற்பாத மாகிய தூமத்தோற்றமின்மையான், ஆகாயவெளி தன்வடிவு பண்டையில் அகன்றற்போலத் தோன்றவென்றவாறு.

பெயல் புரவு எதிரவென்றது மழை இவ்வுலகினை யானேபுரப்பே னென்று ஏற்றுக்கொண்டாற்போல நிற்பவென்றவாறு.

கசு. கால்வேறு கனந்தலை ஓராங்கு கந்தவென்றது காலுதிசையும் ஒன்றுபோலே பகையின்றிவிளங்கவென்றவாறு.

(கo) கொற்றவேந்தே, (கள) இலங்குகதிர்த்திகிரியினையுடைய நின் மூன்றோர் (கஉ) நிச்சயமாக (கக) நின்னைப்போல் அசைவில்லாத மேற்

கோனையுடையராகையாலே, (கஉ) இம்மண்ணுலகத்தினை (கங) நிலம் பயம் பொழிதன்முதலாக (கசு) நால்வேறுனைந்திலே ஓரான்குநந்தவென்பதீறாக எண்ணப்பட்ட நின்புகழெல்லாம்உளவாக (கக) அசைவின்மி (கஉ) ஆண் டோராவார்; அவரல்லார் இம்மண்ணுலகத்தின் ஒரோவிடங்களே ஆளுவ தல்லது முழுதும் ஆளுதல் கூடாதன்றேயெனக்கூட்டி வினைமுடிவுசெய்க.

கக. 'ஆண்டோரசையாது' என்பதுபாடமாக்கி அதற்கேற்ப உரைப் பாருமுளர்.

இதனைச் சொல்லியது, அவன் ஆள்வினைச்சிறப்பினை அவன் குடி வரலாற்றைப்படுத்துச் சொல்லியவாறுயிற்று.

(ரு) 'எறிந்துசிதைந்த' என்பதுமுதலாக (அ) 'மறவரொடு' என்பதீ றாக நான்கடி வஞ்சியடியாய்வந்தமையான், வஞ்சித்தூக்குமாயிற்று. அவற் றுள்,முன்னின்றமூன்றடிகளின் ஈற்றுச்சீர்கள் அசைச்சீர்களாகவும் மற்றை யடியின்ஈற்றுச்சீர் பொதுச்சீராகவும் இட்டுக்கொள்க.

(கக) 'நின்போல்' என்பது கூன். (கூ)

(எ0.) கள்ளிறுகடைஇய தாண்
மாவுடற்றிய வடிம்பு
சமந்ததைந்த வேல்
கல்லலைத்த தோள்-
ரு வில்லலைத்த கல்வலத்து.
வண்டிசை கடாவாத் தண்பனம் போந்தைக்
குவிமுகி மூசி வெண்டோடு கொண்டு
தீஞ்ஞனை நீர்மலர் மலிந்துமதஞ் செருக்கி
யுடைநிலை நல்லமர் கடந்து மறங்கெடுத்துக்
க0 கடிஞ்சின வேந்தர் செம்ம ரெறிலைத்த
வலம்படு வான்கழல் வயவர் பெருமக
நகையினும் பொய்யா வாய்மைப் பகைவர்
புறஞ்சொற் கேளாப் புரைதீ ரொண்மைப்
பெண்மை சான்று பெருமட நிலைஇக்
கரு கற்பிறை கொண்ட கமழுஞ் சுடர்நுதற்
புரையோள் கணவ பூண்கிளர் மார்ப
தொலையாக் கொள்கைச் சுற்றஞ் சுற்ற
வேள்வியிற் கடவு ளருத்தினை கேள்வி
யுயர்நிலை யுலகத் தையரின் புறுத்தினை

உ0 வணங்கிய சாயல் வணங்கா வாண்மை
யிளந்துணைப் புதல்வரின் முதியர்ப் பேணித்
தொல்கட னிறுத்த வெல்போ ரண்ணன்
மாடோ ருறையு முலகமுங் கேட்ப
விழுமென விழிதரும் பறைக்குர லருவி
உரு முழுமுதன் மிசைய கோடுதொறுந் துவன்று
மயிரை யெருவை போலத்
தொலையா தாகநீ வாழு நாளே.

துறை - செந்துறைப்பாடாண்பாட்டு.
வண்ணம் - ஒழுகுவண்ணம்.
தூக்கு - செந்தூக்கும்வஞ்சித்தூக்கும்.
பெயர் - (உச) பறைக்குரலருவி.

கூ. சமம் தகைந்த வேலென்றது மாற்றார்செய்யும் சமங்கள் சிதைதற்குக் காரணமாகிய வேலென்றவாறு.

வேலென்றது வேல்வென்றியினை.

சு. கல்லலைத்தோளென்றது வலியுடைமையாற் கல்லையலைத்தோளென்றவாறு.

.....

.....தாகவெனக்கூட்டி வினைமுடிவுசெய்க.

இதனுற்சொல்லியது, அவன்வென்றிகூறியதிறத்தானே அவற்குள்ள சிறப்புக்களைக்கூறிப் பின்னேவாழ்த்தியவாறுயிற்று.

(பி - ம்.) சு. கவண்டிசை. உசு. நேருயர்நெடுவரை. (கo)

இதன்பதிகத்து ஒருதந்தையென்றது பொறையன்பெருந்தேவியின் பிதாவுடையது ஒருபெயர்.

வேள்வி ஆக்கியபொழுதின் அறத்துறைபோகியென்றது யாகம்பண்ணினகாலத்திலே மற்றுள்ள அறத்துறைகளையும் செய்துமுடித்தென்றவாறு.

மாயவண்ணனை மனனுறப்பெற்றென்றது திருமாலேவழிபட்டு அவனுடையமனம் தன்பாலேஆம்படி பெற்றென்றவாறு.

ஒகந்தூரீத்தென்றது அம்மாயவண்ணனுக்கு ஒகந்தூரென்ற ஓர் வரைக்கொடுத்தென்றவாறு.

புரோசு மயக்கியென்றது தன்புரோகிதனிலும் தான் அறநெறியறிந்தென்றவாறு.

இம்புறமென்றது சிறுகொடை.

# பதிற்றுப் பத்து.

## (பதிகம்.)

மடியா வுள்ளமொடு மாற்றேர்ப் பிணித்த
நெடுநுண் கேள்வி யந்துவற் கொருதந்தை
யீன்றமகள் பொறையன் பெருந்தேவி யீன்றமக
னுடிபதி படித்து ணண்ணு ரோட்டி
வெருவரு தானை கொடுசெருப் பலகடந்
தேத்தல் சான்ற விடனுடை வேள்வி
யாக்கிய பொழுதி னறத்துறை போகி
மாய வண்ணனை மனனுறப் பெற்றவற்
கோத்திர் நெல்லி னெகந்தூ ரீத்துப்
புரோசு மயக்கி
மல்ல வுள்ளமொடு மாசற விளங்கிய

செல்வக்கடுங்கோ வாழியாதனைக் கபிலர்பாடிஞர் பத்துப் பாட்டு. அவைதாம்: புலாஅம்பாசறை; வானாபோலிஞ்சி, அருவி யாம்பல், உரைசால்வேள்வி, ணண்மகிழிருக்கை, புதல்சூழ்பறவை, வெண்போழ்க்கண்ணி, ஏமவாழ்க்கை, மண்கெழுஞாலம், பறைக் குரலருவி. இவை பாட்டின்பதிகம்.

பாடிப்பெற்றபரிசில்: சிறுபுறமென நூறுயிரங்கர்ணங்கொடுத்த ணன்றுவென்னும் குன்றேறிநின்று தன்கண்ணிற்கண்ட ணாடெல்லாம் காட்டிக் கொடுத்தான் அக்கோ.

செல்வக்கடுங்கோவாழியாதன் இருபத்தையாண்டுவீற்றிருந்தான்.

ஏழாம்பத்து முற்றிற்று.

## எட்டாம் பத்து.

(ஏக.) அரூஅ யாண ரகன்கட் செறுவி
னருவி யாம்ப னெய்தலொ டரிந்து
செறுவினே மகளிர் மலிந்த வெக்கைப்
பரூஉப்பக டிதிர்த்த மென்செந் நெல்லி
ரு னம்பண வளவை யுறைகுவித் தாங்குக்
கடிந்தே றுறுகினே மொசிந்தன துஞ்சுஞ்
செழுங்கூடி னிலைத்த விளந்துணை மகாரி
னலந்தனர் பெருமகின் னுடற்றி யோரே
யூசொரி கவர வுருத்தெழுந் துரைஇப்
கo போர்சுடு கமழ்புகை மாதிர மறைப்ப
மதில்வாய்த், தோன்ற லீயாது தம்பழி யூக்குநர்
குண்டுக ணகழிய குறுந்தாண் ஞாயி
லாரொயிற் ரோட்டி வெளவினே யேரூடு
கன்றுடை யாயந் தரீஇப் புகல்சிறந்து
கரு புலவுவில் லினேய ரங்கை விடுப்ப
மத்துக்கயி ரூடா வைகற்பொழுது கினேயூஉ
வான்பயம் வாழ்நர் கழுவு டலைமடங்கப்
பதிபா ழாக வேறுபுலம் படர்ந்து
விருந்தின் வாழ்க்கையொடு பெருந்திரு வற்றென
உo வருஞ்சமத் தருங்லே தாங்கிய புகர்நுதற்
பெருங்களிற் றியானேயொ டருங்கலந் தராஅர்
மெய்ப்பனி கூரா வணங்கெனப் பராவலிற்
பலிகொண்டு பெயரும் பாசம் போலத்
திறைகொண்டு பெயர்ந்து வாழ்கநின் னூழி
உரு யுரவரு மடவரு மறிவுதெரிந் தெண்ணி
யறிந்தனே யருளா யாயின்
யாரிவ ணெடுந்தகை வாழு மோரே.

துறை - செந்துறைப்பாடாண்பாட்டு.
வண்ணம் - ஒழுகுவண்ணமும் சொற்சீர்வண்ணமும்.

தூக்கு - செந்தூக்கு.
பெயர் - (கஉ) தறுந்தாண்ஞாயில்.

உ. அருவியாம்பல் - நீரின் ஆம்பல்; என்றதனாற்பயன்: நீர்க்குறை வற்ற ஆம்பலென்பதாம்; எண்ணின் ஆம்பலை நீக்குதற்கென்பதுமொன்று.

(உ) ஆம்பலொடு நெய்தலொடு (ச) நெல்லை (உ) அரிந்தென்று கொள்க.

(உ) அரிந்து (ச) பகடு உதிர்த்தவெனக்கூட்டிப் பகட்டானென உருபு விரிக்க.

ங. செறு வினை மகளிர் மலிந்த வெக்கையென்றது உழவர்பெண் மக்கள் வினையாடுதற்கு வயலிற் பயிர்கொள்ளாத்தோரிடமின்மையின், ஆண்டு அவர்கள் மிக்க களமென்றவாறு.

வெக்கை - கடாவிடுங்களம்.

ச. நெல்லிற்கு மென்மை - சோற்றதுமென்மை. செங்நெலென்றது செங்நெலென்னும் சாதியை.

ஞ. அளவைக்கென நான்காவதுவிரிக்க.

ரு. கடுந்தேறு உறுகளை-கடிதாகத் தெறுதலையுடைய மிக்க குளவி யினம். மொசிந்தனவென்றது மொய்த்தனவர்யென்னும் வினையெச்சமுற்று.

கூ. உருத்து எழுந்து உரை இ ஊர் எரி கவரவெனக்கூட்டுக.

(கூ) ஊரெரிகவரப் (கo) போர்சுடுகமழ்புகை மாதிரமறைப்பத்(கங்) தோட்டிவெளவியென முடிக்க.

கக. தோன்றலீயாதென்றது தோன்றுதென்னும் வினையெச்சத் திரிசொல்; தோன்றலீயாமலெனத்திரிக்க.

கஉ. குறுந்தாண்ஞாயிலென்றது இடையிடையே மதிலின் அடி யிடங்களைப்பார்க்க அவற்றிற் குறுகிக் குறுகியிருக்கும் படியையுடைய ஞாயி லென்றவாறு.

இவ்வாறு சூறினசாதிப்பண்பாலும் படியைத்தாலென்றுசூறினபடி யாலும் இதற்கு, 'தறுந்தாண்ஞாயில்' என்று பெயராயிற்று.

கங. வெளவினையென்றது வினையெச்சமுற்று.

கச. ஆயம்தீ இயென்றது ஆயங்களை நீ (கரு) புலவுவில்லினையர்க் குக் கொடுப்பவென்றவாறு.

தீ இயென்பதனைத் தாவெனத்திரிக்க.

கரு. இனையர் அங்கைவிடுப்பவென்றது இனையர் அவ்வாயத்தைத் தங்கள் அங்கையில் நின்றும் பிறர்க்கு விடுப்பவென்றவாறு.

கசு. கயிறுடாவென்னும் பெயரெச்சமறையை வைகலென்னும் தொழிற்பெயரொடுமுடிக்க. வைகல் - கழிதல்; வைகற்பொழுது, இருபெய் ரொட்டுமாம்.

கள. வாழ்நர் - வாழ்பவர்; இடையர். பயத்தானென விரிக்க. கழுவுளாவான் அவ்விடையர்க்குத்தலைவனுய் அக்காலத்துக் குறும்புசெய் திருந்தானொருவன். மூன்னர் (கங) எயிலென்றது அவன் தனக்கு அரணுகக் கொண்டிருந்த மதிலினை.

கஅ. வேறுபுலம்பதிபாழ்கப்படர்ந்தென்றது அக்கழுவுள் தலை மடங்குகையாலே அவனைவிட்டு வேறு திறையிடாக்குறும்பர்காட்டிலே அக் காட்டுப்பதி பாழாகச்சென்றென்றவாறு.

(கஅ) படர்ந்து (உச) திறைகொண்டுபெயர்தியெனக் கூட்டுக.

கக. விருந்தின்வாழ்க்கை - நாடோறும் புதிதாகத் தாங்கள் தேடு கின்றபொருள். பெருந்திரு - முன்னேதேடிக்கிடந்தபொருள். அற்றென வென்றது அற்றதெனக்கருதியென்றவாறு. அற்றதென்பது கடைக்குறை ந்தது.

உங. பாசம் - பேய்.

உரு. உரவரையும்மடவரையுமென்னும்இரண்டாவது விகாரத்தால் தொக்கது. அறிவு - அவர்களறிவு.

உள. வாழுமோரென்புழி, உம்மை அசைநிலை.

(கங) ஆரெயிற்றேட்டிவெளவி அதனையுடைய (கள) கழுவுள் தலைமடங்குகையாலே (கஅ) வேறுபுலம்படர்ந்து அவ்வேறுபுலத்து நினக்கு (உக) யானையொடு அருங்கலம்திறையிடார்தம் (கக) விருந்தின் வாழ்க்கையொடு பெருந்திருவற்றதெனக்கருதித் தங்கள் (உஉ) மெய்ந்நடுக்க மிக்கு நின்னை அணங்கெனக்கருதிப் பலபடப் பரவுதலான், (உங) பேய் தான் பற்றினருயிரைவௌவாது தனக்கு அவர் பலியிட்டுழி அப்பலி கொண்டுபெயருமாறுபோல நீயும் அவருயிரைவௌவாது (உச) திறை கொண்டுபெயராநின்றாய்; இஃதன்றே இதுபொழுது நீசெய்கின்றது; நின்னை (அ) உடற்றியோர் (சு) கடிந்தேறு உறுகணைதுஞ்சும் (எ) கூடுகணை த்தி இளந்துணைமகாரைப்போலப் (அ) பெருமானே, அலந்தார்கள்; இனிமேல் உள்ளத்து (உரு) உரவரையும் மடவரையும் அவரவர் அறிவினைத்தெரிந்து எண்ணி (உசு) அவர்களிடத்துச்செய்யும். அருளறிந்து அருளாயாயின், (உஎ) நெடுந்தகாய், இவண்வாழ்பவர்யார்; (உசு) நின் ஊழி வாழ்கவெனக் கூட்டி வினைமுடிவுசெய்க.

இதனுற்சொல்லியது, அவன் வெற்றிச்சிறப்புக்கூறி அவற்குப் புகை வர்மேல் அருள்பிறப்பித்தவாருயிற்று.

(பி - ம்.) கங. செறிவினை. கஅ. வேற்றுப்புலம். கள. தலையங்க. உஉ. பரானின். (க)

(எஉ.) இகல்பெரு மையிற் படைகோ ளஞ்சார்
சூழாது துணித லல்லது வறிதுடன்
காவ லெதிரார் கறுத்தோர் காடுகின்
மூன்றிணை முதல்வர்க் கோம்பினை குறைந்து
நு மன்பதை காப்ப வறிவுவலி யுறுத்து
ஈன்றறி யுள்ளத்துச் சான்றோ ரன்னநின்
பண்புசான் கறியார் மடம்பெரு மையிற்
றுஞ்ச லுறாஉம் பகல்புகு மாலை
நிலம்பொறை யொராஅநீர் ஞெமரவந் தீண்டி
கo யுரவுத்திரை கடுகிய வுருத்தெழு வேள்ளம்
வரையா மாதிரத் திருள்சேர்பு பரந்து
ஞாயிறு பட்ட வகன்றுவரு கூட்டத்
தஞ்ஞா றுரையு நின்றெழி லொழித்துப்
பொங்குபிசிர் நுடக்கிய செஞ்சுடர் நிகழ்வின்
கரு மடங்கற் றீயி னனையை
சினங்கெழு குருசினின் னுடற்றிசி னோர்க்கே.

துறை - செந்துறைப்பாடாண்பாட்டு.
வண்ணம் - ஒழுகுவண்ணம்.
தூக்கு - செந்தூக்கு.
பெயர் - (கo) உருத்தெழுவேள்ளம்.

க. இகல் பெருமையின் - இகலானது பொறாமையாலே; இக லென்னும் எழுவாய்க்குப் பெருமையை நிலைப்பயனிலையாகக் கொள்க.

அஞ்சாரென்றது வினையெச்சமுற்று.

(க) படைகோளைத் (உ) துணிதலைனைக் கூட்டுக.

உ - ங. உடன் காவலெதிராரென்றது பலரும் தம்முட் கூடியும் காக்கமாட்டாரென்றவாறு.

நு. மன்பதை - மக்கட்பன்மை.

(நு) அறிவுவலியுறுத்தும் (சு) சான்றோரெனக் கூட்டுக.

ஈண்டுச் சான்றோரென்றது மக்திரிகளை.

(எ) மடம்பெருமையையும் (க) இகல்பெருமையைப்போல எழுவா யும் பயனிலையுமாகக்கொள்க.

அ. துஞ்சல்-எல்லாவுயிரும் இறந்துபடுதல். பகலென்றது ஊழியை. மாலையென்றது ஊழிமுடிவினை.

கூ. ஓராஅ வென்றதனை ஒருவவெனத்திரித்து ஈண்டியென்றதனையும் ஈண்டவெனத் திரிக்க.

கo. உருத்தெழுவெள்ளமென்றது பல்லுயிரையும் ஒருங்கு தான் கொல்லுங்கருத்துடையதுபோலக் கோபித்தெழுவெள்ளமென்றவாறு.

இச்சிறப்பானே இதற்கு 'உருத்தெழுவெள்ளம்' என்று பெயராயிற்று.

(கo) வெள்ளம் (கக) பரந்தென்றதனைப் பரக்கவெனத்திரித்து அதனை (கச) நுடக்கியவெனகின்ற செய்யியவென்னும் வினையெச்சத்தொடு முடித்து அதனைச் சுடர்நிகழ்வென்னுந் தொழிற்பெயரொடுமுடித்து, வெள்ளம் பரக்கையாலே அவ்வெள்ளத்தை மாய்க்கவேண்டிச் சுடர்நிகழ்தலையுடைத்தான (கஞ) நீயெனவுரைக்க.

கச. பிசிரென்றது பிசிருடைய வெள்ளத்தை. நுடக்குதல்-மாய்த்தல்.

(கஉ) ஞாயிறுபட்ட அகன்றுவருகூட்டத்து (கஞ) மடங்கற்றீயெனமாறிக்கூட்டி, அவ்வெள்ளத்தை மாய்த்தற்கு ஆதித்தர்பன்னிருவரும் தோற்றின பெரியகூட்டத்தையுடைய வடவைத்தீயெனவுரைக்க. ஆதித்தர்கூட்டத்தை இவன் படைத்தலைவர்க்கு உவமமாகக்கொள்க.

(கங) அம் சாறுபுரையு நின்றெழிலொழித்து (கஞ) மடங்கற்றீயினனையையென மாறிக்கூட்டுக. அம் சாறுபுரையுந்தொழிலென்றது அழகிய விழாப்போல எல்லார்க்கும் இன்பத்தைச்செய்யுந் தொழிலென்றவாறு.

(ங) நின்னெடுகறுத்தோர் (எ) தம் மடம் பெருமையால் (ஈ) நின் (சு) முன்குடிமுதல்வர்க்கு (ஞ) அறிவுவலியுறுத்துஞ் (சூ) சான்றோரையொத்த நின் (எ) சூழ்ச்சிப்பண்புடைமை அறிகின்றிலர்; நீதான் சூழ்ச்சியுடையையேயன்றிக் (கசு) குருசிலே, நின்னுடற்றிசினோர்க்குப் போர்செய்யுமிடத்து (கஞ) மடங்கற்றீயின் ஆனையை; அதனையும் அறிகின்றிலராதலால், அவர் தம் (க) இகல்பெருமையானே அஞ்சாராய்ப் படைகோலாத் (உ) துணிதலல்லது (ங) நாட்டைச் (உ) சிறிதும்உடன் (ஙு) காவலெதிர்கொள்ளாரெனக் கூட்டி வினைமுடிவுசெய்க.

இதனாற் சொல்லியது, அவன் சூழ்ச்சியுடைமையும் வென்றிச்சிறப்பும் உடன்கூறியவாறுயிற்று.

(பி - ம்.) ஈ. ஈர்டெனை. அ. அஞ்சலுறும்.
சு. முதல்வரோம்பினர். கசு. பிசிருடக்கிய. (உ)

(எங.) உரவோ ரெண்ணினு மடவோ ரெண்ணினும்
பிறர்க்குநீ வாயி னல்லது நினக்குப்

பிறருவம மாகா வொருபெரு வேந்தே
.....
.....
மருதஞ் சான்ற மலர்தலை விளைவயற்
செய்யு ணுரை யொய்யு மகளிர்
நிரவும் பகலும் பாசிழை கலையார்
குறும்பல் யாணர்க் குரவை யயருங்
காவிரி மண்டிய சேய்விரி வனப்பிற்
புகாஅர்ச் செல்வ பூழியர் மெய்ம்மறை
கழைவிரிந் தெழுதரு மழைதவழ் நெடுங்கோட்டுக்
கொல்லிப் பொருந கொடித்தேர்ப் பொறையின்
வளனு மாண்மையுங் கைவண் மையு
மார்த ளவிறந் தனவெனப் பன்னூள்
யான்சென் றுரைப்பவுந் தேறூர் பிறருஞ்
சான்றோ ருரைப்பத் தெளிகுவர் கொல்லென
வாங்குமதி மருளக் காண்குவல்
யாங்குரைப் பேனென வருந்துவல் யானே.

இதுவும் அது.
பெயர் - நிறந்திகழ்பாசிழை.

*[கூந்தலையுடையமகளிர், ஒண்ணுதல்பொலிந்தமகளிரெனக்கூட்டுக. நிறந்திகழ்பாசிழையென்றது தன்னின் அழுத்திய மணியினுந் தன்னிறந்திகழும் பசும் பொன்னிழையென்றவாறு.

இச்சிறப்பானே, இதற்கு 'நிறந்திகழ்பாசிழை' என்று பெயராயிற்று.

உயர்திணைமகளிர் நெஞ்சத்துமென உம்மையை மாறிக்கூட்டுக.

தெய்வமென்றது தெய்வத்தன்மையை.

தெய்வந்தருஉம் ஆன்றோரெனக்கூட்டுக. குலமகளிரை 'உயர்திணை மகளிரென்று முன்னேகூறினமையான் ஆன்றோரென்றது பரத்தையரையாம்; அவர்களே ஆன்றோரென்றது தம் துறைக்குவேண்டுவன அமைத்தாரென்றவாறு.]

மருதமென்றது மருதநிலத்தன்மையை.

இரவும் பகலும் குரவையயருமெனக்கூட்டுக.

---

* [ ] இவ்விருதலைப் பகரத்திற்குட்பட்ட உரைக்குரியமூலம் ஒரு பிரதியிலும் கிடைக்கவில்லை.

குறும்பல்குரவையென்றது ஒன்று ஆடுமிடத்திற்கு ஒன்று அணிய தாய் அவைதாம் பலவாயிருக்கின்ற குரவையென்றவாறு.

குரவையயரும் புகாரெனவும் காவிரிமண்டிய புகாரெனவுங்கூட்டுக.

உரைப்பவுமென்ற உம்மை தாமே அறியக்கடவதனை யாம் சொல்லவு மறிதிலரெனச் சிறப்புமும்மை. பிறருமென்ற உம்மை அசைநிலை. 'சான்றோர்.....கொல்லென' என்றதன்பின், கருதினென ஒருசொல் வருவித்து அதனைக் காண்குவலென்னும் வினையொடுமுடிக்க.

பெருவேந்தே, புகார்ச்செல்வ, பூழியர்மெய்ம்மறை; கொல்லிப் பொருந, பொறைய, நின் பகைவர் நின்வளனும் ஆண்மையும் கைவண்மையும், உலகத்துமக்களனைவர்க்குங்கடந்தன; அவரெமது மாறுபடுவது நுமக்கு உறுதியன்றெனப் பன்னுள் யான் சொல்லவும் தேறித்திலர்; தேறாயினும் உலகத்து மதிப்புடைய சான்றோர் சொல்லத் தாம் தேறுவரோவெனக் கருதின். அவர்சொன்னவிடத்தும் அவர்கள் மதிமருண்டதுவேகாணுநின்றேன்; ஆகலான் நின் பெருமையை அவர்கட்கு யாங்கு உரைப்பேனென வருந்தாநின்றேன் யான். இஃது என்னுறுகுறை; இதனை அறிந்து நீ அவர்பால் அருளவேண்டுவலென வினைமுடிவுசெய்க.

இதனற்சொல்லியது, அவன் வென்றிக்கு அடியாகிய செல்வமும் ஆண்மையும் கைவண்மையும் உடன்கூறியவாற்றான் அவன் வென்றிச் சிறப்புக் கூறியவாறாயிற்று.

(பி - ம்) நீயாயின். சேய்வரி.
ஓப்புமகளிர். யாஞ்சென்று. (கூ)

(எச.) கேள்வி கேட்டுப் படிவ மொடியாது
வேள்வி வேட்டனை யுயர்ந்தோ ருவப்பச்
சாயறல் கடுக்குந் தாழிருங் கூந்தல்
வேறுபடு திருவி னின்வழி வாழியர்
நு கொடுமணம் பட்ட வினைமா ணருங்கலம்
பதிர்ப் பயந்த பலர்புகழ் முத்தம்
வரையக நண்ணிக் குறும்பொறை நாடித்
தெரியுநர் கொண்ட சிறுடைப் பைம்பொறிக்
கவைமரங் கடிந்குங் கவலைய மருப்பிற்
கூ புள்ளி யிரலைத் தோலு ணுதிர்த்துத்
தீதுகளைந் தெஞ்சிய திகழ்விடி பாண்டிற்
பருதி போகிய புடைகிளை கட்டி
மையீங்குடை யிரும்பி னுள்ளமைத்து வல்லோன்

சூடுகிலை யுற்றுச் சுடர்விடு தோற்றம்
கரு விசும்பாடு மரபிற் பருந்தூ ளளப்ப
நலம்பெறு திருமணி கூட்டு கற்சேரு
லொடுங்கி ரோதி யொண்ணுதல் கருவி
லெண்ணியன் முற்றி யீரறிவு புரிந்து
சால்புஞ் செம்மையு மூளப்படப் பிறவுங்
உ0 காவற் கமைந்த வரசுதுறை போகிய
வீறுசால் புதல்வற் பெற்றனை யிவணர்க்
கருங்கட னிறுத்த செருப்புகன் மூன்ப
வன்னவை மருண்டனை னல்லை னின்வயின்
முழுதுணர்ந் தொழுக்கு நரைமூ தாளனை
உரு வண்மையு மாண்பும் வளனு மெச்சமுந்
தெய்வமும் யாவதுந் தவமுடை யோர்க்கென
வேறுபடு நனந்தலைப் பெயரக்
கூறினை பெருமநின் படிமை யானே.

இதுவும் அது.
பெயர் - (கசு) நலம்பெறுதிருமணி.

க. கேள்விகேட்டல் - யாகம் பண்ணுதற்கு உடலான விதிகேட்டல். படிவம் - யாகம் பண்ணுதற்கு உடலாக முன்புசெலுத்தும் விரதங்கள். ஒடியாதென்பதை ஒடியாமலெனத் திரிக்க.

(உ) வேட்டனையென்றதனை வினையெச்சமுற்றாக்கி அவ்வினையெச்சத்தினை (உஉ) அருங்கடனிறுத்தவென்னும் வினையொடு கூட்டுக.

உ. உயர்ந்தோர் - தேவர்.

ச. வேறுபடுதிரு - இவளுக்குக்கூறியகுணங்களால் அவளின் வேறுகிய கின்தேவி யென்றவாறு.

திருவினென்னும் இன், அசைகிலை.

(ச) வாழியரென்னும் வினையெச்சத்தினைச் (கச) சுடுகிலையுற்றென்னும் வினையொடுமுடிக்க.

எ. வனரென்றது, பெருமலையை. குறும்பொறையென்றது அதனை அணைந்த சிறுபொற்றைகளை.

அ. தெரியுநர்கோடல் - இலக்கணக்குற்றமற ஆராய்ந்துகோடல். பைம்பொறியென்றது, செவ்விகளையுடைய புள்ளிகளை. மேற் (கo) புள்ளியிரலையென்றதனை அதன் சாதிப்பெயர் கூறியவாறுகக்கொள்க.

கூ. கவலையவென்னும் அகரம் செய்யுள் விகாரம்.

கக. பாண்டிலென்றது, வட்டமாக அறுத்ததோலினை.

கஉ. பருதிபோகியபுடையென்றது,வட்டமாக்கப்போன அத்தோலது விளிம்பினை.

(நி) அருங்கலம் (சு)முத்தம் (கக)பாண்டிற் (கஉ)புடைதிகோகட்டியெனக்கூட்டி அருங்கலத்தினையும்முத்தத்தினையும் அத்தோலின்விளிம்பிலே இனமாகக் கட்டியெனவுரைக்க.

கஙூ. எஃகுடை இரும்பின் உள்ளமைத்தென்றது கூர்மையையுடையகருவிகளால் அத்தோலுட்செய்யும் தொழில்களெல்லாம் செய்தமைத்தென்றவாறு.

அமைத்தென்றதனை அமைப்பவெனத் திரிக்க.

(கஙூ) வல்லோனுலெனவிரித்து வல்லோனுல் நின்தேவி (கச) சூடுதல் நிலையுறுதலாலென்க.

கஙூ. வல்லோன்- யாகம்பண்ணுவிக்கவல்லவன்.

கச. தோற்றமென்றது, தோற்றமுடைய அத்தோலினை.

(ச) திரு (கள) ஒண்ணுதல் (கச) தோற்றம் (கரு) பருந்தூளப்பச் (கச) சூடுநிலையுற்றுக் (கள) கருவில் (உ0) அரசுதுறை போகியவெனக்கூட்டி நின்தேவியாகியஒண்ணுதல் அவ்வாறிழைத்ததோலினைப் பருந்தூளக்கும்படி சூடினமையால், அவள்கருவிலேயிருந்து அரசுதுறைக்குவேண்டுவனவெல்லாம் குறையற்றவெனவுரைக்க.

கசு. நலம்பெறுதிருமணியென்றது மணியறிவாரால்இதுவே நல்லதென்று சொல்லப்படுதலையுடைய திருமணியென்றவாறு.

இச்சிறப்பானே,இதற்கு'நலம்பெறுதிருமணி' என்று பெயராயிற்று.

கஅ. எண் இயல் முற்றியென்றது திங்கள்நிரம்பியென்றவாறு.

ஈரறிவென்றது இம்மையறிவு மறுமையறிவு; பெரியவறிவெனினும் அமையும்.

உக. பெற்றனையென்றது வினையெச்சமுற்று.

உச. நரைமூதாளனென்றது, புரோகிதனை.

(உச) நரைமூதாளனைக் (உஅ) கூறினையெனக்கூட்டி, அவனைச் சொல்லி ஏவினையென ஒருசொல் வருவித்துமுடிக்க.

உரு. மாண்டென்றது, மாட்சிமையுடைய குணங்களை. எச்சமென்றது, பிள்ளைப்பேற்றினை.

உசு. தெய்வமென்றது, தமமால்வழிபடப்படும் தெய்வத்தினை

(உசு) தவமுடையோர்க்கெனச் (உஅ) சொல்லியென்க.

உஅ. கூறினையென்பது வினையெச்சமுற்று.

உஎ. வேறுபடுகணந்தலையென்றது, துறந்துபோயிருக்குங்காட்டினை.

பெயர் - அந்தரை மூதாளனைக் காட்டிலே பெயரவேண்டி.

(உஉ) செருப்புகன்முன்ப, (உ) வேட்டனையென்றும்(உக) பெற்றனையென்றும் நீ செய்தியாகங்களாகிய (உங) அன்னவையிற்றிற்கு யான் மருண்டேனல்லேன்; நின்னை நல்வழி (உச) ஒழுகுவித்துநின்ற தரைமூதாளனை (உஅ) நின்படிமையானே (உஎ) இல்லறவொழுக்கினை ஒழித்துத் துறவற வொழுக்கிலே செல்ல (உஅ) ஒழுகுவித்தனை ; அவ்வாறுசெய்வித்த நின்பேரொழுக்கத்தினையும் பேரறிவினையும் தெரிந்து யான்மருண்டேனென வினைமுடிவுசெய்க.

இதனுட்சொல்லியது, அவன்நல்லொழுக்கமும் அதற்கேற்ற நல்லறிவுடைமையும் கூறியவாறாயிற்று.

(பி - ம்.) அ. தெரிபுகொண்ட. உரு. வண்மையுமாண்மையும். கo. தோலுஞ்சிதரத்து. உஎ. வேறுபுல. கச. சூடுநிலையுற்ற. உஅ. கூறுவை. உச. முதிதுணர்ந்தொழுகும். (சு)

(எரு.) இரும்புலி கொன்று பெருங்களி றடூஉ
மரும்பொறி வயமா னனையை பல்வேற்
பொலந்தார் யானை யியறேர்ப் பொறைய
வேந்தரும் வேளிரும் பிறருங் கீழ்ப்பணிந்து
ருு நின்வழிப் படாஅ ராயி னென்மிக்
கறையுறு கரும்பின் நீஞ்சேற் றியாணர்
வருநர் வரையா வளம்வீங் கிருக்கை
வன்புலத் தலீஇ மென்பா லூறு ம
மரும்பறை வினைஞர் புல்லிகல் படுத்துக்
கo கள்ளுடை நியமத் தொள்ளிலை கொடுக்கும்
வெள்வர குழுத கொள்ளுடைக் கரம்பைக்
செந்நெல் வல்சி யறியார் தத்தம்
பாடல் சான்ற வைப்பி
னூடி னுடல் யாவண தவர்க்கே.

இதுவும்அது.

பெயர் - (சு) நீஞ்சேற்றியாணர்

(நு - சு.) நெல்மிக்கு அறையுறு கரும்பென்றது நெல்லின்கண்ணே அந்நெல்லேநெருக்கி மிக எழுந்தமையானே அறுக்கலுற்ற கரும்பென்றவாறு.

இனி, அந்நெற்றன் கரும்பின் மிக எழுந்து அதனை நெருக்கின்மையால், அந்நெல்லிற்கு இடமுண்டாக அறுத்த கரும்பெனினுமாம்.

சூ. தீஞ்சேறு - இனியபாகு. யாணரென்றது அத்தீஞ்சேற்றது இடையறவின்மையை.

இச்சிறப்பானே, இதற்கு,'தீஞ்சேற்றியாணர்'என்று பெயராயிற்று.

(எ) வளம்வீங்கிருக்கையாகிய (அ) மென்பாலைனைக் கூட்டுக.

மென்பால் = மருதம்.

(கூ) பொறைய, நீ (க) புலிகொன்று களிறுடீம் (உ) வயமான் அஞ்சினை ; அதனால், (ச) வேந்தரும் வேளிரும் பிறரும் கின்னடிக்கீழ்ப்பணிந்து தமக்குரிய (அ) மென்பால்கடோறுமிருந்துமுன்பணிந்தவாற்றிற்கேற்ப (நு) கின்வழியொழுகாராயின், அவர்கள் (கக) வெள்வரகுழுதகொள்ளுடைக் கரம்பையாகிய (அ) வன்பாலிலே கெட்டுப்போயிருந்து ஆண்டுவினைந்த வெள்வரகு உண்பதன்றித் தாம் பண்டுண்ணும் (கஉ) செஞ்செல்வல்சி உண்ணக்கிடையாதபடி மிடிப்படுகின்றார் ; (கச) தத்தநாட்டினை ஒருங்கு ஆளுதல் அவர்க்கு யாவணதென வினைமுடிவுசெய்க.

இதனைச்சொல்லியது, அவன்வென்றிச்சிறப்புக் கூறியவாறுயிற்று.

(பி - ம்.) அ. தழீஇயமென்பால். கக. கல்லுடைக்கரம்பை.
கூ. புலவிகல்படுத்து. கஉ. அறியாருடன. (நு)

(எகூ.) களிறுடைப் பெருஞ்சமந் ததைய வெஃகுயர்த்
தொளிறுவாண் மன்னர் ததைகிலை கொன்று
மூசுகடிப் படைய வருந்துறை போகிப்
பெருங்கட னீந்திய மரம்வலி யுறுக்கும்
நு பண்ணிய விசிலஞர் போலப் புண்ணெரீஇப்
பெருங்கைத் தொழுதியின் வன்றுயர் கழிப்பி
யிரந்தோர் வாழ வல்கி யிரப்போர்க்
கீத றண்டா மாசித ழிருக்கை
கண்டனென் செல்கு வந்தனென் கால்கொண்டி
கஎ கருவி வானந் தண்டளி சொரிந்தெனப்
பல்விதை யுழவிற் சில்லே ராளர்
பனித்துறைப் பகன்றைப் பாங்குடைத் தெரியல்
கிழுவுறு கலிங்கங் கடிப்பச் சூடி.

யிலங்குகதிர்த் திருமணி பெறூஉ
கடு மகன்கண் வைப்பி ஞகிழ வோயே.

இதுவும் அது.
பெயர்-(அ) மாசிதறிருக்கை.

சு. கடல்நீர்த்தியமரம் - மரக்கலம்.

அ. மாசிதறிருக்கையென்றது பகைவரிடத்துக் கொள்ளப்பட்ட மாக்களை வரையாது அளவிறக்கக்கொடுக்கும் பாசதையிருக்கையென்றவாறு.

இச்சிறப்பானே, இதற்கு 'மாசிதறிருக்கை' என்று பெயராயிற்று.

(கo) தண்டளிசொரிந்தென (கக) ஏராளர் (கச) கதிர்த்திருமணி பெறூஉம் (கடு) நாடெனக்கூட்டி, மழைபெய்தலாலே ஏராளர் உழுதுவிளை த்துக்கோடலேயன்றி உழுத இடங்கள்தோறும் ஒளியையுடைய திருமணி களை எடுத்துக்கொள்ளுநாடென வுரைக்க.

கக. பல் விதை உழவின் சில்லோராளரென்றது பலவிதையுழவாற் பெரியராயிருப்பினும் தம் குலத்தானும்ஒழுக்கத்தானும் சிறிய ஏராளரென்ற வாறு.

சின்மையை,சீன்னூலென்றதுபோல ஈண்டுச்சிறுமையாகக்கொள்க.

(கஉ) பகன்றைத்தெரியல் (கங) கழுவுறுகலிங்கம் கடுப்பச்சூடித் (கச) திருமணிபெறூஉமெனக் கூட்டி, பகன்றைமாலையைக் கழுவுறுகலிங்க மொப்பச் சூடிக்கொண்டுநின்று திருமணிகளை எடுக்குமெனவுரைக்க.

(கடு) நாடுகிழவோய், (உ) மன்னர் (க) பெருஞ்சமம் தழைய எஞ் குயர்த்து (உ) அம்மன்னர்பலர் கூடிச்செறிந்த நிலைமையைக்கொன்று (ஙி) அருந்துறைபோகிக் (ச) கடலை நீர்தின மரக்கலத்தினை அழிவுசேராது வலி யுறுக்கும் (டு) பண்டவாணிகரைப்போலக் (சு) கைத்தொழுதியின் (டு) புண்ணை ஒருவுவித்து(சு)வலியதுயரைக்கழித்துப் போரிடத்துவினையிலிருத் தலே வினைதமாகக்கொண்டு (எ) இரந்தோர்வாழ்தல்கிப் பின்னும் இரப் போர்க்கு (அ) ஈதலின்மர்ருத மாசிதறிருக்கையைக் (கு) கண்டுபோவேன் வந்தேனெனக்கூட்டி விளைமுடிவுசெய்க.

இதனாற்சொல்லியது, அவன்வென்றிச்சிறப்பும் கொடைச்சிறப்பும் கூறியவாறுயிற்று.

(பி - மீ.) டு. பண்ணியவினைவிர். (சு)

(எஎ.) எனைப்பெரும் படையனை சினப்போர்ப் பொறைய
னென்றனி ராயி னுறுசெல் வம்பலிர்
மன்பதை பெயர வரசுகளத் தொழியக்
கொன்றுதோ ளோச்சிய வென்றுடு துணங்கை

(ங) மீபிணத் துருண்ட தேயா வாழியிற்
பண்ணமை தேரு மாவு மாக்களு
மெண்ணற் கருமையி னெண்ணின்றே விலனே
கந்துகோ ளீயா தது காழ்பல மூருக்கி
யுகக்கும் பருந்தி னிலத்துநிழல் சாடிச்
கo சேண்பரன் மூரம்பி னீர்ம்படைக் கொங்க
ராபரந் தன்ன செலவிற்பல்
யானை காண்பலவன் முனை யானே

துறை - உழிஞையாவம்.
வண்ணமும் நாக்கும் அது.
பெயர்-(ச) வென்றுடுதுணங்கை.

ஙூ. மன்பதைபெயரவென்றது படைகெட்டோடவென்றவாறு.

ஙூ - ச. அரசகளத்தொழியக் கொன்றென்றது அரசரைக் களத்திலே உடலொழிந்துகிடக்கக் கொன்றென்றவாறு.

(ச) கொன்று தோளோச்சிய (ங) பிணமெனக்கூட்டி, முன்பு தம்மூடன்பகைத்தவரைக் கொன்று தோளோச்சியாடி இப்பொழுது இவன்களத்திற் பட்டுக்கிடக்கின்றவீரர்பிணமென அவ்வீரர்செய்தியை அவர்பிணத்தின்மேலேற்றிச் சொல்லியவாறுகவுரைக்க.

(ச) வென்றுடுதுணங்கைப் (ங) பிணமென்றது ஊர்களிலேயாடும் துணங்கையன்றிக் களங்களிலே வென்றுடின துணங்கையையுடைய பிணமென்றவாறு.

இச்சிறப்பானே, இதற்கு 'வென்றுடுதுணங்கை' என்று பெயராயிற்று.

ங. மீபிணத்தைப் பிணமீயெனக்கொள்க.

எ. எண்ணிற்றேவென்னும் ஒற்று மெலிந்தது.

அ. கந்துகோளீயாதென்றது வினையெச்சவினைத்திரிசொல்.

க. சாடியென்னும் வினையெச்சத்தினைச் (கக) செலவென்னும் தொழிற்பெயரொடுமுடிக்க.

கo. ஈர்ம்படை.....

(உ) வம்பலிர், (க) பொறையன் எனைப்பெரும்படையன் (உ) என்றனிராயின், (கஉ) அவன் தானையிடத்துத் (சு) தேரும் மாவும் மாக்களும் (எ) எண்ணற்கருமையின் எண்ணிற்றிலன்; ஆயின், (கஉ) அவன் தானையின் யானை தான் எண்ணினையோவெனின், அதுவும் எண்ணினேனலலேன்; [கட்புலனுக்கு வரையறைப்பட்டதுபோல்] (கக) ஆபரந்தாலொத்த செலவிற்

பல (கஉ) யானையை அவன்முன்னியாளே காண்பலெனக்கூட்டி வினைமுடிவு செய்க.

இதனுட்செல்லியது, அவன்படைப்பெருமைசிறப்புக் கூறியவாறுயிற்று.

இப்பாட்டிற் பொதுப்படப் படையெழுச்சிகூறியதனை உழிஞையுரவமென்றது, ஆண்டு அப்படையெழுங்காலத்து மொச்சிமீதிற் போர்குறித்தெழுந்ததை ஒருகாரணத்தான் அறிந்துபோலும்.

(பி - ம்.) ஙு. தெய்வயாழின். (எ)

(எஅ.) வலம்படு முரசி னிலங்குவன விழுஉ
மவ்வெள் ளருவி யுவ்வரை யதுவே
சில்வளை விறலி செல்குவை யாயின்
வள்ளிதழ்த் தாமரை நெய்தலொ டுரிந்து
ஙு மெல்லியன் மகளி ரொல்குவன ரியலிக்
கிளிகடி மேவலர் புறவுதொறு நுவலப்
பல்பய னிலைஇய கடறுடை வைப்பின்
வெல்போ ராடவர் மறம்புரிந்து காக்கும்
வில்படியி லிறும்பிற் றகடூர் நூறி
கஂ பேஎ மன்ற பிறழ்நோக் கியவ
ரோடுறு கடுமுரண் டெமியச் சென்று
வெம்மூனை தபுத்த காலைத் தங்காட்
டியாடுபரந் தன்ன மாவி
னுபரந் தன்ன யானையோன் குன்றே.

துறை - வ்றலியாற்றுப்படை.
வண்ணமும் தூக்கும் அது.
பெயர் - (கஂ) பிறழநோக்கியவர்.

உ. அவ்வெள்ளருவி - அழகிய வெள்ளருவி. உவ்வரையென்றது உவ்வெல்லையென்றவாறு. அ து வெ ள் ப தை அம் மலை யென்னுஞ்சுட்டு. வெள்ளருவியையுடைய அதுவெனக்கூட்டுக.

(ஙு) மகளிர் இயலி (ச) நெய்தலொடு தாமரையரிந்து (சு) கிளிகடி மேவலர் புறவுதொறும் நுவலப் (எ) பல்பயன் நிலைஇய் கடறெனக்கூட்டி, கிளிகடிமகளிர் நிலவுணமையானே மருதநிலத்திலேசென்று நெய்தலொடு தாமரையரிந்து பின் கிளிகடிதொழிலே மேவுதலை யுடையராய்ப் புதுவினபுனங்

கடோறும் இளிகடிபாடலைதுவலப் பல்பயங்களும்கிலபெற்ற முல்லைநிலமென வுரைக்க.

(எ) வைப்பித் (கூ) தகடுரெனக்கூட்டுக.

(அ) ஆடவர்காக்கும் (கூ) இறும்பெனக்கூட்டுக.

கூ. வில்பயிலிறும்பு - படைநிலை.

கo. பிறழநோக்கியவரென்றது தம் சினமிகுதியானே மாற்றூர் படைததோற்றத்தினை நெறியால் நோக்காது எடுத்தும் படுத்தும் கோட்டியும் பலபடப் பிறழநோக்கும் பகைவராகிய பல்லியமுடையரென்றவாறு.

இச்சிறப்பானே, இதற்குப்'பிறழநோக்கியவர்'என்றுபெயராயிற்று.

(கஙூ) மாவிஞெடுவென ஓடு விரித்து, (கஉ) முனைதபுத்தகாலை மாவிஞெடு (கச) ஆபரந்தன்ன யானையோனெனவுரைக்க.

(ஙூ) சில்வளைவிறலி, செல்குவையாயின், (கச) யானையோன்குன்று (உ) உவ்வெல்லையில் வெள்ளருவியுடைய அதுவெனமாறிக்கூட்டி வினை முடிவுசெய்க.

இதனுற்சொல்லியது, அவன்வென்றிச்சிறப்புக்கூறியவாறுயிற்று.

(பி - ம்.) ச. இதட்டாமரை. கo. பேயமன்ற.
கூ. உறுப்பிற்றகடூர்.

(அ)

(எகூ.) உயிர்போற் றலையே செருவத் தானை
கொடைபோற் றலையே யிரவலர் நடுவட்
பெரியோர்ப் பேணிச் சிறியோரை யளித்தி
நின்வயிற் பிரிந்த நல்லிசை கனவினும்
நு பிறர்நிலை யறியா வயங்குசெந் நாவிற்
படியோர்த் தேய்த்த வாண்மைத் தொடியோர்
தோளிடைக் குழைந்த கோதை மார்ப
வனைய வளப்பருங் குரையை யதனு
ஞின்ஞெடு வாராஅர் தங்கிலத் தொழிந்து
கo கொல்களிற் றியானை யெருத்தம் புல்லென.
வில்குலை யறுத்துக் கோலின் வாரா
வெல்போர் வேந்தர் மூரசுகண் போழ்ந்தவ
ரரசுவா வழைப்பக் கோடறுத் தியற்றிய
வணங்குடை மரபிற் கட்டின்மே லிருந்து
கந நும்பை சான்ற மெய்தயங் குயக்கத்து
நீம்படு குருதி புறம்படி னல்லது

மடையெதிர் கொள்ளா வஞ்சுவரு மரபிற்
கடவு ளியிரையி னீலஇக்
கேடில வாக பெருமநின் புகழே.

துறை - செந்துறைப்பாடாண்பாட்டு.
வண்ணமும் தூக்கும் அது.
பெயர் - (கசு) நிறம்படு குருதி.

ச. பிரிந்த நின்வயின் நல்லிசையெனக்கூட்டுக.
பிரிதல் - தன்னைவிட்டுத் திக்குவிதிக்குக்களிலே போதல்.
(ச) இசை (ரு) அறியாவெனமுற்றுக அறுத்துரைக்க.

கூ. நின்னெடுவாரார் தந்நிலத்து ஒழிந்தென்றது நின்னைவழிபட்டு நின்னெடு ஒழுகாதிருத்தலேயன்றித் தந்நிலத்திலே வேறுபட்டுநின்றென்றவாறு.

(கo) யானையெருத்தம்புல்லெனை (கக) வில்குலையறுத்துக் கோலின்வாரா (கஉ) வேந்தரென்றது முன்பு நின்வழி ஒழுகாது ஒழிந்திருந்தவழிப் பின்பு தாம் களத்து நின்போர்வலிகண்டு இனி நின்வழி ஒழுகுதுமெனச் சொல்லித் தாம் ஏறிய யானையெருத்தம்புல்லென வில்லின் நாணியையறுத்து நின்செங்கோல்வழியொழுகாத வேந்தரென்றவாறு.

கங. அழைத்தல் - வருத்தத்தாற் கதறுதல்.

(கரு) தும்பை சான்ற மெய் தயங்கு உயக்கத்து (கசு) நிறம்படு குருதியென்றது - வீரருடைய தும்பைசூடியதற்கேற்பநின்று பொருதலாற் றலையுடைய உடலானது அசையும்படிவந்த ஓய்வினையுடைய நிறங்களைத் திறந்துவிட்டகுருதியென்றவாறு.

அல்லாத இடங்களிற் குருதிகொள்ளாமையின், நிறங்களைத் திறக்க ஆண்டு உண்டானகுருதியென்பதாயிற்று.

இச்சிறப்பானே, இதற்கு 'நிறம்படுகுருதி' என்று பெயராயிற்று.

(கங) கோடறுத்து இயற்றிய (கச) கட்டின்மேலிருந்து (கசு) நிறம்படுகுருதி புறம்படினல்லது (கஏ) மடையெதிர்கொள்ளாக் (கஅ) கடவுளெனக்கூட்டி, அவ்வாறுசெய்ததொருகட்டில் கொடுவந்திட்டதன்மேலிருந்து அவ்வாறுகொடுப்பதொரு பலியுண்டாயினல்லது பலிகொள்ளாக்கடவுளெனவுரைக்க.

(கச) கட்டின்மேலிருந்தல்லது (கசு) குருதிபுறம்படினல்லதென அல்லதென்பதனை இரண்டிடத்தும் கூட்டிக்கொள்க.

கஅ. கடவுளென்றது அவனுல் இவ்வாறு வழிபடும் கொற்றவையை அயிரை - அக்கொற்றவைஉறைவதொருமலை.

(எ) கோதைமார்ப, (க) செருவத்து உயிர்போற்றலே; (உ) இரவலர் நடுவண்கொடைபோற்றலே;(ஙூ)பெரியோரைப்பேணிச் சிறியோரைஅளித்தி; (அ) அனையகின்குணங்கள் அளப்பரியை; நீ அவ்வாறெழுகுதலாற் (ச) பிரிந்த நின்வயின் நல்லிசை இனிக் கனவிலும் (ஞ) பிறர் ஈச்சுதலறியா; அவ்வாறு அறியாமையின், (கஙூ) பெரும, அவ்வாறுகியநின்புகழ் (கஅ) நிலஇ நினிடத்துக் கேடிலவாகவென மாறிக்கூட்டி. வினைமுடிவுசெய்க.

அ. 'அனையவளப்பருங்குரையை'என்றது(ஙூ)'சிறியோரையளித்தி' என்றதன்பின்னே நிற்கவேண்டுதலின், மாறுயிற்று,

இதனுற்சொல்லியது, அவன் பலகுணங்களும் ஒருங்கு புகழ்ந்து வாழ்த்தியவாறுயிற்று.

(பி - ம்.) சு. பிறந்த. கூ. வாரார்நின்னிலத்தெளிந்து.
அ. அனையையளப். (கூ)

(அ0.) வான்மருப்பிற் களிற்றியானை
மாமலையிற் கணங்கொண்டவ
ரெடுத்தெறிந்த விறன்மூரசங்
கார்மழையிற் கடிதுமுழங்கச்
(நு) சாந்துபுலர்ந்த வியன்மார்பிற்
ரெடிசுடர்வரும் வலிமுன்கைப்
புண்ணுடையெறுழ்த்தோட் புடையலங் கழற்காற்
பிறக்கடி யொதுங்காப் பூட்கை யொள்வா
ளொடிவி றெவ்வ ரெதிர்நின் றுரைஇ
(கo) யிடுகை திறையே புரவெதிர்ந் தோற்கென
வம்புடை வலத்த ருயர்ந்தோர் பரவ
வனையை யாகன் மாறே பகைவர்
கால்கிளர்ந் தன்ன கதழ்பரிப் புரவிக்
கடும்பரி நெடுந்தேர் மீமிசை நுடங்குகொடி
(கநு) புலவரைத் தோன்றல் யாவது சினப்போர்
நிலவரை நிறீஇய நல்லிசைத்
தொலையாக் கற்பநின் றெம்முனை யானே.

துறை - வஞ்சித்துறைப்பாடாண்பாட்டு.
வண்ணம் - ஒழுகுவண்ணம்.
தூக்கு - செந்தூக்கும் வஞ்சித்தூக்கும்.
பெயர் - (எ) புண்ணுடையெறுழ்த்தோள்.

உ. கணங்கொள்ளவெனத் திரிக்க. அவரென்றது பகைவரை.

எ. புண்ணுடை எறுழ்த்தோளென்றது, எப்பொழுதும் பொருது புண்ணுறுத வலியதோளென்றவாறு.

இச்சிறப்பானே, இதற்குப், **'புண்ணுடைபெறுழ்த்தோள்'** என்று பெயராயிற்று.

கo. புரவெதிர்ந்தோற்கென்றது கொடையேற்றிருக்கின்ற அவனுக்கென்றவாறு.

(கச) கொடி (கரு) தோன்றலென்றதனை எழுவாயும் பயனிலையுமாகக்கொள்க.

(கள) நின் தெம்முனைப் (கரு) புலவரையானனை மார்பிக்கூட்டுக.

(கள) தொலையாக்கற்பு, (கக) நின்வீராகிய உயர்ந்தோர் நின் தெவ்வராகிய (உ) அவருடைய (க) களிற்றியானை (உ) மலையிற் கணங் கொள்ளாநிற்க, (ஈ) முரசம் (ச) கடிதமுழங்காநிற்க, அவையிற்றை ஒன்றும் மதியாதே நின்னெடு (க) ஒடிவில் தெவ்வராகிய அவர் எதிர் நின்று பெயரா (கo) இப்புரவெதிர்ந்தோனுக்குத் திறையையிடுகவெனச் சொல்லி நின்னைப் (கக) பரவும்படி நீ (கஉ) அதற்கேற்ற தன்மையையுடையையான படியாலே (கள) நின்தெம்முனைப் (கரு) புலவெல்லையில் நின் (கஉ) பகைவர் (கச) தேர்மிசைக்கொடி (கரு) போரைக்குறித்துத்தோன்றல் யாவதெனக்கூட்டி வினைமுடிவுசெய்க.

இதனைச் சொல்லியது, அவன் கொடைச்சிறப்பொடுபுடைத்து வெள்ளிச்சிறப்புக் கூறியவாறாயிற்று.

(கள) தெம்முனைப் (கரு) புலவரைப் (கஉ) பகைவர் (கச) கொடி (கரு) தோன்றல் யாவதெனவெதிருன்றவர் நின்மைதோன்றக் கூறிய அதனால், வஞ்சித்துறைப்பாடாணியிற்று.

மூன்னர் ஆறடியும் வஞ்சியடியாய் வந்தமையானே, வஞ்சித்தூக்குமாயிற்று. (கo)

இதன்பதிகத்துக் கொல்லிக்கூற்றமென்றது, கொல்லிமலையைச் சூழ்ந்த மலைகளையுடைய காட்டினை.

நீர்கூர்மீமிசையென்றது, அக்காட்டு நீர்மிக்க மலையின் உச்சியை.

நொச்சிதன்றென்றது தகரே மதிலைக் கைக்கொண்டென்றவாறு.

## (பதிகம்.)

பொய்யில் செல்வக் கடுங்கோ வுக்கு
வேளாவிக்கோமான் பதுமன் றேவியீன்றமகன்
கொல்லிக் கூற்றத்து நீர்கூர் மீமிசைப்

பல்வேற் ருனே யதிக மானே
டிருபெரு வேந்தரையு முடனிலே வென்று
மூசுசுங் குடையுங் கலனுங்கொண்
டிசைசால் சிறப்பி னகளம் வேட்டுத்
துகடூர் மகளி ரிரங்கத் துப்பறுத்துத்
தகடே றெறிந்து கொச்சிதந் தெய்திய
அருந்திற லொள்ளிசைப் பெருஞ்சே ரலிரும்பொறையை

மறுவில் வாய்மொழி யரிசில்கிழார் பாடினர் பத்துப்பாட்டு. அவைதாம்: குறுந்தாண்ஞாயில், உருத்தெழுவெள்ளம், நிறந்திகழ் பாசிழை, லம்பெறுதிருமணி, தீஞ்சேற்றியாணர், மாசிதறிருக்கை, வென்ருடுதுணங்கை, பிறழநோக்கியவர், நிறம்படுகுருதி, புண் ணுடை யெறுழ்த்தோள். இவைபாட்டின் பதிகம்.

பாடிப்பெற்ற பரிசில்: தானும் கோயிலாளும் புறம்போந்துநின்று கோயிலுள்ளவெல்லாம் கொண்மினென்று காணம் ஒன்பது நூருயிரத்தொடு அரசுகட்டிற்கொடுப்ப அவர் யான் இரப்ப இதனை ஆள்கவென்று அமைச்சுப் பூண்டார்.

தகடூரெறிந்த பெருஞ்சேரலிரும்பொறை பதினேழியாண்டு வீற்றி ருந்தான்.

எட்டாம் பத்து முற்றிற்று.

## ஒன்பதாம் பத்து.

(அக.) உலகம் புரக்கு முருகெழு சிறப்பின்
வண்ணக் கருவிய வளங்கெழு கமஞ்சூ
லகலிரு விசும்பி னதிர்சினஞ் சிறந்து
கடுஞ்சிலை கழறி விசும்படையூ ருங்கந்து
(நு) காலை யிசைக்கும் பொழுதொடு புலம்புகொளக்
களிறுபாய்ந் தியலக் கடுமா தாங்க
வொளிறுகொடி நுடங்கத் தேர்திரிந்து கொட்ப
வரசுபுறத் திறுப்பினு மதிர்விலர் திரிந்து
வாயில் கொள்ளா மைந்தினர் வயவர்
(கo) மாயிருங் கங்குலும் விழுத்தொடி சுடர்வரத்
தோள்பிணி மீகையர் புகல்சிறந்து ஈரு
முடிதல் வேட்கையர் நெடிய மொழியுஉக்
கெடாஅ நல்லிசைத் தங்குடி நிறுமா
ரிடாஅ வேணி வியலறைக் கொட்ப
(கரு) நாடடிப் படித்தலிற் கொள்ளே மாற்றி
யழல்வினே யமைந்த நிழல்விடு கட்டி
கட்டூ வலிப்பதின் ரூனே யுதவி
வேறுபுலத் திறுத்த வெல்போ ரண்ணன்
முழவி னமைந்த பெரும்பழ மிசைந்து
(உo) சாறயர்ந் தன்ன காரணி யாணர்த்
தூம்பகம் பழுனிய தீம்பிழி மாந்திக்
காந்தளங் கண்ணிச் செழுங்குடிச் செல்வர்
கலிமகிழ் மேவல ரிரவலர்க் கீயுஞ்
சுரும்பார் சோலைப் பெரும்பெயற் கொல்லிப்
(உரு) பெருவாய் மலரொடு பசும்பிடி மகிழ்ந்து
மின்னுமிழ்ந் தன்ன சுடரிழை யாயத்துத்
தன்னிறங் கரந்த வண்டுபடு துப்பி
லெடுங்கே ரோதி யொண்ணுத லணிகொளக்
கொடுங்குழைக் கமர்த்த நோக்கி னையவர்

கூ0 பெருந்தகைக் கமர்ந்த மென்சொற் றிருமுகதது
மாணிழை யரிவை காணிய வொருநாட்
பூண்க மாளிகின் புரவி நெடுந்தேர்
மூனைகை விட்டு முன்னிலைச் செல்லாது
தூவெதிர்ந்து பெரு அத் தாவின் மள்ளரொடு
கூடு தொன்மருங் கறுத்த லஞ்சி யரண்கொண்டு
திஞ்சா வேந்தருந் துஞ்சுக
விருந்து மாக நின்பெருந் தோட்கே.

துறை - முல்லை.
வண்ணம் - ஒழுகுவண்ணம்.
தூக்கு - செந்தூக்கு.
பெயர் - (கசு) நிழல்விடுகட்டி.

உ. கமஞ்சூல் - மேகங்கள்; நிறைந்த சூலுடைமையின், மேகங்கள் கமஞ்சூலெனப்பட்டன.

ச. சிலையொகேழறியென ஓடு விரிக்க;சில - முழங்குதல். கழறல்- இடித்தல். நிவந்து விசும்பு அடையூவென மாறிக்கூட்டுக; விசும்படைதில் - மலையிலேபடிந்தவை எழுந்து விசும்பை அடைதல்.

ரு. காலை இசைக்கும் பொழுதொடு புலம்புகொளவென்றது மேகங்கள் கார்காலத்தை அறிவிக்கின்ற பருவத்தானே வருத்தம் கொள்ளாநிற்க வென்றவாறு.

(ரு) புலம்புகொள (கூ) வயவர் (கசு) வியலறைக்கொட்பவென முடிக்க.

கூ. வாயில் கொள்ளா மைந்தினரென்றது தமக்குக் காவலடைத்த இடங்களைச் சென்று கைக்கொள்ளா வலியினையுடையவரென்றவாறு.

ஈண்டு, வாயில் - இடம்.

க0. மா இருங்கங்குலென்றது மிகவும் கரிய இராவென்றவாறு.

(க0) கங்குலினும் (கசு) கொட்பவென முடிக்க.

கக. தோள் பிணி மீ கையரென்றது குளிராலே தோளைப்பிணித்த அத்தோள்மீது உள்ளவாகிய கைகளையுடையாரென்றவாறு.

கஉ. மூடுதல்வேட்கையரென்றது தாம் எடுத்துக்கொண்ட போர் முடிதலிலே வேட்கையையுடையாரென்றவாறு.

கரு. நாடு அடிப்படுத்தலிற் கொள்ளை மாறறியென்றது நாட்டை அடிப்படுத்தினபடியாலே அடிப்படுத்தும் காலத்து . உண்டாய்ச்சென்ற கொள்ளையை மாற்றியென்றவாறு.

கசு. அழல்வினையமைதல் - ஓட்டறுதல்.

இவ்வடைச்சிறப்பானே, இதற்கு 'நிழலீவிடுகட்டி' என்று பெயராயிற்று.

கள. கட்டளைவலித்தல் - இன்னுர் இன்னதனைப்பெறுகவென்று தரங்களை நிச்சயித்தல். தானைக்குதவியென விரிக்க.

(உo) சாறு அயர்ந்தன்ன (உக) தீம்பிழியென முடித்து விழாக் கொண்டாடினுலொத்த இனிய மதுவெனவுரைக்க.

(உo) கார்ணி யாண்ர்த் (உக) தூம்பென்றது கருமையைப்பொருந்தின அழகிய மூங்கிற்குழாயென்றவாறு.

உரு. பெருவாய்மலர் - இருவாட்சி. பசும்பிடி-பச்சிலை. மகிழ்ந்து-விரும்பிச்சூடி.யென்றவாறு.

உசு. மின் உமிழ்ந்தன்ன சுடர் இழையென்றது மேகம் மின்களை உமிழ்ந்தாற்போன்ற சுடர்களையுடைய இழையென்றவாறு.

(ஙங) முனை கைவிட்டு முன்னிலைச்செல்லாது (ஙசு) துஞ்சாவென முடித்து, பின்னேடு போர்செய்கையைக்கைவிட்டு பின்முன்னேவந்து வழிபட்டுநிற்றலைச் செய்யமாட்டாமையால் துஞ்சாதவெனவுரைக்க.

ஙச. தூ எதிர்ந்து பெறுஅத் தா இல் மள்ளரொடென்றது முன்பு பின்வலியோடெதிர்த்துப் பின் எதிர்க்கப்பெறுத வலியில்லாத மள்ளரோடென்றவாறு.

(ஙச) மள்ளரொடு (ஙசு) துஞ்சாவெனமுடிக்க.

(கஅ) அண்ணல், (ஙக) பின் அரிவைகாணிய (ஙஉ) பின்தேர்(ஙக) ஒருநாட் (ஙஉ) புரவிபூண்பதாகவேண்டும்; அதுதான் பின் அரிவைக்கே உடலாகவேண்டுவதில்லை; அதனுனே (ஙசு) துஞ்சாவேந்தரும் துஞ்சுவார்களாகவேண்டும்; அதுதான் பின் (ஙஎ) பெருந்தோட்கு விருந்துமாகவேண்டும்; இவ்வாறு இரண்டொருகாரியமாக இதனைச் செய்கவென வினைமுடிவு செய்க.

இதனுற்சொல்லியது, காமவேட்கையிற்செல்லாத அவன் வென்றி வேட்கைச்சிறப்புக் கூறியவாறுயிற்று.

இஃது அவனரிவை கற்புமுல்லையைப்பற்றி வந்தமையால், துறை முல்லையாயிற்று.

(பி - ம்.) எ. நுடங்கல. ஙஉ. புனைவினைநெடுந்தேர்.
உஉ. காந்தட்கண்ணி. ஙச. தூவின்மள்ளரொடு.
உஎ. வண்டுபடுகதுப்பின். (க)

(ஙஉ.) பகைபெரு மையிற் றெய்வஞ் செப்ப
வாரிறை யஞ்சா வெருவரு கட்டேர்ப்

பல்கொடி நுடங்கு முன்பிற் செறுநர்
செல்சமந் தொலைத்த வினைந வில் யானை
(ரு) கடாஅம் வார்ந்து கடுஞ்சினம் பொத்தி
வண்டுபடி சென்னிய பிடிபுணர்ந் தியல
மறவர் மறல மாப்படை யுறுப்பத்
தேர்கொடி நுடங்கத் தோல்புடை யார்ப்பக்
காடுகை காய்த்திய கீடுகா ளிருக்கை
க0 யின்ன வைகல் பல்ஞ ளாகப்
பாடிக் காண்கு வந்திசிற் பெரும
பாடுநர், கொளக்கொளக் குறையாச் செல்வத்துச் செற்றோர்
கொலக்கொலக் குறையாத் தானைச் சான்றோர்
வண்மையுஞ் செம்மையுஞ் சால்பு மறனும்
கரு புகன்றுபுகழ்ந் தசையா நல்லிசை
நிலந்தரு திருவி னெடியோய் நின்னே.

துறை - காட்சிவாழ்த்து.
வண்ணம் - ஒழுகுவண்ணமும் சொற்சீர்வண்ணமும்.
தூக்கு - செந்தூக்கு.
பெயர் - (சு) வினநவில்யானை.

க. பகை பெருமையின் தெய்வம் செப்பவென்றது நின்மனத்து அவரோடு பகைத்தன்மை பெரிதாகையானே நின்பகைவர் நின்னேயஞ்சித் தாம்தாம் வழிபடும்தெய்வத்தைத் தத்தமக்குக் காவலென்றுசொல்லவென்ற வாறு.

(க) செப்ப (உ) அஞ்சாவென முடிக்க.

உ. ஆர் இறை அஞ்சாக் கட்டுரென்றது வீரர் அரிதாக இறுத்தலை யஞ்சாத பாசறையென்றவாறு.

(ரு) பல்கொடி நுடங்கும் (சு) யானையென முடிக்க.

சு. வினை நவில் யானையென்றது முன்பே போர்செய்துபழகின யானையென்றவாறு.

இச்சிறப்பானும், முன்னின்ற அடைச்சிறப்பானும் இதற்கு 'வினை நவிலியானை' என்று பெயராயிற்று.

(சூ) பிடி புணர்ந்து இயலவென்றது (சு) அவ்வினை நவில்யானை (ரு) கடாம்வார்ந்து கடுஞ்சினம்பொத்தி அச்சினத்திற்கேற்பப் போர்பெருமை யிற் பாகர் அதன்சினத்தை அளவுபடுத்தற்குப் பிடியைப்புணர்க்கையான், அப்பிடியோடுபுணர்ந்தும் போர்வேட்டுத் திரியவென்றவாறு.

எ. மாப் படை உறுப்பவென்றது இன்னபொழுது போர்க்கமுமென்று அறிஞ்மையின், குதிரைகள் கலனைகட்டி நிற்கவென்றவாறு.

மாவைப் படையுறுப்பவெனவிரித்தலுமாம்.

அ. தேர் கொடி நுடங்கவென்றது தேர் போர்குறித்துப் பண்ணி நின்று கொடி நுடங்கவென்றவாறு.

தோல் புடை ஆர்ப்பவென்றது தோல்களும் முன்சொன்னவற்றின் புடைகளிலே போர்குறித்த ஞாளிடத்து ஆர்ப்பவென்றவாறு.

(சு) இயல (எ) மரல உறுப்ப (அ) நுடங்க ஆர்ப்பவென்னும் ஐந்தினையும் (கo) பன்னாளாகவென்னும் வினையொடுமுடிக்க.

கூ. காடு கைகாய்த்தியவென்றது பாசறையிருக்கின்ற நாள் குளிர் நாளாகையால், விறகெல்லாமுறித்துத் தீக்காய்ந்தவென்றவாறு.

காட்டையென இரண்டாவதனை விரித்து அதனைக் காய்த்தியவென பதனுட் போந்த பொருண்மையெடுத்து முடிக்க.

கூ-கo. நீடுநாளிருக்கையையுடைய இன்னவைகலென இரண்டாவது விரிக்க.

கo. இன்னவைகலென்றது இப்பெற்றியையுடைய பாசறையிருக்கின்ற நாட்களென்றவாறு.

கஉ-ஙு. செற்றோர் கொலக் கொல்லக் குறையாத் தானையென்றது பகைவர் போருட் கொல்லக்கொல்லக் குறைபடாத தானையென்று அதன் பெருமைகூறியவாறு.

கடு. புகன்று புகழ்ந்தென்பதனைப் புகன்றுபுகழவெனத் திரிக்க. அசையாநல்லிசை - கெடாநல்லிசை.

புகழ்க்காரணமாகிய (கச) வண்மைமுதலியகுணங்களைச் (கஙு) சான்றோர் (கடு) புகன்றுபுகழ்கையாலே கெடாதுநின்ற நல்லபுகழெனக் கொள்க.

(கசு) நெடியோய், (கக) பெரும, (உ)கட்டூரிடத்தே (கூ) நீடுநாளிருக்கை (கo) இன்னவைகல்தான் பன்னாளானபடியாலே (கசு) நின்னைப் (கக) பாடிக் காண்குவந்தெனைக்கூட்டி வினைமுடிவுசெய்க.

இதனுற்சொல்லியது, அவன்வென்றிச்சிறப்புக் கூறியவாறுயிற்று.

(பி - ம்.) ஙு. முன்பிற்செல்வர். (உ)

(ஆஙு.) கார்மழை முன்பிற் கைபரிந் தெழுதரும்
வான்பறைக் குருகி னெடுவரி பொற்பக்
கொல்களிறு மிடைந்த பல்ரேழ் ரெழுதியோடு
நெடுந்தேர் நுடங்குகொடி யவிர்வரப் பொலிந்து
நு செலவுபெரி தினிதுநிற் காணு மோர்க்கே

யின்னு தம்மவது தானே பன்மா
நாடுகெட வெருக்கி நன்கலந் தருஉநின்
போரருங் கடிஞ்சின மெதிர்ந்து
மாறுகொள் வேந்தர் பாசறை யோர்க்கே.

துறை - தும்பையரவம்.
வண்ணம் - ஒழுகுவண்ணம்.
தூக்கு - செந்தூக்கு.
பெயர் - (ஙூ) பஃறேற்றெழுதி.

க. கைபரிதல் - ஒழுங்குகுலைதல்.

மழைக்கு ஒப்பாகியயானைகளோடு (ஙூ) தோல்களையும் ஒப்பித்துப் பெரியவாகக் கூறியசிறப்பான், இதற்கு, 'பஃறேற்றெழுதி' என்று பெய ராயிற்று.

சு. பன்மாவென்றது பலபடியென்றவாறு.

எ. எருக்கல் - அழித்தல்.

(ஙு) நின்னைக்காண்பார்க்கு நின்படைசெல்கின்றசெலவு (க) மழைக் குழாத்தின்முன்பே ஓரொருகால் ஒழுங்கு குலைந்துசெல்லும் கொக்கொழு ங்குபோலக் (ஙூ) களிறுமிடைந்த பஃறேற்கிடுகின் தொகுதியொடு (ச)தேர் களின் நுடங்குகொடி விளங்காநிற்பப் பொலிவுபெற்றுப் (ஙு) பெருக இனிது; அவ்வாறு அன்புறுவாரையொழிய (சு) அதுதான் இன்னாது,மார்க் கெனின், (கூ) மாறுகொள்வேந்தர் பாசறையோர்க்கென விசேமுடிவுசெய்க.

இதனுற்சொல்லியது, அவன்படைச்சிறப்புக் கூறியவாறுயிற்று.

(பி - ம்.) உ. போர்ப்ப. சு-எ. பன்மா, ணூ.
சு. அம்மதானே. (ஙூ)

(அசை.) எடுத்தே றேய கடிப்புடை யதிரும்
போர்ப்புறு மூரசங் கண்ணதிர்ந் தாங்குக்
கார்மழை முழக்கினும் வெளில்பிணி நீவி
நுதலணங் தெழுதருந் தோழினவில் யானைப்
பார்வற் பாசறைத் தருஉம் பல்வேற்
பூழியர் கோவே பொலந்தேர்ப் பொறைய
மன்பதை சுவட்டுங் கூற்ற முன்ப
கொடிநுடங் காரெயி லெண்ணுவரம் பறியா
பன்மா பரந்தபுல மொன்றென் றெண்ணுது
கூலியை யாதனற் கறிந்தன ராயினும்

வார்முகின் முழக்கின் மழகளிறு மிகீஇத்தன்
கான்முளை மூங்கிற் கவர்கிளை போல
வுய்தல்யா வதுநின் னுடற்றி யோரே
வணங்க லறியா ருடன்றெழுந் துரைஇப்
கடு போர்ப்புறு தண்ணுமை யார்ப்பெழுந்து நுவல
நோய்த்தொழின் மலிந்த வேலீண் டுழுவத்து
மூணபுகல் புகல்வின் மாரு மைந்தரொ
டிருமெறி வரையிற் களிறுநிலஞ் சேரக்
காஞ்சி சான்ற செருப்பல செய்துநின்
உ0 குவவுக்குரை யிருக்கை யினிதுகண் டிகுமே
காலை மாரி பெய்துதொழி லாற்றி
விண்டு முன்னிய புயனெடுங் காலைக்
கல்சேர்பு மாமழை தலைஇப்
பல்குசற் புள்ளி ஞெலியெழுந் தாங்கே.

துறை - வாகை.
வண்ணமும் தூக்கும் அது.
பெயர் - (ச) தொழினவில்யானை.

(க) எடுத்தேறு ஏவிய (உ) முரசமென முடிக்க.

(க) கடிப்பென்பது கடியெனக் கடைக்குறைந்தது. புடையானென உருபுவிரிக்க.

ங. முழக்கினுமென்ற உம்மை முரசினது கண்ணின் அதிர்ச்சி யிலேயன்றி அதனொடொத்த மழைமுழக்கினுமென * எச்சவும்மை.

ச. தொழில் நவில் யானையென்றது போர்க்குரியயானையென்று எல்லாராலும் சொல்லப்படுகின்ற யானையென்றவாறு.

இச்சிறப்பானும், முன்னின்ற அடைச்சிறப்பானும் இதற்கு, 'தொழி னவில்யானை' என்று பெயராயிற்று.

(ஞ) பார்வற்பாசறை (ச) யானை (ஞ) தரூஉமென மாறிக்கூட்டி மாற்றூரதுகாவற்பாசறையிற் புக்கு அவ் யானைகளைக் கொண்டுபோது மென்றவாறு.

எ. சவட்டுதல் - உருவழித்தல்.
கூ. பரந்தனவென்பது பரந்தவெனநின்றது.
கஉ. கவர்தல் - அகப்படுத்தல்.

* சிறப்பும்மையென்றும் பிரதிபேதமுண்டு.

(கஉ) மூஉ மூங்கிற் (கக) களிறு (கஉ) கால் கவர் இனமபோல (கஙு) நின் உடற்றியோர் உய்தல்யாவதென மாறிக்கூட்டி, மூஉயானமூங்கிலிற் களிறு காலால் அகப்படுத்தப்பட்டகிலை உய்யாதன்றே; அஃது அழிந்தாற்போல நின்னை உடற்றியோர் உய்தல் கூடாதெனவுரைக்க.

கடு. துவலவென்றது படையையுற்றுப் போர்செய்கவென்று சொல்லவென்றவாறு.

ககூ. நோய்த் தொழில் மலர்ந்தவென்றது நோய்த்தொழிலாகிய போரை ஏறட்டுக்கொண்டவென்றவாறு.

வேலீண்டழுவமென்றது, மாற்றார்படைப்பரப்பினை.

ககூ. காஞ்சிசான்றவென்றது நிலையாமையமைந்தவென்றவாறு.

உ0. குவவு - படைக்குழாம். குரைத்தல் - ஆரவாரித்தல்.

(ககூ) செருப்பலசெய்து (உ0) குரைத்தவெனமுடிக்க.

உக. காலமாரியென்றது மாரியிற்பெய்யும் பெயலினை.

தொழிலாற்றியென்றது உழவுத்தொழின்முதலாய தொழில்களைச செய்வித்தென்றவாறு.

(உங) கல்சேர்பு மாம்மழை தலைஇயென்றது, (உக) பண்டு ஒருகாலம் பெய்து ஆற்றி (உஉ) வரைக்கட்போயினபுயல் நெடுங்காலம்பெய்யாத நிலைமைக்கண்ணே பின்பு பெய்வதாகக் கல்லைச்சேர்ந்து மழைபெய்யவென்றவாறு.

தலைஇயென்பதனைத் தலையவெனத்திரிக்க.

(சு) பூழியர்கோவே, பொறைய, (எ) மூன்ப, (கூ) பகைப்புலத்து (அ) ஆரெயில்கள் எண்ணுவரம்பறியா; (கூ) பன்மா பரந்தன; ஆகையால், பகைப்புலம் நமக்குவெலற்கு அரியதொன்றென்று எண்ணாது (க0) நீ ஆண்டு வல்லுநையானபடியை மூன்பு அறியாது (கங) நின்னை உடற்றியோர் இன்று போர்செய்துஅதனை (க0) அறிந்தாராயினும் அவர் நின்னொடு (கச) உடன்று எழுந்து உரைஇ அதனையே பின்னும் அறிவதல்லது நின்னை வணங்கல் அறிகின்றிலர்; இனி அவர் (கஉ) மூஉமூங்கிலிற் கால்கவர்கினமபோல அழிவதல்லது (கங) உய்யவுங்கருதுவது யாவது? (உஉ) நெடுங்காலம்பெய்யாத (உங) மழை பெய்தவழிப் (உச) பலகுரலியுடைய புள்ளின் ஒலியெழுந்தாற் போல, நெடுங்காலம் போர்செய்யாதுநின்று (கங) அவ்வுடற்றியோர் (ககூ) வேலீண்டு அழுவத்துச் (ககூ) சான்ற செருப்பலசெய்து நின் (உ0) பல படைக்குழாம் ஆரவாரிக்கின்றஇருப்பினை யாம் இனிதுகண்டேமென மாறிக்கூட்டிவினைமுடிவுசெய்க.

(கச) 'உடன்றெழுந் தனைஇ வணங்க லறியார்' என்பது (க0) 'அறிந்தனராயினும்' என்பதன்பின் நிற்கவேண்டுதலின். மாறுயிற்று.

# பதிற்றுப் பத்து.

இதனுற்சொல்லியது, அவன்வென்றிச்சிறப்புக் கூறியவாறுயிற்று.

(பி - மி.) கூ. புலமென்றெண்ணுது. (ச)

(அரு.) நன்மரந் துவன்றிய நாடுபல தரீஇப்
பொன்னவிர் புனைசெய லிலங்கும் பெருமபூ
ணொன்னுப் பூட்கைச் சென்னியர் பெருமா
னிட்ட வெள்வேன் முத்தைத் தம்மென
ரு முன்றிணை முதல்வர் போல நின்று
தீஞ்சுனை நிலைஇய திருமா மருங்கிற்
கோடுபல விரிந்த நாடுகா ணெடுவரைச்
சூடா நறவி னுண்மகி ழிருக்கை
யரசவை பணிய வறம்புரிந்து வயங்கிய
கஉ மறம்புரி கொள்கை வயங்குசெந் நாவி
னுவலை கூராக் கவலையி னெஞ்சி
னனவிற் பாடிய நல்லிசைக்
கபிலன் பெற்ற வூரினும் பலவே.

துறை - செந்துறைப்பாடாண்பாட்டு.
வண்ணமும் தூக்கும் அது.
பெயர் - (எ) நாடுகாணெடுவரை.

கூ. ஒன்னுப் பூட்கை - பிறர்க்கு அப்படிச்செய்யப் பொருந்தாத மேற்கோள். சென்னியர்பெருமானேயென்பதனுள், இரண்டாவது விகாரத்தாற் றொக்கது.

ச. முத்தைத் தம்மென - முன்னேதம்மினென.
முந்தை, முத்தையென வலித்தது.

(ரு) முதல்வர்போல (கூ) அறம்புரிந்துவயங்கியவென முடிக்க.

கூ - கஉ. அறம்புரிந்துவயங்கிய கொள்கையென்னுது மறம்புரியென்றது, அறத்திற்கு இடையீடுபடவருவழி அதனைக்காத்தற்கு அவ்வறக் கொள்கை மறத்தொடு பொருந்துமென்றற்கு.

எ. நாடுகாண் நெடுவரையென்றது தன்மேல்ஏறி நாட்டைக்கண்டு இன்புறுதற்கு ஏதுவாகிய ஒக்கமுடைய மலையென்றவாறு.

இச்சிறப்பானே, இதற்கு 'நாடுகாணெடுவரை' என்றுபெயராயிற்று.

அ. சூடாநறவு, மதுவிற்கு வெளிப்படை.

(கஉ) கொள்கையைப் (கஉ) பாடியவென இரண்டாவது விரித்து முடிக்க.

(கஉ) கனவிற்பாடியவென்றது (க0) வயங்கிய செங்கவிஞனும் (கக) உவலைகூராக் கவலையில் நெஞ்சினனும் மெய்ம்மையாற்பாடிய வென்ற வாறு.

(கங) கபிலனென்ற தெர்டைக்கேற்ப (கஉ) கவிலப்பாடியவென்பது ஓம் பர்டம்.

இளஞ்சேரலிரும்பொறை (ங) சென்னியர்பெருமானுடைய (க) நாடு கள்பலவற்றையும் எமக்குக் கொண்டுதந்து (ஙு) அச்சென்னியர்பெருமானை (ச) எம்முன்னே பிடித்துக்கொண்டுவந்துதம்மினெனத் தம்படைத்தலைவரை ஏவச் சென்னியர்பெருமான் படையாளர் பொருதுதோற்றுப் (ச)போகட்ட வெள்வேல் செல்வக்கடுங்கோவாழியாதனென்பவன் (எ) நாடுகாணெடு வரையின் (அ) நாண்மகிழிருக்கைக்கண்ணே (ஙு) தன்முன்றிணைமுதல்வரைப் போல (கூ) அரசவைபணிய அறம்புரிந்துவயங்கிய (க0) மறம்புரிகொள்கை யைப் (கஉ) பாடின (கங) கபிலன்பெற்றவூரினும் பலவென மாறிக்கூட்டி வினைமுடிவுசெய்க.

சென்னியர்பெருமானைத் தம்மென மாறவேண்டுதலின், மாறுயிற்று.

இனிப் பிறவாறு மாறிப் பொருளுரைப்பாருமுளர்.

இதனைச்சொல்லியது; அவன் முன்னோருடைய கொடைச் சிறப் பொடுபடுத்து அவன் வென்றிச்சிறப்புக் கூறியவாறுயிற்று. (ஙு)

(அசூ.) உறலுறு குருதிச் செருக்களம் புலவக்
கொன்றமர்க் கடந்த வெந்திறற் றுடக்கை
வென்வேற் பொறைய னென்றலின் வெருவர
வெப்புடை யாடுஉச் செத்தனென் மன்யா
ங னல்லிசை நிலைஇய நனந்தலை யுலகத்
தில்லோர் புன்கண் டீர நல்கு
நாடல் சான்ற நயனுடை நெஞ்சிற்
பாடுநர் புரவல னீடுநடை யண்ணல்
கழைநிலை பெருஅக் குட்டத் தாயினும்
க0 புனல்பாய் மகளிர் நாட வொழிந்த
பொன்செய் பூங்குழை மீமிசைத் தோன்றுஞ்
சாந்துவரு வாணி நீரினுந்
தீந்தண் சாயலன் மன்ற தானே.

இதுவும்அது.

பெயர் - (உ) வெந்திறற்றுடக்கை.

க. உறலுறுகுருதியென்றது நிலத்திலே உறுதன் மிக்க குருதி யென்றவாறு.

(க) 'உறலுறு' என்பதுமுதலாக முன்னின்ற அடைச்சிறப்பான் இதற்கு (உ) 'வேந்திறற்றடக்கை' என்று பெயராயிற்று.

ங. நிலையியவென்றது ஈண்டு வினையெச்சம்.

கஉ. வருவானியென்றது வினைத்தொகை. வானியென்பது ஓர் யாறு.

இளஞ்சேரலிரும் பொறை யெல்லாரும் (ஙூ) வெருவரச் (க) செருக்களம்புலவக் (உ) கொன்றமர்க்கடந்த தடக்கைப் (ஙூ) பொறைய னென்று சொல்லுகையாலே, (ச) யான் அவனை வெப்பமுடையா னெருமகனென்று முன்புகருதினேன்; அஃது இப்பொழுது கழிந்தது; அப்பொறையனுகிய (அ) பாடுநர்புரவலன், ஆடுநடையண்ணல் யான் தன் னெடு கலந்திருந்தவழித் தன்னுட்டு (கஉ) வானியென்னும் யாற்றுநீரினும் (கஙூ) சாயலனுயிருந்தான்றனெனக்கூட்டி வினைமுடிவுசெய்க.

**இதனைச்சொல்லியது**, அவன் வன்மைமென்மைச்சிறப்புக் கூறியவா றுயிற்று.

(பி - மீ.) உ. அமர்கடந்த. (சூ)

(அஎ.) **சென்மோ பாடினி நன்கலம் பெறுகுவை**
**சந்தம் பூழிலொடு பொங்குதுரை சுமந்து**
**தெண்கடன் முன்னிய வெண்டலைச் சேம்புன**
**லொய்யு நீர்வழிக் கரும்பினும்**
**பல்வேற் பொறையன் வல்லனு ளளியே.**

துறை - விறலியாற்றுப்படை.
வண்ணமும் தூக்கும் அது.
பெயர் - (உ) வெண்டலைச் சேம்புனல்.

உ. பூழில் - அகில்.

ஙூ. முன்னியவென்றது ஈண்டுப் பெயரெச்சம்.

ஙூ. வெண்டலைச் சேம்புனலென முரண்படக்கூறியவாற்றலும் முன்னின்ற அடைச்சிறப்பானும் இதற்கு, 'வெண்டலைச்சேம்புனல்' என்று பெயராயிற்று.

சேம்புனலென்றது சேம்புனலையுடைய யாற்றினை.

ச. நீர்வழியும் கரும்பெனக்கூட்டி நீரிடத்துச்செலுத்துங்கரும் பென்க.

கரும்பென்றது கருப்பந்தெப்பத்தினை.

(நு) பல்வேற்பொறையன் (ஈ) வெண்டலைச்செம்புனலியுடைய யாற்றிற் (ச) செலுத்தும் கருப்பம்புணையினும் (நு) அளித்தல்வல்லன்; ஆதலால், அவன்பாலே (க) பாடினி, செல்; செல்லின், நன்கலம் பெறுகுவையெனக்கூட்டி வினைமுடிவுசெய்க.

இதனைச் சொல்லியது, அவன் அருட்சிறப்புக் கூறியவர்ரூயிற்று.

(அஅ.) வையக மலர்ந்த தொழின்முறை யொழியாது
கடவுட் பெயரிய கானமொடு கல்லுயர்ந்து
தெண்கடல் வளைஇய மலர்தலை யுலகத்துத்
தம்பெயர் போகிய வொன்னூர் தேயத்
நு துளங்கிருங் குட்டந் தொலைய வேலிட்
டணங்குடைக் கடம்பின் முழுமுத றடிந்து
பொருமுரண் ணெய்திய கழுவுள் புறம்பெற்று
நாம மன்னர் துணிய நூறிக்
கால்வல் புரவி யண்ட ரோட்டிச்
கo சுடர்வீ வாகை நன்னற் றேய்த்துக்
குருதி விதிர்த்த குவவுச்சோற்றுக் குன்ரூ
ருருகெழு மரபி னயிரை பரைஇ
வேந்தரும் வேளிரும் பின்வந்து பணியக்
கொற்ற மெய்திய பெரியோர் மருக
கநு வியலுளை யரிமான் மறங்கெழு குருசில்
விரவுப்பணை முழங்கு நிரைதோல் வரைப்பி
னுரவுக்களிற்று வெல்கொடி நுடங்கும்பாசறை
யாரெயி லலைத்த கல்கால் கவணை
நாரரி நறவிற் கொங்கர் கோவே
உo யுடனுளர்த் தபுத்த பொலந்தேர்க் குருசில்
வளைகடன் முழவிற் ரூண்டியோர் பொருக
நீடே வாழிய பெருமை நின்வயிற்
றுவைத்த தும்பை நனவற்று வினவு
மாற்றருந் தெய்வத்துக் கூட்ட முன்னிய
உநு புனன்மலி பேரியா றிழிதந் தாங்கு
வருநர் வரையாச் செழும்பலம் சுரந்து
கொளக்கொளக் குறையாது தலைத்தலைச் சிறப்ப

வோவத் தன்ன வுருகெழு நெடுநகர்ப்
பாவை யன்ன மகளிர் நாப்பட்
கூ0 புகன்ற மாண்பொறிப் பொலிந்த சாந்தமொடு
தண்கமழ் கோதை சூடிப் பூண்சுமந்து
திருவிற் குலீஇத் திருமணி புரையு
மூருகெழு கருவிய பெருமழை சேர்ந்து
வேங்கை விரிந்து விசும்புறு சேட்சிமை
கூடு யருவி யருவரை யன்ன மார்பிற்
சேணுறு நல்லிசைச் சேயிழை கணவ
மாகஞ் சுடர மாவிசும் புகக்கு
ஞாயிறு போல விளங்குதி பன்னு
ளீங்குக் காண்கு வந்தனென் யானே
சூ0 யுறுகா லெடுத்த வோங்குவாற் புணரி
நுண்மண லடைகரை யுடைதரும்
தண்கடற் படப்பை நாடுகிழ வோயே.

துறை - செந்துறைப்பாடாண்பாட்டு.
வண்ணமும் தூக்கும் அது.
பெயர் - (கஅ)கல்காலுகவணை.

க. வையகம் மலர்ந்த தொழிலென்றது வையகத்திற்பரந்த அரசர் தொழிலென்றவாறு.

(க) தொழின்முறைஒழியாது(கச)கொற்றமெய்தியவென முடிக்க.

உ. கடவுட் பெயரிய காளமென்றது, விந்தாடவியை. கடவுளென்றது, ஆண்டு உறையும் கொற்றவையினை. கடவுளினென விரிக்க. கல் லுயரவெனத் திரிக்க.

கஉ. அயிரையென்றது, அயிரைமலையுறையும் கொற்றவையினை.

கஅ. கல்காலுகவணையென்றது கற்களைக் கான்முற்போல இடையு ருமல்விடும் கவணென்றவாறு.

இச்சிறப்பானே, இதற்கு, 'கல்காலுகவணை'என்று பெயராயிற்று.

உங. துவைத்ததும்பையென்றது எல்லாராலும் புகழ்ந்துசொல் லப்பட்ட தும்பைப்போரென்றவாறு.

(உங) நனவுற்றுவினவும் (உச) தெய்வமென்றது அத்தும்பைப் போரை நினக்கு வென்றிதருதற்கு மெய்ம்மையுற்றுவினவும் கொற்றவை யென்றவாறு.

(உச) தெய்வத்துக் கூட்டமுன்னிய (உடு) யாதென்றது அத்தெய்வம் கூடியுறைதலையுடைய அயிரைமலையைத் தலையாகக்கொண்டு ஒழுகப்பட்ட யாதென்றவாறு.

தெய்வம் கூடியுறைதலையுடைய அயிரை தெய்வத்துக் கூட்டமெனப் பட்டது.

உடு. இழிதந்தாங்கென்றது அவ்வியாறு மலையினின்று இழிந்தாற் போலவென்றவாறு.

(உஎ) சிறப்ப (ஈஅ) விளங்குதியெனமுடிக்க.

ஈ0. பொறியென்றது உத்தம இலக்கணங்களை. பொறியொடு சாந்தமொடுவென ஒடுவை இரண்டற்கும் கூட்டியுரைக்க. ஒடு, வேறுவினையொடு.

ஈக. கோதையென்றது, முத்தாரத்தினை.

(ஈக) சூடிச் சுமந்தென்னும் வினையெச்சங்களை (ஈடு) வரையன்னவென்பதனுள், அன்னவென்பதனொடு முடிக்க,

(ஈஉ) விற்குலவி (ஈச) வேங்கை விரிந்தென்னும்வினையெச்சங்களைத் திரித்து வில்குலவ வேங்கைவிரியத் (ஈஉ) திருமணிபுரையும் (ஈஈ) உருகெழுகருவிய பெருமழைசேர்ந்து (ஈச) விசும்புறு சேட்சிமை (ஈடு) அருவியருவரையென மாறிக்கூட்டி, இதனைக் குறைவுநிலையுவமையில் வழுவமைதியாக்கிப் பொறிக்கு வேங்கைப்பூவுவமமாகவும் கோதைக்குத் திருவில் உவமமாகவும் பூணிற்கு அருவி உவமமாகவும் சாந்திற்கு உவமமில்லையாகவு முரைக்க. இவ்வாறு இடர்ப்படாது வாளாதுமலையுரைப்பினும்அமையும்.

ஈஅ. விளங்குதியென்பது ஈண்டு முன்னிலையேவல்.

ச0. உறுகால் எடுத்த புணரியெனக்கூட்டுக.

(கச) பெரியோர் மருக, (கடு) மறங்கெழுகுருசில், (ககூ) கொங்கர் கோவே, (உ0) பொலந்தேர்க்குருசில், (உக) தொண்டியோர்பொருந, (உஉ) பெரும், (ஈசு) சேயிழைகணவ, (சஉ) நாடுகிழவோய், (ஈகூ) ஈங்குநிற்காண்குவந்தேன்; (உஉ) நீ நீவாழ்வாயாக, (உசு) பலதாரம் (உஎ) கொளக் கொளக்குறையாமற் சிறப்ப (உக) மகளிர்நாப்பட் (ஈஅ) பன்னாள் ஞாயிறு போல விளங்குவாயெனமாறிக்கூட்டி வினைமுடிவுசெய்க.

இதனாற் சொல்லியது, அவன் கொடைச்சிறப்பும் காமவின்பச்சிறப்பும் உடன்கூறி வாழ்த்தியவாறுயிற்று.

(பி - ம்.) உஎ. சிறந்து. (அ)

(உகூ) வானம் பொழுதொடு சுரப்பக் கானந்
தோடுறு மடமா னேறுபுணர்ந் தியலப்
புள்ளு மிகுதிறு மாச்சினை யார்ப்பப்

பழனுங் கிழங்கு மிசையற வறியாது
(நு) பல்லா னன்னிரை புல்லருந் துகளப்
பயங்கடை யறியா வளங்கெழு சிறப்பிற்
பெரும்பல் யாணர்க் கூலங் கெழுமம
நன்பல் லூழி நடுவுநின் றெழுகப்
பல்வே லிரும்பொறை நின்கோல் செம்மையி
(கo) ஞாலி ஞாலி ஞடுதொழு தேத்த
வுயர்நிலை யுலகத் துயர்ந்தோர் பரவ
வரசியல் பிழையாது செருமேந் தோன்றி
நோயிலை யாகியர் நீயே நின்மாட்
டடங்கிய நெஞ்சம் புகர்படி பறியாது
(கு) கனவினும் பிரியா வுறையுளொடு தண்ணெனத்
தகர நீவிய துவராக் கூந்தல்
வதுவை மகளிர் நோக்கினர் பெயர்ந்து
வாழ்நா ளறியும் வயங்குசுடர் நோக்கத்து
மீஞ்ஞடி புரையுங் கற்பின்
(உo) வாணுத லரிவையொடு காண்வரப் பொலிந்தே.

துறை - காவன்முல்லை.
வண்ணமும் தூக்கும் அது.
பெயர் - (ககூ) துவராக்கூந்தல்.

சு. மிசை அறவு அறியாமலெனத் திரிக்க.

அ. நடுவென்றது, நடுவுநிலைமையை.

கஉ. பிழையாமலெனத் திரிக்க.

கசு. துவராக்கூந்தலென்றது எப்பொழுதும் தகரமுதலியன நீவ்கையால் ஈரம் புலராத கூந்தலென்றவாறு.

இச்சிறப்பானே, இதற்கு, 'துவராக்கூந்தல்' என்று பெயராயிற்று.

(கடு) உறையுளொடு (கச) நெஞ்சம் புகர்படுபு அறியாதெனமாறிக் கூட்டி அறியாதென்பதனை அறியாமலெனத்திரித்து அதனைப் (கக) புரையு மென்றதனொடு முடிக்க.

உறையுளொடு மீஞ்ஞடுவென நின்ற ஒடுக்கள் வேறுவினையொடு.

(க) பல்வேலிரும்பொறை, நின்கோல் செம்மையாலே, (க) வானம் சுரப்பக் கானம் (உ)ஏறு புணர்ந்து இயலச்(ஙு) சினையிற் புள்ளும் மிருகமும் ஆர்ப்ப (ச) பழனும் கிழங்கும் மிசையறவறியாதொழிய (நு) ஆனிரை புல்

லருந்துகளக் (எ) கூலம் கெழுமை (அ) ஊழி நடுவுநின்று ஒழுக (கo) நாடு தொழுதேத்த (கக) உயர்நிலையுலகத்து உயர்ந்தோர் பரவ (கஉ) அரசியல் பிழையாதொழியச் செருவில் மேம்பட்டுத் தோன்றி (கங) நீ (உo) நின் அதிவையோடுபொலிந்து (கஙு) நோயிலையாகியரெனக்கூட்டி வினைமுடிவு செய்க:

இதனைச் சொல்லியது, அவன் நாடுகாவற்சிறப்புக்கூறி வாழ்த்திய வாறுயிற்று.

அவ்வாறு நாடுகாவல்கூறினமையால், துறை காவன்முல்லையாயிற்று.

(பி - மீ:) கூ. இரும்பொறைகோஒல். கஅ. வாழ்நாள். (கூ)

(கூo.) மீன்வயி னிற்ப வானம் வாய்ப்ப
வச்சற் றேம மாகி யிருடூர்ந்
தின்பம் பெருகத் தோன்றித் தந்துணைத்
துறையி னெஞ்சாமை நிறையக் கற்றுக்
நு கழிந்தோ ருடற்றுங் கடிந்து வஞ்சா
வெள்ளிறுவாள் வயவேந்தர்
களிருடி கலந்தந்து
தொன்றுமொழிந்து தொழில்கேட்ப
வகல்வையத்துப் பகலாற்றி
கo மாய்ாப் பல்புகழ் வியல்விசும் பூர்தர
வாள்வலி யுறுத்துச் செம்மை பூஉண்
டறன்வாழ்த்த நற்காண்ட
விறன்மாந்தரன் விறன்மருக
வீர முடைமையி னீரோ ரனையை
கநு யளப்பரு மையி னிருவிசும் பனையை
கொளக்குறை படாமையின் மூந்நீ ரனையை
பன்மீ னுப்பட் டிங்கள் போலப்
பூத்த சுற்றமொடு பொலிந்து தோன்றலை
யுருகெழு மரபி னியிரை பரவியுங்
உo கடலிகுப்ப வேலிட்டு
முடலுகர் மிடல்சாய்த்து
மலையவு நிலத்தவு மருப்பம் வெளவிப்

பெற்ற பெரும்பெயர் பலர்கை யிரீஇய
கொற்றத் திருவி னுரவோ ரும்பல்

உரு கட்டிப் புழுக்கிற் கொங்கர் கோவே
மட்டப் புகாவிற் குட்டுவ ரேறே
யெழாஅத் தூணைத்தோட் பூழியர் மெய்ம்மறை
யிலங்குநீர்ப் பரப்பின் மரக்கையோர் பொருந
வெண்பூ வேளையொடு சுரைதலை மயக்கிய

ஈ0 விரவுமொழிக் கட்டீர் வயவர் வேந்தே
யுரவுக்கட லன்ன தாங்கருந் தானையொடு
மாண்வினைச் சாப மார்புற வாங்கி
ஞாண்பொர விளங்கிய வலிகேழ் தடக்கை
வார்ந்துபுனைந் தன்ன வேந்துகுவவு மொய்ம்பின்

ஈரு மீன்பூத் தன்ன விளங்குமணிப் பாண்டி
லாய்மயிர்க் கவரிப் பாய்மா மேல்கொண்டு
காழெஃகம் பிடித்தெறிந்து
விழுமத்திற் புகலும் பெயரா வாண்மைக்
காஞ்சி சான்ற வயவர் பெரும

சூ0 வீங்குபெருஞ் சிறப்பி னோங்குபுக ழோயே
கழனி யுழவர் தண்ணுமை யிசைப்பிற்
பழன மஞ்ஞை மழைசெத் தாலுந்
தண்புன லாடுந ரார்ப்பொடு மயங்கி
வெம்போர் மள்ளர் தெண்கிணை கறங்கக்

சூரு கூழுடை நல்லி லேறுமாறு சிலைப்பச்
செழும்பல விருந்த கொழும்பஃ றண்பணைக்
காவிரிப் படப்பை நன்ன டன்ன
வளங்கெழு குடைச்சூ லடங்கிய கொள்கை
யாறிய கற்பிற் றேறிய நல்லிசை

ரு0 வண்டார் கூந்த லொண்டொடி கணவ
நின்னுள், திங்க ளனைய வாக திங்கள்
யாண்டோ ரனைய வாக யாண்டே
யூழி யனைய வாக வூழி
வெள்ள வரம்பின வாகென வுள்ளிக்

நெடுங் காண்கு வந்திசின் யானே செருமிக்
குருமென முழங்கு முரசிற்
பெருநல் யானை யிறைகிழ வோயே.

துறை - காட்சி வாழ்த்து
வண்ணம் - ஒழுகுவண்ணமும் சொற்சீர்வண்ணமும்.
தூக்கு - செந்தூக்கும் வஞ்சித்தூக்கும்.
பெயர் - (உக) வலிகெழுதடக்கை.

உ. அச்சமென்பது கடைக்குறைந்தது. இருள் - துன்பம்.

ங. தோன்றி இன்பம் பெருகவெனக் கூட்டுக.

ஈ - ச. தங்குணத் துறையென்றது பார்ப்பார்முதலானுர் தத்தமக்கு அளவான துறைநூல்களே.

ச. கற்றென்றதனைக் கற்கவெனத்திரிக்க.

ஞ. கழிந்தோர் - வலியின்மிக்கோர்.

எ. தங்தென்றது, இடவழுவமைதி.

கூ. வையத்துப்பகலாற்றியென்றது, வையத்தார்கண்ணே ஒடுவுநீலை மையைச்செய்தென்றவாறு.

கக. செம்மைபூண்டென்றது, செவ்வையைத் தான்பூண்டென்ற வாறு.

கஉ. அறனென்றது அறக்கடவுளை. நன்காண்டவென்றது வலித்தது.

உ0. கடலிகுப்பவென்றது கடலைத் தாழ்க்கவேண்டியென்றவாறு.

(உஉ) அருப்பம்வெளவி (உக) மிடல்சாய்த்தெனக்கூட்டுக.

உங. பெயரென்றது, பொருளை.

உஞ. கட்டிப்புழுக்கு-கட்டியொடுகூட்டின அவரைப்பரல்முதலான புழுக்கு.

உசு. மட்டப்புகா - மதுவாகிய உணவு.

உஎ. எழாத்துணைத்தோள் - போரில் முதுகிட்டார்மேற்செல்லாத இணைமொய்ம்பு.

ஏங. ஞாண்பொர - நாண் உரிஞுதலால்.

இவ்வடைச்சிறப்பானே, இதற்கு, 'வலிகெழுதடக்கை' என்றுபெயராயிற்று.

(ஙச) மொய்ம்பினையுடைய (ஙங) தடக்கையென மாறிக்கூட்டுக.

ஙஞ. பாண்டிலென்றது, பாண்டிலையுடைய பக்கரையை.

(ஙஎ) காழெஃகம் பிடித்தெறிந்து (ஙஅ) விழுமத்திற் புகலுமென்றதற்குப் பகைவரென்னும் பெயரை வருவித்து, காம்பையுடைய வேலைப்பிடித்தெறிந்து அப்பகைவர்க்கு இடும்பைசெய்கையிலேயே விரும்புமென்றவாறு.

(சஉ) ஆலும் (சஎ) நாடொனமுடிக்க.

சுரு. ஏறு மாறு சிலேப்பவென்றது ஏறுகள் ஒன்றற்கொன்றுமாறுக முழங்கவென்றவாறு.

(சஎ) நன்னுடன்ன (ருo) ஒண்டொடியென முடிக்க.

(கசு) மருக, (உச) உம்பல், (உரு) கொங்கர்கோவே, (உசு) குட்டுவ ரேறே, (உஎ) பூழியர் மெய்ம்மறை, (உஅ) மரந்தையோர் பொருந, (ருஏ) வயவர்வேந்தே, (ருக) வயவர்பெருமை, (சo) ஓங்குபுகழோய், (ருo) ஒண்டொடி கணவ, (ருஎ) இறைகிழவோய், (கச) ஈரம்உடைமையின் நீரோரனையை, (கரு) அளப்பருமையின் விசும்பனையை; (கசு) கொள்ளக் குறைபடாண்மை யின் மூந்நீரனையை; (கஅ) பூத்தசுற்றமொடு பொலிந்துதோன்றுதலை யுடையை; ஆதலால், (ருக) நினக்கு அடைத்தநாட்கள் உலகத்தில் திங்க ளனையவாகவென்றும் நின்னுடையதிங்கள் (ருஉ) யாண்டனையவாக வென்றும் நின்னுடையயாண்டு (ருருு) ஊழியனையவாகவென்றும் நின்யாண்டிற்கு ஒப் பாகிய அப் பல்லூழி தம்அளவிற்பட்ட பலவாய்நில்லாது (ருச) வெள்ளவரம் பினவாகவென்றும் நினைத்து (ருரு) நின்னைக் காண்பேன்வந்தேனெனக் கூட்டி வினைமுடிவுசெய்க.

இதனுள்சொல்லியது, அவன்தண்ணளியும் பெருமையும் கொடை யும் சுற்றந்தழாலும் உடன்கூறி வாழ்த்தியவாறுயிற்று.

(சு) 'ஒளிறு' என்பதுமுதலாக நான்கடியும் (கஉ) 'அறன்வாழ்த்த' என்பதுமுதலாக இரண்டடியும் (உo) 'கடலிகுப்ப' என்பதுமுதலாக இரண் டடியும் (ருஎ) 'காழெஃகம்பிடித்தெறிந்து' என ஓரடியும் வஞ்சியடியாகவந் தமையான், வஞ்சித்தூக்குமாயிற்று.

ருக. 'நின்னுள்' என்பது கூன்.

(பி - ம்.) உஎ. திணிதோள். ருசு. வான்றுபுனைந்தன்ன. உசு. மயங்கிய. ருஎ. காழ்மூழ்கப். (கo)

இதன்பதிகத்து விச்சியென்பான் ஒருகுறுநிலமன்னன், வஞ்சி மூதூர்த்தந்தென்றது, அவர்களைவென்று கொண்டு பொருள்களை; பசுவும் எருமையும் ஆடுமென்பாருமுளர்.

அமைச்சியல் மையூர்கிழானைப் புரோசுமயக்கியென்றது தன்மந்திரி யாகிய மையூர்கிழானைப் புரோகிதனிலும் அறநெறி அறிவானுகப் பண்ணி யென்றவாறு.

(பதிகம்.)

குட்டுவ னிரும்பொறைக்கு *மையூர் கிழாஅன்
வேண்மா ளந்துவஞ் செள்ளை யீன்றமகன்
வெருவரு தானையொடு வெய்துறச் செய்துசென்

நிருபெரு வேந்தரும் விச்சியும் வீழ
வருமீளக் கல்லகத் தைந்தெயி லெறிந்து
பொத்தி யாண்ட பெருஞ்சோ ழனையும்
வித்தை யாண்டவிளம் பழையன் மாறனையும்
லைத்த வஞ்சினம் வாய்ப்ப வென்று
வஞ்சி மூதூர்த் தந்துபிறர்க் குதவி
மந்திர மரபிற் றெய்வம் பேணி
மெய்யூ ரமைச்சியன் மையூர் கிழானைப்
புரையறு கேள்விப் புரோசு மயக்கி
யருந்திறன் மரபிற் பெருஞ்சதுக் கமர்ந்த
வெந்திறற் பூதரைத் தந்திவ ணிறீஇ
யாய்ந்த மரபிற் சாந்தி வேட்டு
மன்னுயிர் காத்த மறுவில் செங்கோ
லின்னிசை முரசி னிளஞ்சே ரலிரும்பொறையைப்
பெருங்குன்றூர்கிழார் பாடினர் பத்துப்பாட்டு.

(பி - ம்) * வம்மையூர் கிழான்; மேயூர் கிழான்.

அவைதாம்: நிழல்விடுகட்டி, வினைகவில்யானை, பஃறேர்ச்செரு மூதி, தொழினவில்யானை, நாடுகாணெடுவரை, வெந்திறற்றடக்கை, வெண்டலைச் செம்புனல், கல்கால்கவணை, துவராக்கூந்தல், வலி கெழுதடக்கை; இவை பாட்டின்பதிகம்.

பாடிப்பெற்றபரிசில்: மருளில்லார்க்கு மருளக் கொடுக்கவென்று உவகையின் முப்பத்தீராயிரங்காணம் கொடுத்து அவர் அறியாமை ஊரும் மனையும் வளமிகப்படைத்து ஏரும்இன்பமும் இயல்வரப்பரப்பி எண்ணற்கு ஆகா அருங்கலவெறுக்கையொடு பல்லாயிரம் பாற்படவகுத்துக் காப்பு நீங்கி தான்விட்டான் அக்கோ.

குடக்கோ இளஞ்சேரலிரும்பொறை பதினாண்டு வீற்றிருந்தான்.

ஒன்பதாம் பத்து முற்றிற்று.

# பதிற்றுப்பத்துச் செய்யுளகராதி.


| செய்யுள். | | பக்கம். | செய்யுள். | | பக்கம். |
|---|---|---|---|---|---|
| அட்டானுனே | ... | எக | திருவுடைத்தம்ம | ... | ஈசு |
| அலந்தலையுன்னத் | ... | உக | துளங்குநீர்வியலகங் | ... | அ0 |
| அவலெறிந்தவுலக்கை | ... | ஈஅ | தேளர்பரந்த | ... | ஈச |
| அரு அயாணர் | ... | ககசு | தொறுத்தவயலா | ... | (டு) |
| ஆடுகவிறலியர் | ... | சுசு | நன்மரத்துவன்றிய | ... | கசீசு |
| ஆன்றேள்கணவ | ... | கு0 | நிலநீர்வளிவிசும்பு | ... | அ |
| இகல்பெருமையிற் | ... | கஉஉ | நிலம்புடைப்பன்ன | ... | சுசு |
| இணர்தைஞாழற் | ... | ஈகு | நுங்கோயாரென | ... | உ0 |
| இரும்படம்புடையல் | ... | சுஉ | நெடுவயிறெளிறு | ... | ஈ0 |
| இரும்புலிகொன்று | ... | கஉஅ | பகனீடாகா | ... | கூடு |
| இழையணிக்தெழுதரு | ... | க0க | பகைபெருமையிற் | ... | கசo |
| இழையர்குழையர் | ... | எ0 | பலாஅம்பழுத்த | ... | க00 |
| இறும்பூதாற்பெரிதே | ... | சஅ | பார்ப்பார்க்கல்லது | ... | க0ஈ |
| உண்மின்கள்ளே | ... | கசு | பிறர்க்கெனவாழ்தி | ... | (நச |
| உயிர்போற்றலையே | ... | கஈஈ | புணர்புரிநரம்பின் | ... | சு0 |
| உரவோரெண்ணினு | ... | கஉஈ | புரைசான்மைந்த | ... | (ந0 |
| உலகத்தோரே | ... | (நு)ஈ | புரைவதுகினேப்பிற் | ... | கடு |
| உலகம்புரக்கும் | ... | கஈஅ | பைம்பொற்றுமரை | ... | எஉ |
| உறலுறுகுறுதி | ... | கசஎ | பொலம்பூந்தும்பை | ... | சுஅ |
| எடுத்தேறெய | ... | கசஈஈ | போர்நிழற்புகன்ற | ... | (நசு |
| எறிபிணமிடறிய | ... | க0எ | மலையுறழ்யானை | ... | ககச |
| எனைப்பெரும்படைய | ... | கஈ0 | மாண்டனெபலவே | ... | சசு |
| ஒருஉபகின்னை | ... | (ந)0 | மாமலைமுழக்கின் | ... | எடு |
| ஓடாப்பூட்கை | ... | கஈஈ | மாவாடியபுல | ... | ஈஉ |
| கவரிமுச்சிக் | ... | சுஈ | மீன்வயினிற்ப | ... | கடுஈ |
| களிறுகடைஇயதாள் | ... | ககசு | யாண்டுதலைப்பெயர | ... | க0 |
| களிறுடைப்பெருஞ்சமம் | ... | கஉகு | யாமுஞ்சேறுகம் | ... | எ |
| கார்மழமுன்பிற் | ... | கசஎ | வயவர்வீழ | ... | ஈ |
| கால்கடிப்பாக | ... | ககஉ | வரைமருள்புணரி | ... | |
| குன்றுதலைமணந்து | ... | சசு | வலம்படமுரசின்வாய் | ... | க0டு |
| கேள்விகேட்டுப் | ... | கஉடு | வலம்படமுரசினி | ... | கஈஉ |
| கொடிதுடங்குநிலைய | ... | அஈ | வள்ளியையென்றலிற் | ... | அஅ |
| கொடுமணம்பட்ட | ... | ககo | வாங்கிருமருப்பிற் | ... | க02 |
| கொலைவினைமேவற் | ... | கள | வாழ்கநின்வளனே | ... | (நஉ |
| கொள்ளைவல்சி | ... | கள | வான்மருப்பிற் | ... | கஈடு |
| கோடுதழ்த்தெடுத்த | ... | கஈ | வானம்பொழுதொடு | ... | கடுக |
| சிதைந்ததுமன்றோ | ... | ஈடு | விழவுவீற்றிருந்த | ... | கூஉ |
| சினனேகாமங் | ... | உஎ | வீயாயாணர் | ... | (நக |
| சென்மோபாடினி | ... | கசஅ | வெள்றுகலந்தீயிர் | ... | அசு |
| சொற்பெயர்காட்டங் | ... | உசு | வையகமலர்ந்த | ... | கசக |

# பிரயோகவிளக்கம்.

| | பதிற்றுப்பத்துச் செய்யுளின் எண். | பாட்டின் பத்து | நூற்பெயர். | நூலினது. | நூற்றா முதலிய வகுதியின் எண். | இன்னுரை யெனப்படுது. | எடுத்துக்காட்டின் எண். |
|---|---|---|---|---|---|---|---|
| க | உ | ங | ச | ஞ | சு | எ | அ |
| | ஙங | உங | தொல். | சொல். | ங.ஙஉ | ங. | உ0அ |
| | ,, | ,, | இ-வி. | | உஙo | | உஞஎ |
| | ஙஉ | உங | தொல். | ,, | உ.ஙசு | ,, | ஙசுஉ |
| | ,, | ,, | இ-வி. | | உச.ங | | உஙஎ |
| * | ஙங | மூ. | தொல். | பொருள் | எஞ | ,, | ஙசுங |
| | ,, | எ | சிவக. | காந்த. | ஙசுக | ,, | |
| * | ,, | ஙஉ | தொல். | சொல். | ங.எஉ | ,, | உ.உ0 |
| * | ,, | ஙச | ,, | ,, | ங.ஙஎ | ,, | உ0ச |
| * | ,, | ,, | ,, | ,, | ங.அஙு | ,, | உ.உ.ச |
| * | ,, | உ0,உக | சிவக. | இலக். | உ0க | ,, | |
| * | ஙச. | மூ. | தொல். | பொருள் | அஉ | ,, | ஙசுச |
| * | ,, | ங,உ | ,, | சொல். | உ.ஙங | ,, | ,, |
| * | ,, | மூ. | இ-வி | | எஞஎ | | எஅக |
| * | ஙஞ | ங-ஙஅ | தொல். | பொருள் | சுங | ,, | ஙஉஎ |
| | ,, | ங0 | சிவக. | ஙாம. | ச0 | ,, | |
| * | உக | ங-அ | தொல். | பொருள் | எஞ | ,, | ஙசுஉ |
| | ,, | ங | பத். | மூருகு. | | ,, | ஞங |
| * | ,, | உங - சு | தொல். | பொருள் | அசு | ,, | ஙசுஅ |
| | உ.உ | ங-ஞ | குறள், | | சுங.உ | பரி. | |
| * | உச | சு-அ | தொல். | ,, | எஞ | ங. | ஙசு0 |
| * | ,, | உச | ,, | சொல். | ங.ஙசு | ,, | உ0சு |
| | ,, | ஙஅ | சிவக. | ஙனக. | உ.அஎ | ,, | |
| * | உஞ | மூ. | தொல். | பொருள் | அசு | ,, | உ0உ |
| | உ.அ | ,, | புறத். | ஙாடு. | ஙஅ | | |
| * | உசு | ,, | தொல். | பொருள் | அ0 | ,, | ஙசு0 |
| * | ங0 | ,, | ,, | ,, | சுங | ,, | ஙங0 |
| * | ,, | உ.அ - சு | சிவக. | ஙனக. | சுஉ | ,, | |
| * | ங.ங | மூ. | தொல். | பொருள் | சுங | ,, | ஙஉசு |

* இது, தனக்குநேரேயுள்ளபதிற்றுப்பத்துச் செய்யுளுக்குக்குறிப்பிட்ட நூல்களின் பழையவுரையில் விசேடவுரையிருத்தலைப் புலப்படுத்தியது.

| க | உ | ங | ச | ஞ | ஞ | எ | அ |
|---|---|---|---|---|---|---|---|
| | பதிற்றுப்பத்துச்செய்யுளின் எண். | பாட்டின்பகுதி. | நூற்பெயர். | நூலின்பகுதி. | நூற்றுப்பாடுகளின் வரிசை எண். | இல்லறமா யெண்பது. | அச்சுப்புத்தகத்தின் பக்க எண். |
| * | சச | கo-கo | பத். | பெரும்பா. | | ங. | கஎo |
| | ஞ-பதி | மு. | சிலப். | பதி. | | அடி. | ககo |
| * | ஞஉ | உக | சீவக. | ஈமம். | கo ஞ | ங. | |
| * | ,, | ,, | ,, | குணமா. | கசுச | ,, | |
| * | ஞசு | மு. | தொல். | பொருள் | எசு | ,, | களக |
| * | சுங | ,, | ,, | ,, | அ/o | ,, | ககo |
| * | ,, | ச - ஞ | பத். | சிறுபா. | | ,, | கஉஞ |
| * | சுஞ | கஉ | தொல். | சொல். | உங | ,, | கஞக |
| * | சுக | மு. | ,, | பொருள் | கo | ,, | உoச |
| * | எக | ,, | ,, | ,, | சுங | ,, | கஙக |
| * | ,, | உங - ச | சீவக. | சூ. | கசு | ,, | |
| | எங | க | பத். | சிறுபா. | | ,, | கஉக |
| * | எச | மு. | தொல். | பொருள் | எஞ | ,, | கசுஉ |
| * | ,, | ,, | ,, | ,, | எசு | ,, | களசு |
| * | எச | கஉ | சீவக. | மண். | கoஉ | ,, | |
| * | ,, | உக - உ | ,, | ,, | சo | ,, | |
| * | எள | மு. | தொல். | பொருள் | எசு | ,, | களங |
| * | அ/o | ,, | ,, | ,, | சுங | ,, | கஙக |
| | கo | உங | பத் | முருகு. | | ,, | ஞக |

# அரும்பத முதலியவற்றின் அகராதி.

எண்களுள், 'ப' என்பதன் பின்னுள்ளவைகள் பக்கத்தையும், மற்றவைகள் பாடல்கள் அல்லது அப்பாடல்களின் உரைகளையும் குறிப்பன.


அஃறிணைப் பெயர், ப. 3.
அக்குரன் - மிக்க கொடையாளியாகிய ஒருவன்; இடையெழுவள்ளல்களிலொருவனென்று தமிழ்நிகண்டுகள் கூறும், 14.
அகப்பா - மதில், மதிலுண்மேடை, 22, 3 - ஆம் பதிகம்.
அகலிரு விசும்பு, 68.
அகவலன் - பாடும்பாணன், 43.
அகழி, 33, 53, 62.
அச்சம், 90.
அச்சு - அச்சம், 90.
அசை, ப. 51, 96, 97, 126.
அசைதல் - தங்கல்,...
அசைநிலையும்மை, ப. 121, 125.
அசையா - கெடாத, 82.
அஞ்சி - இது, தகடூர்ச் சிற்றரசருடைய குடிப்பெயர்; அவர்களுள் ஒருவன் தெய்வத்தன்மை பெற்று ஆகாயத்திலே அசைந்து கொண்டிருக்கும் மதிலை (தூங்கெயில்) யுண்டாக்கி வருத்துவானாயினன்; அப்பொழுது வண்டனென்ற வீரனொருவன் அம்மதிலையழித்து அவனை வென்றான், 31.
அட்டமலர்மார்பன், பா. 20.
அடா அடுபுகை - ஊர்சுடுபுகை, 20.
அடுக்கம் - அடுக்குதல், 55.
அடுசில் - அடிசில், 21.
அடுநெய்யாவுதி, பா. 21.
அடுப்பு, 18.
அடும்பு - ஒருகொடி., 30, 51.
அடுமை, 21.
அடை, 2.
அடைச்சி - உடுத்து, 27.
அடைமதில், ப. 13.
அடையூஉ - அடைந்து, 81.
அண்டர் - பகைவர், 88.
அணிந்தீமென - அணிந்து கெடுமென, 64.
அணுமை - அணிமை, 78.
அதிகமான் - தகடூரிலிருந்த ஒரு சிற்றரசன்; பெருஞ்சேரலிரும்பொறையால் வெல்லப்பட்டோன், 8 - அத்தணர், 24, 64. [ஆம்பதிகம்.
அத்தணரறுதொழில், 24.
அந்தரம் - வெளி, 51.
அந்தில், அசை, 40.
அந்துவஞ்செள்ளை, 9 - ஆம் பதிகம்.
அந்துவன் - ஒரு சேரராசன், 7- ஆம் பதிகம். [71.
அம்பணம் (மரக்கால்) அளவை, 66,
அம்பின் விசையையடக்கிய தோற்கேடகம், 45.
அம்புக்கு அரவு உவமம், 45.
அம்பு கணவறியாச் சுற்றம், 24.
அம்புசேருடம்பு, 42.
அம்மூச்சாரியை, ப. 85.
அமர்பு மெய்யார்த்த சுற்றம், 12.
அயிரை - ஒருவகைமீன், 29.
அயிரை மலை, 21, 3 - ஆம் பதிகம், 70, 79, 88, 90.

அயிரைவரைபோல வாழ்க, 70.
அரக்கத்தன்னநுண்மணல், 30.
அரசர் இரவெல்லாம் பகைவரை வெல்ல ஆலோசித்தல், 50.
அரசவியல்பு, 63.
அரசன் குணங்கள், 20, 32, 37.
அரசன் துணங்கையாடுதல், 57.
அரசாட்சி, 13, 22, 23, 31
அரசுகட்டில் - சிங்காதனம், 8-ஆம்
அரம்பு - குறும்பு, 15. [பதி.
அரவழங்கும் (அரவுபோல ஆடும்) பெருந்தெய்வம், 51.
அரிகாலவித்து, 30.
அரிசில்கிழார் - ஒருபுலவர், 8 - ஆம்
அரியல் - கள், தேன், 61, 62. [பதி.
அரில் - பிணக்கம், 12.
அருந்து - அருந்தி, 89.
அருந்துதி - அருந்தி, 31, 89.
அருந்துறை போகி, 76.
அருப்பம், 45.
அரும்பறைவினைஞர், 75.
அருவி - நீர், 28, 47, 71, 78.
அருவியாம்பல், பா. 63, 71.
அல்வழிச்சாரியை, ப. 14.
அலந்தலையுன்னம், 23.
அலந்தலைவேலம், 39.
அலவலுடுதல், 51, 58. [77.
அவ்வெள்ளருவி-அழகிய வெள்ளருவி,
அவலெறிந்தவலக்கை வாழைச் சேர்த்தி வள்ளைகொய்தல், 29.
அவிழகம் - அவிழ்ந்தது, 52.
அழல் - அங்காரகன், 13.
அழல் சென்ற மருங்கின் வெள்ளி ஓடாமை, 13.
அழன்மருள் பூவின் முமரை, 23.
அழியச்செய்தே, ப. 7.
அழியாவிழவு, 29.
அளப்பருங்குரையை, 79.
அறக்கற்பு, 16, 31, 90.
அறங்கரைந்து வயங்கிய நா, 64.
அறஞ்சால் கற்பு, 31.
அறந்தெரி திகிரிக்கு வழியடையாகும் தீது, 22.
அறிவு வலியுறுத்தும் சான்றோர்-மந்திரிகள், 72.
அறுகை - ஒரு குறுநில மன்னன், சேரனுக்கு நட்பினன்; மோசூர் மன்னனுக்குப் பகைவன், 44.
அறுதொழிலந்தணர் வழியெழுதல், [34.
அறுவை - ஆடை, 34.
அறை - பாசறை, 24, 81.
அறைநர் - அறுப்பவர், 19.
அறை (அறுத்தல்) யுறு கரும்பு, 75.
ஆகன்மாறு - ஆதலால், 38, 54.
ஆகியர் - ஆகுக, 88.
ஆகுபெயர், ப. 14, 41, 42, 69, [71, 115.
ஆகெழு கொங்கு, 22.
ஆஞ்ஞாசக்கரம், 14.
ஆடிய - வழங்கிய, 25.
ஆடுகோட்பாட்டுச் சேரலாதன், 6 - [ஆம்பதிகம்.
ஆடுமடா, 24.
ஆண்டலைப்புள், 25.
ஆண்மைக்கடன், 31.
ஆதி - ஆவாய்....
ஆபரந்தன்னயானை, 77, 78. [13.
ஆம்பல்சூடித்துணங்கையாடு மகளிர்,
ஆம்பலென்னுமெண், 63.
ஆம்பற்பூ, 23, 27, 71.
ஆம்பற்பூவைத் தலையிற்சூடல், 62.
ஆமானுடையய ஊன், 30.
ஆயிடை (அவற்றுக்கிடை) யென்பதன் மூடிபு, ப. 2, 82.
ஆயிரவெள்ளம், 21, 38, 63.
ஆயிரவெள்ளம் வாழிய, 21.
ஆயிர வெள்ள ஊழி, 63.
ஆயின் - ஆதலால், 13.
ஆர்த்த - கட்டிய, 12.
ஆர்பதம் - உண்ணுமுணவு, 55, 66.
ஆராதனைக்காலத்து மணியடித்தல், [31.
ஆரியர், 11, 2 - ஆம் பதி.
ஆரியர் துவன்றிய பேரிசையிமயம், [11.
ஆரியவண்ணல், 5 - ஆம் பதி.
ஆலயங்களுக்குக் கொடித்தல், 15.
ஆவுதி - ஆகுதி, 21.
ஆள்வினை வேள்வி, 21.
ஆறலைகள்வர், 9, 15, 31.

ஆறலைகள்வரில்லாத வழியின்சிறப்பு, 31.
ஆறியகற்பு - அறக்கற்பு, 16, 90.
ஆறுசென்மாக்கட்கோய்தகைதடுக்[illegible] 60.
ஆன்பயம்வாழ்நர் - இடையர், 71.
ஆன்பொருநை - ஆன் பொருந்த மென்னுமாறு, 50.
ஆன்றோள் கணவ, 55.
ஆனியம் - நாள், 69.
இகும், 11.
இகூஉ=இகுத்து - வீழ்த்தி, 40.
இசின், 15, 16, 82, 90.
இசைகிறையும்மை, ப. 66.
இசைமேம் தோன்றல்- புகழை மேவுந் தோன்றலே, 64.
இஞ்சியும் பூவும் விரவினமாலை, 42.
இடத்துநிகழ் பொருளின் தொழிலை இடத்தின்மேலேற்றல், ப. 4.
இடவழுவமைதி, ப. 86 - 8, 155.
இடாவேணி - அளவிடப்படாத இடி, 51. [எல்லை, 24, 81.
இடுகழங்கு தபுந, 32.
இடும்பில் - இடும்பாதவனம், 5 - இடைக்குறை, ப. 7. [ஆம்பதி.
இடைமதில், 16.
இடையர் தொழில், 21.
இதழ் - இமை, 52.
இம்யம், 11, 43.
இமயம் குமரியொடாயிடை, 11.
இமயவரம்பன் தம்பி, 3 - ஆம்பதி.
இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், 2 - ஆம் பதிகம்,
இமயவரம்பன் நெடுஞ் சேரலாதன் கடம்பு தடிந்தது, 11, 12, 17, 20, 88.
இமிழ்ந்து - தழைத்து, 23.
இமிழிசை=இடமரம் - ஒருவகை வாச்சியம், 50.
இயமரங்களுக்கு இடையிடையே சங்குமுழங்குதல், 50.
இயவர் - வகுத்தியகாரர், 77, 78.
இயன்மொழிவாழ்த்து - தலைவனுக்கு இன்ன இன்ன குணங்கள் இயல் பென்று கூறி உயர்ந்தோர் அவனை வாழ்த்துவது, 18, 20, 24, 43,
இரக்கு - இரப்பேன், 61. [48.
இரப்போர்க்குக் கவித லல்ல தையிரையிய, மலர்பறியாக் கை, 52.
இரலை - மான், 74.
இரவலரது துன்பத்திற்கு அஞ்சுதல், 57. [55.
இரவலரைத் தேரில்வரச் செய்தல்,
இரவில் ஊர்களுக்குச் செல்லுதல், 31.
இருகடனீரும் ஒருபகலில் ஒருசேரன் ஆடியது, 3 - ஆம்பதி. [34.
இருநிலந்தோயும் விரிதூலமுவையர்,
இருபெயரொட்டு, ப. 46, 47, 49, 77, 93, 109, 120.
இரும்பொறை - ஒருசேரன், 89.
இரையிய - இரத்தற்கு, 52.
இல்லோர் மெய்ம்மறை - வறியவர் களுக்குக் கவசம் போல்வான், 65.
இவணர் - இவ்வுலகத்திலுள்ளார், 74. [பல, 21.
இவளொடு ஆயிரவெள்ளம் வாழிய
இழித்துக் கூறியது போலக் குறிப் பால் உயர்த்துக் கூறல், 48.
இழிவு சிறப்பும்மை, ப. 22.
இழை தைஇ, 39.
இளஞ்சேரலிரும் பொறை, ஐக்தெயி லெறிந்தது, 85, 9 - ஆம்பதி.
